a927/4

A DESCRIPTIVE CATALOGUE OF THE TAMIL MANUSCRIPTS IN THE Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, TANJORE.

BY

PANDIT L. OLAGANATHA PILLAY,
Professor of Tamil, Sanskrit College, Tiruvadi.

Prepared under the orders of the Administrative Committee of the Library.

VOL. III.

(SECOND EDITION)

by

Dr. S. VENKATARAJAN, L. I. M. (Regd.)
Ayurvedic Pandit, Sarasvati Mahal Library, Tanjore.

★

PRINTED AT
TANJORE VETRIVEL PRESS.

Price Rs. 4] 1960 (Saka 1882) [Postage extra.

★

A

DESCRIPTIVE CATALOUGE

OF THE

TAMIL MANUSCRIPTS

IN THE

Tanjore Maharaja Sarfoji's Saraswathi Mahal Library,

TANJORE.

BY

PANDIT L. OLAGANATHA PILLAY,
Professor of Tamil, Sanskrit College, Tiruvadi.

Prepared under the orders of the
Administrative Committee of the Library.

VOL. III.

(SECOND EDITION)

PRINTED AT
TANJORE VETRIVEL PRESS.

Price Rs. 4] 1960. [Postage extra.

★

Copies can be had of

The Honorary Secretary,

T. M. S. S. M. Library Committee,

TANJORE.

Price of Vol.	I.	Rs.	2—00	Postage extra.
,, ,,	II.	Rs.	1—50	,,
,, ,,	III.	Rs.	4—00	,,

முகவுரை.

(முதற் பதிப்பு.)

இந்த மூன்றும் பாகத்தில், பெரும்பான்மையும், அனுபவ வைத்திய முறைகளும் சித்தவைத்திய நூல்களும், சிறுபான்மை, இரசவாதம், கற்பம், யோகம், மந்திரம், ஜாலங்களைக் கூறும் சாஸ்திரங்களும், சிற்சில அச்சுப் புத்தகங்களும் காணப்படும். ஒவ்வொரு பாகத்திலும் விஷயக்கிரமமாகப் பொருளடக்கம எழுதப்பெற்றிருத்தலின், விஷய அட்டவணையென மீளவும் எழுதுவது மிகையென்று விடுக்கப்பட்டது. இதன் தொடக்கத்தில், இப்பாகத்தின் பொருளடக்கமும் கடைசியில், நூலாசிரியர் அட்டவணையும், காட்லாக்கின் மூன்று பாகங்கட்கும் அட்டவணைகளும் தமிழ்ச்சுவடிகளின் பழைய நம்பர்க்குத் தொடர்ந்த புதிய நம்பர் காட்டும் அட்டவணையும், முக்கியமான பிழை திருத்தங்களும் சேர்க்கப்பெற்றன. பலர் உதவிகொண்டு செய்யக்கூடிய இவ்வேலையை, நான் தனிமையிற் செய்துமுடித்தமையின், இதிற் பிழைகள் பல நேர்ந்திருத்தல் கூடும். அவற்றைப் பொறுத்தருளப் பெரியோர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

1926ஹூ ஏப்ரல்மீ 30உ

பண்டிதர் டி. உலகநாத பிள்ளை,
சமஸ்கிருத காலேஜ், திருவையாறு.

பொருளடக்கம்.

சரீர வைத்தியம்	பக்கம்
அகத்தியர் அறுநூறு	6
அகத்தியர் ஆயிரத்தைந்நூறு ...	3, 4
அகத்தியர் கர்மகாண்டம் முந்நூறு ...	11
அகத்தியர் கர்ம சூத்திரம் முந்நூறு ...	10
அகத்தியர் கரிசல் முந்நூறு ...	20
அகத்தியர் குணவாகடம்	14, 38
அகத்தியர் குருநாடி	15
அகத்தியர் சூத்திரம் அறுநூறு ...	4
அகத்தியர் சூத்திரம் முப்பத்தாறு ...	19
அகத்தியர் செந்தூரம் முந்நூறு	18
அகத்தியர் பதார்த்தகுண சிந்தாமணி ...	8, 9, 10
அகத்தியர் பற்பமுறை இருநூற்றஞ்சு	22, 23, 27
அகத்தியர் வைத்தியம் இரண்டாயிரம் ...	16
அகத்தியர் வைத்திய ரத்னச் சுருக்கம் முந்நூறு	30
கொங்கணர் சரக்குவைப்பு நூறு ...	62
சட்ரச நிகண்டு	70
சரக்கு சுத்தி முறை	124
சரபேந்திர வைத்தியம் கரப்பான் ரோகங்களுக்கு	91
,, ,, குன்ம ரோகங்களுக்கு	89, 100
,, ,, சன்னி ரோகங்களுக்கு	96
,, ,, நீரிழிவு ரோகங்களுக்கு	90, 110

பக்கம்

சரபேந்திர வைத்திய முறைகள்

,, சுர ரோகம் 93, 115
,, வாதரோக சிகித்ஸை 94, 99
,, கர்ப்பிணி, பாலரோகம் 97, 101
,, விஷரோக சிகித்ஸை 102
,, உளமாந்தம், க்ஷயம் 103
,, சிரோரோக வைத்யம் 105
,, விரேசன முறையும் அதிஸார சிகித்ஸையும் 106
,, காசரோக சிகித்ஸை 108
,, விரணரோக சிகித்ஸை 112
,, பாண்டு காமாலை வைத்யம் 113
சன்னி பதிமூன்றுக்கும் விவரம் ... 198
சுரங்களுக்கு மருந்து 197
சுரத்தின் பிறப்பும் அதன் வகையும் ... 162, 175
சுரநூல் 196
தன்வந்திரி வாகடம் ஆயிரத்து நூற்றுப்பத்து 80
திரட்டு வாகடம் ... 43, 101, 198
திருமூலர் வைத்தியம் நூறு 74
தேரையர் வைத்தியம் 6, 160
நடக்கை விதி 195
நாடி நூல் 177, 181, 194
பதார்த்த குணம் 40
பலதிரட்டு அட்டவணை 39
பாலவாகடம் முந்நூறு 86
பிரமமுனி சூத்திரம் முந்நூற்றறுபது ... 67
மூகநாடி 195

பக்கம்

யூகிமுனி வைத்திய சிந்தாமணி ... 72
வல்லபேந்திரர் வைத்திய சிந்தாமணி 201
வைத்திய அட்டவணை 120, 121, 122, 126, 127, 129, 130, 131, 133, 134, 136, 137, 138, 139, 140, 141, 144, 145, 147, 148, 151, 152, 153, 154, 155, 157, 159, 162, 163, 165, 170, 172, 174, 179, 182, 184, 186, 187, 193, 199, 203, 204, 207, 208, 211, 212
வைத்தியத் திரட்டு ... 84
வைத்திய நூல் ... 69

நயன வைத்தியம் :

அகத்தியர் நயனவிதி 12, 14
சரபேந்திரர் நயன வைத்தியம் 87
நயன சாஸ்திரம் 180

விரண வைத்தியம் :

அட்டை விதி 40
சத்திர விதி 42
சரபேந்திரர் விரண வைத்தியம் 112

விஷ வைத்தியம் :

சர்ப்ப சாஸ்திரம் 32
சர்ப்பாரூடம் 36, 208, 212
சரபேந்திரர் விஷ வைத்தியம் ... 102
சித்தராரூடம் 31, 32, 33, 34, 35, 209, 211, 213
பாம்புகளின் சாதியும் குணமும் 175
பாம்பு மருந்தும் மந்திரமும் 170
விஷமருந்து அட்டவணை 32, 212
விஷ வைத்திய அட்டவணை 215

குதிரை வைத்தியம் : பக்கம்

அசுவ வைத்தியம் 116, 118

மாட்டு வைத்தியம் :

மாட்டு வைத்திய அட்டவணை 119, 185

காயகற்ப நூல் :

கொங்கணர் கற்பவிதி நூறு 63
சட்டைமுனி கற்பவிதி நூறு 44
போகர் கற்பவிதி முந்நூறு 82

இரசவாத நூல் :

அகத்தியர் முப்புச் சூத்திரம் இருநூறு ... 27
இரசவாத அட்டவணை 150
கொங்கணர் சூத்திரம் நாற்பது ... 65
கொங்கணர் நடுக்காண்டம் ஆயிரம் 59
கொங்கணர் பலதிரட்டு ஐந்நூறு 61
சட்டைமுனி வாதகாவியம் ஆயிரம் 45, 48, 49
சட்டைமுனி நிகண்டு ஆயிரத்திருநூறு ... 47
சுந்தரானந்தர் சூத்திரம் நூற்றுப்பத்து 49, 50
திருமூலர் எண்ணாயிரத்துள் துருசுகுரு ... 78
திருமூலர் எண்ணாயிரத்துள் வகாரத்திரயம் 79
திருமூலர் திருமந்திரம் ஆயிரம் 76
திருமூலர் வகாரவுபதேசம் இருநூறு 77
போகர் நிகண்டு 165
போகர் நிகண்டு அட்டவணை 52
மச்சமுனி கடைக்காண்டம் எண்ணூறு ... 58
மச்சமுனி கலைஞானம் எண்ணூறு 55
மச்சமுனி நிகண்டு நாற்றுறு ... 57
மச்சமுனி முப்புதீக்ஷை எண்பது ... 54

பக்கம்

சித்தயோக சாஸ்திரங்கள் :

அகத்தியர் தீக்ஷாவிதி இருநூறு ... 29
அகத்தியர் பூஜாவிதி இருநூறு ... 28

மந்திர யந்திர ஜாலங்கள் :

அகத்தியர் தண்டக சூத்திரம் இருபத்தைந்து 23
அகத்தியர் தண்டகம் நூறு 24
அகத்தியர் பட்சணி நூற்று முப்பத்திரண்டு 25
கொங்கணர் தண்டகபட்சணி நூறு 66
திருமூலர் திருத்தண்டகம் நூறு 75
மச்சமுனி பெருநூல் ஜாலகாண்டம் எண்ணூறு 51
மந்திரங்களும் ஜாலங்களும் ... 185
மந்தர யந்திர அட்டவணை 183

வாண முறைகள் :

வாண முறைகள் ... 203

சோதிட நூல் :

கவுளி காதல் ... 168
காதல் ... 199
தும்தல் காதல் ... 169

உபநிடதம் :

கருடோபநிஷத்து ... 204

தோத்திரம் :

ஈச்வரி பூஜை 210
விநாயகர் அகவல் ... 176
விஷ்ணு தோத்திரம் ... 172

அச்சுப் புத்தகங்கள்.

		பக்கம்
அகமே புறம்	....	223
அருச்சுன சந்நியாசி	...	247
ஆத்மயோக மனோவசியம்	....	249
இன்னிலை விருத்தியுரையுடன்	...	218
கன்றுங் கலியுதவும்	...	228
காதம்பரி	...	244
குலசேகராழ்வார் பிரபந்தம்	...	242
சிற்றின்ப சிரோமணி	...	236
சோழன் கரிகாலன் ஆராய்ச்சி	...	231
திருக்குறள் மணக்குடவர் உரை	...	216
திருப்பாணாழ்வார் பிரபந்தம்	....	243
திருமழிசையாழ்வார் பிரபந்தம்	....	239
திருமழுவாடிப்புராண வசனம்	....	235
தொண்டரடிப்பொடியாழ்வார் பிரபந்தம்	....	241
நஷ்ட ஜாதக தீபிகை	....	233
நூதன இந்தியா	....	246
பாடற்றிரட்டு	....	226
பெரியாழ்வார் பிரபந்தம்	....	238
மனம்போல வாழ்வு	....	235
மானச தந்தி	...	252
மெய்யறம் அரும்பத உரையுடன்	....	219
மெய்யறிவு உரையுடன்	....	221
மெஸ் மெரிஸம்	....	250
வலிமைக்கு மார்க்கம்	...	224
வள்ளியம்மை சரித்திரம்	...	227
ஹிந்துமத ஸ்தாபனம்	....	253

A DESCRIPTIVE CATALOGUE
OF THE
TAMIL MANUSCRIPTS
IN THE
TANJORE MAHARAJA SERFOJI'S
Saraswathi Mahal Library.
Volume III.

வைத்திய சாஸ்திரங்கள்.

வைத்திய நூல்.

தமிழில், வைத்திய நூல்கள் பதினெண் சித்தர்களால் இயற்றப்பட்டனவென்று சொல்லுகின்றனர். சித்தர்கள் பெயர் ஒருவகையாகச் சொல்லப்படவில்லை, இந்த சித்தர்களை வடமொழி தென்மொழிகளிலுள்ள நூல்களில் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சித்தர் நூலென்று சொல்வன எல்லாம் காயற்பட்டினத்துத் துலுக்கர்களால் எழுதப்பட்டவை என்று சரித்திர ஆராய்ச்சி வல்லோர் கூறுகின்றனர்.* காயற்பட்டினம் என்பது, தாம்பிரபரணி முகத்துவாரத்தில் இருந்த கொற்கை என்னும் கரைதுறைப்பட்டினம் மகிமை குன்றியபின் அதனருகே கடலோரத்தில் தோன்றிய ஊராகும்.

---

* இந்த அபிப்ராயம் அவரது சொந்தமதாகவே தெரிகிறது. சித்தர் நூல்கள் நம் நாட்டில் வெகு காலமாகவே பிரசாரத்தில் இருப்பதால் இங்கு கண்ட அபிப்ராயத்திற்கு அதிக ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் பதினெட்டு சித்தர்களின் பெயர்களுடன் அவர்கள் அடக்கமான இடங்களும் பிரஸித்தமாகவே இருக்கின்றன, ஆயிரக்கணக்கான பரம்பரைத் தமிழ் வைத்யர்கள் வீட்டில் பழங்கால முறைகள் அடங்கிய சித்தர் நூல்கள் காப்பாற்றப்பட்டும், கையாளப்பட்டும் வந்திருக்கின்றன.

இந்த லைபிரேரியில், அகத்தியர், தேரையர், சட்டை முனி, மச்சமுனி, பிரமமுனி, யூகிமுனி, போகர், கொங்கணர், திருமூலர், சுந்தரானந்தர், தன்வந்திரி, யாகோபு என்பவர்கள் இயற்றிய பல நூல்கள் இருக்கின்றன இவைகளையல்லாமல், சரபேந்திரர் இயற்றிய வைத்திய நூலும், கொற்கைக்கோமான் எழுதிய அசுவவைத்தியமும், வல்லபேந்திரர் இயற்றிய வைத்தியமும் இருக்கின்றன.

அகத்தியர் : இவர் தமிழிற்குப் பெரிய இலக்கணம் இயற்றியவர். தமிழ்ப்புலவர் பலரைக் கூட்டிச் சங்கம் ஏற்படுத்தியவர். தொல்காப்பியர், பனம்பாரனுர் முதலியோர்க்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்த ஆசிரியர். இவரியற்றியதாகச் சொல்லப்படும் தமிழ் வைத்திய நூல்கள் மிகவும் தாழ்ந்த நடையும் இலக்கணவரம்புக் குட்படாத தன்மையும் உடையனவாக இருக்கின்றன. இதனுல், தமிழ் மொழியைச் சீர்படுத்தி இலக்கணம் அமைத்தவர் இத்தகைய நூல் இயற்றினரெனல் அமையாது; அகத்தியரென்னும் பெயருடைய வேறு யாராவது எழுதியிருத்தல் வேண்டும்; அல்லது எவரேனும் எழுதி அகத்தியர் பெயரை வைத்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

தன்வந்திரி : இவர் தெய்வலோக வைத்தியர், தமிழ் மொழியில் வைத்திய நூல் செய்திருப்பாரென நினைப்பதற்கு ஆதாரம் காணப்படவில்லை. ஆதலால் தன்வந்திரி எனப் பெயருடைய தமிழ் வைத்தியரே செய்திருத்தல் கூடுமெனத் தோன்றுகிறது.

இத்தஞ்சையின்கண் (கி. பி. 1800-1832) ஆட்சிபுரிந்த மகாராஷ்டிர அரசருள் ஒருவராகிய **சரபோஜி மகாராஜா தன்வந்திரிமகால்** என வைத்திய சபை ஒன்று ஏற்படுத்தி வைத்திய நூல்களை ஆராய்ச்சி செய்து அருமையான அநேக மருந்துகளைச் செய்வித்தனரென்றும் அம்மருந்துகள் இன்னும் உபயோகப்பட்டு வருகின்றனவென்றும், தஞ்

சைவாசிகளில் வயதுசென்ற பலரும் கூறுகின்றனர். இதுவு மன்றி வைத்தியத்தில் தேர்ந்த பலரைக்கொண்டு வைத்திய நூல்கள் இயற்றுவித்தனர். அந்நூல்களில், "சரபவேந் துரையே" "சரபேந்திரமால் கூறுமாறே" "சரபேந்திர பூபதி சொல் பண்பிதாமே" எனப் பலவிடத்தும் கூறப்பட்டிருப் பது இதனை வற்புறுத்தும். இந்நூல்களே சரபேந்திரர் **வைத்தியம் எனப்படும்.**

யாகோபு : இவர் வைத்திய நூல் இயற்றியவருள் ஒரு வராவார் இவர் மகம்மதிய மதத்தினரென்பது இவரது பெயரானும் விளங்குதலால், சரித ஆராய்ச்சியாளர் கூற்று இங்கு கவனிக்கத்தக்கது. இன்னும், அசுவ வைத்தியம் எழுதியவர் கொற்கைக் கோமான் என்னும் பெயரினர். கொற்கையோ வென்றால் காயற்பட்டினத்தருகிலிருந்த ஊர். இவ்வூரினர் வைத்தியநூல் எழுதினாரென்பார்க்கு இதுவும் அநுகூலமாதல் காண்க.

---

1. No. 1 அகத்தியர் ஆயிரத்து ஐந்நூறு.

ஏடுகள் : 281 ; Lines 5 in a Page.

இதில், வாத பித்த சிலேட்டுமம் என்கிற மூன்று நாடி ஸ்தானங்களும் அவற்றின் குணமும், ரோக லட்சணமும் அவற்றிற்கு மருந்துகளும், சரக்கு சுத்தியும் பலவகையான நெய், எண்ணெய், மாத்திரை, செந்தூர முதலியவைகளைச் செய்யும் முறையும் சொல்லப்பட்டுள்ளன.

Beginning

பாதுடன் கணேசன் பாதம் பரிந்துமுக் குணங்களாய
வாகடச் சுவடியெல்லாம் வகைவகை தொடுக்குங்காலே
யாகிட விதியின் சூழ லறிந்திடு நோய்கட் கெல்லாம்
போகிட மருந்து சொல்வோம் புலத்தியா புரிந்துபாரே 1

புரிந்ததோ ருந்திக் கீழே புகன்றெழுஞ் சுழியைப்பற்றி
யிருந்ததோர் நாடி தானு மெழுபத்தீ ராயிரமாங்
தெரிந்ததோ ரிலத்திற் பத்துத் தசநாடி யிவற்றில் மூன்று
பரிந்ததோர் வாத பித்தம் படரய்ய மறிந்துகொள்ளே 2

End :

சுகமாக நாளொன்று களஞ்சு மூன்று
சுத்தமாய்க் கொண்டக்காற் சொல்லக்கேளு
யுகமூழி காலத்திற் கரப்பனில்லை
ஒன்றுமா காதுமறு பத்தியங்கள் கடந்தால்
செகமேழும் புகழவே சங்கவேர்ப் பத்திரி
சீர்பெறவே வாரியுப்பை வெந்து வைத்துக் கூட்டு
விகமேழும் காண்பதுபோ லேரண்டத் தெண்ணெய்
எப்பொழுது மொன்றைவிட் டொருநாள் மூழ்கே. 782

2. No. 2. அகத்தீயர் ஆயிரத்து ஐந்நூறு.

ஏடுகள்:244; Lines 5 in a page.

இது முன் பிரதியோடு தொடர்ந்த பிரதி இதில் 783-ம் செய்யுள் முதல் 1422-ம் வரையிலும் இருக்கிறது.

3. No. 3 (a) அகத்தியர் சூத்திரம் அறு நூறு.

ஏடுகள் 203; பூர்த்தி Lines 5 in a page.

இதில் கெந்தி, சூதம், தாளகம், பாஷாணம் முதலிய சரக்குகளின் சுத்தியும் காந்தம், லோகம், அபிரேகம், மண்டூரம் முதலிய செந்தூர முறையும், சுரம், சன்னி, நீரிழிவு, க்ஷயம், குட்டம், முதலிய ரோகங்களுக்கு மருந்துகளும் பிறவும் சொல்லப்பட்டுள்ளன. இது சூத்திரம் என்று சொல்லப்பட்டிருப்பினும் வைத்திய நூல்களில் பெரும்பாலும் எந்த செய்யுட்கள்

காணப்படுகின்றனவோ அந்த செய்யுட்களாலேயே அமைக்கப் பட்டுள்ளது.

Beginning

பாருடன் கணேசன் பாதம் பணிந்து முக்குணங்களாய
வாகடத் தொகுதி யெல்லாம் வகுத்துறு சூத்திர மாக்கி
யாகமவிதி நூலாலே யடைந்திடும் வியாதிக் கெல்லாம்
போகவே மருந்து சொல்வோம் புலத்தியா புகழ்ந்துகேளே.

* * * *

கரைந்தந்தக் காடியெல்லாந் தெளியவைத்துக்
கலங்காம லிறுத்தப்பா வுலர வைத்து
நிறைந்ததொரு செந்தூர பற்பம் பண்ணு
நிலத்தெந்த நோயேனு நீங்கிப்போகும்
தறைந்தொளிர் தாம்பி ரத்தின் சுத்தி கேளு
சல்லிபோற் றும்பிரத்தை நறுக்கி வாங்கி
நிறைந்திடுவாய் புளி மோரிற் காணச் சாற்றில்
நீயேழு தரங்காய்ச்சித் தோய்த்திடாயே 21

End

பாரப்பா பொருளருள் காணவெனறுல்
பரப்பைவிட்டுச சூத்திரத்தைப் பட்சம் வைத்து
பாரப்பா வுள்ளபடி சொல்லிவிட்டேன்
பரப்பில்லை அறுநூறு பதரு நின்று
பாரப்பா தசமூல நாடி தன்னைப்
பராபரையைப் பூசித்துப் பானமுண்டு
பாரப்பா அறுபத்து நாலுசித்தும்
பலிக்குமிந்தப் பண்டிதசூத் திரந்தான் முற்றே 582

Colophon

சிவமயம். தேவிசகாயம். திருப்பாதந்துணை.
திருச்சிற்றம்பலம். ராமஜெயம்.

4. (*b*) தேரையர் வைத்தியம்.

Lines 5 in a Page.

இதில் விரேசன முறைகளும் விஷத்திற்கு மருந்தும் சொல்லப்பட்டுள்ளன. இதில் 15 செய்யுட்களே இருக்கின்றன. அபூர்த்தி,

Beginning

கருமஞ் சிதகாது கைகூடும் செல்வந்
திருமங்கை யன்புடனே சேர்வ—ளருமந்த
பானைவயிற் றானை மருப்பானிலிருப் பரிணமதத்
தானைமுகத் தானை நினைத்தால்.

தூது பத்திரி துந்தி து வக்கறும்பூ
தாது மிக்கத் தணலை யெழுப்பிடுங் காய்
வாத பித்த விருமலை மாற்றிடும் வேர்
நூறு மட்டும் வியாதி தவிர்க்குமே.

மிளகரை கடுக்கா யொன்று மிகுத்தவா மணக்கிரண்டு
வளமிகு வாளமேழு வருநீலிச் சாற்றால் கூட்டி
குளமகிழ் பழத்திற் றேனிற் கூடவோ ருண்டை கொண்டா
லளவறு சீதமேகு மானதோர் குளிர்நீர் மாற்றே.

End

தும்பைத்துளிர் துளபத்துளிர் லவணத்தொடு மிளகு
நம்பிக்கொடு நவிலக்கொடு நாசிக்கொடு விட்டால்
வெம்பிக் கொடு வித்திக் கொடு விதிபோல் வருவிடமுங்
கம்பிக்கொடு கதறிக்கொடு கடலிற் புகும்விடமே. 15

---

5. No. 4 அகத்தியர் அறுநூறு.

ஏடுகள் 198; *பூர்த்தி* Lines 5 in a Page

இதில் வெடியுப்புச் சுன்னம், அப்ரேகம், காந்தம், கிட்டம், லோகம் முதலிய செந்தூரங்கள், லேகியங்கள். மதன

காமேஸ்வர சூரணம், மதனகாமேசரிக் குளிகை, தங்கம் வெள்ளி, முதலிய பற்பங்கள் செய்யும் முறை முதலானவைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

கருணைதகும் ஐங்கரனே காப்பு வாணி
கலந்த விந்த சூத்திரந்தான் கருவாய்ப்பாடத்
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாடிக்
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
குபேரனென நிதிமருந்துங் கூடும் கூடும்
பெருமை மெய்க்கக் கீர்த்தியுண்டாஞ் சித்தர்க்கெல்லாம்
பெருநூலில் குறுக்கி யிந்த அறுநூறு தானே. 1

தானென்ற வாசி முதல் யோக ஞானம்
தவறுது வாதமொடு வைத்தியமுஞ் சித்தி
வானென்ற சிவயோக போதங் காணும்
வைத்தியத்துக் குயிரிதுகாண் மருந்து வேகம்
நானென்று ஆணவமும் மாய்கை தள்ளி
நடந்தாக்கா லிந்நூலின் மகிமை மெத்த
தேனென்ற பாற்கடலுங் கருப்பம் பாகும்
திரட்டியொரு கட்டியாய்த் தெளிந்த காப்பே

End :

உண்டா மெழுநூறு வைத்தியத்தில்
ஒடுக்கஞ் சூத்திர மெண்ப துண்டு
பண்டாரங் குருவொ நூத்தன்பதில்
பாரும் வழலைப் போக்கன்ப துண்டு
வேண்டாம் நூல்களிதுவே போதும்
விடாதே நூல்கள் ஒருத்தருக்கும்
சண்டாயறு நூறும் வெளிவிடாதே
காட்சி யெழுதி முடிந்ததுவே. 625

Colophon :

சிவகிருபை யுண்டாகவேணும். குருபாதமே துணை. இந்த சாத்திரம் வைத்தியம். 600 செகஞ்த வைத்தியர் குமாரன் அய்யாசாமி வைத்தியருடைய சுவடி பார்த்து எழுதினது. மேல் பிரதி ஆடிமீ 19௳ சோமவாரம் அய்யாசாமி வாத்தியார் கையில் கொடுத்து விட்டது. இந்த சாத்திரம் எழுதினது வெங்கிடேச பிள்ளை குமாரன் சுப்பராய பிள்ளை எழுதி முடிந்தது முற்றும்.

---

6. No. 5 அகத்தியர் பதார்த்த குண சிந்தாமணி.

ஏடுகள் **172 ;** *அபூர்த்தி* Lines 5 in a Page.

இது இன்னின்ன பதார்த்தம் இன்னின்ன குணமுடையதெனக் கூறுவது. அச்சிலுள்ள பதார்த்த குண சிந்தாமணியினும் இது வேறு.

Beginning :

*வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.*

*ஆதியு நடுவுமில்லா அம்பிகை பாகன் மேனாள
வேதனுக் குரைப்ப வேதன் மேகநா தனுக்குச் சொன்னான்
போதிலிந் திரனும் அசுவதேவர்க்குப் புகன்ற தன்றே
கோதிலா அசுவ தேவர் தன்வந்திரி கூறினாரே.*

*கடுநெல்லி தான்றி கனத்த சித்ரமூலம்
நடுவாஞ் சிவதைவேர் நாடில்—வடிவான
கள்ளே கமழுங் கனங்குழ லாயகா
லுள்ளே விஷமென் றறி.*

End :

முருக்கா யரசத்தி முண்டகமுந் தாதுக்
………மணைக்கிலையோ டெச்சில்—பெருக்கவே
யுண்டாலு நோய்பிடிக்கு முண்டுகிலும் பொல்லாது
சண்டாள ரேபுசிப்பார் தான்.

---

7. No. 6 அகத்தியர் பதார்த்த குண சிந்தாமணி.

ஏடுகள் 317 ; Lines 2—4 in a Page.

இதுவும் முற்பிரதியைப் போன்றது. அச்சிடப்படவில்லை.

Beginning :

வன்புதரு வாதகுன்மமதனை மாற்றி
மருத்திடு மார்கனமுஞ் சுரமுந் தீர்க்கும்
துன்பமுறு சயரோகம் பீலிகை தானும்
துர்நாம ரோகம் போய் சுகமுண்டாகும்
அன்புதரு தீபநமாம் கிராணி மாறும்
அசீர்ணமொடு சேத்துமத்தை அரிக்குமேகப்
பண்பு செறி நாரத்தம் பழத்தின் மார்க்கம்
பாருண்டு குணந்தனையே பகருங் காலே.

நாளுழித் தேனுக்கு நற்பா லுமுழக்கிட்டுத்
தானேபால் சுண்டியிடத் தக்கதாய்—மானேகேள்
காய்ச்சியே கொண்டாற் கனத்தவிஷ மாறி
வாச்சமுத மாமே மது

End

ஏழாயிர வருட மிருக்கலாங் காயசித்தி
கீழாநெல்லிச் சமூலங் கேள்மின்னே—வீழாது
தாதுவெகு வெட்டை தணியுமே தாரணியில்
கோதுபிற மேகம்போம் கூறு

---

8. No. 7 அகத்தியர் பதார்த்த குண சிந்தாமணி.

ஏடுகள் *171* ; அபூர்த்தி Lines 4 in a Page

இதுவும் முற்பிரதிகளைப் போன்றது அச்சிடப்படவில்லை.

---

9. No. 8. அகத்தியர் கர்பசூத்திரம் முந்நூறு.

ஏடுகள் 105; Lines 5 in a Page.

இதில் இன்ன கர்மத்தால் இன்ன நோய் வந்ததென்றும் அதற்கு சாந்தி இன்னதென்றும் அதனைத் தீர்ப்பதற்கு மருந்து இன்னதென்றும் கூறப்பட்டுள்ளது. சூத்திரமெனக் கூறப் பட்டிருப்பினும் விருத்தத்தாலமைந்தது.

Beginning

பூரணமாய் மூலமுத லாறு தாரம்
புரியஷ்டந் தசவாயு நாடிமூன்றும்
காரணமாயிடை பின்னுய்ச் சுழுனையாகிக்
கலந்து நின்ற வாதபித்தஞ் சிலேற்பனமாகி
மாரணமாய் சடத்துள்ளே தத்துவங்கள்
மனம் புத்தி யாங்காரஞ் சித்தத்தாலே
வாரணமாய் நடத்துவித்த கர்மத்தாலே
வந்துதடா நோய்களெல்லா மனிடர்க்காமே.

ஆமப்பா மனிடர் செய்த கர்மத்தாலே
அரகரா மேகமென்ற ராசாவாலே
காமப்பால் விதனத்தாற் புசிப்பி னுலுங்
கைக்கடங்கா நோய்கள்வருங் கன்மத்தாலே

போமப்பா மேகம்வந்த காரணந்தான்
புகலுவே னுயிர்வகைகள் செய்ததாலே
நாமப்பா கண்டபடி சொன்னேங் கேளு
நலமான வாதசலம் பித்த சலமாமே.

End

வரிசையாய்ச் சொல்லுகிறேன் கனகளேது
மாந்தமொ ....
பரிசமாங் கரப்பனொடு பறங்கியெ..................
பட்சியொடு பறவையுட தோஷமேது
.... வருவதேது
தீர்க்கமடா சிறுவருக்குத் தேவாமிர்தங்
கரிசனமா மின...
டான மருந்து வகை கணக்குமுத்தே. 302

முற்றும் சிவமயம்.

குறிப்பு :

இதில் கடைசி யேட்டில் பாதி முறிந்து விட்டது. 'வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்' என்னும் செய்யுள் அதில் எழுதப்பட்டுள்ளது முதலிலும் கடைசியிலும் மும் மூன்று வெற்றேடுகள் கோர்க்கப்பட்டுள்ளன.

---

10. No. 9 அகத்தியர் கர்ம காண்டம் முந்நூறு.

ஏடுகள் 93 ; பூர்த்தி Lines 5 in a Page.

இதில் மேகம், குன்மம், க்ஷயம், பாண்டு, மகோதரம், நீரிழிவு முதலிய நோய்களுண்டாகும் விதமும் அவைகளுக் கேற்ற சாந்தியும் மருந்துகளும் சொல்லப்பட்டுள்ளன. 8-ம் நம்பர் கன்மசூத்திரத்தினும் இது வேறுபட்டது. இதனை இயற்றியவர் அகத்தியர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

Beginning :

பூரணமாய் மும்மூலப் பொறியிற் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாஞ் சிரசிற் சூடாம்
காரணமாய் நீரேற்கும் பீனிசப்பேர் கொள்ளுங்
கனலெழுத்த வாயுவதாங் கபால மெல்லாம்
சீரணமாய்ப் போகாது வாத பித்தஞ்
சிலேற்பனந்தான் மூன்றுலே நோய்களெல்லாம்
தாரணையாய்த் தசவாய்வில் மூன்று வாய்வு
சமான னெடு பிராண னபானன்றுனே.

End :

சித்தியுண்டா மவுனத்தில் சொல் பெரியோர்க்கு
தேருன மனதுரிமை யறிவினுலே
பத்தியாய் நினைத்தபின்பு பாவம் போச்சு
பஞ்சபொறி புலனுண்மை பரிந்து போச்சு
எத்திசையுங் கொண்டாடு மிந்தநூலை
யெளிதாக எல்லோர்க்கு மீயவேண்டாம்
முத்தியா மிந்தநூ லெவர்க்கானுலு
மோக்ஷமடா மூன்று நூற்றென்று முற்றே. 298

கர்மகாண்ட முற்றும்.

---

11. No. 10 அகத்தியர் நயனவிதி.

ஏடுகள் 69; Lines 5—6 in a Page.

இது, கண் ரோகங்களின் வரலாறும், அவற்றின் பேதங்களும் அவைகளுக்கு மருந்துகளும் கூறுவது. அகத்தியர் நயனவிதி 500 என்று சில வைத்தியர் சொல்லுகின்றனர். இதன் தலைப்பில் நயனவிதி 300 என்று எழுதப்பட்டிருப்பினும் இதில் 345 பாடல்கள் இருப்பதனுல் இது அகத்தியர் நயனவிதி 500 என்று எழுதுவதற்குப் பதிலாக 300 என்று எழுதியிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. சிற்சில இடங்களில் பூச்சி அரித்திருக்கிறது. அச்சிடப்பட்டுள்ளது.

Beginning

மாதுமை பாகர், சொன்ன மாமறை முதலை யாய்ந்து
தீதுகள் வாராதென்று திருவுளத் தருளினாலே
ஆதிமா முனிவர் சொன்ன ஆயுரு வேதத்துள்ளே
நாதனார் தெரிந்துரைத்த நயனமாம் விதியிதென்றே.

உயர்ந்திடும் நயனந் தன்னில் உறுபிணி வியாதியெல்லா
மயங்கிடு மிருளாயுற்று வருந்திரி தோஷந் தன்னால்
வியங்கிட மேவிநிற்கும் விரவிய மருந்து நானும்
தயங்கிய கிரியை செய்யத் தானிது கூறலுற்றேன்.

கருமணி தன்னில் நோய்கள் கலந்திடும் நாற்பத்தஞ்சு
மருவிய வெள்ளை தன்னில் மருண்டிடு மிருபதென்க
குருவிய பாவைதன்னில் குறித்ததோ ரொருபத்தாறு
கருவுமாங் கடையில் நிற்கும் பதினைந்து தோஷந்தானே.

End

லெகு சந்தனாதி.

வாசமுறு சந்தனம் பிச்சமலரோரொன்று வருகாசனிடை யிரண்டாம்
வரிசையுள்ள காவிக்கல் கோரோசனை திப்பிலி வளர் சீரங்காசிடை
நேசமுடனே தண்ணீர் வார்த்தரைத் தோர்சாமம் நீளவேகயிறு சேர்த்து
நிழல் தன்னிலுலர்த்தியே முலைப்பாலிலிடுகண்ணி லெரிவு சதைவளர்த்தி
காசமுடனே திமிரங்கண்குறுகு பில்லமும் கடிய நிமையிளிகண்ணுமே
கண்ணெரிவுந்திடுமென்ன கோபமுற்றும் கண்ணுள்ள நோய்களெல்லாம்
தேசமுறுமா தவன் கண்டவிருள் போலவே தீருமே. 345

12. No. 11 அகத்தியர் நயனவிதி.

ஏடுகள் 107 ஆபூர்த்தி Lines 5 in a Page.

இது, 10-ம் நம்பரைப் போன்றது. இதில், நயனரோகம் 96-இன் பெயர்களும் தனியே எழுதப்பட்டுள்ளன. இது முன்பிரதியைவிட சுத்தப் பிரதியாகக் காணப்படுகின்றது. இதில் 150 செய்யுட்களே இருக்கின்றன.

---

13. No. 12. குணவாகடம்.

ஏடுகள் 84; அபூர்த்தி Lines 4—5 in a Page.

இது, நோய்களின் குணத்தைக் கூறுவதால், குணவாகடம் எனப் பெயர் பெற்றது. இன்ன தன்மை காணப்பட்டால் இன்ன நோய் என்று நிதானிப்பதற்கு மிக்க அனுகூலமாயிருப்பது. ஆதிகாலத்தில் உமைக்கு சிவபெருமான் உரைத்தது. இதில் முழுவதும் இல்லாமையால் இத்தனை செய்யுளையுடையது இந்த நூல் என்று சொல்லமுடியவில்லை. இதனை இயற்றியவர் அ க த் தி ய முனிவரோ தேரையரோ தெரியவில்லை. இக்குண வாகடத்தில் 40 செய்யுட்கள் எழுதி மீண்டும் நோக்கப்பட்டிருக்கின்றன.

Beginning :

செந்திருவைச் சேரலாம் செந்தமிழைப் பாடலா
மிந்திரனைப் போல்வாழ்ந் துண்டிருக்கலா—மந்திரஞ்சேர்
வெற்பகத்தை யூடறுத்து வேலவர்க்கு முன்பிறந்த
கற்பகத்தைக் கைதொழுதக் கால்.

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் கரும மாதலாற்
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழுங்
கணபதி யென்றிடக் கருமமுமில்லையே.

இவ்விரண்டு செய்யுட்களும் குணவாகடத்தைச் சேர்ந்தனவல்ல.

பாதிமா துமையொரு பாகனு ரருளிய
தீதிலா வாகடநூலைச் செந்தமிழ
நீதியா யெனக்கிது நிறைய வோதுவா
யாதியா பரமனே யரகரா சிவசிவா.

End.

பண்டையிலு மதுமொழி தப்பாதே சொல்லும்
பல்கடிக்கும் பலகாலும் பாலே வேண்டும்
கண்பெருக்கும் சிவக்கும் மிவை குணமே கண்டால்
கம்பித்தமென்று மிதைக் கருதலாமே. 300

---

14. No. 13. அகத்தியர் குருநாடி முதலியவை.

ஏடுகள் 242; Lines 3—6 in a Page.

இதில் நாடி நிதானம், நாடி நிலைமை, வாதபித்த சிலேட்டுமங்களில் உற்பத்தி, சுரம் சன்னிகள், சோகை, காமாலை, நீர்க்கோர்வை, நீராமை, பீலிகை முதலிய நோய்களின் வரலாறு சுரங்களுக்கு கஷாய பாகங்கள் ஆகிய இவைகள் அடங்கி இருக்கின்றன. இதில் அநேக செய்யுட்கள் பலரால் செய்யப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. இதில் 19 முதல் 25 வரையிலுள்ள ஏடுகள் இல்லை.

Beginning:

இயல்செறி மாந்தர்க்கெல்லா மிலங்கிய வலக்கையாகும்
புயல்செறி குழலார்க்கெல்லாம் பொருந்திய இடக்கையாகும்
அயமில்லான் வலக்கைதன்னை இடக்கையாற் பற்றிப்பார்க்க
வயநல்லா ரிடக்கைதன்னை வலக்கையாற் பற்றிப்பாரே.

திறவுசெய் விரலைப்பற்றிச் செய்யதோர் கரத்தின் மூன்றும்
பிறியவே சகடை நாடிப்பின்னெழ வாத நாடி
யறியவே யுதரங் கோபித்தடைகியே பித்தந் தோன்றில்
உறுபிணித்தணி வென்றுய்ய ஒதுங்கியே நிற்குங்கண்டாய்.

End :

கால்கை உழைந்து திமிருமுண்டாய்க் கண்ணுந்தூங்கிச் சோபித்துக்
கோலஞ் செறியும் நகமெல்லாம் குறித்துச் சற்றேகனங் கொண்டு
சீலமிருந்து நீர்க்காணில் சிறுநீர் வற்றுமுடுகு மென
மானைத்தடங்கண் மானனையமானே வாதரோகமிதே.

சொக்கர் துணை.

---

15. No. 14. அகத்தியர் வைத்தியம் இரண்டாயிரம்.

ஏடுகள் 490 ; Lines 5 in a Page.

இது, பல வைத்திய நூலின்றும் எடுத்துத் தொகுக்கப் பட்டதே யொழிய ஒரு நூலன்று. இதில் வைத்தியர் லட்சணம் நாடி நிலையைக்கொண்டு நோய்களின் சாத்திய அசாத்தியத் தன்மை அறிதல். சுரங்களின் பேதங்களும், அவற்றிற்கு கிஷாயங்களும், சன்னி வகையும், பற்பல வாதரோகங்களும் அவற்றிற்கு மருந்தும், மூலம், குன்மம், ஈளை, இருமல், காசம், நீரிழிவு. சூலை, பாண்டு, காமாலை, சித்தப்பிரமை முதலிய நோய்களுக்கு மருந்தும் இன்னும் பல விஷயங்களும் கூறப் பட்டுள்ளன. அட்டைப் பிரயோகமும் சொல்லப்பட்டிருக் கிறது. இதனைச் செய்தவர் அகத்தியரல்லர். இதிலுள்ள செய்யுட்கள் தொடர்ந்தவைகளாக இல்லை. ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் தனித்தனியாக அனுபோகத்தை யொட்டி வைத்தியநூலில் தாம் படித்துணர்ந்தவற்றைச்

செய்யுளாகச் செய்து கோத்தவைபோல் காணப்படுகிறது. ஆனால் செய்தவர் பெயரைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இது சரஸ்வதிமகால் நூல் நிலயத்தாரால் அச்சிடப்பட்டுள்ளது.

Beginning

பாதி மாதுமை பாகனு ரருளிய
நீதிலா வாகடஞ் செந்தமிழ் செய்திட
நீதியாய் விளக்கிது நிறைய வோதுவ
ஆதியாம் பரமனே அருள தாகுமே.

மனிதரானவர் கட்கெல்லா மதியணி சடையார் சோதி
பனியது போலவந்த பாவமாம் வியாதிக் கெல்லாம்
இனியது குறிப்புங் காட்டி யில்லவாமென்ற ரோகம்
புனிதனே அறியவோதாய் போற்றிநின் தாளேபோற்றி.

* * * *

போதமழிந்து பொய்பேசும் போசனத்தில் மிகவாஞ்சை
யேதப்படவேசுரம் சோம்பு மியலா மயிற்குத்திடலாடல்
பேதமதாக விழிவெளுத்தல் பிரதாபத்துடன் தானகைத்தல்
தோதஞ்சந்தில் மிகக்கண்டால் சொல்லும் பூதசுர மென்றே.

கர்ணிக சன்னிக்குக் கலியாணபயிரவரசம்.

End

கல்லியாணரசத்துடன் நெல்லியின் காய்கெந்தகஞ் சூதமுங்
காரீயபற்பமும் பச்சை நாகப்பாம்பு கடும்பிச்சினுடன்
திப்பிலி
செல்லவே கொடுவேலிவேர்க் கஷாயத்திலோர் தினமரைத்
துண்டையாக்கி
செப்பமாய் வச்சிர மூஷையிலிட்டே வாலுகா யந்திரத்
திலேதான்
வல்லதா யொருநா ளெரித்தாறி மீன்பிச்சு வார்த்தரைக்
கடலையா

மருவாதியனுபான விசேஷத் திலேயிட மருவுகர்ணிக
சன்னிபோம்
சொல்லெலாம் வென்றமொழிபத்தியம் பாற்சோறு துய்ய
சர்க்கரையினுடனே
தோற்றியதாகம் தணியக் கரும்புதின் சுகத்தைக்
கொடுத்திடுமே.

---

16. No. 15 (*a*) அகத்தியர் செந்தூரம் முந்நூறு

ஏடுகள் 115; பூர்த்தி Lines 5 in a Page.

இதில் அப்பிரகம், வங்கம், அயம், லிங்கம் காந்தம், நாகம் அஷ்டபதங்க முதலிய செந்தூரப்போக்கும், சீந்திற் சர்க்கரை செய்பாகமும் பிறவும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்பட்டுள்ளது. தலைப்பில் கண்டபடி இரட்டு வாகடமும் குருஜெய நீரும் எழுதிய ஏடுகள் இதில் இல்லை.

Beginning :

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தால் அஷ்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வைத்தியநூல் வகையாய் சொல்வேன்
போதகத்தின் முகத்தானை கடை கெட்டானைப்
புழுக்குழியில் விழுந்தானைப் புதல்வன் றன்னைச்
சாதகமாய் மனமடங்கி அறிவிற் கூடித்
தற்பரனாய் நின்ற கணபதியே காப்பாம்.

End

மூலத்தினெழுத்தாலே மவுனங் கொண்டு
மூட்டினால் வடுகனங்கே நிர்த்தஞ் செய்வார்
ஆலத்தின் குண்டலிக்குள் அடுக்கைப்பாரு
ஆசையவன் வைப்பதற்கு மாலைசாத்து

சிலத்தின் நந்தியுட பூசை பண்ணு
சேகண்டி நாத வொலி மணியி னோசை
காலத்தின் கருவறிந்து பூசைதீர்ந்தால்
கைக்குள்ளாம் வைத்திய முந்நூறு முற்றே.

அகத்திய நாயனுர் அருளிச் செய்த வைத்திய
செந்தூர முற்றும்.

Colophon

சகாப்தம் 1722ஞ ரவுத்திரி ஞ பங்குனிமீ 24உ ஆத்ததி வாரமும் சத்தமி திதியும் மூல நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் ராசமானிய ஸ்ரீ சரபோஜி மகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்த பிரகாரம் துபாசி கிஷ்ணம் நாயகர் குமாரர் ரெங்கப்ப நாயக்கர் அகஸ்திய சுவாமிகள் செந்தூர முந்நூறு எழுதி நிறைந்தது முற்றும். சிவமயம் பரபிரம்ம சொரூபானந்த மூர்த்தி துணே.

---

17. (b) அகத்தியர் சூத்திரம் முப்பத்தாறு.

Lines 5 in a Page.

இதில், தாமிர பற்பம், நாகபற்பம், அயபற்பம் தங்க பற்பம் செய்முறையும் அவைகளால் தீரும் வியாதிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

Beginning

ஆதியாம் பித்தமதா லப்பனே வாதமுண்டாஞ்
சீதள சிலேட்டுமஞ் சேருமே—வாதியென்ற
பேர்படைத்த பின்பே பலத்த வயித்தியஞ்செய
காரி நிறத் தைங்கரனே காப்பு.

பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
பரிவான தாம்பிரத்தைக் குகையில் வைத்து
சேரப்பா மதியினுப்பு பலமே போடு
சேர்ந்துருகும் போதிலே மருந்து கேளு

காரப்பா அண்டமது பலந்தா னென்று
கட்டாக நவச்சாரம் பலந்தான் ரெண்டு
சீரப்பா கல்வத்தில் தூளதாக்கிச்
சேர்ந்த தொரு பொடிமேலே காரமரை போடே.

End

ஆமப்பா ஈந்திடவே வைத்யம் பாரு
அஷ்டதிசை மெய்க்கவுன்னை வாழ்த்தும் லோகம்
நாமப்பா வைத்தியத்தின் மருந்தை யெல்லாம்
நயமாகக் குறுக்கி வைத்தோம் முப்பத்தைஞ்சில்
வாமப்பா இந்த வகை மருந்தை வைத்தால்
வையத்தின் பேருரைக்கையிலே நோய்களோடும்
தாமப்பா எட்டிரண்டு மிருபத்தஞ்சும்
தடையறவே யுருவேறச் சித்தியாமே 36

குருபாதந் துணை.

---

18. No. 16 அகத்தியர் கரிசல் முந்நூறு.

ஏடுகள் 88 ; அபூர்த்தி Lines 5 in a Page.

இதில் மணிமந்திர ஔடத விலக்கணமும், நண்மாணுக்கர், தீயமாணுக்கரிலக்கணமும் வைத்திய சிந்தாமணி முதல் வைத்தியமாலை யீறாக 32 வடமொழிச் சாத்திரப் பெயர்களும் மகாபூரண சந்திரோதயம், வாலசந்திரோதயம், சக்த சந்திரோதயம், பூரக சந்திரோதயம், கெந்தி சந்திரோதயம், தங்க சந்திரோதயம் முதலிய அருமையான செந்தூரங்களும் சந்தனாதி, மகா சந்தனாதி, அசுவகந்தாதி முதலிய தைலங்களும் கூறப்பட்டுள்ளன. எளிதாகத் தெரிந்துகொள்ளக்கூடிய நிலைமையில் இல்லாமையால் இது கரிசல் எனப் பெயர் பெற்றதுபோலும் இயற்றியவர் அகத்தியர் என்றெழுதப்பட்டிருக்கிறது. பிழைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

Beginning:

பூரணி மாமலை மகளருள் புதல்வன்
காரண மாமத கரியடி பணிவாம்.

(வஸ்து வணக்கம்.)

அமுத மதியணி சடையினர் விடையவ
ரெமத மழகளிறிணையடி பணிவாம்.

அருளிறை வணக்கம்.

சூரன் சூறமலவே லாற்றடி மயில்
வீரனறு முகனிணையடி பணிவாம்.

காரியத்தினை மாரச் சுத்தி போலே நிர்ப்படியே
காணீருத்துடை ஓர்பணமட்டதி சூரணதுப்பதிலே
பாரீர் மர்த்தன மீர்காலிட்டிடவே சீ வெட்டைகள் வாய்
வோடே
கட்டுகள் மாவாயுத்தடை நீரோடிற் பிடியே
பேர் மூலத்துள்சீழும் வெட்டைகள் மீதோடித்திருகல்
வேரோடிற்றிடு காரியத்தினை யேதானுட் கொளவே.

End

தாகமெடுக்கின்ற நீரழிவு சயமீளை யிருமற் காசம்
வத்து முடற் காச்சல் நாலாமுறை யுற்றசுரம்
ஒரு நாட்டான உடலேளைப்பு மக்கினி மந்தமுமோடிடு மீடு
பத்தியம்
முருங்கக்காய் பசுவின்பால் கொடு தயிர் மோராய்
மேதித்தயிர் மோர் நெய் வெள்ளாட்டுப்புக்கண்டம்
கச்சல் வாழைக்காயாகு நல்லுப்புகளாது ருசிதானிசமாய்த்
தையில மெங்நோயு மகற்றிடு மசுவகந்தாதி யதிசுகமாமே.

அமுக்கராக் கொம்பரக்கு சித்தாமுட்டி வேர்
குமித்தவகை பதினொர்பலங் கூட்டியே
பதக்கு நீர் விட்டு நாலுழியாய்க் காய வடிய

Colophon

சகாத்தம் 1722 ஸ்ரீ ரவுத்திரி ஸ்ரீ கார்த்திகை மீ 16உ சனிவாரமும் சதுர்தசியும் பரணி நட்சத்திரமும் கூடின சுப தினத்தில் ராசமானிய ஸ்ரீ சரபோஜிமகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்தபடிக்கு அகஸ்திய சுவாமி அருளிச்செய்த கரிசல் பஞ்சாதி முந்நூறு துபாசி கிஷ்ணம் நாயகர் குமாரன் ரெங்கப்ப நாயகர் எழுதி முகிந்தது. முத்தும்

---

19. No 17 (*a*) அகத்தியர் பற்பமுறை இருநூற்றஞ்சு.

ஏடுகள் 175; Lines 5 in a Page.

இதில், அயம், காந்தம், தாம்பிரம் ரசம், கெந்தி, வங்கம், நாகம், தாளகம், வீரம், லிங்கம், பவளம், முத்து வயிரம் நீமிளை முதலிய பற்பமுறையும் அவற்றால் தீரும் வியாதிகளும் பலவகைத் தயிலம், கிருதம், கஷாயம் முதலிய பாகங்களும் சொல்லப்பட்டுள்ளன.

Beginning

பூரணமா மும்மூலப் பொறியிற் சூடாய்ப்
புகையெழும்பி மேகத்தால் சிரசிற் சூடாம்
காரணமாம் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்த வாயுவினால் சூலை ரோகம்
மாரணமாம் வாதத்தா லெழுந்த ரோகம்
மதியதொரு பித்தத்தில் கிராணி யாச்சு
தாரணமாம் வாயுவினால் குல்ம மாச்சு
சார்ந்த சிலேற்பனங் கூடிற் சயமதாமே. 1

End

மூலிகைக்குள் வெகுமூலி சஞ்சீவிமூலி
முளைத்ததே மலைதோறுங் காடுதோறும்

சாலிமுதல் வெகுமூலி நாட்டுக் குள்ளே
சாதகத்தை யறியார்கள் சண்டி மாண்பர்
ஆலிக்கும் வைத்தியந்தான் குணத்தைக் காணுன்
ஆண்மையிளுல் வயிறுபிழைக்க அலைவார்மெத்த
சோலிக்குள் மருந்துவைக்க வேண்டாம் சொன்னே
தொகையான இருநூற்றின் துகையைப்பாரே. 204

Colophon :

சகாப்தம் 1722ஞு ரவுத்திரிஞு மாசிமீ 25உ சுக்கிர வாரமும் அமரபக்ஷமும் ஷஷ்டியும் அனுஷ நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் ராசமானிய ஸ்ரீ சரபோசி மகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்தபடி துபாசி கிருஷ்ண நாயக்கர் குமாரன் ரெங்கய்யன் அகஸ்திய சுவாமிகள் வைத்திய நூல் பற்பமுறை இருநூற்றஞ்சு எழுதி நிறைந்தது முற்றும்.

---

20 (b) அகத்தியர் பற்பமுறை.

Lines 5— in a Page.

இது, முன் பிரதியைப் போன்றது. அதைப்போலவே 204 செய்யுட்கள் இருக்கின்றன. அதனினும் இது சிறந்த பிரதி. நல்ல நிலைமையிலிருக்கிறது

---

21. (c) அகத்தியர் தண்டகசூத்திரம் இருபத்தைந்து.

Lines 5 in a Page

இதில் யோக ஞானங்களும் அஞ்சனமும் கூறப்பட்டுள்ளன.

Beginning:

முச்சுடராய் முப்பொருளாய் முன்னுன்கு முன்னின்று
இச்சையுட னெட்டிரெண்டு மேகமதாய்—அச்சதவு

மாகி வெளியொளி யாதியந்தத் துட்பொருளாய்
ஏக வுணதிடையே யேறு:

ஏறுமது மூலாதாரத்தி னின்று
என்மகனே புலத்தியனே யிசைந்து கேளு
மாறுமது இடைபின்னு யிரண்டு மாறி
மகாரமது முப்பொருளாய் நின்ற சூட்சம்
வேறுதுறை யேதுமில்லை மவுனத் தாட்டு
வேதாந்த சுழிமுனையி லாட்டத்தாலே
தேறுமப்பா கற்பமெல்லா மவுனத் தாலே
சகச்சால சித்தெல்லா மவுனந்தானே. (1)

End:

அனுப்பின நூலிந்தோன் மனது நொந்தால்
அழிந்திடுவாய் நூலொன்றும் பலியாதையா
நினைப் பெல்லாம் புருவமையங் கண்ணுமங்கே
நில்லடா சதாநித்தம் ஓ மங் கென்றே
செனித்தவிட மழிந்தவிட மரணமங்கே
தெரிந்து கொள்ளு சிவசத்தி சூக்ஷமங்கே
அனித்தியமாய்ப் போகாதே சதாநித்திய முன்னு
அதியான சுழிமுனையி லறிவு முற்றே. (26).

Colophon :

பார்த்திப௵ ஆடிமீ 12உ சோமவாரம் தாசு 3க்கு மேலக் காவேரியிலிருக்கும் வைத்தியர் சித்தம்பரம் செட் டெழுத்து. சிவமயம்.

மோ நமசிவாய குரு.

---

21. (d) அகத்தியர் தாண்டக நூல்.

Lines 5 in a Page

இதில், அஞ்சனம், வசியம், உருமாற்றம், மருந்தீடு அஷ்ட கர்மம் முதலியவை சொல்லப்பட்டிருக்கின்றன. இயற்றிய வர் அகத்தியர் என்றெழுதப்பட்டுள்ளது.

Beginning :

அந்தணர் பாதம்போற்றி யறிவுடன் வாழ்வோர்க்கெல்லாம்
சந்ததம் பூமிமீதிற் சாத்திய தண்டகம்தான்
எந்தனுர் பிள்ளையெல்லா மிதுவறிந் துள்ளே கொண்டு
மிந்தமிழ் பிறர்விள்ளாதார்ப் பெரியவராகுந் தானே.

நயம்பட மையாய்ச் செய்து நலமுள்ள புழுகு கூட்டி
மெயநமசி வாய வென்று வருந்தி நூற்றெட்டு மேத்திச்
செய்யும் பெறுங் காரியங்கள் தோகையர் மைக்கன்னங்கள்
மயம்பெறுந் தொழிலுக் கெல்லாம் வருந்திங்கள் திலதம்
போடே.

End

ஆனேம் சிவனை யடிதொழு தேத்தி
மானே பார்ப்பதி மக்களு மானேம்
வீணு யிராதே விழுஞ்சவர் கண்டாய்
நானே தண்டகம் நாடுமுறை முத்தே. *(101)*

அகத்தீசர் தண்டகம்.
முற்றும்.

---

23. (e) அகத்தியர் பட்சணி நூற்று முப்பத்திரண்டு.

Lines 5 in a Page.

இதில், யோகஞான முறைகள் பரிபாஷையாகக் கூறப் பட்டிருக்கின்றன.

Beginning

பூமாது வாசமாகும் பொருந்திய தண்டக்கத்தில்
நாவது ஓதுகின்ற நாதனே நடுவணையிருந்து கேளு

போவது வருவதாகும் பூரணங் காப்பதாகும்
ஆவது கோடி வித்தையானந்தங் காப்புத்தானே.

*　　　*　　　*　　　*

கல்லு ருகுஞ் செம்பு
வல்லிருளில் நம்பு
புல்லருகு தும்பு
சொல்லுவது வம்பு.

பீக்கி லாட்டைக் கண்டு
தாய்க்கு ளாட்டை யுண்டு
பேய்க்கு ளாட்டில் நின்று
கூக்க லாட்டைப் பாரே,

மங்கை முது கண்ணில்
தங்கை கொடு பிசையத்
திங்கள் கதிர் சேரும்
எங்கள் குல மாமே.

End

முத்திலு நூறுங் கூட்டி முப்பத்தி ரெண்டும் பாரு
ஒத்திட மதுவாய்க் காணும் உற்பன முறுதி தோணும்
கத்தது என்னால் தன்னைக் கைவிடார் கருவைக்காண்பார்
செத்தபே ரில்லையென்னால் சேர்ப்பது முத்தியாமே. 132

அகஸ்தியர் பட்சணி நூற்றுமுப்பத்திரண்டு

முற்றும்.

குறிப்பு ;

இதில் மேற்கண்டவைகளையல்லாமல் அசுவ வைத்திய அட்டவணை எழுதிய மூன்று ஏடுகளும் கோக்கப்பட்டுள்ளன.

24. No. 18. *a*) அகத்தியர் முப்புச்சூத்திரம் இருநூறு.

ஏடுகள் 72; அபூர்த்தி Lines 5—8 in a Page.

இது, இரசவாதத்திற்குரிய முப்புமுறையைக் கூறுவது. இதில் 86 பாடல்களே இருக்கின்றன.

Beginning

ஆதியான மனக்கோலஞ் செய்யு நாளில்
ஆதிமுதல் தேவரிஷ கூட்ட மாச்சு
வேதியனும் மாயோனுந் தானு யன்று
விமலனுர் விசுவனுக்கு வார்த்தை யீந்தார்
நீதிபெறச் சாருதியால் தெட்ச ணயம்
நிலையான சார் பொதிய கிரியில் சென்றேன்
ஆதியொரு காரணத்தால் பரைதான் னின்ற
ஆகடந்தா னம்பரமா மருளைப் பாரே.

End

போமப்பா இந்தவழி யறியவேணும்
இல்லாட்டாற் புலைய னெனத்திரிய வேணும்
வேமப்பா சரக்கெல்லம் வேகமாற்றுன்
வேறேயொரு வழியாகச் சொல்லக் கேளு
காமப்பால் மிஞ்சினதாற் கழுதைச் சன்மம்
கனதேசி நீராலே சரக்கெல்லாம் கட்டு
ஏமப்பா இதிலென்ன சுருக்குண்டென்றால்
எளிதல்ல தேசி யுடச்சாறு தானே. 86

---

25. (*b*) அகத்தியர் பற்பமுறை.

Lines 6—8 in a Page.

இது, 17-ம் நம்பரின் உட்பிரிவாகிய (*a*)*போன்றது. இதில் 146 செய்யுட்களே இருக்கின்றன.*

குறிப்பு :

கடைசி ஏட்டில் மழை பெய்விக்கவும் அதில் நனையா திருக்கவும் மந்திரம் எழுதப்பட்டிருக்கிறது. சிதைந்திருக் கிறது.

---

26. No. 19 (*a*) அகத்தியர் பூசாவிதி இருநூறு

ஏடுகள் 167; பூர்த்தி **Lines 5 in a Page.**

இதில், சிதம்பரச்சக்கரம் வரையும் முறையும் அதனை பூஜிக்கும் விதமும் வாசிதாரணையும், அஷ்டகர்மமந்திரங்களும் பிறவும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning

ஆதார மாறு மகண்ட குருபாதம்
வேதா கமத்தின் விதிமார்க்கம்—நாதமுறும்
விந்து மூலம் விளங்குபூ சாவிதிக்குத்
தந்தி முகத்தோன் கருணைதான்.

காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழான வட்டாங்க நடன மாடுஞ்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்புகிறேன் மனந்தெளிந்த சித்தர்க் கப்பா
வாரணமா முகத்தோனை முதலே பூசை
மத்தமொரு பூசை யெல்லாமதற்குச் செய்யே.

End

ஒன்றான மன துரிமை சீடனுக்கு
உரைசொல்லிப் பூசைவிதியுரைக்கச் சொல்லு

விண்ணுட்டங் கண்ணுடி மேவச் சொல்லி
மேலான மவுனத்தைப் பற்றச் சொல்லு
சுண்ணும்பு மஞ்சளும் போல் குறிகள் நாட்டிச்
சுழிமுனையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டிக்
கண்ணுடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைதரும் பூசைவிதி கருவாய் முறறே. 200

குறிப்பு :

கடைசியில் 'பூதலத்தில் தெட்சணுயம் அகத்தீசுரமூர்த்தி பூரண சூத்திர முற்றும்' என்று எழுதப்பட்டிருக்கிறது.

---

27. (*b*) அகத்தியர் தீக்ஷா விதி இருநூறு.
Lines 5 in a Page.

இதில் இன்னின்ன ராசியில் பிறந்தவர்க்கு இன்னின்னது சித்திக்குமென்பதும், பிராணுயாமம் தசதீக்ஷைகளின் விபரமும், காயசித்திக்கேற்ற கற்பங்களும், நாற்பத்து முக்கோணம் ஐம்பத்தோரட்சரம், சாபநிவர்த்தி, சிவபூசை முதலியவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

Beginning:

வானைத்தா வியபொதிகை மகத்தான ரிஷியுடைய வாக்கு நேர்மை
பானைத்தா வியபூசை பரிவான சிவயோகப் பண்போர்கேளு
மீனைத்தா வியராசி விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லுமேஷம்
சேனைத்தா வியதுலாத்தின் சென்மராசிக் கருவைச் செப்புகிறேனே.

End :

பணிமாறு காலத்தே மணியி னேசை
பாங்கான சேகண்டி நாதவோசை
பணிமாறு காலத்தே மவுன தோத்திரம்
பத்தியுறும் வாலைகையி லேகியத்தை யீந்து

பணிமாறு காலத்தே சகல சித்தும்
பரிவாகத் தாவென்று கையில் வாங்கிப்
பணிமாறு காலத்தே பணிந்து தெண்டம்
பண்ணுவாய் பூசைவிதி தீக்ஷைமுற்றே. 204

அகத்திய நாயனார் தீக்ஷைவிதி
முற்றும்.

---

28. No. 20 அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் முந்நூறு.

ஏடுகள் 103; பூர்த்தி Lines 5—6 in a Page.

இதில், வாதராட்சதன், சுயமக்கினி, பூபதிமாத்திரை, ரசசிந்தாமணி, கோரோசனை மாத்திரை, அர்த்தநாரீச்சுர மாத்திரை, சிலோதாரி மாத்திரை, பஞ்சதீபாக்கினி, கண்டாத்திரி லேகியம், சிந்தாதி லேகியம், சரபங்க வில்வாதி லேகியம், கூழ்பாண்ட லேகியம், அக்கினிச் சூரணம் முதலிய சூரணங்கள் சந்தனாதித் தைலம் முதல் பலவகைத் தைலங்கள், கிருதங்கள், எண்ணெய், கலிக்கம், செந்தூரங்கள், பற்பம், கிஷாயங்கள், பூரணச் சந்திரோதயம் முதலியவைகள் கூறப்பட்டுள்ளன.

Beginning

பூரணமாய் நிறைந்தகும்ப பரைதாள் போற்றி
புகலுகிறேன் வைத்திய ரெத்னச் சுருக்கந்தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்து வாழ்த்தி
வைத்தியந்தா னிந்தமுந்நூற் றறுபதுகள் சுருக்கம்
காரணமாஞ் செந்தூரம் பற்பம் லேகியம்
கருவான தைலமொடு கிருத மெண்ணெய்
சூரண மாக்கிராணமொடு கலிக்க மாத்திரை
சுளுகுகுரு நாடிமுதல் சொன்னேன் பாரே.

End

மூழ்கவே வியாதி யெல்லாங் கடலே புக்கும்
முக்கியமாய் அகத்தியர்க்குச் சிவந்தான் பண்ணி
நெகிழாதே தியானமது எந்நேரம் பண்ணு
நேரான தேவியைத்தான் தியானம பண்ணு
தகிழவே சிவந்தனையே பூசைபண்ணு
தவமானால் வியாதியெல்லாந் தவறுண்டே போம்
மகிழவே வைத்தியத்தைச் செய்தானாகில்
வையகத்தி லொப்பாகு மீசன் முறறே.

Colophon

சாலியவாகன சகாப்தம் 1746 தாருணஞு மார்கழிமீ 7௳ *சனிவாரமும் கூடிய புண்ணியதினத்தில் மகாராச* **ஸ்ரீ சரபோசி மகாராச சத்திரபதி சாயபு அவர்களுக்கு வைத்தியம் கோபால பிள்ளை** *குமாரனாகிய கொட்டிய மத்தியஸ்தம் அய்யாக்கண்ணுப்பிள்ளை தன்னுடைய பேர் நிமித்த மாத்திரம் ரெத்தினச் சுருக்கமென்னும் வைத்திய சாஸ்திரத்தை அரண்மனை லேக்கிகாளைக்கொண்டு (எழுதுகிறவர்கள்) எழுதி நிறைவேறினதைச் செலுத்தி சாஷ்டாங்க விண்ணப்பம்*

ஸ்ரீ யாதவ கோபால அரிபிரசன்னம்.

---

29. No. 21 (*a*) சித்திராரூடம்.

ஏடுகள் 194; Lines 5 in a Page.

இது பாம்புகளின் பிறப்பு முதலியவற்றைச் சொல்வதெனினும் 24, 117-ம் நம்பர்களின் வேறுபட்டது நொண்டிச் சிந்தினால் பாடப்பட்டுள்ளது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning

திருமருதூர் வளரும்-நாகலிங்கர்-சீர்பாத கமலமென் சிரத்தில் வைத்து
மருவுஞ் சித்திராரூடப்-பொருளினை, வகுத்துச்சொல் வேனிந்த மகிதலத்தில்

புண்டரீகத்திலுறைவோன்-படைத்ததில்-பொல்லாவிட
செந்து வெல்லாமுமே
விண்டுரைக்க கேளுமினி-நல்லபாம்பு-விரியன் வழலை கொம்
பேறி மூர்க்கன்
சாணகன் மூக்கன் புடையன்-மண்டலி-சவடிமயக்கரா
மண்ணுளிசாரை
வாணலை வாட்டுஞ் செய்யா-னிருதலை-மணியன் சிலந்திபுலி
முகப்பூச்சி

End

மாறுக முடனுகப் பலவிஷம் மானிடர் தன்னைப்பற்றி வாதை
செய்தால்
மந்திரதந்திரத்தால் தியானத்தால் மணியினுல் மருந்தினு
லெந்த விஷமும்
முந்திடும் விஷங்களெல்லாந்தீர்த்திடு முதியவர் சிறியவ
ரென்னுமிந்த
தண்டமிழிசை யொருநூறும் பருவமும் சரிவர வேயிருந்து
தான்வளர்ந்து
திருமகன் விளக்கம் பெற்றுப்பதினுறு சிறுவரைப் போலு
முத்திசெல்வர்தாமே.

முற்றும்.

---

30. (b) சர்ப்ப சாத்திரம்.

Lines 5 in a Page.

இது 117-ம் நம்பர் உட்பிரிவாகிய (a) போன்றது இதில் 218 செய்யுட்கள் இருக்கின்றன,

---

31. (c) விஷமருந்து அட்டவணை.

Lines 4—6 in a Page.

Beginning

செய்யான் கடிக்கு மருந்து

கஞ்சாங் கோரை உள்ளிவசம்பு போட்டுச் சிறு நீரில் துவைத்துச் சாறு கொண்டு உள்ளுக்குக் கொடுத்து துவலை யிடவும்.

நட்டுவாய்க்காலிக்கு :

சுணைப்புல்லும் உள்ளி வசம்பும் போட்டுச் சிறு நீரில் துவைத்துச் சாறு கொண்டு உள்ளுக்குக் கொடுத்து நசிய மிட்டுத்துவலையிடவும்,

பெருவிரியன் கடிக்கு மருந்து:

மிதிபாகல் சாறு, மிளகு வறுத்துப் பொடி பண்ணி பசு வின் நெய்யாழாக்கு விட்டு **(க்கலந்து)** *குடிக்கத் தீரும்.*

விடத்துக் கெல்லாம் நசியம்;

மிளகு, வெள்ளுள்ளி, மகிழங் கொட்டைப் பழம் பிசைந்து இலைக்கள்ளி, வேப்பெண்ணெய், வெங்காரம், ரசம் இது சம னுய்ஏழுதரம் அரைத்து ஒருசீலையிலூட்டி மூக்கில் நசியமிடத் தீரும்.

வேறு. விட மீறித்தலைக் கொண்டால் எருக்கிலைப் பழுப்பை ஏழிலை யடுக்கிப் பருத்தியிலை லவணம் இதுகளெல் லாம் சாறு வரப்பிழிந்து நசியம் பண்ணத்தீரும்.

---

32. (*d*) சித்திராரூடம்.

Lines 4—5 in a Page.

இது 117-ம் நம்பர் உட்பிரிவாகிய (a) போன்றது. அதைப்போல வசனத்திலுள்ளது. முழுவதும் இருக்கின்றது

---

33. (*e*) சர்ப்பாரூடம்.

Lines 5 in a Page.

இது 117-ம் நம்பர் உட்பிரிவாகிய **(b)** *போன்றது. அதைப்போல வசனத்திலுள்ளது. முழுவது மிருக்கின்றது.*

---

34. No. 22 சிந்தராரூடம்.

ஏடுகள் 102; அபூர்த்தி Lines 5 in a Page.

இதில் பாம்புகளின் பிறப்பு, அவற்றின் பிரிவுகள் அவைகளின் நிறம், குறி, வயது, கடிவாய் விவரம், முதலியவைகளையும் பாம்பு விஷத்தைப் போக்குவதற்குக் கலிக்கம், ஆக்கிராணம், நசியம், துவலை, பூச்சு, மாத்திரை, அஞ்சனம் முதலியவற்றையும் விரிவாக எடுத்துரைப்பது. இச்சித்தராரூடச் செய்யுள், சீவகசிந்தாமணி, பதுமையாரிலம்பகம் செய்யுளுரையில் உரையாசிரியர் நச்சினார்க்கினியரால் மேற்கோளாக எடுத்தாளப்பெற்றுள்ளது. இந்த ஏட்டின் தலைப்பில் அகத்திய மகாமுனி சித்தராரூடம் என்று எழுதப் பட்டிருக்கிறது. ஆனால் சித்தர்கள் பலருங்கூடி இதனை இயற்றினர் என்பர். இந்தப் பிரதியில் 184 செய்யுட்கள் இருக்கின்றன. இது அச்சிடப் பட்டுள்ளது.

Beginning

கருத்தியல் கல்வியெல்லாங் கத்தரி(ற்றறி)ந்துலகந் தோறும்
திருத்திய புலவர் தேடுஞ் சித்தராரூடம் பாட
மருத்தினி கடம்பாயாதி மாமுகன் காக்கச் சுற்றும்
நிருத்தனு நெடுமாலுனு நித்தனும் மகிழ்ந்து காக்க.

திருமகள் கணவன் தேவர் திக்குள பால தேவர்
மருவுமா தங்கி காளி வைரவன் கார்த்திகேயன்
குருபரன் சித்தரிந்திரர் கோரக்கன் கயிலை யாளி
செருவினை வராகி சூலி சித்தராரூடங் காப்பாம்,

* * * *

அந்தமி லனந்தனோடங் கடல்மிகு குளிகன் பார்ப்பான்
வெந்திற லரசனாகும் வாசுகி சங்கபாலன்
வந்திடு தக்கனோடு மகாபற்பன் வணிகனாகும்
முந்துகார்க் கோடனோடு பதுமனு முழவனாமே.

End

குட்டிப் பெரிய தக்காளி கூட்டி யிரண்டுங் காடியுடன்
கட்டாய்த் துவைத்துத் துவலையிடக் கருதா யுழக்குத்
தானருந்த
பட்டேவிரியன் விஷங் களெல்லாம் பதறிக் குதித்துப்
பாரிற்போஞ்
செட்டே சொன்னோம் விரியனுக்குத் தீர்க்க மருந்து
மிவைதானே 183
அப்பை நிறுத்திதிடித்தது போலழுந்த விரியன் தான்கடித்தால்
வேப் பெண்ணெய் தன்னை யாழாக்கு விரும்பிக் கொடுக்க
வல்லீராய்
தப்பே யில்லை விஷங்களுந் தான் தரியாதோடித்தான்மீளும்
கப்பே சொன்னோம் விஷதாரி கடுகச் செய்ய ....

---

35. No. 23 அகஸ்தியர் சித்திராரூடம்.

ஏடுகள் 70; 5 lines in a Page ஏடுகள் சிதைந்திருக்கின்றன.

இதில் பாம்புகளின் வகைகள், அதற்கான மருந்துகள், மந்திரப் பிரயோகங்கள் முதலியவை உள்ளன. அசசிடப்பட வில்லை.

Beginning

வந்தவினை தீர்ந்து மனக்கவலை வாராது
சிந்தைநினைவின்படியே சித்தியாம்—நிந்தியாத்
தொந்தி.......காத்தொங் குத்திரத்
தொந்த மெனும் தந்திமுகத்தானை நினைந்தால் (க)

End

சனிக்கிழமைநாள் கடித்த பாம்புக்குப் பேர் சங்கபாலன். இதுக்கு விழும் வலதுபுறம் நிற்கும் கண்ணிலே. இந்த அக்ஷர

மெழுதி மந்திரித்து "சங்க பாலகா! சங்கபாலகா! எளி கெளி விஜய சுவாகா" வென்றும் மந்திரித்து; இதுக்கு மருந்து நல்ல வெல்லந் தண்ணீரில் கரைத்துக் கொடுக்கத்தீரும்

பகலைக்கு மேலாய்க் கடித்த பாம்பிற்கு பேர் சகலவன் இதற்கு விஷம் இடதுபுறம், வலப்புறம் நிறவிநிறகும். இதற்கு நடுத்தலையிலே......இந்த அட்சரம் "ஓம் "சகலகா; சகலகா எளிகெளி விசயவிசய ஜயஜய சுவாகா" என்று மந்திரித்து, இதற்கு மருந்து நெய், மொச்சைக் கொட்டைத் தோலும் வெல்லமுந் தண்ணீரில் குழப்பி மந்திரித்துக்கொடுக்கவும். இந்தப்படி ஏழு வாரத்திற்கு மந்திரித்து மருந்தெல்லாங் கொடுக்கவும்.

சர்ப்பசாஸ்திர மருந்தெல்லாம் எழுதிமுடிந்தது.

முத்தும்.

முத்தய்யன் துணை.

---

36. No 24 அகத்தியர் சர்ப்பாரூடம்.

ஏடுகள் 96; அபூர்த்தி Lines 4—5 in a Page.

இது, 225ம் நம்பரைப் போலவே பாம்புகளின் பிறப்பு அவற்றின் வகை அவைகளின் கடிக்கு மருந்து முதலிய வற்றைக் கூறுவது. இதில் முதலிலுள்ள அகவல் தவிர மற்ற செய்யுட்கள் சித்திராரூடச் செய்யுட்களாகவே காணப்படு கின்றன. இடையிடை ஏடுகள் முறிந்தும் சிதைந்தும் மிருக் கின்றன.

Beginning

வேதியர் கடையாஞ் சாதிவிடந்தனில் துஞ்சுவோரை
ஓதிய மந்திரத்தால் மருந்தினாலுணருவோர்கள்
சாதியால்பிறக்கில் வேதத் தலைவராய்ப் பிறப்பார் விண்ணில்
ஆதியில் பிரமமாகி அயர்ந்து வீற்றிருப்பார் தாமே:

திருவளர் தாமரை திசைமுகன் படைத்த
விருநில மடந்தையும் குருபர நிரவி
மன்னுயிர்க் கெல்லாம் வருத்த நீங்கித்
துன்னிய செஞ்சடை தூமதி வைத்தோன்
பன்னிய நூலின் பயன்களை நாடி
நன்னகமாதி நாகம் மெட்டொடு
பாங்குடன் மண்டலி பதினாறுட்பட
வோங்கிய வழலை யொருநான் கோடு
நன்மையி லரவம் நாலிரண் டெனவும்
புன்மையில் விரியன் புகன்ற மூன்றோடு

பதினெட் டெலியும் பன்னீரு தேளும்
விதிபெருஞ் செய்யான் கறுக்காய் பூரஞ்
சிலந்தி யிருபதுந் தீப்பச் சோந்தியும்
சலந்தரு தவளை சாற்றிய அட்டையும்

* *. * *

செந்தமி ழகத்தியர் தெரிந்துரை மிகுந்த
வந்தமில் காட்சி ஆகமம் பகர்ந்தவர்
ஆதியாங் கடவு ளடியினை வாழத்தி
ஓதிய துன்னத்தொளிதிகழ் தென்னவன்

வையகத் தோர்க்கு வருத்தம் நீங்கச
செய்தவந் நூலின் திருப் பெயரே தெனின்
சர்ப்ப சாஸ்திர மென்னுரை பகர்ந்தனர்
ஒத்த காவிய வியலுணர்ந் தோரே.

அகவல் முற்றும்.

கருத்தியல் கல்வி யெல்லாங் கற்றறிந் துலகந் தோறும்
திருத்திய புலவர் தேடுஞ் சித்தரா ரூடம் பாட
மருத்தணி கடம்பை யாதி மாமுகன் காக்கச் சுற்றும்
நிருத்தனும் நெடுமால் தானு நித்தனுங் காப்புத்தானே

End

தும்பைத்துளிர் துளசித்துளிர் லவணத்துடன் மிளகு
நம்பிக் கொடு [நமலக் கொடு நாசிக்கொடு விட்டால்
வெம்பிக் கொடு விதறிக்கொடு விடமானவை யெல்லாம்]
கம்பிக் கொடு கதறிக் கொடு கடலிற் புகு விடமே.

மஞ்சொன்ன வார்த்தை கேளாது மிழ....றனே அழைக்கு
வருஞ் சுழகும் தலையைக் கிறு கிறென்னும்முன்னே
இதெல்லாம்
உண்டாகி கழத்துக் கொல் வீரியன்றனைக்கண்டு....பெரி
யோரே, 247

---

37. No. 25 (a) அகத்தியர் குணவாகடம்.

ஏடுகள் 205; Lines 4—6 in a Page.

இதில், வியாதிகளின் லட்சணமும் அவற்றிற்கு மருந்தும் சொல்லப் பட்டிருக்கின்றன.

Beginning

வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பாதிமா துமையொரு பாகனு ரருளிய
தீதிலா வாகட நூலைச் செந்தமிழ்
நீதியா யெனக்கிது நிறைய வோதுவாய்
ஆதியே பரமனே அரகரா சிவா.

End

குளிர்ந்து நடுங்கித் தலைப்பெய்திக் கொண்டகாய மிகமண்டி
நளிர்ந்து வந்து குத்திட்டு நாவிட்டெறியுங் கொட்டாவி
தளர்ந்தவுடம்பு மணிக்குறங்கு தயங்கும் விலாவிலே குடையும்
வளர்ந்துவந்த தறியாதோ வாதசுரத்தின் வாறிதுவே 300

---

38. (b பலதிரட்டு

Lines 5—7 in a Page.

இதில், கிஷாயங்கள், சூரணங்கள், லேகியங்கள், நெய் வகைகள், மாத்திரைகள், தைலப்போக்குகள், முதலியவை பல நூல்களினின்றும் திரட்டப்பட்டுள்ளன.

Beginning

புகலுஞ் சீந்தில் பற்படகம் பூசுஞ் சந்தமிலா மிச்சங்
திகழும் வேர்க் கொம் பிருவேலி சித்தா முட்டியுடன் காசு
தகவே யோரொன் றோர்கழஞ்சு தண்ணீரிரண்டு நாழிவிட்டுச
சுகமாய்க் காய்ச்சிக் கொடுத்தாக்கால் சோரும் பித்தச் சுரந்
தானே.

திரமிகு லோகந்தன்னைச் செய்தரப் பொடியதாக்கி
வரமிகு நாவற் சாற்றால் வளம்பட வரைத்து வாங்கி
அரமிகு வரளி தன்னிலலர்ந்த நூறு புடசெந்தூரம்
உரமிகு பாண்டுசூலை யுட்கொளச் சுவாசம் போமே.

End

திரிபலை, தாமரை, தேற்றும் விதை கற்றாழஞ் சாறுவார்த் தரைத்து உருண்டை பண்ணி வெள்ளித் தகட்டில் முப்பது நாழிகை ஊறவைத்துப் போடவும். நீலகாசம் கண்ணிலெழுந்த நோயெல்லாந் தீரும். எலும்புருக்கிக்குக் காசுக்கட்டியும் கடுக் காயும் சமன் பொடி செய்து தண்ணீர் கொடுக்கவும். குகு வுக்கு கோணியைப் பிறவைக்கு, விஷ்ணுக்கிரந்தி, முருக்கிலை

கோழியவரை, தூதுவளையிலை, சங்கிலை, துளசி, செம்முள்ளி, புளியிலை, ஈருள்ளி மறையுமளவும் கொடுக்கவும். கோரோசனை யுங் கொடுக்கவும்.

---

39. (c) பதார்த்த குணம்.

Lines 5—6 in a Page.

இது, பதார்த்தங்களின் குணங்களைக்கூறுவது. அபூர்த்தி

Beginning

ஓதக் கடலமுத மும்பர்க் குணவளித்துப்
பேதமற நுகரும் பேர்முதலாய்—நீதியாய்த்
தொட்டுத் தெறித்த துளிசூழ ஏழ்கடுக்காய்
மட்டத்த நோய்தணிக்கும் வந்து.

விசைய ரெனுங்கடுக்காய் மேவுங் குணந்தான்
அசையாத வாத மகற றும்—இசையாத
பேய்சுரைக்காய் போன்றிருக்கும் பெய்வளையீர் கண்டக்கா
லாச்சுரைக்க வேண்டா மது.

End

தலைசுழலும் பித்தமுடன் தாக்கு மரோசிகம்போம்
குலையெரிவு வாதங் குடிபோம்— சிலைநுதலாய்ப்
பொறுக்கு மதுரமொழிப் பூவையரே நல்ல
சிறுக்கீரை செய்யுஞ் செயல்.

---

40. (d) அட்டை விதி.

Lines 5—6 in a Page.

இதில், அட்டை பேதங்களும் அவற்றுள் ஆண் பெண் அறியும் விதமும் இன்ன பாகத்தில் இன்ன நேரத்தில் இன்ன அட்டையைக் கட்டவேண்டு மென்பதும் பிறவும் கூறப்பட்

டுள்ளன. பதினொரு செய்யுட் களிருக்கின்றன. இவை சில பாடபேதத்துடன் தன்வந்திரி வாகடம் ஆயிரத்தில் காணப் படுகின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

Beginning

அட்டையின் விதிதனை யாரு மறிந்திடத்
திட்டமதாகச் செப்பிட வுன்னினேன்
மட்டமர் குழலினுள் பாகனளித்திடும்
விக்கின விநாயகன் பொற்பதம் போற்றியே.

*   *   *   *

அட்டையி லாணும் பெண்ணு மறிந்திட வேணுமாகில்
கொட்டியும் பதுமந்தானுங் கூடத்தண்ணீரில் விட்டு
அட்டையை விட்டவாறே யாண்பதி மத்திற் செல்லும்
கொட்டியிற் பேடு செல்லுங் குறித்தவை யறிந்து கொள்ளே

*   *   *   *

அமுதபாக மிடப்பாக மறிந்தே அட்டை விடுவதற்கு
அமுதபாகந் தனிலேயா ணட்டைதன்னைப் பொருந்த விடக்
குமுதமான விடப்பாகங் குயில்வா யானபேடுதனைச்
சமனேயான விடத்துக்குத் தானேயறிந்து விடுபெண்ணே. (6)

End

காச நீரிழிவு வாதகுன்மமிவை கண்ட நோய் கடிய வாதமுங்
கன்ன சூலையதி சாரகுட்ட கயரோகமுங் கருது மூலமும்
நாசிபீடமிகு மாவிருதன் தலையில் நோய்களான பலபேதமும்
நலமிலாவுதர பித்தமு மிகவு நாடிவந்துதர நோயெலாம்
வீசிவந்த சுரமான சேந்துதர மேவிடுங் கடிசு வாதமும்
மிக்ககிரியை யிதையத்தில் நோவுமதில் மிகுதியானபல
பேருமே

நேசமாமிரவி யுதையமாவது முன்னீர் மலங்களும்
விடாமுனே
நியமமா மமுத முண்டிடிற் பெரிய நினைவிலாரமுத
மாகுமே. 11

வேலுமயிலுந் துணை

---

41. (ஏ) சத்திர விதி.

Lines 5—6 in a Page.

இதில், சத்திரம் செய்வதற்கு வேண்டிய இருபத்தாறு வகை ஆயுதங்களும் அவற்றின் லட்சணமும் சத்திரஞ் செய் விதமும் கூறப்பட்டுள்ளன. இது அச்சிடப்பட்டுள்ளது.

Beginning

குத்திரமாகிய கொழுவினைத் துருசறு
நித்திரை தன்னிலு நினதிரு சரணமும்
பத்தொரு கரமுமென் மனத்தினில் மறந்திலேன்
சத்திர விதிசொலத் தானடந் தருள்செய்வாய்.

கத்தி சத்திரமோடு குறும்பிதனை வாங்கியுங் கருமூக்கு
வாய்தன்னுடன்
கடுமுள்ளு வாங்கியு மூக்குச் சலாகையுமொழிப்பொட்டுடன்
....
தகுமட்டக் கோலூசி மிகுசெப்புக் குழையோடு சலாகை
வட்டகையு மிகவே
குத்துமொரு பஞ்சமுகஞ் செப்புச் சலாகையுங் கூறு காயக்
கோலுமே
குலவு மொரு தெண்டுச் சலாகை நயனக்கத்தி கூடு மிவ்வகை
யானதே
பத்துடன் பதினாறு வகையான தாயுதம் பார்மீது பண்டி
தற்குப்
பரமசிவ னருளினாலுண்டான திவ்வகை பகுத்தறிந்திவை
செய்வரே.

கத்திமூவிர லங்குல மூன்றரை
மெத்து கூறுமோ ரதுவுமோ ரங்குலம்
சித்தமா மிவை செப்பிடும் போதுதான்
வைத்த வட்ட மயிர்க்கத்தி காணுமே.

End

பிரமா வென்னும் வீறு சத்திர
மதுவே யங்குல மஞ்ச தாகும்
நிறையே காற்பலம்முனையே யொருமாத்
தருமே வாயக்குறுக் கதுமை யாகவே.

* * * *

காலுடம்பிற் கழலை தன்னைக்
காரிய முறவரு சத்திரத்தாலே
கீறிடு சதையறு வினையறு மென்னக்
கூறினோம் பிரமாக் குணசத்திரத்தை
மேல்வரு துட்டக் கிரந்தியவன் தீரவே
பண்டிதர் கேளு மிச்சை யகையார்
மங்கலவர் அவர் தொழிலாமே. 28

Colophon:

ஸ்ரீமுகஸ்ரீ பங்குனிமீ 4உ எழுதினது. குமரன் கையில் எழுத்து.

---

42. (*f*) திரட்டு வாகடம்.

Lines 4—6 in a Page.

இது, பலவாகடங்களினின்றும் திரட்டிய விஷயங்களைக் கொண்டது. பிறர்பாடியது சித்தர் நூலன்று இதில் மூலம், கிராணி, குன்மம், மேகம், காமாலை, சூலை, வாயு, வாந்தி, சன்னி, கரப்பான், விஷபாகம், முதலிய நோய்களுக்கு மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இது அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

விக்கின விநாயகன் மெய்பதம் போற்றியே
தக்க தோர் வாகடந் தான்செய வுன்னினேன்
மிக்க பாவலர் எனதுபுன் சொல்லினை
ஒக்கு மென்று உணர்ந்துகொள் வார்களே.

வாதந்தா னெண்பதாக வருகின்ற பக்கவாதஞ்
சீதமே நடுக்கு வாதஞ் சிறந்திடு முடக்கு வாதஞ்
சூதமே அசந்தவாதம் தோன்றிய முகத்தில் வாதம்
பேதமாம் வாதந்தீரப் பெருத்திடு மருந்து கேளே

End

போமிது பொன்னுங் கா்ணிபுகழ்சிறுக் கீரை முத்தம்
ஓமிது சீந்தில் நிம்பம் உயருநா ரத்தை கோட்ட
மாமிது மதுர மேல மடருஞ்செண் பகப்பூ வங்கம்
நாமிது சொன்னோ மெண்ணெ நயந்தெரி முழுது
போமே. (50)

திரட்டு வாகட முற்றும்.

குறிப்பு :

இதில் திரட்டுவாகடத்தையல்லாமல் இன்னின்ன சரக்குக்கு மேற்றோல் விஷமென்றும், இன்னவைகளுக்கு உள் விதை விஷமென்றும் இன்னின்ன மாதத்தில் இன்னின்னதை அனுபானமாகக் கொள்ள வேணுமென்றும், இன்னின்னோர்க்கு லங்கனம் போடலாகாதென்றும் கூறும் செய்யுட்களும், கண்ணோய்க் கிடுமருந்தும், விஷத்திற்கு மருந்தும் எழுதிய ஏடுகளும் கோக்கப்பட்டிருக்கின்றன.

---

43. No. 26 (a) சட்டைமுனி கற்பவிதி.

ஏடுகள் 345; பூர்த்தி Lines 8—9 in a Page.

இது பதினெண் சித்தர்களில் ஒருவராகிய சட்டைமுனிவரால் செய்யப்பட்ட கற்பநூல். இவர் கம்பிளிச் சட்டையைத்

தரித்திருந்தமையின் இவரைக் கம்பிளிச் சட்டை நாதரெனக் கூறுவர். கைலாசச் சட்டை நாதர் எனவும் இவர் பெயர் வழங்கும். தேகத்தை நோய் முதலியவை அணுகாமல் உறுதிப்படுத்தி அழியாமற் செய்யும் மருந்து கற்பமெனப்படும். அவ்விதமான கற்பங்களைக் கூறுதலின் இந்நூல் கற்பவிதி எனப் பெயர் பெற்றது இதில் வெல்லாரை, கரந்தை, கரிசாலை, குமரி, செருப்படி, வேம்பு முதலிய கற்பமூலிகளை உண்ணும் விதம் சொல்லப்பட்டிருக்கிறது. இது முழுவதுமிருப்பினும் சிதைந்திருக்கிறது.

Beginning:

ஏறுமென்ற பலநூலிற் கோடா கோடி
  யென......கொங்கணர் காண் பாடிப் போட்டார்
தேறுமென்று கண்டு கோரக்கர் சொன்னார்
  சிவமான மூலதரு வுணரோ மென்றார்
கூறு மென்று சிவனூலிற் கண்டுகொள்ளு மென்றார்
  கூறுத மச்சமுனி யறிந்து பாரென்றார்
மாறுகின்ற மடபதியாஞ் சித்த ரெல்லாம்
  மறைத்தாரே காயசித்தி மாண்டார் (மாந்தர்) காணே.

End:

பாரப்பா காயசித்தி செய்யு மார்க்கம்
  பஞ்சிட்டுப் பாரம் வைத்தாப் போலச் சொன்னேன்
ஏரப்பா சித்தர் சொன்ன கற்பத்துக்கும்
  என்னுடைய நூலுக்கும் இசைத்துப் பாரு
தூரப்பா தொட்டல்லோ முடிவரைக்கும் சொன்னேன்
  சொல்லாதே வொளித்திட்டார் சித்தரெல்லாம்
காரப்பா குருபதத்தைக் காத்தாக்கால் சித்தி
  காயசித்தி பாடின தோர் காட்சிதானே. 92

---

44. (b) சட்டமுனி ஆயிரம்.
Lines 8—9 in a Page.

இது வாதகாவியம் ஆயிரம் என்று சொல்லப்படும். இதில் வங்கக்கட்டு, கெந்தகமெழுகு, அயநாகம், மனோசிலை

மெழுகு, பூனீற்றுக்குரு, ரசிதகுரு, ரசிதஏமம், வெடியுப்பு நீர், சாரநீர், கல்லுப்புச்சுன்னம், ஏழுசுன்னக்குகை, குளிகை சாரணை, கெந்திசசெம்பு, அயச்செம்பு, துரிசுகுரு, தாளகத் தயிலம், அபிரேகசத்து, தம்பனக்குளிகை, நாகக்கட்டு, தங்கச் சுன்னம், நாகச்சுன்னம், பூஞ்கச்சத்துக்கிண்ணம், பாஷாணக் கட்டு முதலிய இரசவாத மருந்துகளும் வைத்திய முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. பிழையதிகமாயுள்ளன. ஏடுகள் முறிந்தும் சிதைந்துமிருக்கின்றன.

Beginning:

அகண்டபரி பூரணமாம் உமையாள் பாதம்
  அப்புரத்தே நின்றதொரு அய்யர் பாதம்
புகண்டு நின்ற கணேசனொடு நாதாக்கள் பாதம்
  புகழான வாக்குடைய வாணிபாதம்
நிகண்டெனவே யெனையாண்ட குருவின் பாதம்
  நிரைநிரையாய் சொரூபத்தில் நின்றோர் பாதம்
முகண்டென்னை யீன்றெடுத்த சின்மயத்தின் பாதம்
  மூவுலகு மெச்சிதற்குக் காப்புத்தானே.

நிற்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சனமுமாகி
  நேரான பூரணமாய் மனமெட்டாத
சற்குணமாய் சமரசமாய்த் தானுந் தாண்டி
  சச்சிதா னந்தவெளிக் கப்பால் நின்ற
நற்குணமா யெனையாண்ட சின்மயத்தைப் போற்றிச்
  சமரசமாய் வேதாந்த வாதஞ் சொல்வேன்
நற்குணமாஞ் சனகாதி ரிஷிகள் பாதம்
  நலம்பெறவே நாவில்வைத்து பாடுறேனே. 2

End

ஒன்றான சின்மயத்தின் பதத்தைப் போற்றி
  உற்றதொரு கயிலாச தேக மாக
நன்றாக யீன்றதொரு உன்மனையைப் போற்றி
  நலமான நாதாக்கள் பதத்தைப் போற்றிக்

கன்றான கயிலாச தேகமாய் வந்த
காரணமாஞ் சட்டருட பதமும் போற்றித்
தன்றான வாதநூலாயிரமும் சொல்லிச்
சாதகமாய்ப் பாடிவிட்டேன் வாதமுற்றே. 1005

கைலாச பராபரமான கம்பிளிச்சட்டைக் கயிலாசநாதர் வாதநூல் முற்றும். நாதாக்களுடைய பாதாரவிந்தமே துணை.

---

44. (c) சட்டைமுனி நிகண்டு

ஆயிரத்திருநூறு.

Lines 7—9 in a Page.

இதில், சரக்குகள் மூலிகைகளின் பரியாயப் பெயர்களும் வாதவைத்திய முறைகளும் பிறவும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூல் ஏற்கனவே அச்சாகியுள்ளது.

Beginning

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
அடுத்துநின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றி
பாதியந்த மாகிநின்ற உமையாள் சொல்லப்
பாங்கான சின்மயத்தின் கருணையாலே
ஓதியந்த வாதமென்ற நூலுக் கெல்லாம்
உயரவைத்த நாகமணிக் கிரீடம் போல
சாதியந்த குணத்தோடு நிகண்டு சொல்லச்
சச்சிதா னந்தவெளி காப்புத்தானே.

சத்திசாரம்.

சத்திவளர்ச்சி சாதகச் சக்கிரி
முத்திய வாதிச்சி முச்சுத கண்டச்சி
அத்திய காந்தாரி ஆகாப் புறைச்சி
பத்திய ளும்பரும் சத்திய சாரமே. 21

குப்பை மேனியின் பெயர்

திரிபுர மெரித்தோன் சிகமுறு மேனி
கரியுற வுரித்தோன் காலாக் கினியோன்
மரிமுறை மசக்கி மார்ச்சால மோகினி
கொரியிவைப் பேருதான் குப்பை மேனியே. 77

End

நாட்டினேன் செயவீரம் வராகவித்தை
நலமான வுப்பினுடவுறுதி சொன்னேன்
பூட்டினேன் வாதத்தில் பூதஞ் சொன்னேன்
புகழாக இருபத்து அஞ்சு அங்கம்
ஆட்டினேன் பலநூலிலலைய வில்லை
ஆச்சரியம் நிகண்டினுட தொகையைக் கேளு
நீட்டினேனுயிரத் திருநூற்றின் மேல்
நேராக முப்பது முகிந்து முற்றே

ஆக மந்திரம் 1200.

---

45. No. 27 சட்டைமுனி வாதகாவியம் ஆயிரம்.

ஏடுகள் 373; பூர்த்தி Lines 5 in a Page.

இது 26-ம் நம்பர் உட்பிரிவாகிய (b) போன்றது. இதில் இந்நூல் முழுது மிருக்கிறது.

colophon:

சகாப்தம் 1722க்கு ரவுத்திரிஷு பங்குனிமீ 20உ கிருஷ்ண பக்ஷம் திதியை செவ்வாய்க்கிழமை சித்திரை நக்ஷத்திரம் கூடின சுபதினத்தில் ராசமானிய ஸ்ரீ சரபோஜி மகாராசா சாயேபு அவர்கள் ஆக்ஞாபிசச பிரகாரம் கலாசி கணக்கு வெங்கடேசம் பிள்ளை குமாரன் சுப்பராயன் கம்பிளிச் சட்டைக் கயிலாச நாயனுர் வாதநூல் எழுதி நிறைந்தது முற்றும்.

குருவே துணை.

46. No. 28. சட்டைமுனி வாதகாவியம் ஆயிரம்.

ஏடுகள் *216*; பூர்த்தி Lines 5—8 in a Page.

இதுவும். 26-ம் நம்பரின் உட்பிரிவாகிய (b) போன்றது. இது மேற்கண்ட இரண்டு பிரதிகளைவிடப் பழமையானது முழுவது மிருப்பினும் சிதைந்திருக்கிறது.

---

47. No. 29 (a) சுந்தரானந்தர் சூத்திரம் நூற்றுப்பத்து.

ஏடுகள் *39*; Lines 5 in a Page.

இது, வல்லாரை, கையான், கரந்தை முதலிய மூலிகை கற்பங்களையும் இரசவாதத்திற்காகிய சுன்னம் தைலம் செந்தூரம் முதலியவைகளையும் கூறுவது.

Beginning:

ஆதியந்த மிகநிறைந்த சட்டைநாதர்க்
கன்பான சோதி யென்ற பிள்ளையாகிச்
சோதியந்தத் துள்ளிருக்குஞ் சுடரைப் போற்றி
சுந்தரமென் றேபேரு மிட்டா ரெங்கள்
நாதாந்தத் திருமூலர் பிண்ணாக்கீசர்
நாதரகத் தீசர்பாதம் போற்றியேதான்
மேதினியிலன்புடனே வாதம் பார்த்தேன்
வேதாந்த சிற்பரைதாள் காப்பதாமே.

ஆமப்பா நவலோகம் பழுக்கும் பக்தாய்
அப்பனே யில்லாட்டால் மலைமேலேறிப்
போமம்பா கற்பத்தைக் கொண்டுநீதான்
புகழ்பெறவே சாகாம லிருந்துகொண்டு

நாமப்பா சிவனடியைப் போற்றிக் கொண்டு
நாதாந்தச சட்டைமுனி மகனே யென்று
ஏமப்பா வந்தோர்கள் எனக்குத் தம்பி
என்றேநா னழைத்திடுவன் சித்தராமே 16

End:

தானென்ற மூலமதை யறியவேணும்
சத்திசிவ மிரண்டையுமே காணவேணும்
தானென்ற கும்பிடுங்கல் லறிய வேணும்
தருவான அண்டத்தைச் செய்ய வேணும்
தானென்ற கற்பமதை யுண்ண வேணும்
சாத்திரத்தைப் பார்த்தாக்கால் செய்யவேணும்
தானென்ற தொந்தநூலா யிரத்து நூறு
சாத்திரத்தில் விதிநூற்றுப் பத்துமுற்றே. 110

---

48. (*b*) சுந்தரானந்தர் சூத்திரம் நூற்றுப் பத்து.

Lines 5 in a Page.

இது, மேற் பிரதியைப் போன்றது. அதைவிடச் சுத்தமான பிரதி. பாடபேதமும் காணப்படுகின்றது. அடியிற் கண்ட செய்யுள் மட்டும் அதிலில்லை.

பத்திமுத்தி யானதொரு மனமே வேணும்
பதறாமல் வாதவித்தை செய்ய வேணும்
சித்தியுட லம்பரமா யிருக்கவேணும்
செகமெல்லா மொன்றுமில்லை யென்னவேணும்
கத்தனுட பதம்பணிந்து இருக்க வேணும்
கற்பமுண்டு யோகத்தி லிருக்க வேணும்
சத்தியடி முடிதனையே யறியவேணும்
சட்டைமுனி நூலறிந்தோன் வாதியாமே. 111

சுந்தரானந்த சுவாமிகள் சூத்திரம் நூற்றுப்பத்து
முகிந்தது முற்றும்.

---

49. No. 30 மச்சமுனி பெருநூல் எண்ணூறு. ஜால காண்டம்.

ஏடுகள் 246; Lines 5 in a Page.

இதில், வசியம், மோகனம், பலவகையான மை, வாடை, இடுமருந்து, வித்தைகள் அஷ்டகர்மங்கள், இரசவாத மருந்துகள், மந்திரங்கள், ஜாலங்கள், சூடம், பச்சைக்கற்பூரம் முதலிய சரக்குவைப்புக்கள், வைத்தியம் பஞ்சபக்ஷி முதலியவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனை இயற்றியவர் மச்சமுனி என்பவர். இவர் 'சீர் பெற்ற தகப்பனெங்கள் பிடிநாக்கீசர்' எனவும் 'கண்டவுடன் பிடி நாக்க ரமுத மூட்டிக் கண்மணி போல் வளர்த்தென்னைக் கருணைகூர்ந்து, அண்டரொடு முனிவர் சபைதன்னில் கூட்டி ஆட்படுத்தி உருவாக்கி வைத்தாரையா' எனவும் 'பிண்ணாக்கர் வளர்த்த பிள்ளை மச்சனுனே' எனவும் கூறுமாற்றால் இவரை பிடி நாக்கரது மாணாக்கரென்றறிக்கலாம். இந்நூல் விஷய அட்டவணை எழுதிய 6 ஏடுகளும் 23 வெற்றேடுகளும் முதலில் கோர்க்கப் பட்டுள்ளன. பிழை அதிகமாயுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning:

ஆதியந்த வேதவிஸ்தா ரத்தை யென்ற
  ஞுதிகுரு வென்ற பொருள் பிடிநாக்கீசர்
சோதிபர வெளியான சுருபானந்தஞ்
  சூட்ச சடாதார நிடஞ் துரியாதீதம்
ஓதுபி ரணவசிருங் கார பீட
  முன்மனைக்கே வெகுது லாதாரத்தை
பாதிசரா சரரூப விந்து நாதம்
  பரபிர்ம மூலகணே சனகாப்பாமே.

பாரப்பா இந்தமைக்குச் சாபமில்லை
  பகையில்லை பேயில்லை பிசாசுமில்லை
ஆரப்பா திஷ்டியில்லை யேவலில்லை
  அக்கியா னங்களில்லை பில்லியில்லை

நேரப்பா சகலர்களும் வசியமாவார்
நின்னுடைய வதனமதிலிட்டுச் சென்ருல்
காரப்பா வசிய மூலிகையைக் கேளு
கருக்குருவா யட்டகர்மஞ் செய்யத்தானே.

End:

வித்தகத்தோன் பதத்தாணை வெளிவிடாதே
வேதாந்த மனோன் மணித்தாய் பாதந்தானே
சித்தருக்கா மிந்த எண்ணூறு பெருநூலப்பா
சிவஞானந் தங்குகின்ற பெரியோர்க்காகும்
மத்தொருத்த ரிந்நூலைப் பதனம் பண்ணி
வைத்தாலும் வாதமுத்தி வாய்க்கும் வாய்க்கும்
பத்தருக்கும் பாடிவைத்த சதமெட்டான
பதிவாகும் பெருநூல்மெஞ் ஞானமுற்றே. 801

Colophon:

சாலிவாகன சகாத்தம் 1746 தாரணஸு தைமீ 20உயில் ஸ்ரீ மகா-ா-ா-ஸ்ரீ சரபேந்திர மகாராசா சாயேபு அவர்கள் ஊழியன் சிதம்பர பிள்ளை குமாரன் பஞ்சனதம் எழுதிய மச்ச முனி யெண்ணூறு பாடல்.

---

50 No. 31 A. போகர் நிகண்டு அட்டவணை.

ஏடுகள் 151; அபூர்த்தி Lines. 2—8 in a Page.

இதில் போகர் நிகண்டில் சொல்லியிருக்கிற மருந்து களுக்குள்ள பல பெயர்கள் அட்டவணையாக எழுதப்பட்டுள் ளன. இந்நூலின் தலைப்பிலுள்ள ஏட்டில் போகர் நிகண்டு, சட்டமுனி நிகண்டு, மச்சமுனி நிகண்டு, சட்ரச நிகண்டுகளின் திரட்டு என்று எழுதியிருப்பினும் ஒவ்வொரு ஏட்டிலும் 'போகர் நிகண்டு' என்றே எழுதப்பட்டிருத்தலின், இதற்கு 'போகர் நிகண்டு அட்டவணை' என்று பெயர் எழுதலாயிற்று. இது அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

போகர் நிகண்டு சவுக்காரப்பேர்

சதாசிவம், வெண்சாரை, வண்ணுன், உவர்க்காரம், சிறு பரை, வழலை, குருமுறை, உமையாள், ஈசன், அலைக்காரம், வாத ஆதி, ஆதியாங்குடியாமேனுன், கூர்மையாளன், சுவக்காரம், சோமன், ரவி, வன்னி, சுயம்பாகி, சுத்தியாமேனுன், சூலாமேனுன், சுடலையாடி, சிருஷ்டியாளன், வாதத்தின் தலைவன், வாதமுடிப் போன், அந்தகன், காந்தள்மலர், பவழம், பாதத்தோன், முத்தி ஏமசிவன், மூர்க்கன்.

போகர் நிகண்டு பூவழலை பேர்

மூர்க்கன், தரணிதரன், பூநீறு, பூமிதரன், தீர்க்கன் ஒட்டச்சி, ஊசரம், வெள்ளை பூசரம், குசத்தி, அருக்கன் வேகத்தி, பூமிருது, சவுடு, வண்ணுத்தி, ஆதிமுதல் குருச்சி உரகன், காயகல்பம்.

போகர் நிகண்டில் கல்லுப்பின் பேர்

கடல் குருவி, பாறையுப்பு, அன்னக்கூர்மை, அல்லுப்பு, அட்சயம், பிரோத்தம், அருசுவையாதாரம், வேலைநீர், வெல் லுப்பு, முனி மூத்ரம், சவர்ச்சலம், மிருத்திய கெந்தம், நல்லுப்பு தற்கால லவணம்.

End

போகர் நிகண்டில் வங்கமணலின் பேர்.

வடிப்பிணையின் வங்கம், மாருதி நாதம், கொடுப்பிணை அடுப்பிணை, குடிலம், சவனை, கோஷவங்கம், திறம்புவலி, நாக வங்கம், மாயூழம், பூதி, லோகம், அருப்பியம், கயப்பிணை.

போகர் நிகண்டில் வங்கமணலின் குணம்.

போகர் நிகண்டில் வெள்ளி மணலின் குணம்.

51 No. 32 (a) மச்சமுனி நாயனர் முப்பு தீக்ஷை என்பது.

ஏடுகள் 17; பூர்த்தி Lines 5 in a Page

இதில் இரசவாதத்திற்கு வேண்டிய சுன்னம், செயநீர் நாகக்கட்டு முதலியவைகளும் ஞான விஷயமும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை. சிறிது சிதிலமாயிருக்கிறது.

Beginning:

நடுமையகார வகாரத் திரையமே சொல்
கடவிகடத் தானைமுகன் காப்பாம்—திட்மான
சாரத்துறையுந் தனிச்சூடன் தண்ணீரும்
காரத்துரை கண்காண மந்திரம்.

பொன்னணி மூலம் போக்கில் ரசவாதம்
நன்னயமாக நாட்டினர் பாட்டன்
கன்னியிலுண்டை சவுக்காரமன்றி
பின்னொருகாரம் பிதற்றுகின்றேனே.

காணுது வொன்றும் பசுவுக் கிதப்பா
ஆணுவமானல் பதிப்பாசஞ் சேறும்
கோணினர் சாத்திரம் கூறுமே பொய்யோ
தோணுமே யோகச் சுழுமுனை பார்த்திடே.

End

ஒப்பான தாயிரத் தெட்டிதழ் கண்டவன்
எப்போதுஞ் சாகாதிருப்பவன் சிவன்சிவன்
அப்பா பராபரத் தானந்த வெழுத்தைச்
செப்பச் சிவமாஞ் சேரவு முத்துமே. 82

மச்சமுனி நாயனர் சூத்திரம்.

Colophon :

மச்சமுனி சூத்திரம் ஆடக்கார அண்ணு எழுதினது.

52 (b) மச்சேந்திர நாயனாரருளிச் செய்த கலைக் ஞானம் எண்ணூறு.

Lines 5 in a Page.

இது, பல காண்டங்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. நூல் முழுது மில்லாமையால் இதனைக் காண்டமுடையதெனத் தெரியவில்லை. ஆயினும் 'கைகண்டபடி சொன்னேன் நூறு காண்டம்' என்று இவர் 8-ம் செய்யுளில் சொல்வதைக் கொண்டு 100 காண்டங்கள் எனக்கொள்ளலாம். இதில் **வைப்பிலக்கண காண்டம், ரசப்பிரளய விலக்கணகாண்டம், செந்தூர விலக்கணகாண்டம், ரசவிலக்கணகாண்டம், மகா சந்திரோதய விலக்கணகாண்ட** மென்னும் ஐந்து காண்டங்கள் மட்டும் இருக்கின்றன. அவற்றுள் **வைப்பிலக்கண காண்டத்தில்** கெந்தி, சூடம், பச்சக்கற்பூரம், அஞ்சன 'பாஷாணம். வெள்ளைப்பாஷாணம், குங்குமபாஷாணம், காகபாஷாணம், ஏமசிங்கி முதலிய சரக்குகளின் வைப்பும், **ரசப்பிரளய விலக்கணத்தில்** ரசசெந்தூரத்தை இன்னின்ன அனுபானத்திற் கொடுக்க இன்னின்ன வியாதிகள் தீரும் என்பதும் **செந்தூர விலக்கணத்தில்** அனேக வகையான செந்தூரங்களும் அனுபானங்களும் தீரும் நோய்களும், **ரசவிலக்கணத்தில்** உருத்திர ரசம், ரசப்பிரளய திரிபுரதாண்டவம், சண்டமாருதரச செந்தூரம், சரபஞ்சாரச செந்தூரம் முதலிய ரச சம்பந்தமான மருந்துகளும், **மகாசந்திரோதயவிலக்கணத்தில்** பூரணசந்திரோதயம், பால சந்திரோதயம், பூரணார்க்க சந்திரோதயம், பூர்ணார்க்க பாலசந்திரோதயம் அபிரேக சந்திரோதயம், கெந்தி சந்திரோதயம், பூஞாக செந்தூரம், அபிரேகக் கிண்ணம் முதலியவைகளும் சொல்லப்பட்டுள்ளன. இவைகளையல்லாமல் பல வகையான பற்பங்கள், சூரணங்கள், மாத்திரைகள், எண்ணெய்களும், சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரதியிலுள்ள செய்யுட்டொகை 474. பிழையும் அதிகமாக இருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning

பருதிமதி கனலொளியதாயகில மெல்லாம்
பாதமதாத் திக்கெட்டும் படர்தோள்களாக

வருதிகிரி புல்லுயிர் களெல்லா மைம்புலனுகவுடல்கள்
வகைபலவு முடலாக வானங்கள் முடியாகத்
திருவளியெல்லாம் பிராணனுக ஒரு வெளியே
திருவுருவமாக வானந்த நடமாடுங்
கருதரிய மணிமன்றுள் நிறைந்தெந்த வறிவும்
கண்மணியினிணையடிகள் கண்ணுள் வைத்துக்
களிப்பாம்.

பாரிந்த சித்தியெல்லாம் என்னையாண்ட
பராபரமா மாலரங்க நாயன் காட்ட
காரிந்த சகலசித்தும் பண்ணியானுங்
கை கண்டபடி சொன்னேன் காண்டநூறு
வேரிந்த காண்ட மொன்றில் சரக்குவைப்பு
மேலான வாதமுதல் கற்பந்தானும்
கூறிந்த குளிகை வைத்தி யங்களெல்லாம்
கூறுகிறேன் கோரக்கர் குறிப்பாய்க்கேளே.

ஆமிந்த சண்டமா ருதச் செந்தூரம்
அதனிலொரு பணவிடைமுக் கடுகுபொடி தேனில்
தாமிரண்டு நேரமிருநாள் கொள்ள
சர்வசுர வாய்விருமல் குன்ம மெட்டும்
போமிந்த செந்தூரம் பணவிடை முக்களஞ்சி
பொடிபரங்கிப் பட்டைகணைப் பொடிகழஞ்சிதேனில்
ஆமிரண்டு நேரமுமண் டலங்கொள் வோருக்கு
அறுந்தீராக் கடுப்பும்தீ ராதபுண்ணுமறுமே.

End

கேளிரசம் வெள்ளைப் பாஷாணம் துத்தம்
கௌரி கெந்தி துருசுவகைக் கொருகாசாறும்
நீள்சிலையிற் பொடித்துப் பரப்பிக் கட்டி
நீநெய்யோர் படி யெண்ணெயிற் கொளுத்தி
கூழாக விளக்கெண்ணெய் வார்த்தரைத்துக்
கொடுங்கலையிற் பூசியிட்டு இலைமேற்கட்ட
கடின சிலந்தி யெந்தவி ரணப்புண்ணும்
வீக்க மெல்லாங் கரைந்தாறும் விதனம் போமே.

53. No 31. *B.* (*a*) மச்சமுனி நிகண்டு நூற்றுறு.

பூர்த்தி Lines 5 in a Page.

இதில் முப்பு முறையும் ஞானமார்க்கமும் கூறப்பட்டுள்ளன.

Beginning

முப்பாழுக் கப்பால் முடிந்தமுத லெந்நாளுந்
தப்பாமற் பூரணத்தே சாற்றுவாய்—எப்போதும்
வேகாச் சடலமுத்தி வேண்டுங்கோள் முக்கோணச
சாகாக் கணேசன்ருள் தான்.

பூரணத் தெய்வம் புகழ்பெற்ற தெய்வம்
காரணத் தெய்வங் கருத்தஞ்சு பூதம்
மாரணத் தெய்வம் வழங்குமா மூலந்தான்
ஆரணத் தொண்ணூற் ருறுஞ் சடலற்கே.

விளங்கு மகாரம் விஷ்ணுவ தாகும்
வளங்கு முகார மகாலட் சுமியாம்
களங்கமற் றென்றி காரண நந்தியாம்
பளங்கனிந் தூறும் பசுபதி பாசமே.

ஊரிற் குளங்கரைக் குள்ளான சிப்பிதான்
தாரியுடலிரண்டுந் தானுன ஊமைகாண்
பாரினிற் கும்பிடு கல்லான பாதகன்
ஊருவர்ப் பூவை யுறக்கொல்லுஞ் சுண்ணமே.

நாலுக்கு நானே நன்ருய் வகைசொல்வேன்
காலுக்குஞ் சத்தி வழலையி னுப்பொன்று
பாலுறு சூடன் பாறையி னுப்பொன்று
சீலமா முத்துச் சிப்பியிற் சுண்ணமே.

End

பதினொன்று மெட்டும் பதினாறு மேல்மூன்றும்
கதிதரு பத்துங் கண்டறி வாரில்லை
கதிதரு பத்துங் கண்டறி வார்க்கு
நிதிசெயமானந்தம் நிட்சயந் தானே. 106

மச்சமுனி நிகண்டு முற்றும்.

---

54. (b) மச்சமுனி நாயனார் கடைக்காண்டம் எண்ணூறு.

Lines 5 in a Page.

இதில், தசதீட்சை விபரம், பதி பசு பாச லட்சணம், அஞ்செழுத்துண்மை, சரக்கு வைப்புகள், சரக்குகளின் சத்துரு மித்துரு, சுன்னமுறைகள், அவற்றால் தீரும் நோய்கள், கற்பங்கள், லவணபஞ்சபூதம், லோக பஞ்சபூதம், பாஷாண பஞ்ச பூதம், உபரச பஞ்சபூதம், வாசி பஞ்ச பூதம், யோகவேஷ்டி, ரேசக பூரக கும்பகம், பெரியோரிலச்கணம், முதலியவை சொல்லப்பட்டுள்ளன. இதற்கு **மச்சமுனி நாயனார் திருமந்திரம் எண்ணூறு** எனவும் பெயருண்டு, அச்சிடப்படவில்லை.

Beginning

ஆதி பராபரத் தையர் மலரடி
நீதியில் வேத நிர்மய மானது
சோதியினாதந் துலங்குஞ் சுடரொளி
சாதியினந்தி தன்பதி காப்பே,

பெருமை சிறந்திடும் பேரஞ் செழுத்தி
னுருமையின் பாகத்துண்மையைக் கேளு
சிறுமையும் வறுமையுஞ் சென்றிடு மந்த
வருமை வளம்பதியாம்பசு பாசமே, 44

கண்ட பொருளைக் காரணமாக
விண்டுநான் சொன்ன வெண்ணூறு மந்திரம்
விண்ட பொருளின் விபர மறிந்தபே
ரண்டமும் பிண்டமு மறிபவர் தானே. 65

End

வாசி பிறந்ததும் வாசியில் சென்றதும்
தேசிகனுதன் திருவுரு வானதும்
பூசனையாகிய பொருளை யறிபவர்
ஆசான்றன் பாதத்தையறிபவன் தேசியே. 803

மச்சமுனி நாயனுர் கடைக்காண்டம் வைப்பு எண்ணூறு முற்றும்.

---

55. No 33. கொங்கண நாயனுர் நடுக்காண்டம் ஆயிரம்.

ஏடுகள் 125; Lines 5 in a Page.

இதில், இரச வாதத்திற்குரிய பலவகையான சுன்னங்கள், நாகக்கட்டு, சூதக்கட்டு, சூத வெண்ணெய். துருசு வெண்ணெய், குளிகை, செயநீர் சரக்குகளின் சத்துரு மித்துரு, பரிச வேதை மணி, சத்தவேகமணி, அக்ஷயத்தின் மணி, திராவகங்கள் முதலியவைகளும் கற்பங்களும் கூறப்பட்டுள்ளன. இதில் 123 முதல் 161-வது செய்யுள் வரையில் எழுதிய ஏடுகளில்லை. இது அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning

நடுக்காண்டம் பாடுகிறேன் பூரணமே காப்பு
நலமான சுண்ணும்புக் காடு காடு
அடுக்கொண்ட நாகமொன்று வங்கமொன்று
அப்பனே யீயமொன்று உருகும் போது
தடுக்கென்ற சூதமொன்று அதிலே விட்டுத்
தாளகமாம் சுன்னமொன்று அதிலே தூவி

முடுக்கென்ற முப்பிரலே பூரச் சுன்னம்
மூட்டி யொரு எடையிட்டு வறுத்திடாயே. 1

வறுத்து இதைக் கரண்டிலே கிண்டத்தூளாம்
வாங்கியிதில் நாலிலொன்று வீரங்கூட்டி
நிறுத்தியிதைக் கருவாலே வில்லைதட்டி
நெருப்பாக வூதப்பா சுண்ணாம்பாகும்
கறுத்துவது கண்டாக்கால் வீரங்கூட்டி
கைமுறையாய் கருவாலே வில்லை தட்டி
மறுத்துப்புச் சுண்ணாம்புக் குகையிலிட்டு
மாட்டி நன்றாயூதிடவே சுன்னமாமே.

கண்டதோருப்பை விட்டாற் கட்டில்லை வாதமில்லை
கண்டதோருப்பை விட்டாற் கவனமுஞ் சித்தியில்லை
கண்டதோருப்பை விட்டாற்கசடுரச் சத்துமில்லை
கண்டதோருப்பையீசன் கயற்கண்ணிக் கருளினாரே. 212

காணிந்த வெண்ணெய் தன்னைக் கடுகியே குகையி
லூட்டிப்
பூணிந்த காரம் பூட்டுப் புகழ்பட வுருக்கு ஆடும்
தோணிந்தத் தொழிலைப் போலச் சூழ்ச்சிந்தத் தொழிலு
மில்லை
வாணிந்தநாத நீரின் வல்லமை கண்டு கொள்ளே. 920

End

சித்தியாம் காயம் பண்ணி தேசத்தே திரிஞ்ச சித்தர்
மத்தியாய் வேதை போட்டு மணிகொண்டு ஆடுவார்கள்
அத்தியாம் பூரணத்தின் அகண்டமே னோக்காணாகில்
வெத்தியாம் சித்தியாயே வேணும் பிறப்பானந்தானே.
1002

56. No. 34 கொங்கணர் பலதிரட்டு ஐந்நூறு.

ஏடுகள் *121;* பூர்த்தி Lines 6 – 7 in a Page.

இதில், நிமிளைச் சுன்னம், தங்கச்சுன்னம், படிகச் சுன்னம், துருசுச் சுன்னம், வழலைச்சுன்னம், கல்லுப்புக் கட்டு, காரசாரகுரு, அண்டமெழுகு, வெடியுப்புச்செயநீர், காரசாரக் கட்டுகள், ஏமரசமுறை, சூடன் வைப்பு, சவ்வீர வைப்பு, கெந்தகக்கட்டு, முதலிய இரசவாதத்திற்குரிய மருந்துகளும் யோகஞான மார்க்கங்களும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning

ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
அகண்டு நின்ற மூலகுரு பாதம் போற்றி
சோதியந்தத் துள்ளிருக்கும் பெரியோர் பாதம்
துரியவெளிக் குட்புகுந்த ரிஷிகள் பாதம்
நீதியென்ற எனையீன்ற போகர் பாதம்
நித்தநித்த மிறைஞ்சி நின்று நினைவாய்ப் போற்றி
வாதியென்று பேரெடுத்து அஞ்ஞூறுஞ் சொன்னேன்
மனேன் மணித்தாய் பதங்காப்பு மகிழ்ந்து பாரே.

வாதமென்ற தொழிலுக்குச் சூதமூலம்
வகைவகையாய் குருவுக்கு உப்பேமூலம்
நீதமென்ற பொருள்காண அடிதான் மூலம்
நேரான நடுமூலம் கண்டமாகும்
வேதமென்ற புருவமையம் மேலே மூலம்
வேறொன்று மரமொன்று துளிர்தா னென்று
போதமென்ற பொருள்காணு மூன்றினாலே
புகழான அடிமூலப் போக்கு நன்றே. 33

அறிவாக வெடியுப்புக் கல்வத்திட்டு
அந்திடைக்கு நாலிலொன்று கல்லுப்பிட்டு
மறிவாகப்பழச்சாறதை வார்த்து ஆட்டு
மைந்தனே யதுமெழுகு மான பின்பு

பிறிவாக யிருபதுக்கு ஒன்று கேளு
பேரான வழலையுடச் சுண்ணம் போடு
நெறிவாக வழித்து வைத்துப் புடத்தைப் போடு
நேராகச் சுண்ணும்பாம் உப்புத்தானே. 99

End

ஆமப்பா அஞ்னூற்றைப் பார்த்தோர்க் கெல்லாம்
அருளோடே பொருளாகும் அதீதங் காணும்
ஓமப்பா வென்றுநின்று குண்டலிதா னேங்கும்
ஓங்கியதோர் கவனமது உலகமெல்லாம் சுற்றும்
வேமப்பா நல்வினையுந் தீவினையுங் கெட்டு
வேதாந்தத் தேவிரைந்து ஏற்று மேற்றும்
நாமப்பா கண்டபடி மூலர் பாதம் போற்றி
நலமாகச சொல்லிவிட்டேன் அஞ்னூறு முற்றே. 518

குறிப்பு :

இ ர ண் டு வெற்றேடுகள் கடைசியில் கோர்க்கப்பட்டுள்ளன.

57, No. (a) கொங்கணர் சரக்கு வைப்பு நூறு.

ஏடுகள் 35; பூர்த்தி Lines 5 in a Page.

இதில் சீனம், பூரம், காரம், சாரம், துரிசு, கௌரி, தொட்டி, வீரம், லிங்கம், பச்சக்கற்பூரம், சாம்பிராணி, பெருங் காயம், அபின் முதலிய சரக்குகளின் வைப்புமுறை சொல்லப் பட்டிருத்தலின் இந்நூல் சரக்குவைப்பு எனப்பெயர் பெற்றது இந்நூல் நிலைய வெளியீடாக அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
அகண்டு நின்ற போகருட பதத்தைப் போற்றி

சோதியென்ற சின்மயத்தின் ஆயிபாதம்
துலங்கியதோர் ரிஷிகளுட பாதம் போற்றி
நாதமென்ற சுந்தரமே சொல்லக் கேளு
நன்மார்க்க முறையதுவே யறிந்து சொல்வேன்
நீதமென்ற ஆயியுட பாதந்தன்னை
நினைவு கெட்டுச் சொல்லாதே நிலத்துள்ளோர்க்கே.

தானென்ற ஆதிமுதல் சரக்கைக் கேளு
தரணிதனில் பிறக்கின்ற உப்பினோடு
ஊனென்ற கல்லுப்பு இரண்டு பங்கு
உத்தமனே பழச்சாறும் தயிரும் வார்த்து
கோனென்ற பாண்டத் திலிட்டுமூடிக்
குறிப்பாக புறந்தனிலே சாணியப்பி
ஆனென்ற ஆவினுட பதியில்தாக்கு
அப்பனே மண்டலத்தில் சீனமாச்சே. 7

End

சந்தான மவ்வோடு சிகாரந் தானுஞ்
சமரசமாய் வகாரமொடு மூன்றின் மாறி
தந்தாரை யிருநாமம் மொக்கக்கூட்டிச்
சாதகமாய் மவுனமதைத்தியானம் பண்ணு
வந்தானம் பூசையைத்தான் நன்றாய்ப்பண்ணு
மைந்தாகேள் பண்ணயிலே நிர்த்தஞ் செய்வார்
தொந்தான சிவசத்தி தீக்ஷை சொன்னேன்
சூட்சமாம் நாதாக்கள் சொல்லார் பாரே. 100

58. (b) கொங்கணர் கற்பவிதி நூறு.

Lines 7 in a Page.

இதில், வாத பித்த சிலேட்டுமங்களை மீறிடவாமல் நிறுத்தித் தேகத்தில் நோயுண்டாகாமல் செய்தற்குரியகற பலேகியமாகிய துவாதசாந்த லேகியமும், அதில் வைத்து உண்ணுதற்கேற்ற அயகாந்தச் சத்துச செந்தூரமும் ஸ்நானஞ்செய்வதற்குப் பஞ்சகற்பமும், நெய்யும் கூறப்பட்டுள்

ளன. இந்தப் பிரதியில் 41 செய்யுட்கள் உள்ளன. அச்சிடப் படவில்லை.

Beginning:

வரிசையாய்ச் சொல்லுகிறேனுநி தொட்டு
மகத்தான கற்பங்கள் கொள்ள வென்றால்
பிரிசமாய் வாதபித்த சிலேற்பனந்தான்
பேய்க்கூத்துப் பண்ணுமல் சூடேறுமல்
பரிசொத்த வுஷ்ணங்கள் பாய்ந்தேராமல்
பண்பான லேகியமுண்டு சொல்லுகிறேன்கேள்
உரிசைபெற செவ்விளநீர் படிதானெட்டு
உத்தமனே கற்றுமைச் சோறுதானே. 1

சொல்லக்கேள் என்மகனே காயசித்தி
சுகமாகப் பெறுதற்குப்புத்தி கேளு
அல்லக்கேள் துவாதசமாம் லேகியமென்று
அதற்கு பேரிட்டதென்ன வென்றால்கேளு
வெல்லக்கேள புரியட்டம் சொன்ன படிகேட்கும்
மீறுகின்ற மாத்திரையில் கட்டியேறும்
செல்லவே தசவாய்வு ஆங்காரம் போகும்
சித்தாந்தக் கிரியையெல்லாம் சேரப்போமே. 13

End:

விரும்பியதோர் சட்டைமுனி அய்யர் தாமும்
வேதாந்தம் நிறைவேற விரும்பிச்சொன்னுர்
தளம்பியதோர் சேட்டகுரு வெனக்கு மைந்தா
தப்பாமல் தம்பனமாம் குளிகை சொன்னுர்
உளங்குளிரச் சிவயோகத் தம்பனமே செய்ய
உறுதியாய் ரசக்குளிகை ஊணவேண்டி
வளம் பெறவே யெந்தெந்த விதமானுலும்
வயணமாய் ரசங்கட்டி யுருக்குவாயே. 41

59. (c) கொங்கணர் சூத்திரம் நாற்பது.

Lines 5 in a Page.

இதில் இரசவாதத்திற் கின்றியமையாத வழலை என்று சொல்லப்படும் முப்பு முறையும் யோகமும் சொல்லப்பட்டுள் ளன. இதற்கு கொங்கணவர் முப்பு தீக்ஷை எனவும் பெய ருண்டு. இதில் 10 செய்யுட்களே இருக்கின்றன. இந்நூலால் இவராற்செய்யப்பட்டுள்ள பல சிறுநூல்கள் வெளியாகின்றன. இது அச்சிடப்படவில்லை.

Beginning :

சாத்திரந்தா னறுகாண்டம் விரித்துச் சொன்னேன்
தனைக்குறுக்கி மூன்றுகாண்ட மைஞ்ஞூறு முற்றும்
சூத்திரந்தான் மூன்றுரைத்தேன் கற்பநூறு
தோஷமில்லை மோசமில்லை சொல்வேன்கேளு
சூத்திரந்தான் நாற்பதுக்குள் வழலை மார்க்கம்
திறந்தப்பா பாடினேர் சிறுநூலெல்லாம்
கோத்திரதான் மூலகுரு சீஷவர்க்கம்
கூறினேன் போ(பே)ரொடு கணேசன் காப்பே.

ஆச்சப்பா நந்தீசர் ஞான மார்க்கம்
அறிவோடே கூடிநின்று மேல்கொண்டேறிப்
பொச்சப்பாவென்ன சொல்வேன் பூரணந்தான்
புருவமையத் தமர்திருந்து சிலம்பொலியைப்போற்றி
வாச்சப்பா போச்சுதென்று இருந்தேனந்த
மதியிந்த பட்டணத்துக் கப்பால சென்றேன்
பேச்சப்பா லகிரிகொண்டு திரும்பி வந்தேன்
பேரான பூரணத்தில் சொக்கினேனே. 3

End

கொள்ளாத காமியென்றுங் குசவனென்றும்
குடிகெடுத்த வுவர்ச்சார மரக்கி யேன்றும்

விள்ளாத கொள்ளியென்றும் வேதனென்றும்
வெட்டவெளி யாயிருந்த விமலனென்றும்
கள்ளாகி அழல் சொரிந்த உப்பி தென்றும்
கட்டாக வழலை செய்தே யெண்ணெய் வார்க்க
ஒள்ளியதோர் கறுப்பனென்றும் ஆயவனென்றும்
உவருப்பின் குலமிதுதான் கல்லுப்பாமே. 20

---

60. (d) கொங்கணர் தண்டக பட்சணி நூறு.

Lines 5 in a Page.

இதில் எருக்கு, கீழ்க்காய்நெல்லி, எட்டி முதலிய மூலிகைகளைக் காப்புக்கட்டி எடுத்த வேர்க் குளிசத்தால் செய்யும் வசியம், மாரணை முதலிய அஷ்டகர்மங்களும் மந்திரங்கள் ஜாலங்கள், சித்திகள், திலதங்கள், மறைப்புமை முதலியவைகளும் ஞானமார்க்கங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இந்நூல் அச்சிடப்படவில்லை.

Beginning:

வெளிகடந்த வெளியோளியே சுழியே காப்பு
வேதாந்த விவரத்தின் அறிவே காப்பு
தளிர்கனலுங் காலுமொன்ருய் மூன்று நவ்வில்
தம்பனத்தில் மோகனத்தாய் பதமே காப்பு
அளிகருவி லெட்டாகி நாலுஞ் சேர்ந்த
அதிசயமே பூரணத்தின் அறிவே காப்பு
களிவுறுதி பட்சணியின் கருவைக்கூறக்
கணபதியே முத்தியருள் காப்புத்தாமே, 1

வாங்கியதை யிந்திரன்றன் திசையை நோக்கி
வசியமுதல் மாரணத்தை மாறு மாறு
தாங்கியதை லட்சமுருத் தம்பனமே செய்யத்
தவருமலெட்டெட்டு மாடு மாடும்

ஓங்கியதின் குளிசமது தங்கத்தாலே
உட்பொதிந்து மயிர்முடியிற் கட்டு கட்டு
பூங்கமல மாதுதிரு மாதுவும்மைப்
பொருந்துவா ளஷ்டகர்ம மாடுந்தானே. 5

போற்றியே மூலருட சூட்சத்தாலே
போகர்க்கு மூலருக்குப் பூசைபண்ணிப்
போற்றியே யென்றனுட நூலைப்பார்த்துப்
புதுமையுள்ள திலதத்தைப் போட்டாற்கேளு
மாற்றியே ஆறுவரை சூட்சத்தாலே
மறைக்குமவர் தலைதா னுருங்காணார்
சூத்திரமாய்த் திரிகுவாய் நீ சூட்சங் காணுஞ்
சொல்லாதே திலதத்தையதீதந் தானே. 96

End

விதியறியான் மதியறியா னூலைப் பாரான்
வித்தறியான் முனையறியான் சுழியைப் பாரான்
நதியறியான் சுனையறியான் நீரில் மூழ்கும்
நானென்ற சொல்மறவா னூலைக் காணான்
விதியறிந்தோன் கருத்தலையி லுபாயமாய் நின்ற
விட்டகுறைக் கட்டளையை யறிந்து கொள்வான்
பதியறிந்து மனம்பதிந்து விதையைக் கண்டு
பலன் பெற்றார் பட்சணியின் பாவுமுற்றே. 108

colophon:

சிவமயம் தேவிசகாயம் குருபாதந் துணை.
குருகடாட்ச முண்டாக வேணும்.

61. No. 36. A. பிரமமுனி சூத்திரம் முந் நூற்றறுபது.

ஏடுகள் 169; பூர்த்தி Lines 5 in a Page.

இதில், முப்புகுரு, மேகராஜாங்க லேகியம், மேகராஜாங்க எண்ணெய், கற்பநோய்க்கு எண்ணெய், வல்லாதி

சண்டமாருதக்குழம்பு, வில்வாதிக்குழம்பு, மகா மேககிருதம், விஷமுட்டித்தைலம், கொம்மட்டிக்காய் பதங்கம், அரிதார பற்பம், பவளபற்பம், தந்தரோக முப்பத்திரண்டுக்கு மருந்து, நிலவாகை, சிவனார் வேம்புச் சூரணங்கள், பதினெண் குட்டங் களுக்கும் காள கண்டகுடோரி, கைகால் முடக்குக்கு மருந்து, ஆடாதோடை லேகியம், புங்கம்பூச் சூ ர ண ம், கரந்தைச் சூரணம், அமுர்தாதிக் குளிகை, வழலைசுன்னம், தேசி வித்தை, ஐங்காயக்கரு முதலியவை சொல்லப்பட்டிருக்கின் றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning

சீரரு ளான சோதி சின்மய மான சோதி
ஆரணி கொன்றை சூடி யாறணிந் தானைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கியே வைத்திய நூலைக்
காரண மாகப் பாடக் கணபதி காப்புத்தானே.

தானென்ற முப்பூவின் முறையைக் கேளு
சாத்தினார் கும்பமுனி பூரணத்தில்
வேனென்ற பூநீறும் வெள்ளைக்கல்லும்
விளவிடவுஞ் சுத்திமுறை விளம்பினார்பார்
கானென்ற பங்குனி மாதம் பார்த்தால்
காற்றில்லாக் கதிர்போல வளர்ந்திருக்கும்
பானென்ற மண்படா தெடுத்து வந்து
படி நாலு அளந்து வொரு பாண்டத்திட்டே. 21

இட்டுமே கல்லுப்புப் படிதான்ரெண்டு
இதமாகக் கற்சுன்னம் படிதான் ரெண்டு
இட்டுமே அமுரிபடி யெட்டு வார்த்து
இயல்பான நல்லெண்ணெய் படியரைதான் வாரு
அட்டுமே கலக்கியதைத் தெளிவிறுத்து
அடுப்பேற்றி யெரித்து நீயுப்புக்காய்ச்சி
மட்டுமே மறுபடியும் அமுரிவிட்டு
மைந்தனே தெளிவிறுத்துக் காய்ச்சுமுன்போல்

பட்டுமே யிப்படியே பத்துமுறை காய்ச்சு
பாங்கான சவுக்காரக் குருவிதாமே. 13

End

வாரான கருவை யெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வைத்தியமும் வகையாய்ச் சொன்னேன்
கூரான செந்தூரங் களங்கஞ் செயநீர்
குருமுடிக்கும் வகையெல்லாங் குறியாய்ச் சொன்னேன்
வாரான அஞ்சனமும் திலதம் சொன்னேன்
வசியமொடு அழைப்பு வித்தை மாரணமுஞ் சொன்னேன்
ஆரானவாசியொடு வாசி யோகம்
அடங்கி நின்ற கருக்கிடை சூத் திரந்தான் முற்றே. 383

முற்றும்

சிவமயம். குருபாதந்துணை. ஸ்ரீராமஜெயம். தேவி சகாயம். திருச்சிற்றம்பலம். ஆனந்தவல்லியம்மன் துணை.

---

62. No. 36 B. (a) வைத்திய நூல்.

ஏடுகள் 15; அபூர்த்தி Lines 5 in a page.

இதில், பூரணசந்திரோதயம், மகாபூரணசந்திரோதயம், சூசிகாபரணம், பஞ்சவமிர்தரசம், மகாசூசிகாபரணம், செந்தூரபூஷணம், பார்க்கவிரசம், சாம்பவிரசம், விடசன்னிபாதரசம், சன்னிபாதவயிரவன், செயவிக்ரமரசம், பஞ்சபாண்டசெந்தூரம், கச்சலிமாத்திரை, சயித்தியபிரயாதி ரசம், காசகுலாந்தகரசம், திருமூர்த்திரசம் முதலிய மருந்துகளும் அவைகளால் தீரும் நோய்களும் சொல்லப்பட்டுள்ளன. ஆரம்பமும் கடைசியும் இல்லாததால் இன்ன நூலென்பதும் செய்தவர் இன்னவர் என்பதும் தெரிந்துகொள்ளமுடியவில்லை. ஆதலால் வைத்திய நூலென்று பெயரெழுதப்பட்டது. அச்சிடப்படவில்லை.

Beginning:

கூறு மனுபானங் குப்பியுள வம்மருந்து
கேறு கனகஞ்......ப்பழந்—தெறுஞ்
சமுத்திராச் சோகிவிரை தான்வகைக்கு நாலொன்
றுமைத்த.........கஸ்தூரியாம்.

மகாபூரணச் சந்திரோதயம். 123

அரிசி விடுஞ்சூத மையாறு நிஷ்க்கம்
பிரிகியிடுங் கெந்தியிரு பதிநிஷ்க்கம்—திருவார
தங்கம் பவழம் தனிமாணிக் கப்பறபம்
பங்குவகைக் கஞ்சுநிஷ்க்கம் பார். 124

பருக்கவெள்ளி மூன்றுநிஷ்க்கம் பற்பமிவை யெல்லாம்
முருக்கிலையின் சாற்றில் முனைந்தரைத்து—கரிச்சாலி
கூத்த குதம்பை குறிநெருப்பி லோர்சாமம்
சாத்தி லரைக்க தனித்து.

End:

தின்றால் குருக்கச்சல் திருமே தப்பாது
நன்றாம் பலமாறல் நாடாது—வொன்றாகில்
தானசுர மென்று சாற்றினர் பேருலகில்
வானமந்திரி சொன்ன வகை.

---

63. (b) சட்ரச நிகண்டு.

Lines 5 in a Page.

இதில் அறு சுவையில் இன்னின்ன பதார்த்தம் இன்னின்ன சுவையில் அடங்குமென்பதும் அவற்றின் குணம் இன்னதென்பதும் கூறப்பட்டுள்ளது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை. வடமொழி ஷட்ரச நிகண்டின் மொழி பெயர்ப்பென ஊகிக்கின்றனர். பிழையதிகமாயிருக்கின்றன. அச்சிடப் படவில்லை.

Beginning:

பூவார் சிரிகிரியிற் பொன்னி வரவழைத்த
மாவா ரணமுகனை வாழ்த்தியே—நாவார
வாறுசுவை தேர்நிகண்டி ஞரியத்தைச் செந்தமிழாற்
றேறுசுவை செய்தேன் றெறிந்து.

கூறி னிலுப்பைமலர் கூத்தன் குதம்பையெள்ளு
தாறின் கதலிமு....சர்க்கரையும்—சிறிநெலிக்
கன்னிகொடி வெள்ளரிக்காய் காஞ்சொரிவேர் மாகாளி
பன்னியிடில் வாருணியம் பார்.

பார்பறங்கி முந்திரிகை பாலை பொன் சிவந்தி
சீர்பருத்தி கோதும்பை தேன்மெழுகு—ஏர்வெள்ளி
பூதலத்தில் மட்டிரண்டும் பூச்சர்க் கரைக்கிழங்குங்
காதலிக்கு மாமதுரங் காண்.

End

சிராசத்துச் சராவல்லி தேட்கொடுக்கோ டுண்ட
திராய்பூ திசையுமொன்றை வேதொண்டாங்
கிரிவா லுலகமே சிளரா மணக்கின்
பரிவாலகங்கசப்பாம் பார். 75

சிம்முகியும்வாசை செழியவா டாதொடையாம்
சம்முகியின் கைப்பிரதஞ் சார்குருமை—செம்மைக்
கவகாசந் தாகசுரங் காரின் மேல் மூச்சு
மவகாச மின்றியது மே 76

குறிப்பு:

கடைசியில் ஒரு சிறு ஏட்டில் 'போகர் ஏழாயிரத்தில் நான்காங் காண்டம் அபூர்த்தி பாட்டு 311-க்கு ஏடு 92 என்று எழுதப்பட்டுள்ளது.

64. No. யூகிமுனிவர் வைத்திய சிந்தாமணி.

ஏடுகள் 158; அபூர்த்தி Lines 5 in a Page.

இதில், உடலுற்பத்தி, உடற்கூறுதத்துவம், நாடிவிபரம், சுரம், குன்மம், சூலைமுதலிய நோய்களின் நிதானமும் அவற்றின் பேதங்களும் வாத ரோகம் 84க்கு விவரமும் அவற்றின் குணகுணங்களும் பித்தரோகம் 42க்கு விவரமும் அவற்றின் குணகுணங்களும் சிலேட்டும நோய் 96க்கு விவரமும் அவற்றின் குணகுணங்களும் மேகம் 21 நீரழிவு 20 குட்டம் 18 அவற்றின் குணகுணங்களும் மற்றைய நோய்கள் அவைகளுக்கேற்ற மருந்துகளும் சொல்லப்பட்டுள்ளன. முதலேட்டின் தலைப்பில் கண்டபடி இது தன்வந்திரியார் வாகடம் வயித்திய சிந்தாமணி அன்று. ஏட்டு இலக்கம் 96 முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் 500 செய்யுட்களிருக்கின்றன. அச்சிடப்பட்டிருப்பினும் கிடைப்பதரிது.

Beginning:

ஆனைமுகன் தன்பாதம் முருகன்பாதம்
அத்தியுரித் திடைதரித்த அய்யர்பாதம்
வானையுமையாள் பாதம் மாலின்பாதம்
வயிரவன்றன் பாதமா லட்சுமிபாதம்
கானனைய நாதாக்கள் ரிஷிகள் பாதம்
கமலத்தில் வீற்றிருந்த வாணிபாதம்
கோனனைய குருமுனிதன் பாதம் போற்றி
கூறுவேன் ஆயுருவேதத்தைத்தானே.

* * * *

வானான வாகமத்தை மேதினிக்குள்
மருவியே யுரைத்திடவே வன்மையாக
வேனான வைத்திய சிந்தாமணியின்
விவரமெல்லாம் வெளியாக விளம்பிச் செல்வாம். 2

சொல்லியதோர் விவரமாந் தூய்மைகேளு
  சூட்சமாம் பஞ்சபூ தத்தின்கூறுந்
தெல்லியதோர் தசநாடி சத்ததாது
  திரிநாடி தசவாய்வு சுரபேதங்கள்
கல்லியதோர் சன்னியொடு குன்மம் சூலை
  கசகான வாதமொடு பித்தம் சேத்துமம்
மெல்லியதோர் மேகம்நீ ரிழிவுகுட்டம்
  மிக்கான பாண்டுகாமா லையுங்கேளே. 5

கேளுமகோ தரங்கிராணி பவுத்திரமூலம்
  கெடியான அசீரணங்கள் விருசுவிக்கல்
வேளுமே பலபல வியாதி நாமம்
  விளங்குகின்ற சாத்தியமும் அசாத்தியந்தான்
பாளுமே பண்டிதரின் குணமும் ரோகி
  பக்குவமும் ரசவர்க்க மூலிவர்க்கம்
காளுமே கடைசரக்கின் குணமுந்தானும்
  கஷாயமொடு சூரணங்கள் கற்கந்தானே. 6

End

சர்மந்தான் மிகவெடிக்கும் போரில்தானும்
  சடமெல்லாம் வேதனைபச் சென்றிருக்கும்
தர்மந்தான் திரிதோஷ குணமுண்டாகும்
  தேகமெங்கும் பாரிக்கும் திமிருண்டாகும்
கர்மந்தான் காக்கணும் பூநிறமதாகும்
  கண்டிப்பு வீக்கமாய்த் தானிருக்கும்
வர்மந்தான் மனசிதல ச..........................
  502

குறிப்பு :

பதினைந்து வெற்றேடுகள் முன்னே கோக்கப்பட்டுள்ளன.

65. No. 38 (*a*) திருமூலர் வைத்தியம் நூறு.

ஏடுகள் **27**; பூர்த்தி Lines 5 in a Page

இது, கர்ப்ப உற்பத்தி, ரோகவுற்பத்தி, வாத பித்த சிலேட்டும நாடிகள் நடக்கும்முறை, ஐம்பொறியில் பஞ்சபூதம அறியும் விதம் முதலியவற்றைக் கூறுவது. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning:

அந்தி நிறத்தனை ஆனைமுகத்தனை
யிந்து விளம்பிறை போல வெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே. 1

குறியாய் வலக்கை குறித்த பெருவிரல்
மறியாத்தன் கீழே வைத்திடு மூவிரல்
பிறிவாய் மேலேகிப் பலத்தது வாதங்கா
ணறிவாய் நடுவேயடைத்தது பித்தமே. 11

பித்தத்தின் கீழே பிரண்டது மையமாம்
உத்துப் பார்க்க வொருநரம் பேயோடும்
பத்தித்த மூவரும் பாயுமோர் வேகந்தான்
மத்தித்த நாளம்போல் வழங்கு நரம்பே. 12

வளப்பங்கேள் பூமிதான் வாசிக்கு நாசியில்
தளப்பமாம் வன்னி தானுறுங் கண்ணிலே
யளப்பமா மப்பு வடங்கிடும் நாவிலே
பளப்பதவாயு பரிசிக்கு மெங்குமே. 20

End

தின்றிடவே நோய்கள் திசை கெட்டே யோடிடும்
பன்றிட வாயுக்கள் பக்கத்திற் சேராது
தன்றிய லோகர்க்குத் தான்செய் முறையினில்
மன்றிய சித்தாய் வரும்வியாதி போகுமே. 113

Colophon :

சிவமயம் குருசுவாமி திருவடிகளே சதா சரணம்,

---

66. (b) திருமூலர் தண்டகம் நூற்றிரண்டு

Lines 5 in a Page.

இதில், வசியம், மோகனம், தம்பனம் முதலிய அஷ்ட கர்மங்களும், நீலகண்ட மாலாமந்திரமும் யோகஞானமார்க்கங்களும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning

பூகமழ் கயிலே மேவும் பூரணமான தொன்றை
ஆகம வேத ஞானச் சுருதியு மான தொன்றை
நாகவா பரணம்பூண்ட நந்தி தண்டக்க மோத
தேகமா மகத்தி நந்தி விநாயகன் காப்ப தாமே.

சீருலவு பூரணஞ்சின் மயமான சோதி
சிதம்பரத்தில் சூட்சாதிச் சூட்சந் தன்னை
வாருலவு பூண்முலையாள் தனக்குச் சொன்னார்
மகத்தான விஞ்சை நந்திக் குபதேசித்தான்

காருலவு முகத்தானே கடியினின்று
காணமாய்ச செந்துவெலாம் நிறைந்து நின்று
தாருலவு புயத்த னக்க னந்தீயீசன்
சற்குருவா யெந்தனுக்குச் சாத்தினரே. 2

வாரான அஷ்ட கர்மம் வழுத்து றேன் கேள்
பேராங் கருக்கள் பெலத்திடு மூலியிந்
தாரான தண்டகம் தாண்டிய விஞ்சையும்
பேரான நந்தி புகல்புரிந் தானே. 21

End

ஆமப்பா விந்நூல் தன்னில் சூட்சாத சூடசங் கண்டு..................
ஓமப்பா பொறிவாய்மூலம் கண்டு ஒருமாவில் மாத்திரை போலூனிப்பாரு

தாமப்பா அவனொருவன் கோடிசித்துமாட........................
நாமப்பா நந்திகுரு வானமூலம் நான்கண்ட தண்டக்க நல
மாமுற்றே 100

முற்றும்

குறிப்பு:

இதில், திருமூலர் திருமந்திரம், சித்தர் வெண்பா. அகத்தியர் சூத்திரம் 36. திருமூலர் வகாரவுபதேசம், திருமூலர் எண்ணாயிரத்தில் 38 செய்யுள், திருமூலர் எண்ணாயிரத்தில் வாதம் 200, ரோமரிஷி, சூத்திரம் அண்டவித்தை 50, மச்சமுனி சூத்திரம் 70. கோரக்கர் சூத்திரம், மசசமுனி சூத்திரம், சுந்தரானந்தர் சூத்திரம், அகத்தியர் பூஜாவிதி, அகஸ்தியர் தண்டக சூத்திரம் இவைகளின் விஷய அட்டவணை எழுதிய பதினேழு ஏடுகள் முன்னே கோர்க்கப்பட்டிருகின்றன. ஆனால் திருமந்திரம் தவிர ஏனைய நூல்கள் இல்லை.

---

67. No. 39 திருமூலர் திருமந்திரம்.

ஏடுகள் 172; Lines 5 in a Page.

இதில் அபிரேகசத்து, சூதமணி, பஞ்ச ஙிமினை விவரம். அயச்செம்பு, படிகச்செம்பு, மூலிகைச் செம்பு, மூலிகை யீயம், சவுக்காரகுரு, திராவகம், செயநீர், கட்டுவகை, சலசரி மெழுகு முதலியவை சொல்லப்பட்டுள்ளன. இதில் 1004 செய்யுட்கள் இருக்கின்றன. இது அச்சிடப்படவில்லை.

Beginning:

மாய்கை யறுக்கும் வயிறதைச் சுற்றிடும்
வேகமாய் ஞான வீடுதான் காட்டிடும்
யோகம் பலிக்கும் உறுதியாங் காயந்தான்
போகம் பலிக்கும் புகட்சியிது பாரே. 1

பாரேநல் லபிரேகம் பாங்கான கொள்ளோடே
நேரே சலம் விட்டு நிமிர வெரித்திடு
தாரே யெரித்ததைதா னீயவப் பிரகம்செய்து
சீரே சிலையிட்டுச் செந்தங்கு மூதிடே. 2

கமன மொன்றல்ல கன்றன வசியமாம்
கமன மொன்றல்ல கன்றன வசியமாம்
கமன மொன்றல்ல கழியாது காயங்கேள்
கமன மொன்றல்ல கல்லும் பொன்னுகுமே. 15

எரித்திடு நாளத்திசையவே கிண்ணிவை
பருத்திடு தூமமும் பருத்தே சலம் விழும்
விரித்திடு லோகத் திராவக மாமிது
வொரிடத்திட வொன்பது லோகங் கரையுமே. 535

End

கடுக்கா யுடனே கடுநெல்லி தான்றிக்காய்
மடுக்கா வெழுமூன்று வகைக்கோர் படிபோட்டு
வடுக்க வுதகத் தில்வாரு முப்பது
விடுக்க வனத்தால் விளங்கி யெரித்திடே 1004

குறிப்பு :

இதில் 'பலவகைப்பட்ட நோய்களுக்கு மருந்துகளின் பெயர் எழுதிய ஏடுகள் மட்டும் கோர்க்கப்பட்டிருக்கின்றன. மருந்துகளின் விவர அட்டவணை இல்லை.

---

68. No. 40 (a) திருமூலர் வகார உபதேசம் இருநூறு.

ஏடுகள் 34; அபூர்த்தி Lines 5 in a Page.

இதில் சவுக்காரப் போக்கு, செயநீர், வீரமணி, வீரச்செந்தூரம் முதலிய ரசவாதத்திற்குரிய மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் 44 செய்யுட்கள் இருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning:

திருமூல மாவது செய்ய சவுக்காரம்
திருமூல மாவது செய்ய நற்றுருசுதான்
றிருமூல மாகுஞ் செயவண்ட பிண்டந்தான்
றிருமூல மூன்றினுட் செய்தவன் மூலனே.

மூலத்தைச் சுண்ணநீர் மூட்டிக் கரைத்திறுத்
தாலத்திற் காய்ச்சி யெரியிடச் சுன்னமாங்
காலநீரு சுன்னங் கடிய சவுக்கார
மூலம் வழலை முடி....டு நாமமே. 2

End

தானே விசைக்கு விசைக்குகை சோதித்து
மானே யுருக்க மகத்தாம் ரவியாகும்
தேனுர் பணவிடை சேர்த்து நற்றங்கமும்
கோனு ருருணம் போல் கொள்கி ரவியாமே.

---

69. (b) திருமூலர் எண்ணுயிரத்தில் முதல் துருசு.

Lines 5 in a Page.

இது இரசவாதத்திற்குத் துருசு சுன்னம் முதலியவை கூறுவது. இதில் 38 செய்யுட்கள் இருக்கின்றன, அச்சிடப் படவில்லை.

Beginning

சந்திர னுப்புச் சதாசிவன் பெண்டிரும்
அந்த முராரி யகத்து மனைவியுங்
கெந்தகத் தோடே கீறி வெதுப்பிடில்
சுந்தர னுணை சிவ குரு வாமே. 1

குருவி னுடைய குணப்பாடு கேட்கி
லருவித மூன்று மறைத்தொன் பதுமேற்
பருகிடப் பூசிப் பயந்தணல் காட்டப்
பிரிவா மந்நீறும் வெண்ணீற தாமே. 2

End

சேத்தே யரைத்துத் தெளிவான வெண்கரு
காத்தே யரைத்துக் கருமத்தஞ் சாறுவார்த்து
போத்தே நற்காரமுஞ் சாரமுங் கண்டரும்
கோத்தே குளரிக் குமட்டி யுருக்கிடே. 38

---

70. (c) திருமூலர் எண்ணுயிரத்தில் இருநூறு வகாரத்திரையம்

Lines 5 in a Page.

இதில், துருசுச்செம்பு, லிங்கக்கட்டு, லிங்கக்களங்கம், கோசபீசம், அறுவகைநீர், துருசுகுரு, வழலைக்குரு, வங்கக் களங்கம், அயசெந்தூரம் முதலிய இரசவாத மருந்துகளும் வல் லாரைக் கற்பமும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning:

எண்ணுயிரத்தில் யிருநூறு மந்திரம்
அண்ணுவி சொல்ல அடியே னறிந்தேன்
செண்ணுன் சிவப்பு சேர் பச்சை நீலம்
வண்ணுன றிவான் விகாரத் திரையமே. 1

முறையான சூத்திர மேல் வாசலப்பா
மறைவா யிருக்கு மதியமிர் தந்தான்
அறைவாசல் பார்த்தே தெரிந்துள்ளங் கொண்டா
லிறைவர் திருப்பா ரிறையவ னுமே. 2

மூன்றே பொருளாய் முடிந்தது அண்ட
மூன்றே பொருளாய் முடிந்தது பிண்டம்
மூன்றே பொருளாய் முடிந்தது சீவன்
மூன்றே பொருளாய் முடிந்தது வாதமே. 116

End

குருவான தந்தை யென்னந்தியப்பா
திருமூலன் றானே செய்தொழிற் சொன்னேன்
கருவூரன் கொங்கணன் போக னிவர்கள்
தருபொ னெனச்செந் தமிழடி யென்னே. 201

முற்றும்.

Colophon:

குருவே நமே ஸ்ரீராம ஜெயம்.

---

71. No. 41 தன்வந்திரி வாகடம் ஆயிரத்து நூற்றுப்பத்து

ஏடுகள் 246: Lines 5—6 in a Page.

இது, நாடி நிதானம் வாத பித்த சிலேட்டும சரீர குணம், உடற்கூறு விவரம், சுரம், சன்னி, மூலம், நீரிழிவு, இருமல், பாண்டு, பிளவை, கண்டமாலை, குன்மம், சுவாசகாசம், அண்ட வாதம், மகோதரம், பெரும்பாடு முதலிய நோய்களின் குண குணங்களையும் அவற்றிற்கு மருந்துகளையும் பலவகைப்பட்ட பதார்த்த குணமும், கற்பங்கள், கிஷாயங்கள், வடகங்கள், குளிகைகள், தைலங்கள், சூரணங்கள, லேகியங்களையும், அட்டை லட்சணம், அட்டைப்பிரயோகங்களையும் விரிவாகச் சொல்லும் அருமையான நூல். வைத்தியங்களுள் தன்வந்திரி வைத்தியம் சிறந்த தென்பர். இதில் வெண்பாவும் விருத்த மும் விரவி வந்துள்ளன. இது அச்சிடப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இடையிடையே சிதலமாயிருக்கிறது.

Beginning:

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் காப்பு.

பாதி மாதுமை யொரு பாகனு ரருளிய
தீதிலா வாகடநூலிற் செந்தமிழ்
நீதியா யெனக்கிது நிறைய வோதுவாய்
ஆதியே பரமனே அரக ராசிவா.

முப்பத் திருமுழம் முன்னஞ் சிறுகுடல்
அப்புப் பையும் அரிய அறுமுழமும்
வெப்புத் தாமரை மொட்டுச் சிறக்கும்
மெய்ப் பொத்த பித்துப்பை நீருழக் காமே. 13

பொற்றலை பொடுதலை பொருந்து காக்கணன்
வற்றிய நீலிவல் லாரை முப்பழம்
சிற்றிடை மடநல்லாய் தேனிற் கொண்டிடில்
பற்றிய நரைதிரை பறந்து போகுமே. 208

தானே வேர்க்கொம் பிருவேலி தங்கு மிலாமிச்சஞ் சந்தனமும்
சேனே முத்தம் காஞ்சோரி செய்ய பங்கம் பாலையுடன்
கானே கோட்ட மோர்கழஞ்சி கடுகக்கொண்டு காய்ச்சியதை
மானே யருந்தப்பித்த சுரம் மற்று முழலைக் கழிச்சல் விடும் 621

வில்வவேர் சித்தமுட்டி வீறுபா சிப்பயறு
நல்சுக்கு கொத்தமல்லி நற்பொரியும்—சொல்லரத்தை
யித்தனையுங் கூட்டி யிடித்ததனைக் காய்ச்சியுண்ணச்
சத்திவிக்கல் போமே தவிழ்ந்து 1100

End:

இதுபின் சிலமண் செய்மேலுலர வேவைத்து மிமரி கிரமத்
தில் மேலபத்தா லெரித்தே
எரித்தது பதினைஞ்சு நாழியதானபின் இதமாக ஆற விட்டு
எடுத்ததை யிஞ்சிச் சாறுவிட்டு குழிக்கல்லிலேழு நாழிகை
யரைத்தே
மரித்துக் கடலைப் ரமாணமதால் பரிந்து குளிகையது செய்
பாரினி னிழலுலர்த்தாவுலர்த்தியே
பகரவே யிஞ்சியதுசாறு விரித்ததொருகுளிகையிட விஷ
சுரம் சன்னி வாதம் வீறுகுளிர் மாறல் சு ர மு ம்
விதமான திரிதோஷம் ப ழ ய சுரமாம் விரித்தொருகுளிகை
யிடப் பிசகாமல் விட்டோடுமே 1110

Colophon :

சகாப்தம் 1722ஆ ர வு த் தி ரி ஆ கார்த்திகைமீ 2௳ சனிக்கிழமை சதுர்த்தசியும் சுவாதி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ராசமானிய ராசஸ்ரீ சரபோஜி மகாராசா சாயே | *அவர்கள் ஆக்ஞாபிச்சபடிக்கு வேங்கடேசம் பிள்ளை குமாரன் சுப்பராயன் தன்வந்திரி வாகடம் எழுதி நிறைந்தது. முத்தும்.*

சற்குருபாதந்துணை

---

72. No. 42. போக நாயனர் அருளிய கற்பவிதி முந்நூறு.

ஏடுகள் 131; பூர்த்தி Lines 5 in a Page.

இதில், நரை திரை மாறிக் காயம் நோயின்றி அழிவில்லாதிருப்பதற்கேற்ற க ற் ப ங் க ள் கூறப்பட்டிருக்கின்றன. இது அச்சிடப்படவில்லை.

Beginning

தானான கற்பவிதி சொல்லக் கேளு
சனகாதி நால்வருட பதத்தைப் போற்றிப்

பானுன பாட்டர் திருமூல நாயர்
பாதமென்றன் சிரசில் வைத்துப் பரிந்து போற்றிக்
கானுன காலங்கி அய்யர் பாதம் போற்றிக்
கற்பத்தின் வகைகளெல்லாங் கருதித்தின்று
தேனுன சித்தி பெற்ற படியே சொன்னேன்
சிதை வில்லாக் கற்பமுண்டு யோகம் பாரே. 1

யோகமாம் புளியுப்பு எண்ணெய் சுண்ணம்
உரிசையாம் மாங்கிஷங்கள் மச்ச மாகா
மோகமாய் மோரோடு கடுகு வுள்ளி
முதிரான காரமொடு பெருங்காயந்தான்
போகமாம் பெண்தன்னின் புணர்ச்சியோடு
பேரான நித்திரையுஞ் சோம்பல் தள்ளி
வாரமாம் வாசிதன்னை மறித்துக் கொண்டு
மறவாமல் இரவுபகல் மனசு உண்ணே. 2

ஏமமாங் கருநெல்லி மலை தோறுமுண்டு
எளிசாகக் கிடையாட்டால் கறுப்புப் பண்ணி
நாமமாம் நாற்பதுநாள் பாலில் கொளளு
நமன் வந்து நாடாமல் நடுங்கிப் போவான்
தாமமாஞ் சட்டை யெல்லாங் கக்கிப்போடுந்
தங்கம் போல் மேனியெல்லாந் தளுக்குக் காணும்
ஆடவே கருநெல்லிப் போக்குச் சொல்ல
அரன்காணூர் யான்தானுங் கண்டிலேனே. 128

End:

தானுன கற்பமது முந்நூற்றுச் சொச்சந்
தாய் சொன்னபடியுண்டு சாதிச்சேநான்
கோனுன காலாங்கி நாயர் சொன்ன
குறிப்பெல்லாஞ் சோதிச்சுச் கொண்ட மார்க்கந்
தேனுன சிவயோகி முனிவர் தாமும்
சிறுபாட்டர் சொன்னபடி சித்தியானேன்
பானுன பராபரமாந் திருமூல நாயர்
பாட்டர் சொன்னபடி நின்று பாஷித்தேனே. 340

காயசித்தி மார்க்க முற்றும்.

colophon:

*சகாப்தம் 1723*ஸ்ரீ *துன்மதி*ஸ்ரீ *சித்திரைமீ 8உ சுக்கில பட்சமும், பஞ்சமி திதியும், சனிவாரமும், திருவாதிரை நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ராஜமானிய ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா சாயபு அவர்கள் ஆக்ஞாபித்த பிரகாரம் கலாசிக் கணக்கு வேங்கடேசம்பிள்ளை குமாரன் சுப்பராயன் போக நாயனாரருளிச் செய்த யோகமார்க்க முந்நூறு எழுதி முடிந்தது முற்றும். குருவே துணை.*

குறிப்பு:

இதில் இன்னின்ன கற்பமூலிகைகளை இன்னின்ன விதமாக உண்ண வேண்டுமென்பதும், உண்ணும்போது கைக்கொள்ள வேண்டிய பத்தியமின்னதென்பதும் கூறியிருப்பதோடு, இரசவாதத்திற்கும் கற்பத்திற்கும் உரிய செந்தூரங்களும் பிறவும் கூறப்பட்டுள்ளன. இந்நூலிலுள்ளவற்றை விளக்கும் விஷய அட்டவணையும் முன்னே உள்ளது. இதுவன்றி அகத்தியர் சூத்திரத்திற்கு விஷய அட்டவணையும் இருக்கிறது.

---

73. No. 43. வைத்தியத்திரட்டு.

ஏடுகள்; *304* Lines 5 in a Page.

இதில் நாடிகளின் நிதானம், கெற்ப உற்பத்தி, சுரம், சன்னி, குன்மம், காமாலை, மகோதரம், குட்டம், மூலம், முதலிய நோய்களின் வரலாறும், பிறவும் கூறும் செய்யுட்பாகங்களை அகத்தியர் குணவாகடம், திருமூலர் கெற்ப உற்பத்தி, அகத்தியர் குருநாடி, ரெத்தினச்சுருக்கம் ஆயிரத்தைஞ்ஞூறு, தன்வந்திரி சிந்தாமணி நாடி, திருமூலர் நாடி, வால்மீகர் நாடி முதலிய நூல்களினின்றும் திரட்டி எழுதப்பட்டிருக்கின்றன. இது ஒரு தனிநூலன்று. இதின் கடைசியில் அட்டைவிதியும் சத்திரவிதியும் கூறப்பட்டுள்ளன.

Beginning

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு. 1

பாதிமா துமையொரு பாகனு ரருளிய
தீதிலா வாகட நூலின் செந்தமிழ்
நீதியா யெனக்கிது நிறைய வோதுவா
யாதியே பரமனே அரகரா முதல்வனே. 2

ஆகந் திரும்பு மரியவிழி தான்சுழலுந்
தேகம்வேர்த் தேநடுக்குஞ் செய்மூர்ச்சை—தாகமுறு
மெத்தமல நீர்கழியு மேவு மசிரண
பித்தமெனத் தேர்ந்தறியப் பேசு. 441

நிற்கின்ற மூக்குத் தானு நீர்ப்பாய்ந்து தலைகனத்து
ஒக்கின்ற வாய்நீர் தானு முண்ணுக்கைப் பற்றி நொந்து
புக்கின்ற செவியினாலே புறப்பட்டு வலிக்கும் தேகம்
பிற்கின்றவிழியாயீது பித்தத்தின்றலை நோக்காடே. 828

End

பிரமாவென்னும் வீறு சத்திர
மதுவே யங்குல மஞ்ச தாகும்
நிறையே கால்பல முனையே ஒருமா
தருமே வாய்க்கூர் கதுமையாக.

* * * *

* * * *

* * * *

பசியறு மென்ன பாலான மொழிதானே. 1251

Colophon :

தாருணஸு தைமீ 30உ வேலாயுத வாத்தியார் எழுதி னது. செகநாத வைத்தியர் குமாரன் அப்பாச்சாமி மேல் பாடம் குணவாகடம் குருநாடி, திருமூலர், அகத்தியராயிரத்தைந் நூறு, வால்மீகர் நாடி *இதிலுள்ள கெற்பமுதல் நாடிகளும் வாதபித்த சிலேட்டும வியாதி நிதானங்களையும் கலம்பகமாக்கி யி ர ண் டு கைகளையுமுன்னே போட்டுக் கொண்டெழுதப் பட்டது. துகை கவி 1251 தாழிதளம்.* 303

---

74. No. 44. பால வாகடம் மூந்நூறு.

ஏடுகள் 115; அபூர்த்தி Lines 4 in a Page.

இதில் குழந்தைகளின் வைத்தியத்தைக் கூறியிருக்கிறது. இந்நூல் பொதுக்காண்டம், மகவில்லாக் காண்டம், கெற்ப வுற்பத்திக் காண்டம், வியாதி உற்பத்திக் காண்டம், வியாதி காண்டம், அலகைக் காண்டம் என்னும் ஆறு காண்டங்களை உடையது. ஆதியில் உமாதேவிக்குச் சிவபெருமான் அருளி யது வினவும் விடையுமாக இருக்கின்றது. இதனை இயற்றிய வர் பெயர் தெரியவில்லை. சி ற ந் த நூலாகக் காணப்படு கின்றது. அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

வைய கத்தினில் வாலையின் வாகட
நொய்ய செந்தமி ழாற்சொல நாடோறுஞ்
செய்து கார்த்தழிக்குந் திரு நாயகன்
துய்ய தாமரைச் சேவடி சூட்டுவாம்.

கூறு வையகந் தன்னில் குழந்தைக
ளூறுந் தன்கரு வின்றி யொளித்ததும்
ஏறுபோலச் செனிப்பது மீறிலா
வேறு வேறு வியாதி விளைவதேன். 2

விளைந்த பேய்கள்புள் தோஷங்கள் மெய்யிலே
யிளைந்தை யர்க்கு வருவது மெப்படி
வளந்த பித்தங் கபத்துடன் வாதமும்
உளந் தெளியப் பிரித்துரை யுற்றதே, 3

பிடிக்குள்ளே மிகவடங்கிடாமலிள நீரெனப் பெரிய கொங்கையாய்
தடித்த மென்குதலை யின்குழந்தைதலை மேலுமாமுடல் கடன்னிலும்
வெடித்தி டாமலது கட்டியாகி வளர் மேலு மேலும் வரவீங்கினல்
அடுத்த மேனியிற்செவ் வாப்புக்கட்டியென வேயறிந் தவுடகஞ்செய்யே

End:

சொல்லவே யெம்பெருமான் கோவில் சேர்ந்து
சூட்சமாய் வடக்கில் வைக்கத் தீருந் தீரும்
சல்லியமாய் வயறுவலி யிருந்த தாஞல்
தப்பாம லரசடியின் மண்ணுங்கொண்டு
துல்லியமாஞ் செங்கழனீ ரலையு மோருஞ்
சுகமாக வருந்திஞல் துலைந்து போகும்
மெல்லியலே யேழுதிங்கள் குணத்தை நன்ருய்
விளம்பு ரேனுலகறிய விளம்புறேனே.

---

75. No. 45. சரபேந்திரர் நயன ரோக வைத்தியம்

ஏடுகள் 204; Lines 3—6 in a Page.

இதில் கண்களிலுண்டாகும் வியாதிகளுக்குப் பலவகைத்தைலம் மாத்திரை, குழம்பு, பத்து, மை, நெய், புகை, உருண்டை முதலிய மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன, 379 செய்யுட்களிருக்கின்றன. இதனை இயற்றியவர் வேலாயுத உபாத்தியா

யர் என்றெழுதப்பட்டுள்ளது. இவர் சரபோஜி மகாராஜா காலத்திலிருந்த அரண்மனை தன்வந்திரிமால் தமிழ் பண்டித ராவர். அரசரது வேண்டுகோட்கிணங்கித் தம் அனுபவத்தில் கண்டவற்றைத் திரட்டிச்செய்யுளாகப் பாடியவர்.*

Beginning

தாகந்தீர நெல்லிக்காய்ச் சாறுபடி ரெண்டு
 தனிப்பசுவின்பாலுபடி நாலுந்தாக்கிப்
பாகமுட னல்லெண்ணெய் படியும் விட்டுப்
 பலமொன்றே யதிமதுரம் பாங்காய்ச் சேர்த்து
வாகமிது தனைப்பதத்தில் வடித்து வாங்கி
 மாமுகனைத் தியானித்து வாரமூழ்கில்
வேகமறும் விழிரோகம் பல்லசைவுதீரும்
 விளம்பினே மாமலகத் தைலமிதே

இளநீர்தன்னில் மதுரந் திரிபலை யிடுமரமஞ் சளுஞ்சமமாயரை களகளென்னக் கொதித்து வடித்துத்தேன் கலந்து மிந்துப்புங் கற்பூறத்தூளிட்டுக்
கிளரிடுமிளநீர்க் குழம்பாமிதை கெட்டியோர் சிமிளுக்குள்ள டைத்திடு
தருள நேத்திர ரோகங்கள் யாவையுந் தானேடு மிதுகைகண் டதாகுமே. 91

எள்ளுடன் பயறும் வேப்பிலை கடுகுங் கூட்டியே
தெள்ளுமென் பொடிகள் செய்து தீயினிற் புகைத்திட
மெள்ளவே கண்ணோய் சிவப்பும் விட்டிடுஞ் சிரத்தினே
யுள்ளதோடு மென்றிம்முறை யோதினர் செவ்வாயிதே. 139

End

மண்ணெடுத்துப் பொடி செய்து முக்கடுகின் பொடி கூட்டி பாயிடச்சாதி
வெண்ணெயிட்டுக் கலபுறத்தப்பியதை மற்றுமொரு மெல் கலத்தால்

*இது இந்நூல்நிலைய வெளியீடாக அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூ. 3.

நண்ணு புறத்தாலு மிழைத்துடனெடுத்துச் சிமிளிலடை நல்லமையைக்
கண்ணிலிடப்புழு வெட்டு மீழிகண்ணுந்தீருமிதைக் கருதிச செய்யே. 379

---

76. No. 46. சரபேந்திரர் குன்மரோக வைத்தியமுறைகள்

ஏடுகள் 183; Lines 4 in a Page.

இதில் எட்டுவகைப்பட்ட குன்மரோகங்களும், பல வகையான லேகியங்கள், வடகங்கள், மாத்திரைகள், தைலங்கள், சூரணம், எண்ணெய்கள், கிருதங்கள், ரசாயனம், தாம்பிர பற்பம், நாகச்செந்தூரம், வெள்ளிபஸ்பம், முதலியவைகள் சொல்லப்பட்டுள்ளன. இதனை இயற்றியவர் **வேலாயுத உபாத்தியாயர்.** **செய்யுட்களில் சரபோஜிமகாராஜாவின் பெயர் வரப் பாடப்பட்டிருக்கிறது. இது அருமையான முறைகளையுடையது. அச்சிடப்படடிருக்கிறது. இடைஇடையே பூச்சி அரித்திருக்கிறது.*

Beginning:

திருமலருஞ் செங்கழுநீர் மலருஞ் செந்நெற்
செங்கரும்புந் தென்னையும் பூகமுஞ் செழித்த
மருமலருங் காவுநிறை வயலுஞ் சூழ்ந்த
வளம்பதியாம் தஞ்சை நகர் மனுவைக்கார்க்குந்
தருமலரு நகைமுகவான் புருடமேரு
சரபோசி மகாராசன் சகல நூலுங்
கருமலரு நோயாய்ந்துங் குன்மமாதிக்
கவுடதங்கட் டுரைக்கும்வெள்ளைக் கணேசன் காப்பே

கொடிவச்சிரம்புளி நரளை மருளின் மூலம்
குடிக்கருணை வனக்கருணைக் கிழங்கு தானும்

---

* இதுவும் இந்நூல் நிலைய வெளியீடு விலை ரூ. 4; சாதாரண பைண்டு விலை ரூ. 3—50.

படிப்புவரு காயுருவி வேர்வகை யொன்றுக்குப்
பலம்பத்து மரிதகியும் பத்துப் பத்தாய்
குடிப்பிடுநீர் நாலுமரக் காலுமிட்டுக்
கொளுத்தடுப்பிற காய்ச்செட்டொன் றுகத்தானும்
முடித்திறக்கி யரிதகியை யெடுத்துலர்த்தி
முன்னீரில் வெல்லமுப்பான் பலமுமிட்டே (1)

* * * *

செய்துபின் பசுந்தேன்சே ரிரண்டரையுஞ்
சேர்த்துடனே கொண்டிடக் கேளும்
எய்தரோ கங்க ளிரத்தகுன் மங்க
ளெடுத்திடுஞ் சத்திகுன் மங்கள்
வெய்துபித் தங்கள் மருத்துரோ கங்கள்
மேலெழு நோயெலாந் தீர
நெய்நிணம் பருகி வாகைபூண் டொளிரு
நிருபவேர் சரபவேந் துரையே. 177

End

நொச்சியிலைதனை யொருபானைநிறை வேடுகட்டிடுனெடு தேங்காய்ப்பூ
பச்சை வெள்ளை யுள்ளி யதிற் பருப்பிரண்டு மேல்வைத்துப் பாகமாக்கி
வச்சதனை யெடுதேங்காய்ப் பால்பிழிந்து மதுபாதி வைத்துக் காய்ந்த
நிச்சயநீர் பாதிவிட்டுச் சம்பிரக்கா யளவதனை நேகத் தானே 297

---

77. No. 47 சரபேந்திரர்
நீரிழிவு முதலிய நோய்க்கு வைத்திய முறைகள்

ஏடுகள் 29; Lines 6 in a Page.

இதுவும், அனுபோக வைத்திய முறைகளைத் திரட்டி **சரபேந்திரன்** பெயரால் வேலாயுத உபாத்தியாயர் இயற்றிய தாகத் தோன்றுகின்றது. இதில் 77 செய்யுட்களுள்ளன. 81 வெற்றேடுகளும் இருக்கின்றன. அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

தாமரைத்தா து நெல்லியின்பருப்பு சந்தனங் கற்கடகசிங்கி
தாமரை வளைய மமுக்கரா வேருஞ் சாதிக்காய் குங்கிலியமுமே
ஏமகற் பூரம் நீர்வள்ளிக் கிழங்கு மதிமது ரந்திரி கடுகு
தீமை யில்லாதநெற்பொரியுநெருஞ் சிக்காயு நாகப்பூத்தானே 1

பற்பமாந் தங்க பற்பத்தை நல்ல பரணியில் வைத்துலகத் தோர்க்
கற்பமாம் ரோகம் பலித்திடும் ரோக பலாபலனறிந்தனுபானம்
உற்பன மறிந்து கொடுத்திட வியாதி யோடிடுஞ் சிவகிரு பையினால்
பொற்புள தஞ்சை நகர்ச்சர பேந்திரன் புனிதமா யுரைத்த திம்முறையே 27

End

இன்னமுங்கேளிக் கொழுந்ததைத் தலையிலேயணி வேந்தர்கள் வசியம்
நன்னயமாயிவ் வேரையுந்தானே நாவினிலடக்கியே நடக்க
உன்னிதமாக நடைகள் தோன்றுது வுலகினிற் கீர்த்திகள் பெற்ற
மன்னவன் றஞ்சைச் சரபபூ பாலன் வசுமதிக்காயுணர்ந் ததுவே 77

---

78. No. 48 சரபேந்திரர் கரப்பான் முதலிய ரோகங்களுக்கு வைத்திய முறை.

ஏடுகள் 113; Lines 3—6 in a Page.

இதில், மண்டைக் கரப்பான், புடைக்கரப்பான், முழங் காற் கரப்பான், சிலந்தி கரப்பான், சடைக்கிரந்தி, கழலை, கரப் பான், விடக் கரப்பான், ஊது கரப்பான், பயித்தியக் கரப்பான், செங்கரப்பான், பெருங்கரப்பான், ஓடுகரப்பான், கர்ப்பிணி கரப்பான், விடபாகவீக்கம், அரையாப்பு, துடைவாழை, விப்புருதி, பனசை, படர்தாமரை, எழுநாயறு, பவுத்திரம்,

ஓட்டுக் கோழை, விப்புருதி, ஓடுவிப்புருதி, கண்டமாலை, முதலிய நோய்களுக்குப் பலவகையான மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனை இயற்றியவர் **வேலாயுத உபாத்தியாயர்.** இதிலுள்ள செய்யுட்டொகை 210. இதில் 71 வெற்றேடுகளும் கோர்க்கப்பட்டுள்ளன. அச்சிடப்பட்டுள்ளது *

Beginning:

குருந்தாடா தோடையோ டிருநொச்சி புன்கு
கொடிவேலி மிளகரணை நிலக்கடம்பு
பரிந்தசிறுக் கீரையுத்தா மணியெருக்குப்
பதினொருவே ருங்கருஞ்சீ ரகஞ்சிறுத்த
அரத்தையுங்கார் போகரிசி யிவைநேர் கூட்டி
யரைத்துக்கோ சலம்விட்டெண் ணெயிலெரித்துச்
சிரத்தினிற்பூ சிடமண்டைக் கரப்பான் றீருந்
திவ்யமா மிம்முறையைச் செய்து பாரே. 1

பசுவின் பாலிலேநல்லதா யம்மான்
பச்சரிசி சம்பீரபழத்தள
விசையதாக வரைத்துக் கரைத்ததை
மேன்மையாக நாலஞ்சு நாட் கொண்டிடு
தசையிலேயெழு விப்புரு தியும்போய்ச்
சடமு மெத்தக் குணமதாந் தஞ்சையி
லுசிதவாணர் தரமறி யன்புள்ள
உத்தமன்சர **பேந்திர** னருளிதே. 114

எருமை மூத்திரத்திற் பழங்கிட்டத்தை
யேயரைத்துத் தடவித் தானுமே
உரமதாங் கண்டமாலை வீக்கங்களு
முற்ற மற்ற சரீரத்தின் வீக்கமுங்
கரைந்து வூரைவிட் டோடுமேசங்கரன்
கருணையாற்சோழ மண்டலந் தன்னில்வாழ்
புரவலன் சரபோசிராசேந்திரன்
புனிதமாயுணர்ந் தாய்ந்த முறையிதே. 187

* சரபேந்திர வைத்ய முறைகள் (விரண ரோக, கரப்பான் ரோக சிகிச்சை) விலை ரூ. 6—25

End

மண்டலம் புகழ் மால் சரபேந்திரன்
வெழுத்திய பிரமாணிக்கையின்படி
கண்டமாலை பனசை பவுத்திரம்
கரப்பானு மரையாப்புடன் புண்புரை
யண்டியபல நோய்களுக்கும் பல
அவுடமிரு நூறுடன் பத்துமாய்
தண்டமிழக்கவியாலும் வேலாயுதத்
தமிழ்பாவல *னுரை நூலிது தானுமே.* *210*

---

79. No. 49. சரபேந்திரர் வைத்திய முறைகள்

ஏடுகள் 187; சிதிலமாயிருக்கிறது **Lines 5 in a Page.**

இதில் பழைய சுரங்கள் முதல் எல்லாவிதமான சுரங்கள், சுரத்தின் மேற்காணும் வீக்கங்கள், சன்னிகள், க்ஷயம், சுவாச காசம், காமாலை, பாண்டு முதலிய ரோகங்களுக்கும் மாத்திரை சூரணம், முதலிய பலவகைப்பட்ட மருந்துகளும் லேகியங் களும் தைலங்களும் சொல்லப் பட்டுள்ளன இதில் 563 செய்யுட்கள் இருக்கின்றன. இதனை இயற்றியவர் **வேலாயுத உபாத்தியாயர்.** *இது அசசிடப்பட்டுளளது.*

Beginning:

நன்னயவெண் ணொச்சிகரு நொச்சி யல்லால்
நண்ணுகழற் கொடியோடுசா ரணையிந் நான்கும்
சொன்னபடி யிலைச்சாற்றில் வகையொன்றுக்கே
சுகமாய்த்தா னுரிசேர்த்தா மணக்கி னெண்ணெய்
இன்னமந்தக் கோழிமுட்டை யிரண்டிலுள்ளா
யிலங்கும் வெள்ளைக் கருவும்விட்டுக் கொண்டேசுக்கு
பின்னதுகேள் காலரைக்காற் பலமே கூட்டிப்
பிசகாம லெரித்துநன்று யெடுத்திடாயே. *2*

எடுத்ததிலோர் காசிடைக ளுள்ளே கொண்டே
யெழிலுடம்பிற் றடவிவந்தா லகலாமற்றுன்
அடுத்த பழஞ் சுரங்களெல்லாம் வாசி யாமே
அந்தணர்க்கும் பெரியோர்க்கு மெளியோர்க்கெல்லாம்
உடுத்த நல்ல வத்திரபூஷணமுஞ் செம்பொன்
னும்பளசம் பளமுடனெந் நாளு மன்னன்
கொடுத்துதவு தருமதுரை தஞ்சை யாளுங்
குபேரசர பேந்திரமால் கூறும் வாறே. 2

End

பொரிக்கார மொருகழஞ்சு போரித்திளநீ
ரிற் கொடுப்பாய் பொருந்துநல்வெள்
ளரிக்காய்குட் பொரிக்கார மதனை வைத்தே
யுமிக்காந்த லதிலே நாட்டி
தெரிக்காம லேயெடுத்துப் பிழிந்து கொடு
நீரடைப்புத் தீரும் நன்றாய்
பரிக்காம னகுலனெங்கள் சரபேந்திர
பூபதி சொல் பண்பு தானே. 563

---

80 No. 50 சரபேந்திரர் வைத்திய முறைகள்

* (வாதரோக சிகித்ஸை)

ஏடுகள் 136; சிதிலமாயிருக்கிறது Lines 5 in a Page.

இதில் வாய்வு ரோகங்கள், பெரும்பாடு, பிரமியம், எலும்புருக்கி, காமாலை, கல்லடைப்பு, மகோதரம், சோகை, குமர கண்டன் வலிப்பு, கவுசை முதலிய நோய்களுக்கு மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. இதனை இயற்றியவர் **கொட்டையூர் சிவக்கொழுந்து பண்டாரம்.** இவர் **கொட்டையூர் புராணம், திருவிடைமருதூர்ப் புராணம்,** கோடீச்சரக்கோவை, **பிரகதீச்வரர் உலா, குறவஞ்சி** முதலியவைகளையும் இயற்றியவர். செய்யுட்டொகை 403. ஏட்டு இலக்கம் 188 முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

---

* இது இந்நூல் நிலைய வெளியீடு. விலை ரூ 3—50.

Beginning:

செங்கழுநீர் கோட்டமதிமதுரநெல்லி முள்ளிகருஞ் சீரகம்பின்
கொங்கடர்ந்த சீரகந்திப்பிலிமூலம் வாய்விளங்கங் குணமா
மஞ்சள்
அங்கந்த சிறுதேக்கு மரமஞ்சள் வெட்பாலை யரிசி யப்பால்
பங்கமிற்றிப்பிலிசெவிய மிந்துப்பு வசம்பு மின்னும்
பகருவேனே.
சொன்னவுரை தப்பாம லிவ்வகையெல் லாமிடித்துச் சூரணஞ்
செய்
தன்னதனை யிளவெந்நீர் தன்னதனிற் பொதிப்பாய நல்லா
விட்டால்
நன்னயமா யினித்திருக்குஞ் செந்தேனிலனுபானம் நன்று
யீவாய்
இன்னவகைப் படிநடந்தால் பொல்லாத வாயுவெல்லா மினி
வாராதே 3

உண்டபேர் தங்கள் வயிற்றுப் பொருமு
லக்கினியி னொடுக்கம் பொல்லாத்
துண்டரிக்க வாயுமிக மெய்மெலிவு
முதரவலி தோன்றிரைச்சல்
பண்டடர வாய்வின்னடக்கந் தீர்ந்துவிடு
மிம்முறை கேள் பண்பாய்ச் சோழ
மண்டலத்துக் கதிபதியாஞ் சரபேந்திர
பூபதிசொல் மார்க்கந் தானே. 18

End:

சொன்னபடி சுட்டலம்பி யவ்விதை யோர்
பலமெடுத்துச் சுகமாயந்த
நன்னயமாங் கெந்தகம் விராகனெடை
மூன்று வைத்து நயந்தரைத்தே
அன்ன வெண்ணெயிற் கலந்து தேகமதி
லேபூசி யம்மோ ருண்டால்
வன்னலுக்கஞ் செய்யானைச் சொறிகளெல்லாந்
தப்பாமல் வாசிவாமே. 403

81. No. 51. சரபேந்திரர் சன்னிரோக சிகிட்சைகள்

ஏடுகள்; 202; Lines 4—6 in a Page.

இதில் சன்னி வகைகளும் அவைகளுக்குப் பலவகையான மருந்து முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனை இயற்றியவர் **கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.** செய்யுட்டொகை *360.* அச்சிலிருக்கிறது.

Beginning :

துருசு பெருங்காய மிளகொடுநேர்வாளப் பருப்புச் சுக்கிவ்வைந்து
மருமையதாய் வகையினுக்கோர் வராகனிடை வெற்றிலைச் சாற்றரைத்துச்சாம
வரையுருட்டியுலர்த்திவைத்திது கருடாஞ்சன மாகுமாதர் பாலி
னிருவிழிக்கு மெள்ளளவு போடுசன்னி பிசாசு விட மெவையுந்தீரும். 1

பின்னமிலா துறுசரளதேவதா ர்ங்களிவை பேசிரண்டா
யுன்னுருகா செடையிடித்தே யிரண்டுபடி தண்ணீர்விட் டுழக்காய்க்காய்ச்சி
முன்னருந்தக் கொடுத்திட்டாற் சித்தவிப் பிரமசன்னி முற்றுந்தீரும்
இன்னமுறை தஞ்சைவளர் சரபோசி மன்னர் மகிழ்ந் திசைத்ததாமே 161

திரிகடுகு வசம்புள்ளி நேர்வாளம் மகிழ்வித்து செப்புகின்ற
வுரியதலைப் பிண்ணுக்குச் சாரணைவேர் சம்பீரத்துநிற் பழச்சாற்
றொருதினந்தா னூறவைத்தே யரைத்துருட்டி விழியினிலோ ருண்டையீந்தா
லறிய வொருத்தலை நோவு கபால சன்னிமுகரோகம லஃகதீரும். 20

கைகால் செவியுச்சி கண்டமுக் குக்குளிர்ந்து
மெய்தான் சுழன்று விழிசிவந்து—பையவே
வாயுமே னேக்கி வயிறுதனிற் சூலைவரில்
ஆயுநிலையில்லென் றறி. 352

End

உள்ளிருப்பருப்பிலரைப்படி தானுரவே யரைத்துச்
சேலையினில்
மெள்ளசசுருட்டி வேம்பினெய் விட்டே பொறியும்
பெருஞ்சுடரிற்
றெள்ளப்பிடித்துப் பிழிதயிலஞ் சிரசுபிடரி தனிற் றடவி
யுள்ளுக்கீந்தாற் றுடியிடையா யுடனே தீரும் புறவீச்சு. 360

Colophon:

சர்வசித்துஸ்ரீ மார்கழிமீ 14உ வெள்ளேடு புத்தகம் க. க்கு ஏடு 330. ஷெ தேதியில் சிவக்கொழுந்து பண்டாரம் வசம் ஏடு 100 நீக்கி ஏடு 230.

---

82. No. 52. சரபேந்திரர் வைத்திய முறை
(கர்ப்பிணி, பாலரோக சிகிச்சை முறைகள்)

ஏடுகள் 270; Lines 4 in a Page.

இதில் கர்ப்பிணிகளுக்குண்டாகும் நோய்களும் பாலர் களுக்குண்டாகும் வியாதிகளும் அவைகளுக்குப் பலவகைப் பட்ட மருந்துகளும் சொல்லப்பட்டுள்ளன. இதனை இயற்றி யவர் திருவேங்கடத்தா பிள்ளை என்பவர். செய்யுட்கள் 454 இருக்கின்றன. அச்சிடப்பட்டுள்ளது.*

---

*இதுவும் இந்நூல் நிலய வெளியீடு. விலை ரூ. 3.

Beginning

பாலேவே ரும்வேலிப் பருத்திவேரு மிரண்டும்ப சுவின்பாலிற்
சாலவரைத் துண்டி டினுஞ் சண்டையது சமூலந்தான்
றண்ணீராலே
சிலமுட னேயரைத்துத் தேன்கலந்து சேயிழைக்குத் தினச்
செய்தக்காற்
பாலகன்று னேபிறக்கும் பைந்தொடிக்கா ரோக்கியமாம்
பகருவீரே, 1

வேலிப்பருத்தியிலை வசம்போடுள்ளி விரும்பு முலைப்பால்
விட்டரைத்துக்
கோலிமாது கீழ்வயிறு கொப்பூழ்மட்டுங் கொண்டிடவே
சாலமதித்த பாலகனுஞ் சதிராயுதயமா மென்னும்
ஞாலந்தனிலே யுயர்சோழ நாடன் சரபேந் திரன்முறையே. 35

நன்றாக விவையனைத்தும் நறுக்கியுள்ளி வசம்புடனே நல்
லெள்ளெண்ணெய்
குன்றாத விளக்கெண்ணெய் வேப்பெண்ணெ யுங்குழப்பிக்
கூட்டிமைந்தன்
தன்றலைமார் பகமட்டுந் தடவிவீக்க முமிறங்குந்தலையும்
வார்க்கத்
துன்றுகரப் பான்வாதந் தொலையுமெனச் சரபேந்திரர்
சொன்னவாறே. 278

வெந்தயத்தை யேவறுத்துக் கஷாயம்வைத்துக் கொடுத்
திடவும் விளைந்து மேன்மேல்
வந்தவயிற் றுக்கழிச்சல் மாறிவிடு மென்றுசர பேந்திரவள்ளல்
விந்தைவிந்தை யாயுரைத்த மெய்முறையி னிம்முறையு மிக
நன்றென்றே
சிந்தையினி லெண்ணியிது சித்தர்முறை யெனநல்லோர்
செப்புவாரே. 401

End

கொண்டிந்தச் சாறுவார்த் தரைத்திதனைக் கொழுங்கடலை
யளவதாக
வுண்டைபண்ணி முலைப்பாலி லுரைத்தூட்ட வயிறுகடுப்
புடன்கணம்போம்.

கொண்டசுரம் பெரியவர்க்குங் குணமாகு மிவையெல்லாங்
குறித்துத்தாங்கை
கண்டதுவே சரபேந்திரர் கருணையினற் காசினியோர்க்
கருளினரே. 454

83. No. 53. சரபேந்திரர் வைத்தியம்.
(வாதரோக சிகிச்சை முறைகள்)

ஏடுகள் 190; Lines 4 in a Page.

இதில், பலவகைப்பட்ட வாத ரோகங்களுக்குத் தைலம் மாத்திரை, எண்ணெய், சூரணம்முதலிய மருந்துகள் சொல்லப் பட்டிருக்கின்றன. இதனை இயற்றியவர் திருவேங்கடத்தா பிள்ளை, செய்யுட்டொகை 288. அச்சிடப்பட்டுள்ளது* சிறிது சிதிலமாயிருப்பதுடன் 94-ம் ஏடு மிகவும் சிதைந்துள்ளது.

Beginning:

நத்தைச்சூரி முற்றினவேர் நலமாய் மூன்று பலத்துடனே
யொத்த வசம்பு பலமுக்காலுயர்ந்த பூண்டு காற்பலமே
யித்தையம்மி தனிலிட்டே யிதமாய் நறுக்கியேரண்டம்
சுத்த வெண்ணெய் படியதனிற் றுலங்கத்தூவிப் பதத்தெரியே.
1

எரித்த வெண்ணெய் யுண்ணக்கி லீந்து மேலும் பூசிடவே
வருத்தமான சில்விடமும் வண்டுகடியும் புடையனுடன்
பெருத்தவாத கரப்பானும் பெரியசூலை சுருட்டைகணாங்
தரித்த மாந்தம் போர் மாந்தம் தணியும் வாத மெண்ப
துடன். 2

குறையாமல் மருந்தெல்லா முன்கஷாயங்
கொண்டரைத்திட் டேயெரித்து வடித்த பின்பு

*இதுவும் இந்நூல் நிலய வெளியீடு. விலை ரூ. 3—50.

நிறையவே யுடம்பெல்லாம் பூசி மூழ்க
நியமமாய் நாசியினிற் செவியிற்குத்த
மறைதருமே யெண்பத்து நான்கென்றோதும்
வாதமெல்லா மின்னதுதான் றிண்ணமாகும்
மூறைபுரியுஞ் சரபோசி மன்னர் சொன்ன
முறையாகு மிந்த முறை தெளிவாய்ச் செய்யே. 59

End:

சேர்த்ததனி லீரிருசேர் வெல்ல மிட்டுத்
திறமாகப் பாகாக்கிச் செவியஞ் சுக்குக்
கூர்த்திடுதிப் பிலிமூலஞ் சிறுநாகப்பூ
கொடிவேலி சடாமாஞ்சி லேலமிந்துப்
பார்த்திடுதிப் பிலியிலவங்கப் பட்டையுடனே
யாளவிலங் கப்பத்திரி வகைக்குப் பலந்தூள்
பார்த்திடுநல் லுலோக சிந்தூர மோர் பலத்தான்
பரிவுறுமப் பாகதனிற் பண்பாய்க் கூட்டே. 88

---

84. No. 54. (a) சரபேந்திரர் வைத்திய முறைகள்

ஏடுகள் 253; Lines 4 in a Page.

இதில் குன்மரோகங்களுக்குப் பலவகையான மருந்துகள் கூறப்பட்டுள்ளன. இது 46—ம் நம்பர் போன்றது. ஆனால செய்யுட்கள் 292 இருக்கின்றன. மிகவுஞ் சிதைந்திருக்கிறது. இது கொட்டையூர்ப் பண்டாரம் செய்ததென்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த நம்பரில் வேலாயுத உபாத்தியாயர் செய்ததாக இருக்கிறது. இதிலும் அதிலும் இருக்கும் செய்யுள் ஒன்ருகவே இருத்தலின் வேலாயுத உபாத்தியாயரே இதனைச் செய்தவரென்று கொள்வதே தக்கது.

---

85 (b) திரட்டுவாகடம் ஐம்பது

Lines 4 in a Page.

இதில் வாதமுதலிய ரோகங்களுக்கு மருந்து சொல்லப் பட்டிருக்கிறது. செய்தவர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்பட் டுள்ளது *

Beginning:

வாதந்தா னெண்பாதாக வருகின்ற பக்கவாதஞ்
சீதமே நடுக்குவாதஞ் சிறந்திடு முடக்குவாதஞ்
சூதமெய் யசந்த வாதந் தோன்றிய முகத்தில் வாதம்
பேதமாம் வாதந்தீரப் பெருத்திடு மருந்து கேளே. 1

கலந்திடு ரெத்த வாந்தி கனரெத்த ரோகம் நெஞ்சில்
புலந்திடு ரெத்த பித்தம் பொருந்திய சயகாசங்கள்
மலந்திடு பெரும்பாட்டோடு வளரெலும் புருக்கிச்சூலை
நலந்திகழ் புண்ணுந்தீர நாரியேமருந்து கேளே. 33

End

போமிது பொன்னுங்காணி புகழ்சிறு கீரைமுத்தும்
ஓமிது சீந்தில் நிம்ப முயருநாரத்தை கோட்டம்
ஆமிது மதுரமேல மடருஞ்சண் பகப்பூ வங்கம்
நாமிது சொன்னோ மெண்ணெய் நயந்தெரி முழுகப்
போமே. 50

86. (c) சரபேந்திரர் வைத்தியம்.

Lines 4 in a Page.

இதில் கர்ப்பிணிக்கும் குழந்தைகளுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளன, இது 25-ம் நம்பர் போன்றது; ஆனல் அபூர்த்தி.

*திருச்சி வைத்திய சந்திரிகை வெளியீடு. விலை ரு. 0—50.

87. No. 55, சரபேந்திரர் விஷவைத்தியம்

(விஷ ரோக சிகித்ஸை முறைகள்)

ஏடுகள்: 392; Lines 4—5 in a Page.

இதில், விரியன், நல்லபாம்பு, கருவழலை, சிலந்தி, பூரான், தேள், செவ்வட்டை, செய்யான், குரங்கு, கீரி, மூஞ்சுறு, சாரை பெருச்சாளி, புடையன், மண்டலி, கொம்பேறிமூக்கன், எலிகள், நாய், குரட்டை, செங்கண்ணன், உதிரமண்டலி, பேய்நாய் அரணை முதலியவற்றின் கடிகளுக்குப்பலவகையான மருந்துகளும் விஷச்சரக்குகளுக்கு முறிவும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனை இயற்றியவர் **வேலாயுத உபாத்தியாயர்.** செய்யுட்டொகை 525. *அச்சிடப்பட்டுள்ளது.

Beginning

கங்கைதிங்கள் கரந்தைதும்பை சூடுமெங்கள்
கைலாச நாதருட பாதம் போற்றி
துங்கன்சர போசிமக ராசன் முனுஞ்
சொல்லுமனு மதிப்படிக்கு விடங்கட் கெல்லா
மிங்கிதமாய் மாத்திரை யொற்றடங் குழம்பு
மேலான நசியமஞ் சனங்கடாய
..........மாஞ் செய்யுடனிற் பாட வெங்கள்
மதமுகனுங் கலைவாணி பதங்காப் பாமே. 1

புத்திர சீவியின் விதையைத் தண்ணீர் விட்டுப்
பூசிதமா யரைத்துவிடங் கடித்த வாயிற்
பத்திரமாய் லேபஞ்செய்தாலுங் கண்ணிற்
பழுதறவே யஞ்சனமிட் டாலுமூக்கில்
நத்திநசி யங்கள்செய் திடினு மீளும்
நலமிகுந்த தஞ்சைதுள சேந்திர பூபன்
புத்திரன்சர போசிரா சாதி ராசன்
புத்தியினு லுணர்ந்ததிந்த மூலியாமே. 8

* இதுவும் இந்நூல் நிலய வெளியீடாகும். விலை ரூ. 3—50

End

சாலிய வாகன மாயிரத்தெ (மூநா) ற்றன்பது கலியுக வாப்த
நாலு மாயிரத்தி யொன்பது நூறும் நவிலிரு பத்தி யொன்
பதுவும்
மேலினுஞ் சர்வசித்தியிற் சித்திரை விளங்கிய முப்பதாந்
தேதி
வேலைசூழ் புவியிலுயர்ந்திடுந் தஞ்சை விபுசர பேந்திரனருளே. 525
அருளினு லய்யாக் கண்வரோ தனயனு மன்புடனுரைத்திடு
படிக்கு
தரணியின் விடங்களியாவுமே மீளத்தக்கதாய் முக்கியவா
ரமிகுந்திடு காரைக் குறிச்சியினில் வளரும்வே லாயுதக்
கவிஞன்
னுரமிகு மைஞ்னூற்றய்யஞ்சு கவியா யுரைத்திடு விடமகல்
நூலே.

---

88. No. 56- சரபேந்திரர் வைத்தியம்

(உளமாந்தை, க்ஷயரோக சிகித்சை)

ஏடுகள் 251; Lines 4 in a Page.

இதில் மூலம், உளமாந்தை, கயரோகம், க்ஷயகாசம், இருமல், இளைப்பு, குட்டம் முதலிய நோய்களுக்குப் பலவகையான மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. இவைகளை யல்லாமல் தாதுவிர்த்தி லேகியமும் மருந்திடு தீரமருந்துகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. செய்தவர் கொட்டையூர் சிவக்கொழுந்து பண்டாரம் என்று எழுதப்பட்டுள்ளது. செய்யுட்டொகை 362. *அச்சிடப்பட்டுள்ளது.

---

* இதுவும் இந்நூல் நிலயத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.
விலை ரூ 2—50

Beginning

கூறுகின்ற வெண்காயம் நாலுபடி யெடுத்துக்
கூறுகவே யரிந்துகொண்டு நீர்சுண்ட வறுத்து
தேறிடுநற் பசுவின்நெய் விட்டுப்பின்னும்
சிவக்கவறுத் ததன்பின்பு சீரிபல மூன்று
வீறுதரு சுக்குத்திப் பிலிமிளகு மூன்றின்
மெல்லியகூ ரணமொவ்வோர் பலமெல்லாங் கூட்டி
மாறிலா வெருகடியின் பிரமாணங் கொள்ள
மாறிப்போ முயர்மூல வாயுத் தானே. 1

நாக மல்லிகைவேர் நறுஞ்சா ரணைவேர்பின்
வேக மருவுகொடி வேலிவேர்—வாகாந்
தவசி முருங்கைவேர் சம்பீரச் சாற்றி
விவையரைத்து மூலத் திடு. 51

ஆக்கிடந்த வுண்டையி லோருண்டை மோரில்
அறவுரைத்து மூன்றுநா ளாறு போது
நீக்கமின்றிக் குடித்திடில் மூலக்கிராணி
நீடுபவுத்திர ரோகம் பாண்டு ரோகம்
தீர்க்கமுறு சோமரோ கத்திெனாடு
திகழ் கர்ப்ப ரோகமுத லெவையுந் தீரும்
பார்க்கண்வளர் நகர்க்கெல்லா முயர்ந்த தஞ்சைப்
பதிமருவு சரபோசி மன்னர் முறையிதுவே.

End

சீருறு வெள்ளறுகு சங்கங்குப்பிவேர் நிலவேம்பு
காரமுறு சங்கம்வேர் சமன்கூட்டிப் பொடித்து வெரு
கடிக்கு நேராய்
நேருறுநற் சிறுநீரிற் காலையிற்கொள் புளிகைப்பு நீக்கு
நெய்பால்
சேருடலின் கடுப்பு மருந்திடு வெகுமூத்திர நோய்
திருமன்றே.. 362

89. No. 57. சரபேந்திரர் வைத்தியம்.

(சிரோ ரோக சிகித்ஸை முறைகள்).

ஏடுகள் 303; Lines 4—6 in a Page.

இதில் சிரரோகம், செவிரோகம், பீனிசம், பல்வலி, நாவின் ரோகம், முகரோகம் முதலிய ரோகங்களுக் கெல்லாம் பல வகையான மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. செய்யுட் டொகை 401. இயற்றியவர் வேலாயுத உபாத்தியாயர். **அச்சிடப்பட்டுள்ளது. இடையிடையே சிதைந்திருக்கிறது.*

Beginning:

திங்கள் கதிருலவு தஞ்சை நகரையாளுந்
தீரன் துளசேந்திர மகராசனீன்ற
துங்கன் சரபோசி ராசாதி ராசன்
சுகரகத்தியர் போகர் சட்டைநாதர் சூதர்
கொங்கணர் பிருங்கர் கருவூர ரெல்லோரும்
கூறும் வைத்திய நூலை யுணர்ந்தாராய்ந்து
பங்கமிலா மஹுலகி னுக்காய்ச் செய்யுள்
பாடமத முகவனிரு பாதங்காப்பாம். 1

மதமுகவ நம்பியறு முகவன் கந்தன்
மலர்ப்பாதந் தனைப்போற்றி வையகத்தோர்க்
கிதமுறவென் ருரோக்கிய சாலையொன்று
ஏற்படுத்தி முன்முனிவர் சித்தர் யோகர்
பதமுறவே சொல்லியநூ றன்னை யெல்லாம்
பார்த்துணர்ந்து நாள்தோறும் சரபபூபன்
முதல்வனிட்ச யித்தபடி சிரோரோகந்தான்
மொழியவயன் தேவிகலை வாணிகாப்பாம்.

14

---

*இதுவும் இந்நூல் நிலய வெளியீடுகளில் ஒன்ருகும். விலை ரூ. *3—0.*

End

பெருந்தலை நோய்க் கொருமருந்து சொல்லக் கேளு
பேசாம லொருமனதாயிருந்து கொண்டு
எருக்கம் வேரும்கடுகு நேகவுந்தா
னே கல்வத் திட்டரைத்துத் தலையிலப்ப
உரத்ததலை வலிதிரு மருந்த வத்தோ
ருரைத்தமுறை யதைத்தஞ்சை நகரையாளுந்
துரந்தரனாய் நீதிசெலுத் துங்கெம்பீரத்
துரைகள்சிகா மணியுணர்ந்த பத்திதாமே. 400

பொன்னுலகோர் முனிவருல குக்காய் முந்நாள்
போதித்த வைத்தியத்தை யுணர்ந்து ணர்ந்து
தென்னளகைத் துளசேந்திர னீன்ற பாலன்
தீரன்சர போசிமகா ராசன்றானும்
சொன்னவுரை படிக்குசிரோ ரோகம் நானூற்
றொருகவியுஞ் சிறப்பித்து வுசிதமாகப்
பன்னுதமி ழாறகாரைக் குறிச்சிவாழும்
பாவலன்வே லாயுதனும் பகரு நூலே. 401
சிரோ ரோக முற்றும்

குறிப்பு:

இதன் கடைசியில் அரையாப்புக்கு மருந்தெழுதிய ஏடொன்று கோர்க்கப்பட்டுள்ளது.

---

90 No. 58. சரபேந்திரர் வைத்தியம்
(விரோசனமுறையும், அதிஸார சிகித்ஸையும்.)

ஏடுகள்: 478; Lines 4 – 5 in a Page

இதில் விரோசனத்துக்கு மருந்தும் கிராணி, அதிசாரம், கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, வயிற்றிரைச்சல் முதலிய உதர வியாதிகளுக்குப் பலவகை மருந்துகளும் சொல்லப்பட்டிருக்

கின்றன. நாக்குப்பூச்சி கிரிப்பூச்சிக்கு மருந்தும் சொல்லப்பட்டுள்ளன. இயற்றியவர் வேலாயுத உபாத்தியாயர் செய்யுட்டொகை 705. *அச்சிடப்பட்டிருக்கிறது. சிதிலம் சிறிதிருக்கிறது.

Beginning

கங்கையைச் சிரசி லணிந்திடுங் கைலைக் கடவுளர் பாதமே
போற்றும்
மங்களத்தஞ்சை விபுசர பேந்திரன் மாமுனிவர்கள் மொழிநூலை
யுங்கவ னித்து விரேசனங் கிராணி யுடன்கழிச் சல்கடுப்பி
ரைச்சல்
சங்கையிலாவதி சாரமதகலச் சாற்றவைங் கரனுங்காப்பாமே.

ஆமணக் கெண்ணெயிற் கடுக்காய்ப் பொடியொடு கற்றாழை
யின்சாற துவுங் கூட்டி
நேமமுறக் கரத்தினுங் காலினுந்தடவி மத்திக்க நெடுநாணின்ற
வாமமுதலாய் மலக்கட்டும் போம் சவுக்கிய முண்டாகுமென்று
கோமனுஞ் சரபேந்திரன் குவலயத்தோர்க் கிம்முறையைக்
கூறினரே
கருவேலம் பிசின்னிலவம் பிசின்கிராம்பு கஞ்சாவினிலை
விளாம் பிசின்சாதிக் கா
யரிதானவசுவாசி யபினேடெட்டும் மவ்வகைக்கோர் மூவரா
கனிடைகூட்டி
உரமான கஞ்சாவினிலைச் சாறுவிட்டு வுற்பனமா மைபோல
வரைத்துக்கொண்டு
ஒருசுண்டைக் காயளவு முண்டை செய்துவுற்றதே னதிற்
கொள்ளக் கிராணிபோமே.

End

சீருஞ் செல்வ மிதந்தஞ்சை மாநகர்ச்
செல்வமால் சரபேந்திர னருளினல்
கூறுகின்ற விரேசன மாதியாய்
குக்கியினில்வந் துற்றவியாதிகள்

---

*இதுவும் இந்நூல் நிலய வெளியீடு விலை. ரூ.

திரவும்நெய் குழம்பு கடாயமாத்
திரைகள்பற்பம் செந்தூரம் பலவகை
பாரதியருள் பெற்றவே லாயுதப்
பாவலன் சொற்றொடர் பிதறியுமே. 705

---

91. No. 59 சரபேந்திரர் வைத்தியம்
(காசரோக சிகித்சை)

ஏடுகள் 162; Lines 4—7 in a Page.

இதில், சூலைகள், காசம், க்ஷயம், இருமல், ஈளை, முதலிய வியாதிகளுக்குப் பலவகையான மருந்துகள் சொல்லப்படுகின்றன. இதனைச்செய்தவர் வேலாயுத உபாத்தியாயர். செய்யுட்டொகை 452. அச்சிடப்பட்டுள்ளது. சிற்சில இடங்களிற் சிதைந்திருக்கின்றது.

Beginning:

வேலைசுற்றும் பூவரைப்பின் புகழாற்றுஞ்
சரபோசி வேந்தர் வேந்தன்
நூலைமுற்று மாய்ந்துதெளி புத்தியினாற்
பற்பலவாம் நோய்களுக்குள்
சூலையுற்ற வகைக்கெல்லாந் தீரு
மருந்தது செய்யச் சொன்னதாலே
வாலைபெற்ற மும்மதன்றாள் வணங்கு
வேலன் கவியால் வரைந்திட்டானே.

பொடுதலை கருநொச்சி கழற்கொடி
கரிசாலை போற் றெருக்கும்
கொடுசிறுத்த செங்கொட்டி மேனியிவை
யிலைவகைதான் கொண்டிடித்தும்

பொடிசெய்து காலையந்தி யொன்பதுநா
ளுட்கொள்ளப் பொல்லாச் சூலை
விடுமுப்புப் புளிதள்ளிப் பத்தியமா
யிருவெந்நீர் மேற்புழுங்கே 58

சுந்தரவெண் காரமதைப் பொரித்துப்பா
சித்தண்ணீர் துரிசெடுத்து
வந்தபழந் தண்ணீரிற் கலக்கி மூன்றே
நாளும்வ கையாய்க் காலை
யுந்திறமாய்க் கொள்ளிருமல் சேற்றுமமு
மேயகன்று மோடுந்தானே
தந்திரமா மருந்திதையுந் தஞ்சைசர
போசி மன்னன் சாற்றும் வாறே. 356

End:

மூல முடன் பருவயிறு சுவாசகாச
மருசு முனைக் கும்பக்க
சூலையுநெஞ் சடைப்பிளைப்பு மகுவைபீலி
கைபொருமற் றுடிகிராணி
சாலவயிற் றினிற்புழுமந் தாக்கினியு
மற்றுவிடுஞ் சகத்தின்மீதே
சிலமிகுந் தைலமிது தஞ்சை விபு
நிர்ணயித்த செய்கைதானே. 452

சூலை முதலிய கசரோகாதிகளுக்கு கவி

முற்றும்.

குறிப்பு;

ஏழு வெற்றேடுகளும் மேகமிருபத்துஒன்றுக்கு மருந்து கூறும் செய்யுள் எழுதிய ஒரு ஏடும் கோர்க்கப்பட்டிருக்கின்றன,

92. No. 60. சரபேந்திரர் வைத்தியம்.

(நீரழிவுரோக சிகித்஡ை)

ஏடுகள்; *311* Lines 4—6 in a Page.

*இதில், நீரிழிவு, பிரமியங்கள், பித்தபாண்டு, சோகை, மேகவாய்வு, இருபத்தொரு மேகங்கள் முதலிய வியாதிக ளுக்குப் பலவகைப்பட்ட மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின் றன. இதனை இயற்றியவர் வேலாயுத உபாத்தியாயர். செய் யுட்டொகை 560. *அச்சிடப்பட்டுள்ளது.*

Beginning

*திருவருளு மாதிசதா சிவனார் பாதம்
   சென்னியில்வைத் துலகின் மனு வுக்காய்முன்னோர்
மருவளருந் தமிழாற்செய் வைத்தியத்தை
   வாய்மைபெறு தஞ்சைதுளை சேந்திரபூபன்
றருபுதல்வன் சரபோசி மகராசேந்திரன்
   தமிழதினு லுரைக்கவென்று நிச்சயித்த
வருளதனு னரர்க்குதவரு மேகரோக
   மதுக்கவிழ்த முரைக்கதும்பி முகனுங்காப்பாமே.*

*ஆவாராதி யடையொன் றோதக்கேள்
   ஆவாரையிலையு மொருபிடி கொணர்ந்து
தாவிவளர் குறுவை யரிசியு முழக்குத்
   தானரைத்து வுப்பில்லா வடையாய்ச் சுட்டு
ஆவலுடன் நல்லெண்ணெய் தோய்த்துச்சந்தி
   யந்தியு முண்டிடநா ளிரண்டு வேளை
தாவியநீ ரிழிவுமறுந் தப்பாமற்றான்
   தஞ்சைவாழ் விபுவுணர்ந்த வடையிதாமே.* 94

---

* இந்நூல் நிலய வெளியீடான இதன் விலை ரு. 4—00.
காலிகோ பைண்டு ரு. 4—50.

உகாவேர்ப்பட்டை விராகனிடை யொன்று
மொண்கடுகு விராகனிடை யொன்றும்
ஆகாதகாரக் கொடிவேலி வேர்ப்பட்டை
யது விராகனிடை யொன்றுங் கூட்டியே
முகாரவிந்த விழியால றிந்திந்த
முச்சரக்கை யரைத் தெடுத்துக் கொண்டு
கசாயஞ்செய் கருப்புட்டியை முன் கொடு
சாப்பிடடவுடனிம்மருந்தைக் கொடே 172

கொடுத்துத் தின்னவு மிப்படி மூன்று நாள்
குணமிகுந்திடும் பத்தியமோ விலை
விடுத்து மெந்தப் பிரமியமுந்தீரு
மேதினிக்கிது கைகண்டதுண்மையே
அடுக்கு மென்ப தடுக்கா துணர்ந்து நன்
னறிவினலே யறிந்தன்ன வத்திரம்
கொடுக்கு மிங்கித சங்கீத சாகித்திய
குணம்வளர்சர பேந்திரன் முறையிதே. 173

End

கலியுக நாலாயிரந் தொளாயிரமுங்
கணக்குடனிருபத்து எட்டும்
நல மிகுஞ்சாலிவாகனந்தானும்
நவிலு மாயிரத் தெழுநூறும்
பலனுறு நாற்பத் தொன்பதின் மேலிற்
பற்றிய சர்வசித் ததனில்
வலுவுன மகர மாத முப்பதனில்
வண்மை தென்னளகையிற்ருனே. 558

தென்னளகைச் செங்கோல் மனுநீதி
செலுத்தியே வள்ளலி லுயர்ந்த
மன்னர்கோன் சரபேந்திரன்
பூமி மனுக் குபகாரம தாக
வுன்னிய மேக வியாதிகட் கெல்லா
முயர் பற்ப சூரண லேகியம்
வன்னமதாஞ் செந்தூரமுங் கிருதம்
வளமுள நெய் வடகமுமே. 559

வடகமு மெண்ணெய் பலவிதமான
மருந்துகள் நோய்கள் திருதற்கு
மடவுள செய்யு ளைந்து நூற்றின்மே
லறுபது கவியதா யுரைத்த
வடிவுள வாணி யருளது பெற்ற
வாணருக் கேவலும் புரிவேன்
திடமுள காரைக் குறிச்சி வேலப்ப
செல்வ பாவல னுரை நூலே. 560

93. No. 61 சரபேந்திரர் விரணரோக வைத்தியம் (விரணரோக, கரப்பான் ரோக சிகித்ஸை)

ஏடுகள் 221; அபூர்த்தி Lines 4 in a Page.

இதில் பற்பல விரணங்களுக்கு எண்ணெய், நெய், களிம்பு, லேகியம் புகை, குழம்பு கிருதம், காரம், தைலம் சூரணம் முதலிய மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் 315 செய்யுட்களிருக்கின்றன. இது சரபேந்திரர் உத்திரவிற்கிணங் வேலாயுத உபாத்தியாயரால் *அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

விரணங்களுக்குப்

பாடாண வெண்ணெய்.

சலாசத்து மரைப்பலம் பாடான மொருபலமிஞ் சம்பீரநீர்
உலாவரைதுற்ற மொருதுட்டிடையை நேகவரைத்துரை சாக்கி
னிலாங்கவசம் பொதிந்து மிரண்டு மண்சேலை செய்து மிதை மணற்குட்
கலாவிவை மேலவாளி நெருப்பிட்டு மண்கருக்கக் கண்டெடுத்தே. 1

*இதுவும் இந்நூல் நிலயத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.
விலை ரூ. 6—25

இதுவுமது:

எடுத்தபின் பொடிச்செய்து மொருநாழிமுத்திநெண்ணெ
யிதிலும் போட்டு
அடுத்துரவிப் புடத்தில்வைத்து எடுத்துப்புண்சிலந்தி யழு
புண்ணுக்கும்
படுத்துடையாக்கட்டி வரைபுரைகளுக்கு முதலான பலபுண்
ணுக்குங்
கொடுத்திடுமேற் றடவச் சரபோசி மகராசன் கூறுவாரே. 2

கன்னக்கிரந்தி, காளான், கரப்பானித் தெண்ணெய்.

கருஞ்சீர மொதியந் தோற் பூதகரப்பான் சாத்தி மூலம்
மருதந் தோல் வினவெளுத்தைப்பிசினு நீர்ப்பூலா வளரும்
பட்டை
தருமிவைக டனேநேக வரைத்தெண்ணெய் தனிற்கூட்டித்
தானெரித்துப்
பருங்கன்னக் கிரந்திக்குங் கரப்பானுக் கிடத்தீரும் பண
பாய்த்தானே. 112

End

தண்டு நொந்தால் மருந்து;

அழிஞ்சிவே ரெலுமிச்சம் பழச்சாற்றிவிட்டரைத்து மதைத்
தண்டின்மேல்
வழிபூசத் தீர்ந்துவிடு வெள்ளலரி மாதளையிவ் வகை சமூலங்
கழிநறுக் குலர்த்தியே சமனுக் கோர்பானையிட்டுக் காணப்பூமி
குழித்தைலம் வாங்கி யரைப்பணவெடையுண் தண்டிவிடக்
குணமதாமே. 315

---

94 No. 62 சரபேந்திரர் வைத்தியம்
(பாண்டு, காமாலை சிகித்சை)

ஏடுகள் *58;* Lines 4 in a Page.

இதில், பாண்டு ரோகத்துக்குப் பலவகையான மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. இயற்றியவர் வேங்கடாசலம் பிள்ளை யென்றெழுதப்பட்டிருக்கிறது. செய்யுட்டொகை *101.* *அச்சிடப்பட்டுள்ளது.

---

* இதுவுப இந்நூல் நிலய வெளியீடு. விலை ரூ. *2—50.*

Bginning :

மஞ்சு சிவனிடம்வாழ் மஞ்சுகுழ லாளீன்ற
கொஞ்சுகும ரர்க்குமுன்னோன் கூறியநூ—லஞ்சகத்தில்
தஞ்சமென்பார்க்கேயருளுந் தஞ்சை வெள்ளைக்குஞ்சரத்தின்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.

பண்பிலங்கு மாவாரம் பட்டையுஞ்சுக் குங்காய்ச்சி
யுண்பவர்க்குக் கால்கையி னூதலும்போங்—திண்புயத்திற்
ருரணியுந் தஞ்சைச் சரபேந்திர னுரையால்
பாரணியாய்ச் சொன்னேன் பரிந்து.

தேடரிய மிளகு சீரக மிந்துப்பு
திப்பிலியிம் மூன்று மிவை சமனதாகக்
கூடியதற் கோர்பாதி யிரும்பின் றூளைக்
கோமயத்திற காடியிலுஞ் சுத்தி செய்து
கோடிகுணை மேயுறுநற் கரிப்பான் சாறு
கொண்டிவையெல் லாமரைத்துத் துலாக்காய்நேராய்
நாடுரிய நெய்தனிலுண் பித்தபாண்டு
நவிலுங்கா மாலையுடன் தீரும்பாரே. 50

End

ஒவ்வுவிளக் கெண்ணெய்யொன்றை விட்டொருநா
டோய்ந்துகுளி யுற்றசோகை
யவ்விடபாண்டும் பித்தபாண்டுங்
காமாலையுட னடர்கிராணி
கவ்விய வாயுச் சுரம் போம் தாது
விருத்தியு முண்டாங் கனத்த பாரி
லெவ்வுயிருந் தன்னுயிரென் றெண்ணுசர
பேந்திரமா வியம்பு வாறே. 108

95. No. 63. சரபேந்திரர் வைத்தியம்.
(ஜ்வர ரோக சிகித்ஸை)

ஏடுகள் 57; Lines 4—5 in a Page.

இதில், சுரங்களுக்குப் பலவகையான மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. இதனை இயற்றியவர் சுப்பராயக்கவிராயர் என்றெழுதப் பட்டிருக்கிறது. இதில் செய்யுள் தோறும் சரபேந்திரர் பெயர் காணப்படுகிறது. *அச்சிடப்பட்டுள்ளது.

Beginning:

செந்தமிழின் முதலாய சகலகலை நாயகனுர் சிவனுரீன்ற
மைந்தர்கந் தருக்குமுன்னேர் மேருதனிற் பாரதத்தை
மருப்பினுலே
அந்தமதா யெழுதுகையர் சுரநூலைச் சொல்லுதற்கே
யருள்செய் மூர்த்தி
கந்தமலர்ப் பொன்னிலங்குந் தஞ்சைவெள்ளைப் பிள்ளையார்
காப்புத்தானே,

சுந்தர மிகும்விலா மிச்சவேர் வெட்டிவேர்
சுக்குபற் பாடகமலால்
சுகந்தமுள சந்தனம் கோரைக்கி ழங்கிேனுடு
சொல்லுமிவ் வாறுவகையு
மந்தமுட னேபக்கு வங்களதப்
பாமலே யதையடைச் சாராகவைத்
நப்பால் கொடுத்துவரில் வெப்பாயெழுந்திடு
மந்தபித்தச் சுரமெலாம்

முந்தப்பறந்திடும் சிந்தனைகள் வாராது
முகவசீகரமதாகும்
மூலமென் ருேலமீடு யானையைக்கார்த்திடு
முராரிமகிழுந் தங்கையால்

---

*இதுவும் சரஸ்வதி மகால் நூல் நிலய வெளியீடாகும். விலை ரு. 5-75

சந்தத நிறைந்தபெரு விடையீசர் கிருபையால்
 சற்புருட சிங்கமெனவும்
சகலதே சந்துதிசெய் சரபேந்திரபூபதி
 சங்கநிதி சொன்ன முறையே.

End

பார்கொண்ட கீர்த்தியுயர் தஞ்சைநகர்மேவு
 மதிபதிபோசல குலதிலகன்

* * * *
* * *

சீர்கொண்ட சந்ததி தழைத்திடு முத்தமன்
 சிங்காச ஞதிபதிநற்
செல்வமுந் தன்மநிறை சரபேந்திரபூபதி
 செப்பும்வகை தப்பாமலே
வார்கொண்ட சுரமெலாந் தீர்ந்திடக்
 குளிகைபல வழுத்தினேன் குடிநீருடன்
வண்மைபெறு நூற்றெட்டுச்சிவநாம
 மகிமையால் வாழியிச்சகமுழுதுமே.

---

96. No 64. அசுவ வைத்தியம்.
(மாடு, குதிரை வைத்தியம்.)

ஏடுகள் 45; Lines 5 in a Page

இதில் குதிரைகளின் உற்பத்தியும் அவற்றின் சுழி, நரம்பு, நிறம், சத்தம் முதலியவைகளும் அவைகளுக் குண்டாகும் வியாதிகளும் அவற்றிற்கு மருந்தும் கூறப்பட்டுள்ளன. இருபது செய்யுட்கள் உரையுடன் இருக்கின்றன. நூல் முழுவது மில்லாமையால் செய்யுட்டொகை இத்தனையென்று தெரியவில்லை. இதனை மொழிபெயர்த்துத் தமிழில் இயற்றியவர் **கொற்கைக் கோமான் குணராச சூரியன்.** பிழையதிகமாகக் காணப்படுகின்றன. சிற்சில பாகங்கள் *அச்சிடப்பட்டுள்ளன.

---

*இதுவும் இந்நூல் நிலயத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது விலை. ரூ. 2.

Beginning

வடநூலின் வகைகண்டே யமரைக்கார்த்து
வருதாக பிறப்பின்வகை வளருந் தேந்த
மிடமான சுழிநரம்பு வர்ணஞ் சத்தம்
மெடுத்துவா வியற்யின்ன மேறுதோஷம்
விடமான நோயின் வகை மருந்து தந்த
மேலம்வகையால் வயதும் விளங்கநாமக்
குடமென்முனி பகர்ந்த தமிழாற் சொன்னான்
குணராச சூரியன் பூங்கொற்கைக் கோமான்

எ—து. உற்பத்தி தந்தஞ் சுழி, நரம்புநிறம், சத்தமளவு நன்மைநோய் மருந்து வயது சொன்னபாயிரம்.

குடுமியடியி லுயர்சிரத்தில் குறித்தநாபி செவியடியில்
வடிவுபெறவே தனுவேரில் வகுத்த கழுத்திற் கட்கடையில்
கடிய பரியின் கடைவாயில் கதித்தவுரத்தி லுயர்தோளி
னுடைய சுழிதான் வருமாகில் மன்னருகந்து கொள்வாரே.

என்பது

குடுமியடியில் க. செவியடியில் 2. தனுவேராகிய பறவைச்சுழி ச. கழுத்தில் சுழி க. உரைமணி க. கடைக்கண் களில் சுழி 2. கடைவாயில் 2 புயங்களில்சுழி 2. இவையுடை யன உத்தமமாமசுவம். 20

End

ரெத்தசுமான குதிரைக்கு வாய்ச்சென்று செவியும் வியர்த்து அண்டமும் வியர்த்துத்தண்ணீர் வடித்து நீர்ப்பாரிக்கும். ரெத் தம் போலேயிருக்கும். இதுக்கு மருந்து. முந்திரிகைப்பழம் ஒரு பலம், ஆடாதோடையிலை ஒருபலம், அதிமதுரம் ஒருபலம், சிந்தில்தண்டு ஒருபலம், கடுகுரோசனை(கிணி) ஒருபலம், இது இடித்துத்தேனில் குழைத்துக்கவாளமிடவும். இது போரா தாகில் ஓமம் ஒருபலம் சீனி நாலுபலம் ஒக்கக்கொண்டு நெய் யில் குழைத்திடத்தீரும்.

97. No. 65 அசுவ வைத்தியம்.

ஏடுகள் 90; அபூர்த்தி 7 Lines in a Page

இதில் குதிரைகளுக்கான சுழிகள், லக்ஷணங்கள் வியாதிகள் முதலானவைகளுக்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன. சுத்தமான பிரதி. 22 முதல் 27 வரை ஏடுகள் இல்லை. அச்சிடப்படவில்லை.

Beginning

திகடச்சக்கரச் செம்முகமைந்துளான்
தகடசக்கரத் தாமரை நாயக
ரகடசக்கர வின்மணி யாவையும்
விகடசக்கர மெய்ப்பதம் போறறுவோம்.

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது—பூக்கொண்டு
துப்பாற்றிருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வாற் தமக்கு.

நீர்க்கடுப்புக்குச் செய்யுங் குணம்

உஷ்ண காலத்திலே தூரபாரம் நடந்து அதிலே உஷ்ணமேறி அதிலே வாயுகூடிக் கோபித்துக் கோசத்துவாரத்திலே நீர் துளிதுளியாகப் பறிக்கும். இதற்கு மருந்து திப்பிலி, சுக்கு, ஆயில்யப்பட்டை, பெருங்காயம், வாகைப்பூ, புரசம்பூ, வேர், சாதிக்காய், மருக்காரை வேர், மூங்கில் கண்ணி சீவின தோல், வெள்ளாட்டுக் கோமியத்திலரைத்து நிழலுலர்த்திப் பொடிசெய்து செவியிலும் மூக்கிலுங் குழலிலடைத்து ஊதவும்.

End:

குதிரைக்குத் தகை யெடுத்தால் கவளம், திமிருக்கு

சுக்கு	*பலம் ½*	*மிளிகு*	*பலம் ¼*
சிரகம்	,,	*புளி*	,,
சிரகம் (கருஞ்)	,,	*ஈரவெங்காயம்*	,,

கற்றாழைமடல் பெரிது 2 கொண்டுவந்து அதிற் சோறும், பழம்பாசி, பிடி, கருப்புக்கட்டி பலம் 4, இதுவெல்லாம் 9 வராகன் படி கூட்டி இடித்து மேய்க்கவும். இந்த வியாதிக்குச் செய்யுங்குணம் இளைக்கும், வாயும், மூககும் அனல் வீசும் கண் சிறுத்திருக்கும். இது தகையெடுத்த குணம். திமிருக்கு மோர் படி 2 உப்புபடி ¼ கையாந்தகரை பிடி 1, குப்பைமேனி பிடி 1, பச்சைப்புகையிலை பிடி 1 இதுவெல்லாம்.

98. No 66. மாட்டு வைத்திய அட்டவணை.
(மாடு, குதிரை வைத்திய முறைகள்.)

ஏடுகள்; 43; Lines 1—5 in a Page.

இதில் மாடுகளுக்குண்டாகும் வியாதிகளும் அவைக ளுக்கு வைத்தியமும் வசனரூபமாக எழுதப்பட்டுள்ளது பிழை யதிகம். அச்சிடப்பட்டுள்ளது.

Beginning :

கருநோய் கொண்ட மாட்டின் குணம்

எப்படி யென்றால் வெயிலில் நில்லாது. நாயெத்திமிறி மீனும். நீரிற்போய்நிற்கும். இதுக்கு மருந்து:— பருத்தியிலைச் சாறு மிழகுடி சிறுமீன் (கழு) விதண்ணீருங் கூடக்கலந்து வார்க்கவும். செவியடியில் சூடுசுடுகிறது ஷூ இந்தப்படி ஏழுசூடு சுடுகிறது. இதுக்கு இடதுசெவியிற் சூட்டுக்கோல் காய்ச்சி ஊடுருவச்சுடுவது.

மூக்குவியாதி கொண்ட பசுவின் குணமும் மருந்தும்.

மூக்கிலே கோழை பறியும். நிலத்தோடே மூக்கைத் தேய்க்கும். இதுக்குமருந்து:— ஒருபடி உப்புங்கொம்மட்டி மாதளையிலையும் குங்கிலியமும் கூடக்கூட்டியரைத்து நசியமிட வும். அதையெடுத்துக் கொண்டரைத்துக் காடியுடன் புகட்டு வது.

End

கொம்பரைவியாதி கொண்ட பசுவின் குணமறியும்படி

தலையை முருத்திளோடே தேய்க்கும். அழி
மேய்ச்சல்மேயும். இதற்குமருந்து:—
நல்லவேளைச்சமூலமும் வசம்பு, வெள்வெங்காயம்
நன்றாய்த்தட்டி நசியம்பண்ணுவது.
இதற்கு:—சூடு முதுகிலுச்சியிலே மூன்றுசூடு சுடுவது

99. No. 67 வைத்திய அட்டவணை

ஏடுகள் *275;* Lines 2 – 5 in a Page.

இதில் சூலைக்கட்டுக்கும், காசம், க்ஷயம், இருமல், ஈளை, முதலிய சிலேட்டும நோய்களுக்கும் பலவகையான மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன, இது பெரும்பாலும் வசனமும் சிறு பான்மை செய்யுளுமாக எழுதப்பட்டிருக்கிறது அனுபோக முறைகள் பல இருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning*:*

சங்கங்குப்பியிலை, மிளகு,கலைமான்கொம்பு, சுக்கு, வெள்ளை வெங்காயம், பெருங்காயம் இவை சமம்கஷாயம் வைத்துக் கொடுத்தால் சூலைரோகம் தீரும். வேறுசூலைக்குக் கஷாயம்;— ஒருத்தலை வெள்ளைப்பூண்டு, முருங்கைவேர்ப்பட்டை, திப்பலி மூலம், வசம்பு, பாவட்டைவேர், சுக்கு இவைசமம் கஷாயம் வைத்துக்கொடுத்தால் சூலைதீரும்.

பட்டையோ ரெட்டதாகும் பகருங்கெந் தகநாலாக்ச்
சட்டமா யசுவநாலு தளர்கொடி வேலிரண்டு
மட்டமா யிடித்துநெய்யு மருவுசர்க் கரையுங்கூட்டி
நட்டமாஞ் சூலைந யந்துபுண் தீருமென்றே.

End

கபத்துக்குஞ் சுவாசகாசத்துக்குஞ் சூரணம்

தாளிசபத்திரி, திப்பலிமூலம், சிறுநாகப்பூ, நறுக்குமூலம், கற்கடகசிங்கி, லவங்கப்பட்டை, கூகைநீறு, பேரீச்சம்பழம் முந்திரிப்பழம், லவங்கப்பத்திரி, செவ்வியம், மாதளையோடு, கடுக்காய், சடாமாஞ்சில், கருஞ்சீரகம், சாதிக்காய், கிராம்பு, சாதிபத்திரி, சீரகம், ஏலம், திப்பிலி, மிளகு, சுக்கு, வில்வவேர், நெருஞ்சிவேர், கொத்தமல்லி இவைகளை வகைக்கு அரைப்

பலம் வீதம்கொண்டுவந்து நன்றாய்ச் சூரணித்து வடிசெய்து கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டுப் பிசறி, நிழலுலர்த்த லாயுலர்த்திக் காய்ந்த பிறகு இந்தச்சூரணம் நின்றநிறைக்குச் சீனி கலந்து சாப்பிடவும். கபத்தையும், சுவாசத்தையும் பிடிக்கும்.

---

100. No. 68. வைத்திய அட்டவணை.

ஏடுகள் *365;* Lines 2—6 in a Page.

இதில் பலதினுசான அருமையான விரேசன மருந்துகள், மலசலக்கட்டு, கீரிப்பூச்சி, நாக்குப்பூச்சி, மலட்டுப்புழு, கிராணிகள், அதிசாரம், வயிற்றுக்கடுப்பு, இரத்தக்கடுப்பு முதலிய வியாதிகளுக்கு அனுபோக மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beinning

கடுக்களி சுக்கிந்து கல்மதங்கோடங்கை
யடுக்கலை நீர்வார்த் தரைத்துக்—குடிக்க
வளரு மதிமுக மாதே வயிறு
களமுள களமுள காண்.

நாபியில் தடவ விரேசனம்

ரசம் கெந்தகம், நேர்வாளப்பருப்பு, தில்லம்விரை, வெங்காரம், சிவந்த ஆமணக்கின்பருப்பு, கொன்றைவிதை, அதன் வேர்ப்பட்டை வகைக்கு வராகனிடை 2. கூட்டிப் பொடி பண்ணிச் சதுரக்கள்ளிப்பாலிலாவது பசுவின்பாலிலாவது ஒரு சாமம் அரைத்து முற்றினதேங்காயில் அடைத்துப் பதினஞ்சு

நாள் குப்பையில் புதைத்துப் பிறகு தேங்காயு மருந்துக்கலத்தின் புறத்திலே அப்பி வெயிலிலே வைக்கத்தயிலம்விழும் அல்லது சீலையில் முறுக்கிப் பிழிந்து எடுத்துவைக்கவும். இந்தத் தைலம் நாபியைச் சுற்றித்தடவபேதியாம். அலரிப்பூச்செண்டில் தடவிமோந்து பார்க்கப்பேதியாம்.

End

வழும்பு உதிரத்துக்கு

தெங்கம்பாளை முத்தமொடுதிகழும்வாழைப் பூவுடனே
துங்கமாக இடிப்பித்துச் சொன்னபடியே நீர்பிழிந்து
எங்கு மொத்த விலவம்பிசின் இதன்மேல் விடையமேல்விசிறி
தங்க வொன்று·வழும்புதிரந் தப்பாதினிமேல் வாராதே.

---

101. No. 69. வைத்திய அட்டவணை

ஏடுகள் 354 Lines 4—6 in a Page.

இதில் சன்னிகளின் லட்சணமும் அவற்றிற்கு மருந்துகளும், புறவீச்சு, வலிப்புகள், கு ம ர க ண் ட ன், முசலகன் காமாலைகளுக்கு மருந்துகளும் எழுதப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning:

கெருட வஞ்சனம்

நேர்வாளப்பருப்பு வி ர ா க ன் எடை க. துருசுவிராகன் இடை க. சுக்குவிராகன் இடை க. மிளகு விராகன் இடை க. பெருங்காயம் விராகன் இடை க இதுவெல்லாம் வெற்றிலைச் சாற்றில் சாமம் அரைத்து உண்டைசெய்து நிழலுலர்த்திக் கொண்டு முலைப்பாலிலுரைத்து எள்ளளவுபோடவும் இதுக்

குத்திரும் வியாதி சன்னி, பேய் பிசாசு, நீர்ப்பாடு, விஷம், வீக்கம் சன்னி வாதம் எல்லாம் தீரும்.

சன்னிவாத முதலானதுக்கு வாத ராட்சதன்;

நாவி, ரூதம், அரிதாரம், கெந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், நேர்வாளங் கழஞ்சு, முருக்கிலைச் சாற்றில் ஒருசாமம் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சிச் சாற்றிலொரு உருண்டை கொடுக்கவும். வாய்வு சன்னி வாதந் தீரும்

சீதாங்க சன்னிவாத லட்சணம்.

சீதள மதிகமாகுஞ் செருக்கிய மூர்ச்சை தாகம்
போதவே வாந்தி விக்கல் பொருமிய கழிச்சலுப்பல்
பேதமாய் நடுக்கஞ் சோபம் பெருக்கவே யருமை தோனும்
வேதமே கூறு மித்தை சீதாங்க சன்னி யென்னே.

End:

பஞ்ச பிரமிய காமாலை, இயம காமாலை, தம்பக்காமாலை; அழற் காமாலை, பெருவயிறு முதலியவைகளுக்கு;

காக்கணம் வேர், ஆதளைவேர், சிவதை வேர், கொடிவேலி வேர், சாரடைவேர், இவை ஓரொன்று நாற்பலங் காய்ந்த கஷாய மேறிட்டு வைத்து இதில் நெய் நாழி, பால் நாழி, தயிர் நாழி, கோமிய நாழி, கோசல நாழி விட்டுக் கற்கம், திரிகடுகு, திப்பிலி, கருஞ்சீரகம், அசமதாகம், செவ்வியம், கடுகு, இந்துப்பு, பெருங்காயம், விழலரிசி, வெட்பாலையரிசி இவை ஓரொன்று கழஞ்சு அரைத்துக் கரந்தைச் சாறு நாழி நேர்வாளம் அன்பது கூட்டிக் கள்ளிப்பால் உரிவிட்டு மெழுகு பதத்தில் வடித்து நக்கவும். பாண்டுரோகம் கிரிச்சமெல்லாந் தீரும்.

102. No. 70 சரக்கு சுத்தி முறை.

ஏடுகள் *114;* Lines 2—5 in a Page.

இதில் நவலோகம் ரசம் கெந்தகம் பாஷாணம் முதலிய சரக்குகளின் சுத்திமுறையும் தங்கம், செம்பு, நாகம், அபி ரேகம் முதலிய செந்தூரமுறையும், எழுதப்பட்டுள்ளன. அச் சிடப்பட்டுள்ளது. இடையிடையே சிதைந்திருக்கிறது.*

Beginning:

சுவர்ண சுத்தி :

தங்கத்தைச்செம்மண்ணில்பொதிந்துப் புடம் போட்டால் சுத்தமான சுவர்ணமாம். பிறகு அச்சமாய்த் தகடாக்கி ஏமா தஷிகிம் எலுமிச்சம் பழச்சாற்றில் மர்த்தனம் பண்ணி அந்தத் தகட்டில்பூசி உலைமூடியிலிட்டு மேலேயும்மூடிச் சீலைமண் தடவி ஒரு கஜ புடம் போட்டால் பொன் பஷ்பமாம். அந்தப் பஷ்பத்தில் எருக்கம்பால், அரசம்பட்டை சாற்றில் மர்த்திச்சு இங்கிலிக்கம் அந்தப்பஷ்பமத்தனை நிறைபோட்டு நேகவரைத்து அதன் பிறகு தூலதாமாவெளுலு ரசத்தில் நாலுதிரம் மத்திச்சு காட்டெரு முட்டையில் ஏழு கஜபுடம் போட்டால் பொன் செந்தூரமாம்.

End

குங்குலியம் சுத்தி :

குங்குலியம் சுத்திபண்ணும்படி வேப்பம் பட்டை, கண டங்கத்திரிவேர், பேய்ப்புடல், ஆடாதோடையிலை, ஓரொன்று பலங்கூட்டி இது எட்டுப்படி தண்ணீரில் போட்டு இரண்டு படியாகக்காய்ச்சி மட்டித்து ஒரு பானையில் விட்டு வண்டுகட்டி அதின் பேரில் குங்குலியமிட்டு எரியிட மெழுகு பதமானால் இறக்கி அந்த நீரிலே கழுவி எடுத்து வைக்கச்சுத்தியாம். இது பிரயோகத்துக்காம்

---

* "சரபேந்திரர் குன்ம வைத்ய முறைகள்" என்ற பதிப்பில் 2-வது அனுபந்தமாக இந்நூல் நிலயத்தாரால் அச்சிடப்பட்டுள்ளது.

103. No. 71. அனுபோக வைத்திய அட்டவணை.

ஏடுகள் *135*; Lines 1—8 in a Page.

இதில் மாந்தம், கணை, இருமல், கல்லடைப்பு, நரம்புச் சிலந்தி, ரத்தபித்தம், வெள்ளை, பெரும்பாடு, அண்டவாதம், ஈரல்வலி, கிரந்தி, அரையாப்பு முதலிய ரோகங்களுக்குப் பல வகையான மருந்துகள் எழுதப்பட்டுள்ளன. இதன் தலைப்பில் 'வைத்தியம் பிள்ளைப்பெருமாள் பிள்ளை குமாரன் தாமோதரம் பிள்ளை கொடுத்த அனுபோக அட்டவணைசுவடி' என்றெழு தப்பட்டிருக்கிறது. அச்சிடப்படவில்லை.

Beginning:

மாந்த உருண்டை :

சுக்கு திப்பிலி, கடுகுரோகணி, வட்டத்திருப்பிவேர், கடுக்காய், வகைக்கு பலம் ¼ ஆடாதோடைச்சாறு விட்டு அரைத்துக் கடலைப்பிரமாணம் உண்டை பண்ணி அனுபானங்களிலே கொடுக்கவும், மாந்தம் குணமாகும். அனுபானமாவது புளிப்பு மாந்தத்துக்கு ஷ மாத்திரை விராகனிடை 1 கருக்கிச் சாம்பலாக்கி அதில் விராகனிடை 1 ஓமம் கூடப்போட்டுக் கருக வறுத்துவெதுப்படக்கி பேய் மிரட்டி இரண்டும் விராகனிடை 2. வீதம் கூடப்போட்டு வதக்கி ½ படி தண்ணீர் விட்டு கால் சேராகக்காய்ச்சி 2 வேளைக்கு, வேளைக்கு அரைக் கால் சேர் கிழாயத்தில் ஒரு மாத்திரை உறைத்துத் தேன்குத் திப்போட்ட மூன்று நாளையில் எப்பேர்ப்பட்ட புளிப்பு மாந் தமும் சொஸ்தமாகும்.

அரோசகத்துக்கு மருந்து :

பருத்திக் கொட்டை வறுத்துத் தோல் போக்கின பருப்பு படி அரைக்கால், நெற்பொரி படி வ. ஏலம் பலம் 1. சுக்கு பலம் ½ திப்பிலி பலம் வ இவையெல்லாமிடித்துச் சூரணம்

பண்ணி வெள்ளைச் சர்க்கரை சரிகூட்டி வைத்துக்கொண்டு இரண்டு நேரமுமுள்ளங்கை கொண்டது சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி அரோசிகம், விக்கல், வாந்தி தீரும் கபஹரம். கைகண்டது.

End

அஷ்ட கிரந்திக்கு;—

சீனம் விருகனிடை 5, பூரம் விருகனிடை 3, ரசசெந்தூரம் விருகனிடை 2, லிங்கம் விருகனிடை 1. சீனம் கரண்டியிற் போட்டு அனல் பிடித்து உருகுகிற வேளையில் இந்த மூன்று சரக்கும் பொடி பண்ணிப் போடவும்.

---

104. No. 72 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *244;* Lines 3—5 in a Page.

இதில் பலவகைப்பட்ட புண், புரைகள், சூலைக்கட்டு, சொறி, சிறங்கு, தேமல், கிரந்தி, குஷ்டம், கண்டமாலை செவ்வாப்பு, படுவன், துன்மாம்சம் முதலிய நோய்களுக்கு மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன, அச்சிடப்படவில்லை.

Beginning :

ஒட்டிய புண்ணுக்கு உருண்டை:

இரதம் பணவிடை க. திப்பிலி பணவிடை க. துருசு பணவிடை க, பாஷாணம் பணவிடை க. கடுக்காய் 6. மருதாணியிலை, நல்ல வெல்லம், வெற்றிலைச் சாறு வார்த்து ரசமுறிச்சு உருண்டைகூட்டி வெல்லத்திலேஉருட்டி விழுங்கவும். இரண்டு நேரமும் நாலு உருண்டை விழுங்கவும். கார்ப்பு, புளிப்பு தவிரவும்.

வேறு இதுவுமது:

குறிஞ்சாவேர், தூதுவளைவேர், அசமதாகம், குப்பைமேனிச்சாறு வார்த்து ரசமுறித்து உருண்டை கூட்டி எருமை வெண்ணெயில் இரண்டு நேரமும் விழுங்கவும். கார்ப்புப் புளிப்பும் தவிரவும்.

சொரி, தேமலுக்கு :

வெங்காரம், நெல்லிக்காய் கந்தகம், நாயுருவிவேர், இலைக் கள்ளிச்சாறு வார்த்தரைத்துப் பூசக் குணமாம்.

புரைவிழுந்த புண்ணுக்கு:

சித்திரமூல மரைத்துச் சர்க்கரையுடன் கலந்து பிசைந்து அடைதட்டி நல்லெண்ணெயிற் போட்டுப் பொன்னிறமாய் எரித்துப் புரையிலே எண்ணெய் விடவும். தீரும் புண்ணுப் புரைகளெல்லாம்.

End

அழிஞ்சிவேர் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துத் தடவத் தீரும்.

வேறு:

மாதளைச் சமூலமும் நறுக்கிக் காயப்போட்டு வெள்ளையரளி நறுக்கிச் சமூலமும் காயப்போட்டு இது இரண்டும் சமனுகப் பானையில் அடைத்து பூமி புடத் தைலமிறக்கவும். அரைப்பணவெடை தின்னவும். தண்டில் தடவவும்.

105, No. 73. வைத்திய அட்டவணை.

ஏடுகள்; *437;* Lines 5—6 in a Page.

இதில் குன்மம், சுரம், சூலை, பிறவீச்சு, இருமல், ஈளை, பிளவை, க்ஷயம், பாண்டு, காசம், மந்தார காசம், காமாலை,

சோகை, மூலம், பிரமியம், நீரழிவு, பவுத்திரம், மூத்திரக் கிருச்சம், கண்ணோய், பல் நோய், எலிகடி, இரைப்பு, மகோதரம், முதலிய நோய்களின் லட்சணமும் அவற்றிற்கு மருந்துகளும் அனுபோக முறையாக கூறப்பட்டுள்ளன. செய்யுளும் வசனமும் கலந்தெழுதப் பட்டிருக்கின்றன. அச்சிடப்பட வில்லை.

Beginning :

கண்ணுக்கு :

பீத ரோகணி பச்சைக்கற்பூரம் துத்தம்
பெருமைதிப்பிலியு மிளகுங் கூட்டி
சாதி நெல்லிக்காய்ச்சாறு வார்த்தரைக்கச்
சத்தியிடும் திமிர்ப்படலங்கள் தீரும்
வேதனை யோடத்தீக் கோபராகத்
திராவிழி கமலம் போலக்
கோது பில்லம்பூ மாறும் நூறு
யோசனை தெரியுங் கோதையரே,

கிரந்திக்கு :

சுடுகாட்டில் தகனம்பண்ணின எலும்பும், காசுக்கட்டியும் இது இரண்டும் சரிசமன் எடுத்துக் கறைபற்றின மண்வெட்டியிலே போட்டு, விளக்கெண்ணெய் விட்டுச் சங்கு கொண்டு உறைத்து, வழித்து வைத்துக்கொண்டு, புண்ணளவுக்குச் சீலை கிழித்துத் தடவிப் போட்டு வரச் சீராம். கைகண்டது.

சத்தி குன்மம் 18-க்கும் :

ஒரு தேங்காய் கொண்டுவந்து கண்திறந்து தண்ணீரை ஊற்றிவிட்டு உழக்கு எருக்கம்பால் கறந்து தேங்காயினுள் அடைத்துக் கண்ணுமடைத்து எரு அடுப்பில் ஒடு கருகச் சுட்டு அரைத்து, ஒரு பாக்களவு தின்னப் பதினெட்டுக் குன்மமும் பொருமலும் நிற்கும். கைகண்டது.

106. No. 74 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 370; Lines 4—5 in a Page.

இதில், சோகை, பாண்டு, காமாலை, குன்மம், மூலம், பவுத்திரம், உளமாந்தை, குட்டம், க்ஷயம் முதலிய நோய்களுக்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன. அச்சிலில்லை. இடையிடையே சிதைந்துள்ளது.

Beginning:

பாண்டு ரோகத்துக்குச் சிஞ்சாதி லேகியம்:

புளியிலை பலம் 100, துருப்பிடித்த இரும்பு பலம் 50. தண்ணீர் படி 20 கூடவிட்டு இரண்டுபடி கஷாயமாக்கிக் கொண்டு, பழ வெல்லம் பலம் 50. இஞ்சி மேற் புறணி வாங்கித் துண்டு துண்டாய் நறுக்கினது பலம் 16. இதுவுங் கூடப்போட்டுப் பாகாய்க் காய்ச்சிக்கொண்டு, இதில் சுக்குப் பலம் 2. திப்பிலி பலம் 2. மிளகு பலம் 2, சீரகம் பலம் 2. கருஞ் சீரகம் பலம் 2 இவை பொடிபண்ணி வடிக்கட்டிக் கொண்டு லோகம் பலம் க. மண்டூரம் பலம் க. இவையுங் கூடச்சேர்த்து முன்பாகிலே கலந்து. அரைப்படி தேன் விட்டு லேகியம் செய்து வைத்துக்கொண்டு, அந்தி சந்தி சாப்பிடவும். தீரும் வியாதி:– பாண்டு, காமாலை தீரும். இதுக்குப் பத்தியம்:–இறைச்சி, புளிப்பு, கடுகு, எண்ணெய், குருத்துவமான கறிகள் ஆகாது. குருத்தமான கறியாவது வாதத்தை யுண்டாக்கிற கறிகள்,

End

வெண்குட்டத்துக்கு;

தலைவிரிச்சான் சமூலம் கொண்டுவந்து, சூரியப் புடம் பண்ணி நல்லநாள் கேட்டுக்குணிநீர் (குறுணி நீர்) நாழித் தண்ணீராகக் காய்ச்சி வேது பிடிக்கவும். குணமாகும்,

107. No. 76 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 306; Lines 5 in a Page.

இதில் நாடி நிதானம், சரக்கு சுத்தி, நானுவித ரோகங்களுக்கு செந்தூரம், பற்பம், கிருதம், நெய், குளிகை, எண்ணெய் தைலம், குடிநீர், வடகம், சூரணம், லேகியம் முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. வீரபத்திர மந்திரம், பத்திரகாளி மந்திரம், மோகினி மந்திரம், வயிரவ மந்திரம், தன்கட்டு மந்திரம் முதலியனவும் எழுதப்பட்டிருக்கின்றன. 55 முதல் ஏட்டிலக்கம் போடப்பட்டிருக்கிறது. அச்சிடப்படவில்லை.

Beginning

இரதம் சுத்தி பண்ணும்படி;

இரதம் பலம் குறையாமல் கல்வத்திலிட்டு, மஞ்சள் பொடியிலும் ஒட்டடையிலும் மும்மூன்றுநாழிகை. ஒவ்வொன்றிலே தனித்தனியே மத்திசசு ஊதிப்போடவும். அதன் பிறகு கற்ருழை நீர், சந்தனக் குழம்பு, செம்பரத்தம்பூ, வெற்றிலைச் சாறு, பழுபாகல் கிழங்குச்சாறு, நிலைப்பனைகிழங்குச்சாறு, அறிஞ்சிச்சாறு, அம்மன் பச்சரிசிச் சாறு, கையாந்தகரைச் சாறு, சாரணையிலைசசாறு, பலாசம்பட்டைக் கஷாயம், கொன்றைப் பட்டைக்கஷாயம், இந்த வகையிலே ஒன்றிலே மும்மூன்று நாழிகை மத்திக்கச் சுத்தியாம். பிறகு சகல யோகத்துக்கும் கூட்டிக்கொள்ளவும்.

விஷ சுரகுணம்:

நடுக்கலும் வியர்வையும் காய்சசலுமுண்டாயிருக்கும் என்றறியவும்.

குடிநீர்:

தசமூலம், பெருவாகை, பெருங்குமிழ், முன்னை, பாதிரி வில்வம், சிறுவழுதலை, கண்டங்கத்திரி, நெருஞ்சி, இதுவேர்

கள், சிற்ருமல்லி, பேராமல்லி மூலம், சுக்கு இத்துடன் கோஷ்டம், திரிகடுகு, திப்பிலி, திப்பிலிமூலம் கூட்டிக் கொடுக்கவும்.

End

குப்பைமேனிவேர் இரண்டு வேரைப்பிடுங்கி முசுறுக்கூட்டுக்குள் ளே வைத்தால் ஒன்றைப்புறத்திலே தளளி ஒன்றை உள்ளே வைத்துக் கொள்ளும். புறமே தள்ளின வேரையெடுத்துக் குளிசமாடி முன்னிறப்பில் வைக்க முறியும்.

Colophon:

சகாப்தம் 1722க்கு ரவுத்திரிஷு தைமீ 30உ சோமவாரமும் திதி ஏகாதசியும் மூல நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் ராசமானிய ராசஸ்ரீ சரபோஜிமகாராசா சாயபு அவர்கள் ஆக்ஞாபிச்சபடிக்குத் துபாசி கிஷ்ணப்ப நாயக்கர் குமாரன் ரெங்கய்யன் வைத்திய வாகடம் அட்டவணை எழுதி முகிந்தது முற்றும்.

குறிப்பு :

மருந்து விவர அட்டவணை எழுதிய ஏடுகள் முன்னே கோர்க்கப்பட்டுள்ளன.

108, No. 75 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *261;* Lines 2—6 in a Page.

இதில் பற்பங்கள், செந்தூரங்கள், எண்ணெய், லேகியம் சூர்ணம், மாத்திரைகளும், குன்மம், சுரம், சன்னி, பலவிதமான கரப்பான், பிரமியம், நீரிழிவு, பிளவை, பவித்திரம், சூலை, காசம், பாண்டு, காமாலை, குமரகண்டன், மூலம், கிராணி, முதலிய நோய்களுக்கு மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்பட்டவில்லை.

Beginning :

கண்டங்கத்திரிச் சமூலமுமரைத்துக் குகைபண்ணிக் காய விட்டு, அதில் ரசமிருவது விராகனிடை விட்டு, ஓடுபோட்டு மூடிச் சீலைமண் செய்து, காயவைத்து, பிறகு செங்கல், பால் 2, உப்பு இரு நாழியிடித்துக் கூடக்கலந்து, சட்டியில் கீழு மேலு மிட்டு நடுவில் குகையை வைத்துமூடிச் சீலைமண் செய்து மூன்று நாளாறுபொழுது எரியிட்டு எடுத்துக்கொள்ளவும்.

மூக்கு நீர்ப்பாய்ச்சலுக்கு ;—

கடுக்காய் நெல்லி தான்றிக்காய் கனக மிளகு வேர்க்கொம்பு
அடுக்கா ரோடிந்துப்பு அழகா யொவ்வோரிடை கூட்டி
முடுக்கா யரைத்துத் தேனிற் குழைத்து தின்பீராய்
நடுக்காயக்கணதினவு நயனவாதந் தலையிடிக
ளடுக்காயிருந்த சேத்துமமு மகலவோடுங் கண்டாயே,

மலட்டுப் புழுவுக்கு

ஆடுதின்னுப்பாளை விரை முள்ளிக்காயளவு அரைத்து
வெண்ணெய் சரிகூட்டித் தூரமான நாள்முதல்
மூன்றுநாளுங் கொடுக்கவும். பூச்சிவிழுந்துபோகும்

End:

பைத்தியவாய்வு, உப்பிச குன்மம், மூலவாயு, பாண்டு

சங்கிராணி, மேகவாயுவுக்கு

அசமதாகம், வசம்பு, வில்வப்பழம், கொடிவேலிவேர், பெருங்காயம், அதிவிடயம், சதகுப்பை, வட்டத்திருப்பி செவ்வியம், கடுகு ரோகணி, திப்பிலிமூலம், எவச்சாரம் குடசப்பாலைவிதை, மஞ்சலவணம், பேய்ப்புடல், திரி கடுகு, திரிபலை, தண்ணீர்விட்டான்கிழங்கு, இதுகுரணம் பண்ணி இதுசரியிடை விளக்கெண்ணெய் விட்டு வெயிலில் வைக்கவும். இதில் இலந்தைக் கொட்டைப்

பிரமாணங்காலமே வெந்நீரில் கொடுக்கவும். அந்திக்குக் குளிர்ந்த தண்ணீர் கொடுக்கவும். இந்த வியாதிகளெல் லாந்தீரும்.

---

109. No. 77. வைத்திய அட்டவணை.

ஏடுகள்; 240; Lines 4—5 in a Page.

இதில் தைலம், சரக்கு சுத்தி, பற்பம் செந்தூரம், மாத்திரை குளிகை, வடகம், நசியம், புகை அஞ்சனம், முதலியவற்றின் முறைகளும் சுரம், பாம்பு விஷம், தேள் விஷம், எலிகடி, பேய் நாய் கடிகளுக்கு மருந்தும், விநோத முறைகளும் கூறப்பட்டுள்ளன. இவைகளுக்கு விவரம் எழுதிய பத்து ஏடுகள் முன்னே கோர்க்கப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning :

பிருங்காமலகத் தைலம் நேத்திர ரோகத்துக்கு:

கையாந்தகரைச் சாறு படி க, பொன்னாங்கண்ணிச்சாறு படி க, வாசனைப்புல் சாறுபடி க, நெல்லிக்காய்சசாறு படி க, நன்னாரிச்சாறுபடி க. இனிக்கற்கத்திரவியம். அதிமதுரம் பலம் 1, சந்தனம் சேர் க, செங்கொட்டை பலம் 1, கடுகு ரோகணி விராகனிடை 2, சிற்றரத்தை பலம் 1, இலாமிச்சம் வேர் சேர் 1, நல்லெண்ணெய் படி 1, பால் படி 2, இவை யெல்லாமெண்ணெயும் பச்சிலைச் சாறுங் கூடவிட்டுப் பாகமாய் காய்ச்சுகிற போது இந்தக் கற்கத்திரவியங்கள் சூரணஞ்செய்து எண்ணெய் பக்குவத்துக்கு வருகிறபோது சூரணத்தை எண்ணெயிலே போட்டுப் பதமாயிறக்கிக் கொள்ளுகிறது. இந்தத் தைலம் தலைமுழுகிறது. சிரரோகத்துக்கு நசியம் செய்கிறது. இதனாலே தீருகிற வியாதிகள்:— சிரரோகம் நேத்திர ரோகம், காது ரோகம், நீலகாசம், பித்த காசம் இவை முதலான ரோகங்கள் தீரும்.

நேத்திர ரோகத்துக்குச் சந்திரப்பிரபாவதி

மாத்திரை ;

எள்ளுப்பூ 80, திப்பிலி 60, சாதிப்பூ மொட்டு 50, மிளகு 16, இவை தண்ணீர்விட்டரைத்து மாத்திரை செய்துலர்த்தித் தண்ணீரிலேயுரைத்துப் போட்டால் நேத்திரரோகங்கள் தீரும்,

End

சலத்தம்பனம்:

குடியொட்டியிலைச்சாறு தோலிலேயூட்டித் தண்ணீரில் போடச் சலஸ்தம்பனம்.

---

110. No. 78. வைத்திய அட்டவணை.

ஏடுகள் 280; Lines 2—6 in a Page.

இதில் சுரலட்சணமும், அவைகளுக்கு பலவிதமான மருந்துகளும் அட்டவணையாக எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை. இடையிடை சிதைந்துள்ளது.

Beginning:

பித்தசுரத்துக்கு ஆனந்த வயிரவன்

சாதிலிங்கம், நாவி, மிளகு, வெங்காரம், திப்பிலி இவை ஒரொன்றுகழஞ்சி, எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக்குன்றி யளவு உருண்டைபண்ணிக் கொத்தமல்லி சுக்கு காய்ந்த நீரிலிடவாதச் சுரந்தீரும்.

சன்னிவாத சுரத்துக்கு.

குருவிச்சம்வேர், முள்ளிவேர், தூதுவளைவேர், முக்காவேளைவேர், பொன்முசுட்டைவேர், நிலவேம்பு. கடுகுரோகணி, சிறுதேக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி இவைபதினொன்றும் குடிநீர் வைத்துக் கொடுக்கவும், கைகண்டது.

வாதச்சிலேட்டும சுரலட்சணம்

முகமது வெளுக்கு மெய்நோம் மொழிவரக் குரலும் நோகும்
பகைபல்லிலுதிரம் பாயும்பதறிய விருமலுண்டாம்
தகவுட னுரத்தில்சற்றே தயங்கிய நோவுண்டாகும்
வகையுப்பிசமுண்டாகும் வாதசேற்று மங்கள்தானே.

End

விஷம சீத சுரத்துக்குக் கஷாயம்

கொடிவேலி, பேராமுட்டி, சிற்றாமுட்டி, பொன்முசுட்டை, ஈசுவரமூலிவேர், சுக்கு, நன்னாரிவேர், துளசி, வேலிமுரண்டி இவை சமபாகம் கஷாயம் வைத்துக் கொடுக்க விஷம சீத ஜ்வரந்தீரும்.

இதுவுமது : நாரத்தை இலை, சுக்கு, துளசி, இலந்தையிலை, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, சீந்தில்கொடி, பற்பாடகம், விஷ்ணுகரந்தை, சீரகம் இவை கஷாயம் வைத்து மிளகு, சர்க்கரையும் மேன்பொடி போட்டுக் குடிக்கச் சீதசுரம், விஷம சுரம் தீரும்.

இன்னமொன்று கொடிவேலி, வெள்ளுள்ளி, பொன்முசுட்டை, பேய்ப்புடல், வேம்பீர்க்கு, பற்பாடகம், செவ்வியம், சுக்கு இவை சமபாகம் செய்து, எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க விஷமசுரம் தீரும்.

111. No. 79 வைத்திய அட்டவணை

ஏடுகள் 313; Lines 2—5 in a Page.

இதில் பிரமியம், குஷ்டம், கிராணி, பித்தம், நாற்பது, அரையாப்பு, மூலக்கிராணி, குழந்தைகளுக்குண்டாகும் நோய்கள் முதலிய வியாதிகளுக்கெல்லாம் அட்டவணையாகப் பலவிதமான மருந்துகள் எழுதப்பட்டுள்ளன. மாட்டு வைத்தியமும் எழுதப் பட்டிருக்கிறது. இவ்வட்டவணையிலுள்ள வற்றிற்கு விபரம் எழுதிய ஒன்பது ஏடுகள் முதலில் கோர்க்கப்பட்டுள்ளன.

Beginning

எல்லாப் பிரமியத்துக்கும்

அத்திவேரும், கிளுவைவேரும், புளியம்வேரும், ஆவாரைவேரும், தூதுவேளைவேரும். இவையரைத்துக் கருஞ்சீரகம், வெல்லம், பசுவின் நெய், பசுவின் பாலில் சாரித்து மூன்று நாள் கொடுக்கவும். கைகண்டது.

வேறு

எருமைத் தயிர் ஒருபடி, ஈரவெங்காயம், ஒருசிரங்கையும் சிறுக அரிஞ்சிக்கொண்டு நற்சீரகம், சற்றேற அரை வறுப்பு வறுத்து ஆழாக்கு மாத்திரம் பொடி செய்து தயிருடனே சாரித்துத் தின்னவும். இப்படி மூன்று நாள் தின்னக் கொள்ளவும்.

மலட்டுப் பூச்சி விழ மருந்து

ஆண்வசம்பும், வெள்ளைப்பூண்டும், வெங்காயம் இது மூன்றும் கொட்டைப்பாக்களவு அரைத்துத் தும்பைச்சாறு விட்டுக்கலக்கி, மாதவிடாய் வந்த மூன்று நாளும் குடிக்கவும் மலட்டுப் பூச்சி செத்துப்போம். பிள்ளையுண்டாம்.

End

மேகவாய்வு, சூலைக்கு:

பட்டையே யெட்டதாகும் பகர்கந்தகம் நாலாம்
சட்டமாம் அசுவை நாலு தளர்கொடி வேலி ரெண்டு
மட்டமாய்க் கூட்டி மருவி சர்க்கரையிலுண்ண
நட்டமாம் மேகசூலை நயந்த பன திருமே.

---

112. No. 80 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *197;* Lines *4—5* in a Page.

இதில் குன்ம ரோகங்களுக்குப் பலவிதமான மருந்துகள் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சடிக்கப்படவில்லை.

Beginning:

வச்சிரவல்லி அரிதகி லேகியம்

குன்மம்:

பிரண்டை, புளிநரளைக் கிழங்கு, மருளங்கிழங்கு, கருணைக் கிழங்கு, காட்டுக் கருணைக்கிழங்கு, நாயுருவிவேர் இவை வகைக்கு பலம் 10, கடுக்காய் 100. நாலு மரக்கால் ஜலம் விட்டு எட்டி லொன்றுகக் காய்ச்சி, அதன்பிறகு கடுக்காயெ டுத்துலர்த்தி, அந்த கஷாயத்தில் 30 பலம் வெல்லம் போட்டுப் பாகுகாய்சசி, இலவங்கப்பட்டை. இலவங்கபத்திரி, ஏலம் சிறுநாகப்பூ, சுக்கு, திப்பிலி, நிலப்பனங்கிழங்கு, வாய்விளங் கம், சீரகம், கருஞ்சீரகம், ஓமம், சதகுப்பை, வெட்பாலைப் பட்டை, கோஷ்டம். ....

தேன் பலம் 15. நல்லெண்ணெய் பலம் 4. கூடவிட்டுக் கிண்டி வைத்துத் கொண்டு, இரண்டு விராகனிடை சாப்பிட மூலம், குன்மம், வயிற்றுக்கட்டி, சூலை, பாண்டு, சோகை, பவுத்திரம் முதலானவை தீரும்.

End

அஷ்ட குன்மம், வயிற்று வியாதிக்குக் குலாந்தகன்:

இரசம், கெந்தகம், அரிதாரம், நாவி, செம்புப் பொடி, சுக்கு, மிளகு, திப்பிலி, இவை ஒருவிராகனிடை, சுத்திபண்ணின நேர்வாளப்பருப்பு மூன்று விராகனிடை, கூட்டிக் கையந்தகரைச்சாறு வார்த்து மூன்று சாமம் அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு இஞ்சிச்சாற்றில் அல்லது நொச்சிக்கஷாயத்தில் கொடுக்கவும்.

---

113. No. 81. வைத்திய அட்டவணை.

ஏடுகள் *248*; Lines 2—*5* in a Page.

இதில், நேத்திரரோகங்களுக்குப் பலவிதமான மருந்துகள் சொல்லப் பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning

நேத்திர ரோகம், பல்லசைவுக்குப் பிருங்காமலத்தைலம்

நெல்லிக்காய்ச்சாறு படி 2, எண்ணெய் படி 1, அதிமதுரம் பலம் 1, பசுவின்பால் படி 4, இவைஎண்ணெயிலிட்டுத் தைலபக்குவமாயெரித்துக் கொள்ளுகிறது. இதனாலே தீரும் வியாதிகள்:— நேத்திரரோகங்கள் பல்லசைவுகள் தீரும்.

கண்ணுக்குக்குழம்பு

சவுக்காரம், துருசு, மடல் துத்தம், இவை ஒரோன்று பணவிடை சற்றே வெதுப்பித் தண்ணீர்விட்டரைத்துக் குழம்பாக்கிச்சிமிழிலடைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிடவும்

தீரும் வியாதி:—

நீலகாசம், படலம், தண்ணீர் விழுகிறது, பூப்பட்டமாலைக் கண், வெள்ளெத்து, புகைச்சல் இவையெல்லாம் தீரும். கைகண்டது

இழிகண், ஆணிபடலம் தீர

வெண்பா

நெய்யாணி தேன்படல நீலிக்குமரிக்கு
கையாந்தகரையிருள் கடியும்—வெய்யவே
போமே முடமாயிரும் புண்ணுக்கரளி
விரும்பியிடு வெள்ளேற்றின் வேர்.

என்றது வெள்ளை நந்தியாவட்டத்தின் வேர் நெய்யிலுரைத்திட ஆணிபறிவும், தேனிலிடப்படலம் போம். நீலியிலைச் சாற்றிலிட முடமயிர்போம். அரளிப்பாலிட இழிகண்ணோய் தீரும் என்றவாறு.

இதுவும் கண்ணுக்கு

உண்டைக்கற்பூரங் கூட்டியிமைத்திடவும்.

---

114. No. 92 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 194; Lines 4—5 in a Page.

இதில் வாத ரோகங்களுக்குப் பலவிதமான மருந்துகள் எழுதப்பட்டிருக்கின்றன. இது அச்சிடப்படவில்லை.

வாதத்துக்கு :

Beginning:

நத்தைச்சூரிவேர் முற்றின வேர் கொண்டுவந்து, குறுக நறுக்கி ஒருபடி விளக்கெண்ணெயில் வெள்ளைப்பூண்டு பலம் வ. வசம்பு பலம் முக்கால். இவைகளையும் தோலோடு நறுக்கிப் போட்டுப் பொன்னிறமாகக் காய்ச்சி யிறக்கவும், கற்கத் தோடு வைக்கவும்.

இதற்குத் தீரும் வியாதி :–*பாதத்தின்மேல் வீக்கத்திற்குத் தேய்த்து உடலில் தடவி ஸ்நானம் செய்யக் குணமாம்.*

80 **வாதத்திற்கும் ;**

இதில், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், தேங்காய்ப்பால், குங்கிலியப் பொடி ஒன்று சேர்த்து. இவை மூன் று நா ள் பதத்தில் வடித்து, மேலும்பூச, வாதம் எண்பதும் தீருமென்றிமையோர் சொன்னார். இது கைகண்ட அவுஷதம்.

End:

பித்தவாதத்துக்கு :

இரண்டு கோழிமுட்டைகளை ஊற்றி, அவரைவிதை, உப்பு, மிளகு சேர்த்துப் பொடி செய்து, அந்த முட்டையுடன் சேர்த்து நல்லெண்ணெய் வார்த்துச் சுட்டுச சாப்பிடவும்.

---

115. No. 83 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 216; Lines 4—5 in a Page.

இதில், மூத்திரரோகங்கள், கல்லடைப்பு முதலிய ரோகங்களுக்குச் சிறந்த அனுபோக முறைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning:

மூத்திரபாளத்துக்கு, கல்லெரிப்புக்கு :

நெருஞ்சி வேர் பாலில் குடிக்கவும், பசிரி நெய்யிற் குடிக்க. நாயுருவிவேர் பாலில் துவைத்து, வெண்ணெய் விழுங்கி மோர் குடிக்க மாறும். செப்பு நெருஞ்சிவேர், அதி மதுரமும் பாலிற் குடிக்க மாறும்.

கல்லெரிப்புக்கு:—மணிவெங்காரம் ஒரு பணவெடையும் *அரைத்துச் செவ்விளநீரிற் கரைத்துக் குடிக்கவும்.*

நீரடைப்புக்கும், கல்லடைப்புக்கும் மருந்து ;

மணலிச் சமூலமும், பொன்னுங்காணிச்சமூலமும், நீர் முள்ளி இவை மூன்றும் மூன்றுபிடி கொண்டுவந்து, எலுமிச் சங்காயளவு அரைத்து, நல்லெண்ணெயில் கொடுக்க விழும். நந்தியாவட்டம் வெர் பாக்குடன் சாப்பிடவும்.

End

.......சலிரு போலத்தட்டி முறித்து, கெந்தி, வெடியுப்பு, குளிர்தாமரைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு...... .....ல் வார்த் துக் குழப்பி ஐந்து சூரியபுடம் வைக்கப் பற்பமாம். ஒரு பண வெடை கருப்புக்கட்டி...........பல வியாதியுந் தீரும். பால், தயிர், துவரம்பருப்பு, வழுதலைப்பிஞ்சு, பாசிப்பயறு, தூது வளங்காய்.........ள்ளவும். அக்கினி பலமுண்டாம்.

---

116. No. 84 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *175*; Lines 3—6in a Page.

இதில், குழந்தைகள், கரப்பான், வீக்கம், நீரிழிவு, அரை யாப்பு, மூலரோகம், க்ஷயம், மேகரணம், சன்னி, காமாலை,

பெரும்பாடு, குட்டம், எலிகடி முதலிய நோய்களுக்குப் பல வகை மருந்துகளும், மதனகாமேசுவரம் முதலிய தாதுவிர்த்தி லேகியங்களும் தைலங்களும் பிறவும் அனுபோக முறையாக எழுதப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning:

குழந்தைகள் கரப்பான் வீக்கத்துக்குக் குடிநீர் :

சிவனார்வேம்பு, ஓமம், சதகுப்பை, கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், செங்கத்தாரிப்பட்டை, பூதகரப்பான்பட்டை, அவுரி வேர், மரமஞ்சள், நன்னாரிவேர், பூனைக்காலிவேர், செவ்வியம், திப்பிலிமூலம், செப்புநெருஞ்சிவேர், கண்டங்கத்திரி வேர் வகைக்கு வராகநிடை 2 இடித்துத் தூள்செய்து ஒரு சட்டியி லூறப்போட்டு, அரைப்படி ஜலம்விட்டு, எட்டிலொன்றாய்க் காய்ச்சிக்கொடுக்கவும் இப்படி இரண்டு வேளையும் ஏழுநாள் கொடுத்து, உப்பில்லாப்பத்தியம் வைத்துகொடுக்கவும் இப்ப டிக் கொடுப்பதனால் சகல கரப்பானும், வீக்கமுந் தீரும். குழந் தை கரப்பானுக்குக் கொடுக்கிறது. பெருந்தேவி அம்மாளுக்கு வைத்துக்கொடுத்த கஷாயம்.

புழுவெட்டுக்கு மை :

வெங்காரம் பொரித்துக் கலத்தின்மேல் னீவத்துக் கையாந்தகரைச் சாறு விட்டு உலக்கை பூணிலாலே மூன்று நாழிகை யிழைச்சு பிறகு வெண்ணெய் போட்டுச்சங்கினாலே அப்படி யிழைச்சுச்சிமிழில் வைத்துக் கொண்டு புழு வெட்டா யிருந்த இடத்தில் தடவினால் ஐந்து நாளையில் மயிர்முளைக்கும்.

End

உன்மாதம், பைத்தியத்துக்கு நசியம்:

உடும்பு பிச்சு கொண்டுவந்து ஒரு கரண்டி நல்லெண் ணெயில் எரித்து நசியம் பண்ண உடனே தீரும். அநேக பயித்தியம்.

குறிப்பு :

இவ்வைத்திய அட்டவணைக்கு விபரம் எழுதிய ஏடுகள் 9-ம் அகத்திய ரெத்தினச்சுருக்க அட்டவணை ஏடு 5-ம் கொங்கணர் கற்பவிதி அட்டவணை ஏடு ஒன்றும் இருப்பதோடு ஆயி சுக்குக்கிண்ணிச் சோதனை, மத்தாப்பு செய்முறை மூலிகைகளின் விஷபாகம் கூறும்வெண்பா2, வைத்தியம்கோபாலசாமி பிள்ளை ருக்குமணியம்மாளின் திதி விவரம் கண்ட ஏடு 2, அய்யாக்கண்ணுபிள்ளை பிறந்த நாள் குறித்த ஏடு 1-ம் சேர்க்கப்பட்டுள்ளன.

Colophon:

சாலிவாகன சதாப்தம் 1746 தாரணஹு கார்த்திகைமீ 23வ சோமவாரம் காலமே நாழிகை 10-க்கு மகராசஸ்ரீ மகாராசா சத்திரபதி சாயபு அவர்களுடைய சரணார விந்தத்துக்கு வைத்தியம் கோபால பிள்ளை குமாரன் கொட்டியம் மத்தியஸ்தம் அய்யாக்கண்ணுப் பிள்ளை என்னும் அடியவன் பிதாவாகிய கோபால பிள்ளை அவர்களுடைய சுதசத்தாரிலே எழுதிவைத்த அவாளுடைய அனுபோக முறையாகிய கைவளைச் சுவடியை இந்த மூல பாடத்தைப்பார்த்து இந்தப் பிரதி எழுதி நிறைவேறி உயிர் நிவேதனம் பண்ணிச்சாஷ்டாங்க விண்ணப்பம். இந்தப்படிக்கு இந்தச் சுவடி எழுதின சுதசத்தார் நிமித்த காரணம் மகராச ஸ்ரீ உசிர் சரணாரவிந்த தாசன் கொட்டிய மத்தித்தம் அய்யாக்கண்ணு பிள்ளை கையெழுத்து வேணும் அனந்தங் கோடி சாஷ்டாங்கம்.

117. No. 85 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *277*; Lines 4—5 in a Page.

இதில், சுரங்களுக்கும் அவை காரணமாகக் காணும் மற்ற ரோகங்களுக்கும், பலவிதமான மருந்துகள் அனுபோக முறையிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை இடையே ஏடுகள் முறிந்துள்ளன.

Beginning

சகல சுரத்திற்கும் மேல் உருண்டையிடவும்:

உருண்டைவரைக, அரிதாரம், மயில்துத்தம், சங்கு சுட்டநீறு சமனுகக் கூட்டிச் சூரணம் வெற்றிலைச் சாறு விட்டரைத்து, உழுந்து மருவாதி குளிகைபண்ணி, வெல்லத்துடனே ஒருகுளிகை மூன்று நாளிடத்தீரும்.

சுரத்திற்கு, குளிர் சுரத்துக்கு:

சிறுபுள்ளடிவேர், கடுக்காய், சுக்கு, மிளகு, கடுகுரோகணி, நேர்வாளம், இரதம், இந்த ஆறுவகையும் வகைக்கு விராகனிடை க. எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துச் சுண்டைக்காயளவு உண்டைபண்ணி வைத்துக் கொண்டு, புளியுள்ளே வைத்து விழுங்கவும். வெந்நீர் குடிக்கவும், வெந்நீர் கையாடவும்.

தாபச்சுரத்துக்கு:

நாணல்வேர், சிறுகாஞ்சோரிவேர், முத்தக்காசு, பாற்பாடகம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், அத்திதிப்பிலி, சுக்கு இவை சமன் கொண்டு இடித்துக் தூளாக்கி வைத்துக்

கொண்டு, வெருகடி தூள் போட்டுக் காய்ச்சிக்கொடுக்கவும் பொரிகஞ்சி காய்ச்சிக் கொடுக்கத் தாபசுரம் விடும். தண்ணீர்த் தாகம் சுரம், விடும். உள்ளுழலை நிற்கும். கைகண்டது.

End

நாள்பட்டசுரத்திலே விஷபாகம், வீக்கங்கள் எடுத்தால் எண்ணெய்:

சித்தவரைக்கிழங்கு, அவுரிவேர்ப்பட்டை, வக்கணத்தி வேர்ப்பட்டை, சாறணைவேர், வட்டக்கிலுகிலுப்பைவேர், முடக்கொத்தான் வேர். வேலிப்பருத்தி வேர், ஒரொன்று கழஞ்சி. முருக்கிலை, செம்முள்ளியிலை, இண்டிலை, சங்கிலை, சிறு வழுதலையிலை, தூதுவளையிலை, கரிப்பான், செருப்படியிலை, ஆடாதொடையிலை, நாரத்தையிலை, பருத்தியிலை, மணித்தக் காளியிலை, வெள்ளறுகு, ஊ ர று கு, ஒரொன்று சாறு நாழி கழுதையிலத்தி பிழிந்த சாறு உரி, கழுதைப்பால் உழக்கு, உள் ளிவராகன் 2, வசம்பு வராகன் 2, கூட்டி மருந்தும் அரைத் துச் சாறுங்கூட்டி நாழி யெண்ணெயிலெரியிட்டு, வடித்து உள்ளுங்கொண்டு மேலும் பூசச் சுரம், விஷபாகம், வீக்கம் தீரும்.

---

118. No. 86 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *282;* Lines 2—5 in a Page.

இதில், மலட்டு விப்புருதி, மாந்தம், கணம், கிரந்தி, கழிச் சல், பிரமியம், அரையாப்பு, பித்தபாண்டு, விஷபாண்டு காமாலை, பாரிசவாயுவு, சோகை, குட்டம், கர்ப்பவிப்புருதி மேகவெட்டை, கண்டமாலை, சன்னி, பெரும்பாடு, குழந்தை

நோய் பலவகைப்பட்ட வியாதிகளுக்கு மருந்துகள் அனுபோகமுறையில் சொல்லப்பட்டுள்ளன. இதில் இடையிடையே ஏடுகள் சிதைந்திருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning:

மலட்டு விப்புருதிக்கு மருந்து

கொழிஞ்சி வேர்ப்பட்டை பலம் க, கருஞ்சீரகம் பலம் க, வேம்பாடம்வேர் பலம் க, இதையிடித்து வேப்பெண்ணெயில் காய்ச்சி, மாலைநேரத்தில் பதமாயிறக்கி வடித்துப்பதி னைந்து நாள்கொள்ளவும். பூச்சி விழும். கெர்ப்பந்தரிக்கும் இதற்குப்பத்தியம்:— உப்புப்புளி தவிரவும்.

கண்டமாலைக்கு

கண்டமாலைக்குத் தவசி முருங்கையரைத்து மூன்று நாள் போடவும். பிறகு தைலம் போடப் பேய்ப்பீர்க்கம் விதை படி 2, சித்தாமணக்கம் விதை படி 2, தேத்தாம் விரை படி 2, அழிஞ்சி விதை படி 2, எட்டி விதை படி 2, விளாஞ்சிராய் குறுணி இதுசேர ஒரு பாண்டத்திற் போட்டுத் தைலமிறக்கி எடுத்து, நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனிடை 3, பொடி செய்து, தைலத்தில் போட்டுக் கிளறிச் சீலையில் தேய்த்துப் புண்ணிற் போடக் கண்டமாலை தீரும். கைகண்டது.

End:

சுரத்தின் மேல் வீக்கத்துக்கு

வெள்ளாட்டுப்புழுக்கை, வெள்ளாட்டுக்கோமியம், விட்டு அரைத்துப்பூச வீக்கம்வாடும். இதுவும் பொடுதலை சமூலமும், நீர்முள்ளி சமூலமுமாவை சமூலமும், பிரமிசமூலமும் வெள்ளைக்காக்கரட்டான் சமூலமும், ஆலம் ஈர்க்கு, புலிதுடக்கித்தண்டு, சிறுவழுதலைச்சமூலமும், நல்லவேளைத்தண்டு, முருக்கிலை, பாதிரியீர்க்கு. ;பாலுவேர், சுரைத்தண்டு, துளசி சமூலமும், விஷ்ணுகரந்தி சமூலம் இது சமன்கொண்டு குறுக

நறுக்கி, குறுணி நீரிலிட்டுச் சுக்கு மேல்தோல் சீவித் தட்டிப் பொட்டு. மிளகு, திப்பிலி உள்ளிமுடிந்து போட்டு, உழக்காய் காய்ச்சிக் குடிக்கும்போது, முடிந்த மருந்தும் அரைத்துக் கலந்து கொடுக்கவும்.

குறிப்பு:

இதன் கடைசியில் வியாதிகளுக்கு எழுதிக்காட்டும் சக்கரங்கள் எழுதிய 6 ஏடுகள் இருக்கின்றன.

---

119. No. 87 வைத்திய அட்டவணை

ஏடுகள் 202; Lines 2—5 in a Page.

இதில் பலவகைப்பட்ட வாயுவு ரோகங்களுக்குப் பல விதமான மருந்துகள் அனுபோக முறையாக எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning

பதிநாலுவாயுவுக்குந் தூள்

பச்சைநாபி, நெரிவிஷம், மிளகு, அக்கராக்காரம், சாதிக்காய், திப்பிலி, சுக்கு, வெங்காரம், குங்கிலியம். இந்துப்பு. காந்தம், சவுக்காரம். பெருங்காயம், அசமதாகம், சீதளத்தைலம், நாகதாது, கெந்தகம், சாதிலிங்கம் ஒவ்வொன்று 3 ப. நிறையாகக் கூட்டி வறுத்துப்பொடிசெய்து, தேனிலிடப் பதினாலு வாயுவுந் தீரும். இது கைகண்டது.

பாரிசவாயுவுக்கு:

வெள்ளுள்ளி உரித்த பல்லு இரண்டு சிரங்கை, முளை யெடுத்துப் போட்டுப் பொன்னிறமாக வறுத்து, உடனே விளக்கெண்ணெய் குத்தி, இரண்டு மூன்று கருப்புக்கட்டி,

பொடி பண்ணிப் போட்டுக் கிண்டிச்சுடச் சுடத்தின்னவும், இப்படி மூன்று நாள் தின்னப் பாரிசவாய்வு தீரும், துவரைக் கட்டு, மிளகு நீர் வார்த்து அசனம் பண்ணவும். தீரும். கைகண்டது.

End

வயிற்றுவலி, கடுப்பு, சீதக்கட்டு, இரத்தப்பிரமியத்துக்கு:

திரிகடுகு, கொத்தமல்லி, ஓமம், உள்ளி, வசம்பு, அரைத்துப்பழம்புளி கரைத்து, மிளகுநீர் காய்ச்சி மூன்று நாள், அசனத்துடன் கூட்டவும். இரத்த பிரமியத்துக்கு, எருமைத்தயிர் வடித்து அதில் ஒரு காசிடை ஊமத்தை யிலைச்சாறு விட்டுக் குடிக்க மாறும்.

---

120. No. 88 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 143; Lines 2—5 in a Page.

இதில், வல்லை, பிரமியம், குறைநோய், உடம்பிற் கற்றாழை நாற்றம், எலும்புருக்கி, உழலை, மூர்ச்சை, தாகம், வெப்புப்பாவை, அகுவை, கவுசை, கெண்டை, கண்டமாலை, வாய்ப்புண், கெர்பநோய் முதலிய வியாதிகளுக்குப்பலவிதமான மருந்துகளும் அனுபோகமுறையில் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning ·

வல்லைக்கு மருந்து

சன்னசாலைக்கடுகு, கல்லாய்ந்து அன்ருடகம் சத்து சத்து தின்னக்கரையும். வேறு:-அழிஞ்சில்வேர் அரைத்து மிளகரணை வேர் சமனுகக் கூட்டிப் பசுவின் பால் வார்த்தரைத்து, குன்றி

மணிபிரமாணம் உருண்டைபண்ணி.சன்னசாலைக்கடுகு அரைத்துப்பதினேரு உருண்டை உருட்டி, முந்தப்பசுவின்பாலில் வார்த்து, உழக்குக்குடித்து, அழிஞ்சில்வேர் அரைத்த உருண்டை ஒன்று,தன்னபின்பு கடுகு அரைத்த உருண்டை ஒன்று, தின்ன இப்படி பதினேரு உருண்டை அழிஞ்சில்வேர் அரைத்த உருண்டை பதினென்றும் மாறி மாறி இருபத்தொரு உருண்டையுந்தின்று பின்பு களிப்பாக்குங் காசுக்கட்டியும் ஆகநாலாறு திறம் பாக்கு வெற்றிலை தின்னவும், முதுகில் இளவெயில்பட இருக்க வாந்தி பண்ணும். பின்பு மிளகுசாறும், சோரும் அசனம் பண்ண இப்படி மூன்று நாள் தினம் இருபத்திரண்டு உருண்டையுங் கொள்ளவும். வல்லைவியாதி நிற்கும். கடுகு ஒரு மண்டலம் சாப்பிடவும். இதற்குக் கைப்புப் புளிப்புத் தவிர்க்கவும்.

சீதம் விட :

கன்று நடுவேருங் கரியமால் தன்தொடையும்
நன்று மிளகுடனே நாகரமும்—என்றரிய
இப்பிலியில்னுடே திகழரைத்துக் கொண்டக்கால்
வெப்புடனே சீதம் விடும்,

End:

வாய்ப்புண்ணுக்கு :

நெய் பலம் 4, திப்பிலி பலம் வ. சுக்கு பலம் ⅛, தேத்தாங் கொட்டை பலம் ⅜, கருஞ்சீரகம் பலம் ⅜, ஏலம் பலம் வ. சாதிக்காய் பலம் வ, அதிவிடயம் பலம் ¼, அதிமதுரம் வ, சிறு நாகப்பூ பலம் ⅜, அரத்தை பலம் ⅜, சிற்றரத்தை பலம் ⅜, கிராம்பு பலம் வ, சர்க்கரை பலம் வ, கோஷ்டம் பலம் ¼, முந்திரிகைப்பழம் பலம் ¼, சுக்கு பலம் ½, மிளகு பலம் ½, அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து உள்ளே கரண்டி கொள்ளவும்,

இதுவும் வாய்ப் புண்ணுக்கு நொச்சி இலையை மென்று உமிழவும்.

121. No. 89 இரசவாத மருந்துகளின் அட்டவணை.

ஏடுகள் *372;* Lines 2—5 in a Page.

இதில், இரச வாதத்திற்குரிய பலவகையான பற்பம், செந்தூரம், கட்டு வகைகளும், வைத்திய அனுபோக முறைகளும் சொல்லப்பட்டுள்ளன. ஜாலங்களும், மந்திரங்களும், காய கற்ப முறைகளும் இருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning:

அபத்திய குணம்;

கொள்ளுக்காடி கொமட்டிக்காய் கோழிபன்றி செம்மறியும்
பள்ளச் செம்பு வல்லாரைபாலை சுரைக்காய் பூசினிக்காய்
துள்ளப்பருத்த பாகற்காய் சுண்டையவரை பெரும்பயறு
மெள்ளத்தனையுந் தின்பீரே லெல்லா மருந்து மிழந்தீரே.

வாதத் தொழில்:

பூகரேக்குப் பொடியாக்கி, வெங்கலப்பொடியுஞ் சமன் கூட்டி, நிறுத்துக் குகையிலிட்டு வெங்காரமிட்டு நாகமுருகிற முகத்தில் குத்தி உருக்கத் தாம்பிரமாம். இந்த தாம்பரம் மூணு கூறும், வெள்ளி ஏழு கூறும், கூட்டியுருக்கினால் நால்மை

மாத்துக் காணும்.

ரசவலிவு;

பாலைப்பால் பஞ்சிலூட்டி ஒரு குகைபிடித்து அதில் பாலைப்பால் விட்டு அதில் கழஞ்சு ரசம் விட்டுக் குகையை வைத்து, இருபது நாழிகை கரிபோட்டுருக்கக் குளிகையாம் இந்த குளிகை துய்யான் கழஞ்சுக்கு ஒருமாக் குடுத்துப் பார்க்க ஒன்பது மாற்றும்.

End

இலிங்கச்செந்தூரம்:

வெடியுப்பு பலம் 2. சட்டி காயவைத்து சட்டியிலிட்டுத் தீயெரிக்க உருகுமதில் கருங்கம்பிளியைப் பிச்சுப்போட வெண்ணெய்போலேயாம் அதை ஆறவைத்து அதிற் சீனக்காரம் பலம் 1½ நவச்சாரம்,...............

---

122. No. 90. வைத்திய அட்டவணை.

ஏடுகள் *288*; Lines 4—5 in a Page.

இதில், பலவகையான கஷாயம், சுரசம், எண்ணெய், கிருதம், லேகியம், ரசாயனம், சூரண முறைகளும் அவைகளால் தீரும் வியாதிகளும் சொல்லப்பட்டுள்ளன, அச்சிடப்படவில்லை.

Beginning:

மேக ரோகத்திற்குக் கஷாயம்:

திரிபலை, மரமஞ்சள், பாதிரிவேர், கோரைக் கிழங்கு, பாவட்டை இவை சமபாகம் கஷாயம் வைத்து, மஞ்சள் பொடிபண்ணிப் போட்டுத் தேன்குத்தித் கொடுக்க, மேக ரோகந்தீரும்.

மது மேகத்திற்குக் கஷாயம்:

தேற்றும் விதை நெல்லிமுள்ளி, புரசம்பட்டை, கடுக்காய் இவைகஷாயம் வைத்துச் சாப்பிட, மது மேகம் தீரும்,

வாசாதி கிருதம்:

ஆடாதோடையிலை, சீந்திற்கொடி இவையிரண்டும் கஷாயம் வைத்து, இறுத்துக்கொண்டு பசுவின் நெய்விட்டுக்

காய்ச்சி, மூங்கிலுப்பு, திப்பிலி, அதிமதுரம் இவை பொடி பண்ணிப் போட்டுக் சர்க்கரையுஞ் சேர்த்துச் சாப்பிடத் தீரும் வியாதிகள்:— பயித்திய ரோகம், குட்டங்கள், சயம், காசம் இரத்தபித்தம், அரோசிகம், தலைமயக்கம், பயித்தியக்கிராணி பயித்திய குன்மம், மேகரோகம் இவைகள் தீரும். இளைத்த பேர்கள் பெருப்பார்கள்.

End

கெர்ப்பிணிகளுக்கு வந்த வாதத்திற்குச் சூரணம்:

சீரகம், திப்பிலி இரண்டும் பொடி செய்து, தேனிலாவது வெல்லத்திலாவது உள்ளங்கைக் கொண்டது சாப்பிட்டால் கெர்ப்பிணி வாதம் தீரும்.

---

123. No. 91 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 288; Lines 2—5 in a Page.

இதில், கெர்ப்பிணிகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும், உண்டாகும் பலவகையான வியாதிகளுக்குப் பலவிதமான மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை. இடையிடையே ஏடுகள் ஒடிந்தும், சிதைந்தும் இருக்கின்றன.

Beginning:

பிரசூதத்திற்கு ;

செம்பை விதையை யரைத்துத் தொப்பூழிற்றடவவும், ஊமத்தை வேர் தலைகீழாய்க் கட்டித் தூக்கவும். முள்ளிவேர், நாயுருவிவேர், விட்த்தேர் இவை மூன்றும் குளிசமாடிப் பெரு விரலில் இட்டு இறக்கப் பெறநோக்கும். இந்தக் குளிசம் எண் ணெயில் தோய்த்துச் சிரசிலிருந்து இறக்கித் தடவப் பிரசூதி யாம்.

பெண்பிள்ளைகளுக்கு நஞ்சுவிழாமலிருந்தால்

பிள்ளைபெற்ற பெண்டுகளுக்கு நஞ்சுவிழாமலிருந்தால், கருணைசமூலமும் பறித்து முதுகுதண்டிலே இறங்கப்பூச நஞ்சு விழும், உடனே துடைத்துப் போடவும்.

கணத்திற்கு மருந்து

கடுக்காய், வெந்தயம், நற்சீரகம், கருஞ்சீரகம், கடுகு ரோகணி, வட்டத்துத்திவேர், சாரடைவேர், ஈரவெங்காயம், கற்றாழைமடல், பழம்புளி இவைகூட்டி அரைத்து விளக்கெண்ணெய் பிழிந்து வடித்துக்கொண்டு, பிள்ளைகளுக்கு வார்க்கவும். இது கைகண்டது, பத்தியம் ஒன்றும் ஆகாது.

End

முலைப்பால் குடியாத பிள்ளைக்கு

சிறுகீரைவேர், முலைப்பாலில் அரைத்து வார்க்க முலை குடிக்கும்.

---

124. No. 92 விஷவைத்திய அட்டவணை.

ஏடுகள்; *246;* Lines 2—5 in a Page.

இதில் எல்லாவிதமான விஷங்களுக்கும் மருந்துகளும் சிலமந்திரமும் சொல்லப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning:

வெள்ளைக்குன்றிமணிவேர் வாயிலடக்கினால் சகல விஷங்களும் தீரும்.

பேய்க்கு, சன்னிக்கு, விஷத்துக்கு.

காயங்கார மரித்தாரங் கனிவா யிரத மிந்துப்பு
பேயின் பீர்க்கு இலைசசாறு பேணியரைத்து உண்டைசெய்து
மாயம்போல விஷந்தீண்டிவருவார் கண்ணிலிடுவீராய்ப்
பேயுந்திரும் விஷமீளும் பெருத்த சன்னியு முறிந்திடுமே.

எலிகடி இரைப்புக்கு மருந்து

வெல்லம் இரண்டுண்டையில் எருக்கம்பால் வார்த்துக்
குழைத்து தேத்தாங் கொட்டை யளவு உருண்டை
பண்ணிக்காலமே ஒரு உருண்டை தின்னவும் ஏழுநாளில்
இரைப்புத்திரும். சீராகுங்கைகண்டது.

End

நஞ்சுதின்ன பேருக்கு

செம்பையிலையரைத்துக் காடியில்கரைத்து மஞ்சளுங் கொடுக்கவும். பத்தியம்:—சிறுபயறு கஞ்சி காய்ச்சிக் குடுக்கவும்.

---

125. No. 93. வைத்திய அட்டவணை.

ஏடுகள் *226;* Lines **2—5** in a Page.

இதில் செவிநோய்கள், பீனிசரோகங்கள், பல்லிலுண்டாகும் வியாதிகள், கபாலத்தில் காணும் பிணிகளுக்குப் பலவிதமான மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை. இடையிடை யேடுகள் முறிந்திருக்கின்றன.

செவியடைப்பு, தலைநோவு, இரைச்சல், காய்ச்சல்களுக்கு எண்ணெய்,

நொச்சி, சாரடை, உத்தமதாளி, திராய் இவை ஒரொன்று சாறு நாழி கொள்ளவும். முடக்கொத்தான்,

ஈசுரமூலி, கூவிளை, சங்கு, புங்கு, கச்சச் குறுஞ்சா, சாரணைவேர் அவுரி, உத்தமதாளி, குன்றி, நத்தைச்சூரி, குதிரைவாலி திராய், நிலக்குமிழ், கரந்தை, நொச்சி, இலுகிலுப்பை இவை ஒரொன்று கழஞ்சு கொண்டு மேல் மருந்து :—அரத்தை, சதகுப்பை, தேவதாரம், மஞ்சள், கருஞ்சீரகம், வெளுத்த பிசின் திப்பிலி, சுக்கு, கடுகுரோகணி, மிளகு, வெள்வெங்காயம் வசம்பு, சாதிக்காய், பெருங்குரும்பை, கிராம்பு, ஏலம், இலவங்கம் இவை ஒரொன்று கழஞ்சு. இவையெல்லாம் அரைத்து இலுப்பை எண்ணெய் நாழி, நல்லெண்ணெய் நாழி, சிற்றாமணக்கெண்ணெய் நாழி புகட்டி .... முழுகி நசியம் பண்ணவும். இதுக்குத் தீரும் வியாதி ;— செவியடைப்பு, தலைநோவு, இரைச்சல், மந்தம், காய்சசல், வாயுந்தீரும் கைகண்டது.

ஒருத்தலை வலிக்கும் நாசியாலேயிரத்தம் விழுகிறதற்கும்

மஞ்சள், வசம்பு, கடுகுரோகணி, ஆக இவை தன்னிலொக்கக் கொண்டு பொடிசெய்து சேலையிலூட்டித்திரித்து விளக்குக் கொளுத்தி நாசியிற்புகை பிடிக்கவுந் தீரும்.

End

கபாலவலிக்கு மருந்து

பூவம்பழமும் பவழரப்பும் புதிய மிளகு மிந்துப்பு
மாவந்துடங்கு மகத்திப்பா லதுவோடொக்கப் பொடிகொண்டு
தாவமுலைப்பால் தனிற்கலக்கித் தப்பாதிரண்டு நாசியிடப்
பாவக்கபால வலிதானும் பிசாசு மகன்று போமன்றே,

---

126. No. 94. வைத்திய அட்டவணை.

ஏடுகள் 251; Lines 2—5 in a Page.

இதில் நீரிழிவு, பிரமியம், மூத்திரக்கிருச்ரம், கல்லடைப்பு, முதலிய வியாதிகளுக்குப் பலவகையான மருந்துகள் அனுபோகமுறையில் எழுதப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning

நீரிழிவுக்கு மருந்து

ஆவாரம் விதை, ஓதியம்பட்டை, துத்திவிதை, பனை விதை, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, நவதானியம் இவை யெல்லாம் இளவறுப்பாய் வறுத்து, நன்றாய்ச சூரணம் பண்ணி, வெருகடி பிரமாணம் சாப்பிடவும். வாழைக்காய், மொச்சைப்பருப்பு, கறி பண்ணிக்கடுகு, வெந்தியம் வகைக்கு மூன்று விராகனிடை போட்டுக் கறி பண்ணிச்சாப்பிடவும்.

நீரிழிவு பிரமேகத்திற்கு மருந்து

குன்றியிலை, வேலம்பூ, ஆவாரம்பூ, உழுந்து, இது நாலும் சூரணம் பண்ணிப் பேயன்பழத்திலும் சர்க்கரையிலும் வெண்ணெயிலும் கூட்டிப் பிசைந்து கொள்ளத்தீரும், கைகண்டது.

பிரமியக் கல்லடைப்புக்கு:

நாயுருவியிலை யொருபிடி, ஈர வெங்காயம் ஒரு பிடி, இரண்டுங் கூட்டி அரிந்து வேகவைத்து அந்தச் சட்டியிற றுனே உழக்குப் பசுவின் நெய்விட்டு வறுத்துத் தின்னவும். நாலு நாள் தின்னவும் கல்லடைப்புத் தீரும்,

End

நாகப்பூ, புளியம் விதைத்தேநல், தக்கொலம், கோரோசனை, ஓமம், ஓரொன்று ஒரு கழஞ்சு கூட்டிப் பசுவின் பால் விட்டரைத்துக் கலந்த'பதத்தில் வடித்துக் காலமே ஒரு மண்டலங் கொள்ள நாட்பட்ட எலும்புருக்கி, காய்ச்சல், இருமல், சயம், நாலுவிதமாய் விழுகிற மேகம் இருபத்தொன்றும், காமாலை, பாண்டுரோகம் இதுமுதலான வியாதி யெல்லாம் தீரும். இன்னும் கோவை வேரைப் பசுவின் பால் நாழியி லெட்டு நாள் கொள்ளவும். அசாத்தியமான மேகங்களெல் லாந் தீரும்,

127. No. 95 வைத்திய அட்டவணை

ஏடுகள் 258; Lines 1—8 in a Page.

இதில் நவரெத்தினங்களின் சுத்தியும் அவற்றின் பற்ப முறையும், நவலோகங்களின் சுத்தியும் அவற்றின் பற்ப செந்தூரங்களும் வேறு பலவகையான மருந்துகளும், அவற்றால் தீரும் வியாதிகளும், சொல்லப்பட்டிருக்கின்றன. இடையிடையே சிதிலமாயிருக்கிறது. அச்சிடப்படவில்லை.

Beginning :

....ப்பு, வளையலுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, கெந்தவடியுப்பு, நவசசாரம், சத்திச்சாரம், எவச்சாரம், ...டும் வகைக்கு விராகனிடை க வெங்காயம், துத்தம், கெந்தகம், சவுக்காரம், எள்ளு சுட்ட சாம்பல் கரைத்து.............த்துக் காய்ச்சி யெடுத்த உப்பு, நாயுருவி சுட்ட சாம்பலில் கரைத்து எடுத்த உப்பு, இவை................... வகைக்கு விராகனிடை க, படிக்காரம் சேர் இ, நவச்சாரம் சேர் இ இவைகளை யெல்லாம் குறுணி..........ணை தண்ணீரில் கரைத்துத் தெளிவிறுத்து, அந்தத் தண்ணீரிலே ஏழுநாள் ... .து....................வைத்து, தோண்டியிலடைத்து வாலை கட்டித் திராவகம் இறக்கினால் சங்கத் திராவகம்..............

வெள்ளி பற்பம் :

சுத்தி பண்ணின வெள்ளியை யீசலிறகு போலே தட்டி காக நிமிளையைப் பால் வார்த்தரைத்து, ஏழுவிசை உலரப் பூசி அகலிலிட்டுச் சீலைமண் செய்து, கசபுடம் போடப் பற்பமாம். பணவெடை சகல ரோகத்திற்கும் கொடுக்கலாம்,

குஷ்டத்திற்குக் குக்கில் ரசாயனம் :

சுத்திபண்ணின குக்கில் சேர் 1, கெந்தகம் சேர் 1, கார்போக அரிசி சேர் 2, இடித்து, சூரணம்பண்ணித் தேனில்

மூவிரல் கொண்ட தூள் மத்திச்சுச் சாப்பிடவும். பதினெட்டு வித குட்டம் போம். சமுசயமில்லை.

End

கண்டத்திப்பிலி ரசாயனம் ;

கண்டத்திப்பிலி தூள் படி ¼, திப்பிலி தூள் படி ⅛, நெய் பலம் 6, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு பலம் 8, ... படி க, நெல்லிமுள்ளி, கொத்தமல்லி, ஏலம், சிறு நாகப்பூ, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சுக்கு, விலாமிச்சம்வேர், மிளகு, கோரைக்கிழங்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி முள்ளி, சடாமாஞ்சில், கருங்காலி, சீரகம் வகைக்கு விராக னிடை 2 இடித்துச்சூரணம் பண்ணித்தேன் விட்டுப் பிசைந்து, கழற்சிக்காய் பிரமாணம் சாப்பிடுகிறது தீபனம் உண்டாம். சத்தி நிற்கும். மாரிடிப்பு, தாகம், அரோசிகம், அம்லபித்தம், ரெத்தபித்தம், க்ஷயம், இவை போகும், சீதபித்தமும் போம். இது வெல்லாம் அடுப்பில் வைத்துப் பதமாய்க்கிளரி யெடுத்து வைத்துக்கொண்டு கழற்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும். தீபனம் உண்டாம். அதிக தாகம் போம். அம்லபித்தம் போம், ரெத்த பித்தம் போம். சீதபித்த மிதுகளெல்லாம் போம்.

---

128. No 96. வைத்திய அட்டவணை.

ஏடுகள் *181*; Lines 5 in a Page.

இதில், கண்டாமலகம், ஏலாதிச் சூரணம், தாம்பிர பற்பம், அரிதார பற்பம், மகா ஏலாதி சூரணம், சாதிலிங்க பற்பம், கெந்தக பற்பம், அபிரேக பற்பம், மூதண்டத்தைலம், வாலு முவை நெய், அபிரேக செந்தூரம், ஈசுவரமூலி கற்பம், கெந்த காதி லேகியம், ஆனந்த வயிரவன், மகா நாராயணத் தைலம்,

அமுதசஞ்சீவிக்குளிகை, கூஷ்மாண்ட ரசாயனம், அக்கினி குமரன், ஏலாதிச்சூரணம், கதலிக் கிருதம், மகா சிந்தாமணிக் கோடாசுழி முதலிய மருந்துகளும், அவறறுல் தீரும் வியாதி களும் சொல்லப்பட்டிருக்கின்றன. சிறுபான்மை பாடலும் பெரும்பான்மை வசனமும் கலந்தெழுதப்பட்டிருக்கின்றன.

Beginning:

பயித்தியம், நாவறட்சி, தியக்கம், நடுக்கல், வயிறெரிப்பு, சலக் கழிச்சல் இதற்குக் கண்டாமலகம்:

கண்டாமலகச்சா றெருகுதுறுணி நாஞுழிசாறுமே கூஷ்பாண்டம்
கருது சர்க்கரை பலமிருபது கரைத்துக் காய்ச்சி குழம்பு
செய்தே
உண்டானதோர் திரிகடுகு செவ்வியம் சீரகத்துடனிந்து
மொன்றிரு பலம்
ஓது மிலவங்கமு முத்தமு மேலமு முறுமதுர நாகமலருந்
தணடாது பச்சிலே தாளிசபத்திரந் தனதுபல மரையள
பொடியாய்த்
தண்ணுலவுபூசினிக்காயுலர்ந்ததை நெய்தனிற் பொரித்துப்
பொடிசெய்தே
பண்டானதோர் குழம்பிற்றாவி வெந்துறு பதத்தில் நெய்
தேனிருபடி
பாரித்திறக்கி நித்தமூன்று காசிடை கொள்ளப்பறந்திடும்
நோய்கள்கேளே.

கேளுங் குணமாம் வியாதிகள்தான் கிளரும்பித்தம் நாவரட்சி
மூளுந்தியக்கம் விக்கலுடன் முதிர்ந்த கடிகள் பல நோவும்
நாளு நாளு மெய்யுலர்தல் வியர்வு வயிறெரித்தல்
வேளில் மகா மெய்தானும் வீறுங் கண்டாமலகமிதே.

பல வியாதிக்கும் ஏலாதிச் சூரணம்

ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, மிளகு, சிற்றரத்தை, சிறுதேக்கு, கற்கடகசிங்கி, வெங்காரம், செவ் வியம், அதிமதுரம், நற்சீரகம், இவை ஓரொன்று விராகனிடை

க. திப்பிலி விராகனிடை 13 ஆக வகை 2க்கு கூட்டின விரா னிடை 26 இளவறுப்பாய் வறுத்துப் பொடிசெய்து, சர்க்கரை விராகனிடை 6 ஒக்கக்கூட்டிச்சேர்த்து வைத்துக்கொண்டு, அந்தி சந்தி தின்னவும். இதற்குத் தீரும் வியாதி :—காசசுவா சம், இருமல், மகோதரம் இளைப்புத் தீரும். கைகண்டது.

End

பித்த விஞ்சதிகுக்குலு பண்ணும்படி பலரோகத்துக்கு :

திரிகடுகு, திரிபலை, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், செவ்வியம், கொடிவேலி, ஏலம், இலவங்கப்பட்டை, திப்பிலி மூலம், மாசுஷிகம், தேவதாரம், ஆமணக்கம் வேர், பேயத்தி. (சித்தா) முட்டிவேர், மஞ்சள், மரமஞ்சள், சவ்வச்ச லவணம், எவசசாரம், இந்துப்பு, திப்பிலி, அத்தித்திப்பிலி, ஓமம் இவை சமன்கூட்டிச்சூரணம் பண்ணி, இதுக்குச்சரி குக்கிலும் (சுத்தி யானது) கூட்டிச் சூரணம் பண்ணி, இரண்டுமாகக் கூட்டி ஒரு விராகனிடை தேனில், நெய்யில் கொள்ளக் காசசுவாசம், மூலம் பவுத்திரம், குன்மம், வயிறூதல், குடல்வாதம், வாந்தி, உள மாந்தை, வாதங்கள், குட்டம், பதினெட்டும் தீரும். சாராயத் திற்கொள்ளுகிற பேருக்குச் சாராயத்திற் கொடுக்கவும்.

---

129. No. 97 (a) தேரையர் வைத்தியம் குணவாகடம்.

ஏடுகள் *169* ; Lines 5 in a Page.

இதில், வெள்ளைக்குட்டம், அதிசாரம், தவளைக்கடி, வங்கு, தேமல், படர்தாமரை, காசபடலம், கண்ணிமைத்துடிப்பு, குந்தம், பித்தகாசம், முதலிய கண் வியாதிகள், இருமல், மூலம், மகோதரம், சுரங்களுக்கு மருந்து, வியாதிகளின் குணம் சில பதார்த்தங்களின் குணம் ஆகிய இவைகள் கூறப்பட்டுள்

என. ஆரம்பத்திலாவது கடைசியிலாவது, இன்னார் செய்தார் என்றெழுதப்படாவிடினும் செய்யுளை நோக்கும்போது தேரையர் வைத்தியம்போலக் காணப்படுகிறது.

Beginning:

தலைமுழுக, தலைமயிற்கறுக்க ;

அருக்கன் எண்ணெய் அழகழிக்கும் அணியார் திங்கள் அழகுண்டாம்
செருக்கும் செவ்வாய் தீயாகும் சீரார் புதனே மதியுண்டாம்
கருத்தை யழிக்கு நல்வியாழங் கள்ளவெள்ளி நோயாகும்
பெருக்கச் சொன்னோம் சனியெண்ணெய் பேணிமுழுகும் பெரியோரே.

கையாந்தகரைக் காரெள்ளு கார்புகவரிசி கருஞ்சீரகம்
மையர் நிலத்திலாவாரை வேர் மற்றும் நீலி வராகியுடன்
நெய்யோடிதனை யோரிரண்டு நிகழாதுண்ண வல்லீராய்
மையார் குழலும் வண்டாகும் வாணுள் கோடியிருப்பீரே.

எண்ணெயின் குணமே தென்னில் இளமையு மொளியு முண்டாம்
கண்ணிரு செவியும் நோவும் காசமுங் கனிவு மாற்றும்
புண்ணினில் நோவு மாற்றும் புனிதுடல் வியர்வு போக்கும்
திண்ணிய கபமுங் காத்துத்திகழ்கிரத் திருமல் போக்கும்.

End:

கண்டித மாகச்சொன்னோங் கருதியே மருந்து கொண்டால்
மிண்டிய சூரிமாரி மிகுத்ததோர் கிருட்டி சிட்டு
கொண்டலா பஞ்சரட்டைக் குறுகிய சேவல் காடை
மிண்டிய தூக்கினுத்தி மிகுத்தசொல் கிளியுங் குயிலும்
பண்டித ரெல்லாஞ் சொல்வர்பத்திய மாகு மன்றே. 323

---

130. (b) சுரத்தின் பிறப்பும் அதன்வகையும்

Lines 5 in a Page.

இதில் சுரங்களின் லட்சணமும் அவற்றிற்குக் குடிநீரும் சொல்லப்பட்டுள்ளன. 48-வது செய்யுளிலிருந்து எழுதப் பட்டிருக்கிறது.

Beginning ·

காலுச்சி அயர்தி யளவாகவே சென்று தம்பித்து நிற்கு
முடனே
மேலுச்சி வாதமுள தாகியே சென்றுபின் மெய்யும் நலிந்து
மெலிவாம்
கோலிற் சிறந்ததோர் வாதமுற் கூறுடன் கொண்டதோர்
பித்த மூன்று
வாலிற் சிறந்ததோர் அய்யமொரு கூருகும் வாதசுரம் வந்திடு
வதே.

End:

கரைத்துப் பதந்தனி லேவடித் துக்கழஞ்சு நெய்தா
னருந்துவீராய்
விரைத் தோடலரு மளக மின்னெ மிகவுங்குளிரு முடம்
பெல்லாம்
உதைத்தே வாகடநூலதனே உண்மையாக வுரை செய்தோம
தரைக்குள் முனிவன் சொன்னதனைத்தானே சொன்னேன்
தாரணிக்கே.

---

131. (c) வைத்திய அட்டவணை.

Lines 5 in a Page.

இதில், பாண்டு, கிராணி, பிரமியம், சத்திகுன்மம், விஷ பாகம், விப்புருதி, சலக்கழிச்சல், கல்லடைப்பு, கண்வியாதி, முதலிய வியாதிகளுக்கு மருந்துகள் அட்டவணையாக எழுதப் பட்டுள்ளன.

---

132. No. 98 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 220; Lines 2—5 in a Page.

இதில், கரப்பான், விஷபாகம், மகோதரம், வீக்கம், சோகை, ஊதுகாமாலை, அரையாப்பு, பிளவை, துடைவாழை, ஓடுவிப்புருதி, பவுத்திரம், கண்டமாலை முதலிய வியாதிகளுக்குப் பலவிதமான மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. அச்சிடப் படவில்லை.

மண்டைக் கரப்பானுக்கு :

கொடிவேலி வேர், குருந்த வேர், ஆடாதோடை வேர், நெருஞ்சி வேர், கருநொச்சி வேர், நிலக்கடம்பின் வெர், சிறுகீரை வேர், வேலிப்பருத்திவேர், ...வேர், புங்கம் வேர், எருக்கம்வேர், கடுகுரோகிணி, அரத்தை, கருஞ்சீரகம், கார்போகரிசி, இவை தன்னிலொக்கக் கூட்டிக் கோமியம் வார்த்தரைத்து எண்ணெயிலெரித்துத் தலையிலுமிட்டுப் பூச மண்டைக்கரப்பான் தீரும்.

விஷபாகத்துக்குக் குடிநீர் :

செம்முள்ளி பஸ்பம் பண்ணி, கடுக்காயும் பஸ்பம் பண்ணி நாழி வெள்ளாட்டுக் கோமியத்தில் அரைத்துக் கொடுக்க, விஷபாகம் தீரும்.

கண்டமாலைக்கு எண்ணெய் :

மனுஷரைச் சுட்ட எலும்பைச் சூரணம் பண்ணி, வடிகொண்டு, நெய்க்கோட்டான் வேர்ப்பட்டை எடுத்து, நய்யத் தட்டி, ஒரு விளாங்கனிப் பிரமாணம் அரைத்து, நல்லெண்ணெய் நாழி விட்டு, மிளகு, வெள்ளுள்ளி, வசம்பு, ஓரொன்று இருகழஞ்சு அரைத்துக் கலந்து எண்ணெயிட்டு வரக் கண்டமாலை தீரும். கைகண்டது. இந்த எண்ணெய் இடுமுன்னே

வெள்ளிய சிலையை மோரிலே தோய்த்து எட்டுநாள் போட்டுப் பிறகு எண்ணெய் இட்டுவரவும்.

பிளவை, கன்னக்கிரந்தி, அரையாப்பு, வீக்கமென்னப்பட்டதுக்கெல்லாம் :

குன்றிமணிப் பருப்பு, எட்டிக்கொட்டை வகைக்கு கழற்சிக்காயளவு, நாபி விராகனிடை அரை, வெங்காரம் விராகனிடை அரை, கொடிவேலிவேர், எலுமிச்சம்பழச்சாற்றிலே வேகவைத்தது சிறு எலுமிச்சங்காயளவு எல்லாங் கூட்டி, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துப் பத்துப் போடவும். வீக்க மென்னப்பட்ட தெல்லாந்தீரும்.

133. No. 99. வைத்திய அட்டவணை

ஏடுகள் 202; Lines 2—5 in a Page.

இதில் நாற்பது வகையான பித்தங்களுக்கும், அவை சம்பந்தமான ஏனைய ரோகங்களுக்கும், பலவகையான மருந்துகள் எழுதப்பட்டிருக்கின்றன. முதலாவது ஏடில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning

அயலேகியம்:

லேகியத்திற் கலந்து தேன் படி ½ கலக்கவும். இரண்டு நேரமும் தான்றிக்காயளவு கொள்ளவும். பித்தம், பிரமை, விகாரம், மூர்ச்சை, அங்கதாகம், தலைச் சுற்றல், பயித்தியம், காமாலை, நீர்க்கடுப்பு, அதிசாரம், தாது நஷ்டம் இவை எல்லாந் தீரும்.

பயித்தியத்திற்கு நெய் பண்ணும் வகை.

பசுவின் நெய் குறுணிக்கு நீலிவேர் உலர்த்தி, ஏலம், வெல்லம், லவங்கம், அதிமதுரம், சண்பகப்பூ, செங்கழுநீர். கோஷ்டம், பொன்னுக்கண்ணிவேர், சிறுகீரைவேர், ஆரை வேர் இவை கூட்டி யரைத்துக் கரைத்து நெய் பண்ணி உள ளுக்குங் கொடுத்து, மேலுக்குமே பூசவும். பத்தியம்:—கார்ப்பு, புளிப்பு தவிரவும்.

End

வாந்தி விக்கலுக்கு, வாய் நீரூறலுக்கு

வாந்தி, விக்கலுக்கு மாதளங்காயுலர்த்திப் பொடி செய்து தேனில் கொள்ளத் தீரும். வாயில் நீரூறி வருகிறதற்கு. இஞ்சிச் சாற்றை வெச்சென வெதுப்பி வைத்துக் கொப்பளிக்கத் தீரும்.

---

134. No. 100. வைத்திய அட்டவணை

ஏடுகள் *167*; Lines 5 in a Page.

இதில் பலவிதமான வியாதிகளுக்கு மருந்துகள் எழுதப் பட்டிருப்பதோடு இரசவாத மருந்துகளும் கற்பமூலிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

இருமலுக்கு மருந்து

திப்பிலி கொண்டு வந்து வைத்துக் கொண்டு, நாழி கொள்ளுகிற பானையில் கால்படி பால் விட்டுப் பானைவாய்ச் சீலைகட்டி, அந்தச் சீலைமேல் திப்பிலி வைத்துச் சட்டிகொண்டு மூடி, இரண்டு நாழிகைஎடு(ரி)க்கவும், திப்பிலி எடுத்து ஆர்க்கப் பொடி செய்து, சீனிகற்கண்டு ஒரு பலம் பொடி செய்து கூடக்

கலந்து, தினசரி அரைக்காசிடை தின்னவும். வெந்நீர் குடிக்கவும். பத்தியம் ;—புளி, புகையிலை தவிரவும், பத்துநாள் கொள்ளவும், இருமல் தீரும்.

பித்தளைப் பிரயோகம்

பித்தளை ராவின பொடி நாலு விராகனிடை, அரிதாரம் இரண்டு விராகனிடை. செம்பரத்தம்பூவில் சிவப்பு வாங்கி ஆறுதிரமரைக்கவும். அதை அடைதட்டி உலர்த்தி அதின் மேலே ஏழு சீலைமண் செய்து, ஒருசாணுழம் ஒருசாணகலம் குழிகெல்லி அதிலே கீழும் மேலும் காட்டெரு வடுக்கிப்புடம் போட்டுத் தன்னுலாறவிட்டு எடுத்துப் பார்க்க மயில் கழுத்துப் போல இருக்கும். இப்படியிராமலிருந்தால் பின்னையும் ஒரு புடம் போடவும். அதை யெடுத்து வெள்ளிக்கு நாலுக்கு ஒன்று கொடுக்க நாலுமாற்றுக் காணும்.

End

சகல சுரத்திற்கும் :

ரசம், கெந்தகம், கெவுரி, வாளம், சுக்கு, கடுக்காய், வெங்காரம், சித்தாமணக்கு விதை ஆக சரக்கு 8-ம் சமன் கூட்டி எலுமிச்சம்பழச் சாறுவிட்டு, மூன்று சாமம் அரைத்து வெய்யிலிலே வைத்து, மெழுகு பதத்தில் எடுத்துக் குகையிலே வைத்து, மேல் சில்லுப்போட்டுச் சீலைமண் செய்து, வராக புடம் போடவும். ஆறவிட்டு எடுத்துக் கரியாயிருக்கிற அந்தக் கரியைக் கல்வத்தில் வைத்துப் பார்த்து ப—க்கு விராகனிடை ½. காவி சுத்தி பண்ணி, அரையிடை மிளகு போடவும் விளக்கெண்ணெய் விட்டு அரைத்துச் சிமிழிலடைத்து வைத்துக்கொள்ளவும்.

அனுபானம்:—பேராமுட்டி, சுக்குக் கிஷாயத்தில் கொடுக்கவும்.

பத்தியம் :— புளி, புகை தவிரவும், சகல சுரமுந் தீரும். மூன்று நாள் மூன்று பொழுது கொடுக்கவும்.

135, No. 101 போகர் நிகண்டு.

ஏடுகள் 274; Lines 5 in a Page.

இதில், சவுக்காரச்சுன்னம், கடுங்காரச் செயநீர், பஞ்சலவண உப்புக்கெதை, அயச்செம்பு, ரசேந்திர குரு, கெந்தகச் செம்பு, துருசிச செந்தூரம், வெடியுப்புச் செயநீர், திராவகம், நாகக்கட்டு, நாகச் செம்பு, காந்த ஈயம், மூலிகைச் செம்பு, முதலிய இரசவாத மருந்துகளும், சவுக்காரம்முதலிய உப்பின் பெயர், உபரசங்களின் பெயர், கடைச்சரக்கின் பெயர், கடைச் சரக்கின் சமுதாய குணம், லோக சமுதாய குணம், சரக்கு வைப்பு முதலியவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனை இயற்றியவர் போகநாயனுர், இவர் காலாங்கி அய்யரது மாணுக்கராவார். இதில் 784 செய்யுட்களிருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

Beginning:

அகண்டபரி பூரணமா மய்யர் பதம் போறறி
அடுக்க நின்ற உன்மனைத்தாய் பதத்தைப் போற்றி
நிகண்டெணவே திருமூல நாயர் பாதம் போற்றி
நீங்காமல் காலாங்கி அய்யர் பதம் போற்றி
புகண்டு நின்ற நாதாக்கள் ரிஷிகள் பதம் போற்றி
பேரான வாக்குடைய வாணிபதம் போற்றி
முகண்டு நின்ற குஞ்சரத்தின் பதத்தைப் போற்றி
மூவுலகு மெச்சுதற்கு நிகண்டு கேளே. 1

கேளப்பா வறுபத்து நாலுமர புள்ளோர்
கொடியாகப் பாடியதோர் சாத்திரத்துக் கெல்லாம்
வாளப்பா மறைப்பான சூத்திரத்துக் கெல்லாம்
மாலையைப்போல் பேர் மறைப்பை வெளியாய்ச்சொல்
சூளப்பா சவுக்காரம் சுன்னமாகச் [வோம்
சூட்சமெல்லா நிகண்டுக்குள் சொல்லக் கேளு

பாளப்பா சவுக்காரம் பாக்குப்போல் சீவி
பலமஞ்சு புத்தோட்டில் பரப்பிடாயே. 3

End

நாகப்பூ வேலமொடு கிராம்பு சடாமாஞ்சில்
நற்கெந்த மாஞ்சியொடு மெழுகு கோட்டம்
கூகப்பூ குங்கிலியம் குந்தரிக்கம் குக்கில்
கூகைநீறு கத்தூரிக் கறுப்பு வகராகும்
பாககோ ரோசனைகுங் குமப்பூ வோடு
பாரமாஞ் செந்தனம் சாதிக்காய் சாதிபத்திரி
பாக்குத் தனித்த தூளியங்கம் பிசின் செவ்வள்ளியாமே.

குறிப்பு :

இந்நிகண்டிலுள்ள விஷய விபர அட்டவணை எழுதிய எட்டு ஏடுகள் முன்னே கோர்க்கப்பட்டுள்ளன.

---

136. No. 102. (a) கெவுளி காதல்.

ஏடுகள் *52;* Lines 5 in a Page.

இது, பல்லி சொல்லுதற்குப் பலாபலன் கூறுவது. செய்தவர் பெயர் தெரியவில்லை. எட்டு விருத்தத்தாலயது. பிழை அதிகமாயிருக்கின்றன. அச்சிடப்பட்டிருக்கிறது.

சுக்கிலாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர் புஜம்
பிரஸன்ன வதனம் தியாயேத்
சர்வ விக்கினோப சாந்தயே.

Beginning:

அருக்கனு மொழியும் பல்லி அதிகமே கலகமாகும்
செருக்கிய மனைபெண்ணெண்ணுஞ் சேரலாய்க் கொள்வா
றென்றே
உருக்கிய நோவு தீராத்துன்னிப மில்லைகண்டாய்
பெருக்கவே சண்டை யுண்டாம் பிறப்பது பொய் மெய்
தானே. 1

வன்மைசேர் புதனதன்னில் மறையவ னேலை சேரும்
உம்மைசேர் சாவுதூதன் உறுதியாம் கலகம் அசசம்
நன்மையே யில்லை கேடாம் நாடிய தெய்வக் குற்றம்
இம்மை சேர்பகைவன் வாரான் என்றது பல்லி நூலே. 4

End

அருகன் 60, அருந்திங்கள் 90, திருக்கன் செவ்வாய் 40, செய்யபுதன் 50, வியாழன் 70, வெள்ளி 80, சனி 30 ஆக நாழிகை 420.

---

137. (b) **தும்மல் காதல்.**

Lines 5 in a Page.

இது தும்மலின் பலனுரைப்பது. அச்சிடப்படவில்லை.

இரவிமேல் தும்மல் கேடு இந்து மேல் நன்மை யாகும்
புரகரும் பூசல் செவ்வாய் புதன் புந்தி வருவா ருற்றார்
சுரகுரு பொன்னே ரத்தம் சுக்கிரன் மிகவும் நன்றாம்
வரவுறு சனியே சண்டை மரணமாம் பானு தானே.

---

138. (c) பாம்பு மந்திரமும், மருந்தும்.

Lines 5—6 in a Page.

சிதைந்துள்ளது. அச்சிடப்படவில்லை.

Beginning:

எங்கே யெங்கே யென்று பாஞ்சளஞ்சிய சேறுடன்...........
பிடித்துக்கட்டிக்கொண்டு இத்துவளவாவா சுவாமி யாணைவா
பிடிபிடி கெருடா பிடி பிடிச்சால் விடாதே ....
பிடித்துக்கொண்டு வாடா என்னத் தீர்ந்தது விஷமே.

End

விஷத்துக்கு :

பழுபாகல் கிழங்கு, அப்பைக்கிழங்கு, கொல்லன்கோவைக் கிழங்கு, ஆடுதின்னாப்பாளை, தலைச்சுருளிவேர், நன்னாரி வேர், பொன்முசுட்டைவேர், மிளகரணைவேர், கருப்பிடாவேர், வீழி வேர், சிவனார் வேம்புவேர், அழிஞ்சிவேர், வெள்ளறுகு...... .... இதுவெல்லாம் நிழலிலே உலர்த்தி பிறகு வெயிலிலே வைத்து இடித்துத் தூள் பண்ணிப் பேய்ச்சுரைக்கூட்டில் வைத்துக்கொள்ளவும். விஷந் தீண்டி........... வெருகடிப் பிரமாணம்.........................

சிவமயம்.

139. (d) வைத்திய அட்டவணை.

Lines 4—7 in a Page.

இதில் பேய்நாய்கடி, கிரந்தி, நேத்திர ரோகங்கள் பெரும்

பாடு, மேகவெட்டை, பவுத்திரம், குன்மம், நீர்கட்டு, மூலம் முதலியவைகளுக்கு மருந்து எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning

பேய் நாய்க் கடிக்கு மருந்து :

சாராயமும், நல்லெண்ணெயும் கூட்டிக் குழப்பியிடப் பேய்நாய்க் கடி தீரும். பேய்த்தும்பைச் சாறும், வெங்காரமும் உரைத்திடவும். பேய்நாய்க் கடி தீரும். வரகரிசி நாழி அவித்துத் தின்னவும். குங்கிலியப்புகை பின்பே, காட்டவும். பேய் நாய்க்கடி தீரும். கைகண்ட மருந்து.

End

பேதிக்கு :

பசுவின் பால் சேர் ½, மிதிபாகலிலைச்சாறு சேர் ½ இரண்டுங் கலந்து காலமே கொடுக்கப் பேதியாம். பச்சைத்தண்ணீரில் குளித்துப் புளிச்ச மிளகுச்சாறு பண்ணிச் சாப்பிடவும்.

கற்றுழஞ்சோறு வாங்கி அஞ்சு கடுக்காய் பொடிபண்ணி, அந்த கற்றுழஞ் சோற்றில் அந்தக் கடுக்காய் ராத்திரி ஊறப் போட்டுக் காலமே யெடுத்துப் பிசைந்து, வடிகட்டி பாவு சேர் விளக்கெண்ணெய் சுடவைத்துக் கொடுக்கவும் பேதியாம். பசுவின் கோமியம் சேர் ½, கடுக்காய் 5, பொடிபண்ணி அந்தக் கோமியத்தில் ஊறப்போட்டுக் காலமே யெடுத்துப் பிசைந்து வடிக்கட்டிக் கொடுக்கவும். பேதியாம். ஒரு சேர் தண்ணீரைக் கால் சேர் தண்ணீராய்க் காய்ச்சிக் கால்சேர் விளக்கெண்ணெயில் குழப்பிக்கொடுக்கவும். பேதியாம்.

140. (e) விஷ்ணுத் தோத்திரம்.

Lines 4—6 in a Page.

இதில் தமிழ் எழுத்தால் எழுதப்பட்டுள்ள தெலுங்கு தோத்திரங்கள் இருக்கின்றன.

Beginning :

மறுகுலுண்டாம்மமு நேனு மட்சாவத்தாரா (*1*)
குறுத்துகா குறுப்பச் சூடு கூர்மாவத்தாரா (*2*)
வருகுண்ட வவுக்கா வய்யா வராக அவத்தாரா (*3*)
செருலுகரு நிஞ்சு நரசிம்மாவத்தாரா (*4*)
வட்சமு—கிருலுகருகு வாமன அவத்தாரா (*5*)
பட்சி வாகனுண்டா பலபத்திர அவத்தாரா (*6*)

End

அக்கையா ஸ்ரீகேசவாய எம்போ சிந்த மந்திர களிந்த.

---

141. No. 103 வைத்திய அட்டவணை

ஏடுகள் 168; Lines 2—5 in a Page.

இதில் மாடுகளுக்குண்டாகும் சிற்சில நோய்களுக்கும், விக்கல், சுரம், ஈளை, இருமல், ஒக்காளம், எலும்புருக்கி, கல்லடைப்பு, காமாலை, பாண்டு, மூலம், மகோதரம், குன்மம், நீரிழிவு, பெருவயிறு, சூலை, கவுசை, வெப்புப்பாவை, நீராமை, முதலிய வியாதிகளுக்கும், நாகம், விரியன், மண்டலி, செய்யான், அரணை, நட்டுவாக்காலி, எலி, பெருச்சாளி, முதலிய

வற்றின் கடி விஷங்களுக்கும், மருந்துகளும், பற்ப செந்தூர சூரணங்களும், பிறவும், எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப் படவில்லை.

Beginning:

பசுவுக்குத் தினசு பிடித்திருந்தால் மருந்து :

ஒருபடி நல்லெண்ணெய் கொண்டுவந்து, தேகமாத்யந்தமும் துவளையிடவும். ஒருநாள்விட்டு ஒருநாள் துவளையிடவும். அந்தப் பசுவின்பேரில் தினசு அண்டாது. இது சோதனை பார்க்கவென்றால் ஒரு தினசைப் பிடித்து நல்லெண்ணெயில் துவட்டிப்பார்த்திருக்கச் சாகும். இது பரிட்சை. கைகண்டது.

எலி கடிக்கு :
காட்டு முருங்கைவேர், ஒரு முள்ளிக் காயளவரைத்து இறையளவு இந்துப்புக்கலந்து உலர்த்திப் பொடிசெய்து, ஒரு காசிடை ஆமணக்கெண்ணெயிற்கலந்து விழுங்கப் பதினெட்டு எலிகடியுந் தீரும்.

எலும்புருக்கி, சுக்கில பிரமியம் :

சத்திச்சாரணைக் கிழங்கு, கோவை, வடக்கே போகும் வேரும், விழுதுபட அரைத்துப் பசுவின் நெய்யிற் குழைத்து விழுங்கவும். பத்தியம்:—பாலுஞ் சோறு முண்ணவும்.

End:

வெட்டைக்கு மருந்து :

நெல்லிக்காய்ச் சாறு படி வ, சீனிச்சர்க்கரை போட்டுக் குடிக்க வெட்டை தீரும்.

குறிப்பு :—

இதிலுள்ள மருந்துக்கு விரைமெழுதிய அட்டவணை ஏடுகள் ஐந்து முன்னே கோர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் முதலில் 12 ஏடுகள் இல்லை.

142. No. 104. (a) வைத்திய அட்டவணை.

ஏடுகள் *114;* Lines 6—9 in a Page.

இதில் காமாலை, பீனிசம், இருமல், சுரங்கள், நீரிழிவு, பெரும்பாடு, எலும்புருக்கி, அண்டவாதம், குடல்வாதம், ருத்திரவாயுவு முதலியவைகளுக்கு மருந்துகளும், காயகற்பங் களும், செந்தூர, பற்ப, லேகியங்களும், விஷத்துக்கு மருந்தும், சிற்சில பதார்த்த குணமும் எழுதப்பட்டுள்ளன. அச்சிடப் படவில்லை.

வந்திடு க்ஷயரோகத்தின் வருகிற ரகத்தின் பேரும்
முந்திடு பிராயசசித்தந்தான் மூண்டிடு வாறு தானும்
தந்திடு அவிழதந்தானும் தானது செய்யு மாறும்
இந்துறை குழலினளே இயம்புவோமினிது தானே.

க்ஷயரோகம் பிடிக்கிற காலத்தில் அக்கிராசனென்கிற கிரகம் பிடிக்கும். அவன் பிடித்த காலத்தில் உடம்பில் சுர முண்டாம். தொண்டைக் கபாலம் புண்ணாயிருக்கும், மார்பு, ஈரல் புண்ணாயிருக்கும், இருமலுண்டாயிருக்கும், தொண்டைப் புகைச்சல், தினவுண்டாயிருக்கும். அந்திகாலம் இருமலுண் டாம். சுரமும் காணும், விடியற்காலம் இருமல் அதிகமா யிருக்கும் அந்தக் கிரகத்துக்குப் பிராயச்சித்தம் :—கோதா னம், பூதானம், எருமைக்கிடா தானம், கொடுக்கத்தீரும். இது சுத்தப்பிரதானம் என்றது காரிய சித்தாந்தம் என்றது.

காமாலைக்குத் தேங்காய் லேகியம்

திப்பிலி, சுக்கு, மிளகு, கருஞ்சீரகம், நல்லசீரகம், அசம தாகம், அரப்பொடி, காந்தம், பழங்கிட்டம், இது கூட்டித் தேங்காயி லடைத்துப் புடமிட்டு எடுத்து, மேலோடு வாங்கிப் போட்டுக் கையாந்தகரைச் சாறு வார்த்தரைத்துப் பழ வெல் லம் போட்டுக் கலந்து கொடுக்கவும். சோகை முதலானதும் போம்.

ஆருத எந்தப் புண்ணுக்கும் புகை:

ரசம், கெந்தகம், துருசு க, வங்காளப்பச்சை க. கருங் குங்கிலியம் காசிடை ச, ஆகக்கூட்டிப் பொடி செய்துக்கொள் ளவும். கையத்தனை ய க ல ம் இரண்டு மெழுகு சீலையில் கள்ளிப்பாலூட்டி அந்தச் சீலையில் இந்தப் பொடியைப் பரப் பித் திரியாகத்திரித்து, விளக்கில் கொளுத்திப் புகையைப் பிடிக்கவும். புண் ஆறும்.

143, (b) பாம்புகளின் சாதியும் குணமும் பிறவும்.

Lines 7—- in a Page.

Beginning ·

அனந்தனே அருக்கனுகு மாயுறு சுகியே திங்கள்
கனந்தரு தகரன செவ்வாய் கரிபுதன் கெருடனுகும்
மினந்தரு விசாழும் பர்மம் வெள்ளியிற் பர்மம் மாகும்
தனந்தரு சனியிற சங்க பாலனுங் குளிய னுமே.

End

நல்ல பாம்பு வயிற்றிலே, சீத மண்டலி பிறக்கும். விரி யன் வயிற்றிலே நண்டுவாய்க்காலி பிறக்கும். கருவழலை, நல்ல பாம்பு வயிற்றிலே பிறக்கும். பாம்புகடிக்கும் காலத்தில் முன்வாய்ப் பல்லு பட்டால் கொல்லுமென்றறியவும், இப்படி விஷங்கள் சாதி குணமறியவும்,

விஷத்துக்கு மந்திரம்:

டார்ரி மிக்கியாரிலோ பந்திக்காயாரே நதி நதி விஷந்தி விஷமில்லை யோரே, நந்தியெனும் முனியெனும் நாரதனும்

இந்திரனும் செந்தியில் நடந்திட சில்ல சிவா தில்லைச் சிவனே எழுந்திரு சிவந்த பாதமே எழுந்திரு. உப்பிலே மந்திரிச்சுக் கொடுக்கவும். தண்ணீர் ஓதி இறைக்கவும். பார்வை பாக்கிறது. ஷ்ரூ இந்த எந்திர முகத்திலே பார்க்கிறது.

144, (c) விநாயகர் அகவல்.

Lines 6 in a Page.

இது விநாயகர் தோத்திரம் அவ்வையார் இயற்றியது. அச்சிடப்பட்டுள்ளது. இது *689*-ம் நம்பர் உட்பிரிவாகிய (*i*) போன்றது. இதின் கடைசியில் மூன்றடிகள் இல்லை.

Beginning

சீதக்களபச் செழுந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை நாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கொம்பும்

End

அணுவுக்கணு வாயப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற ஞானக் கரும்பையுங் கூட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குணத்துடன் காட்டி
அஞ்சக் கரத்தினரும் பொருள் தன்னை
[நெஞ்சக் கரத்தி னிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.]

---

145. (d) நாடி நூல்

Lines 5—6 in a Page

இது நாடி லட்சணமும் வியாதிகளின் லட்சணமும் கூறுவது, இதில் 50 செய்யுட்களே இருக்கிறன.

Beginning:

கரிமுக னடியை வாழ்த்திக் கைதனில் நாடி பார்க்கப்
பெருவிர லங்குலத்தில் பிடித்தடி நடுவே தொட்டா
லொருவிர லோடில் வாத மிருவிர லோடிற் பித்தந்
திருவிரல் மூன்றி லோடிற் சேற்றும நாடியாமே.

End:

தொப்புளும் வலித்து நொந்து துளங்கிடா திரத்தம் வந்து
அப்பொழு தந்த மூல மறியவே வெளியில் விள்ளும்
தப்பற மேனி வற்றித் தருகிடா வாதை செய்யில்
முப்புறக் கண்ணின் மாதே யிது ரெத்த மூல மாமே. 50

146, (e) சுரத்தின் பிறப்பும் வகையும், அதிசார லட்சணமும் சில மருந்து சுத்தியும்.

Lines 5—8 in a Page.

Beginning:

லோகத்திலே உண்டான சுரம் பிறந்தது. அதினுடைய உக்கிரம் கால மிருத்தியுவுக்குச் சமானமானது, பரமேஸ்வரன்

தக்கயாகத்தை வென்று கோபமாயிருக்கிற சமயத்தில் நெற்றிக் கண்ணிலே சுரம் பிறந்தது. அந்தச் சுரம் சேட்டும சுரம் பூதசுரம், அசீரண சுரம், அபிகாத சுரம், தொந்த சுரம், வாதசுரம், பயித்திய சுரம், விதனம் ஏழு விதம் பிறந்தது.

End:

கெந்தகந்தான் கரண்டியதில் நெய் மேலிட்டுக்
 கிளராம லுருக்கியே பாலில் சாய்த்து
இந்தவித மூன்றுதரம் காய்ச்ச சுத்தி
 யீதல்லாற் பிட்டவியற் பாலிற் சுத்தி
அந்தமுள்ள குழிவெட்டிச் சட்டிவைத்து
 ஆவின்பால் விட்டதின் மேல்
பந்தமுள்ள கெந்தகத்தைப் பரப்பி மூடிப்
 பருவரளி யிட்டெரிக்கப் பதவாயத்தி

147. (f) நாடிசாஸ்திரம்.

Lines 7—9 in a Page.

இதுவும் (d) போல நாடிலட்டணம் கூறுவது. இதில் சாத்தியாசாத்தியம், மரணகண்டிகை, தொந்த நாடிகளின் லட்சணம் கூறப்பட்டுள்ளது.

Beginning

ஆகிய நாடிமூன்று மெழும்பிடில் சன்னியாகும்
வாகினுல் அன்னங் கோழி மயிலென நடக்கில் வாதம்
ஏகிய ஆமை அட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு போல்வது சிலேட்டும மாமே.

அன்னமே கோழி ஓணான் உடும்பென நடக்கும் வாதம்
பின்னையே அட்டையாமை பொருந்திடல் பித்தமாகும்
சொன்னநேர் மடநல் லாளே! சுற்றிய தவளை பாம்பு
அன்னவை நடக்கு மாகில் ஐயமென் றறிந்து கொள்ளே.

End

இசைந்திடும் பித்தம் ரெண்டும் வாதமுந் தனித்தென்றாகில்
பசிந்திடாப் புளிப்பு வேண்டிக் கூடிய தவனம் பற்றும்
இசைந்திடும் உஷ்ணமுண்டாம் இவையிவை மிகவுந்தோன்
றும்
அசைந்திடும் பித்தவாதத்தொந்த மென்றுரைக்கலாமே.

---

143 (g) வைத்திய அட்டவணை.

Lines 7—9 in a Page.

இதில் சரக்கு சுத்தி, சுரங்களின் லட்சணம், மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

Beginning

காடிதனில் நேர்வாளம் பத்துநாள் கதிக்கவேயூறவைத்துச்
சாணப்பாலில்
வேடுபட வெந்திறக்கி நஞ்சுபோக்கி வியன் பாலிலறுகீரைக்
குமரிச்சாறும்
வாடுபட வெவ்வேறே வெந்திறக்கி வரிசைபெறச் சுத்திதனைச்
செய்வீராகில்
ஏடுலவு பூங்குழலா யிந்த வண்ண மிவ்வுலகிற் செய்வார்க
ளில்லை கண்டாய்

End

லிங்கங் கட்ட:

சாதிலிங்கம் அஞ்சு விராகனிடை ஒரு கட்டியாய்க் கொண்டு வந்து ஆதளைப் பால் விட்டுத் தேய்த்துச் சூரியப்புடமாக மூன்று நாள் வைக்கவும். இனம் மூன்று விசை, ஆதளம் பால் தடவவும். பின்னும் அக்கிரகாரம், வெங்காரம், சீனகாரம், சவுக்காரம், படிக்காரம், இந்த அஞ்சுவகையும் பொடி செய்து கொண்டுவந்து, மஞ்சள் கருவிட்டுப் பிசரிக்கட்டித் தெரியாமல் எருக்கிலை கனமிருக்கக் கவசம் பிடித்துப் பின்பு மடல்துத்தம் கொண்டுவந்து, மஞ்சள் கருவிட்டு அரைத்து, எருக்கிலை கனமிருக்கக் கவசம் பிடித்துப் பின்பும் கட்டியைக் குகைக்குள்ளே வைத்து, மேலு மூடிக் கருதடவினச்சீலை கொண்டு, மூன்று சீலை மண் வாய்க்குச் செய்து பின்பு அந்தச் சீலை கொண்டு, ஏகமாய் மூன்று சீலை செய்து, குக்குட புடமிடவும்.

149, (h) நயன சாஸ்திரம்.

Lines 7—8 in a Page.

இதில் கண்ணில் உண்டாகும் 96 வியாதிகட்கு விபரமும், அவற்றுள் இன்னின்ன இடத்தில் இத்தனை வியாதிகள் உண்டாகும் என்பதும், அவ் வியாதிகளின் பெயர்கள் இன்னவென்பதும் அவற்றிற்கு மருந்துகள் இன்னவை என்பதும் கூறப்பட்டுள்ளன.

Beginning:

கண் வியாதி:

கண்ணில் பிறந்த ரோகம் 96. அவைக்கு முழியில் வியாதி 45. வெள்ளை முழியில் வியாதி 20. இமையில் வியாதி 16. கடைக்கண்ணில் வியாதி 15 ஆக வியாதி 96.

கண்ணது நோக வேண்டும் காரண மேதோ வென்னில்
நண்ணிய அப்புத் தன்னில் நலம் பெற குளிக்கை யாலும்
பிண்ணிய மயிரிலங்கு பிசங்தெண்ணெய் போகாதாலும்
விண்ணிடை வெளவையாலும் விளைந்திடும் நோய்கள்தானே.

End

நந்தியா விட்டப்பூச் சாறும் நல்லபனைமட்டைச் சாறுடனே
மந்தியாருண்ணு முலைப்பாலும் வளருமுருங்கை யிலைச்சாறும்
சந்தியார் தன்னிலோரொன்று தன்னில் தலித்தனிச் சாறுமுக்கு
வெந்தியார் சந்தனமதுரம் மேவு மஞ்சள் பனங்குருத்தே. 53

முந்திச் சொன்ன நாலு மூடியக் கமுஞ்சரையோ ரொன்று
இந்தயான் சொல்வே னினிக் கேளாயிப்படிச் சிப்பியு மப்ப
டிக்கொள்
தந்தியாமிட்டு முடிவித்துத் தன்னிலோதப் பொடிகள் தன்னால்
இந்ததப்படிதான் செய் யிதமுட லின்னஞ் சொல்வார். 54

---

150. (i) நாடி நூல்.

Lines 7—8 in a Page.

இதுவும் (d) யைப்போல நாடியைபற்றிச் சொல்வது.
பாட்டும் வசனமுமாக இருக்கிறது.

Beginning:

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் வாண்மலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

கரிமுக னடியை வாழ்த்தித் கைதனில் நாடிபார்க்கப்
பெருவிர லங்கு லத்திற் பிடித்துடனடுவே தொட்டால்
ஒருவிர லோடில் வாதம் இருவிர லோடிற் பித்தம்
திரிவிரல் மூன்று லோடில் சேட்டும நாடியாமே

End

வந்த நோய் சுணடு செய்யும் குணத்தையே வகுத்துக்காணில்
முந்தவே நானிலத்தில் முத்துடனதிக்க நின்றால்
அந்த நோய் கொண்டுவந்த பித்தமு மமைத்து தானும்
இந்தநூலின் வழியதாக இருந்து நீ வருந்திக் காணே

குறிப்பு :

இவைகளையல்லாமல் சில வியாதிகளுக்கு மருந்தும், பற்பசெந்நூர லேகியம் எழுதிய வைத்திய அட்டவணை ஏடுகள், நான்கு கோர்ட்க்கப்பட்டுள்ளன.

---

151. No. 105 (a) வைத்திய அட்டவணை

Lines 2—7 in a Page

இதில், அஞ்சனம், சாலம், வசியங்களும், புல்லுருவீப் பிரயோகங்களும், பதினெண்குட்டங்கள் கமாலைகள், மூலங்கள், ரத்தமூத்திரம், பிரமியம், ஒருத்தலைவலி, செவிநோய் கண்வியாதி, விஷம் முதலியவற்றிற்கு மருந்துகளும் எழுதப் பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning

அஞ்சனம்:

சாரணைவேறும் தலையோடும் கண்பட்ட சட்டியில் வறுத்துக் குப்பைமேனிச் சாற்றில் கையில் போட விடம் சர்வஞ்சனம். தலையோடும் கையாந்தகரைச் சாற்றில் அரைத்துத் திலதமிடக் கையிலும் போட ஒடும்.

புண் கண்ணுக்கு

சங்கு துத்தம், ஓரிலைத்தாமரைவேர், சிறுகீரைவேர், சிறுபுள்ளடிவேர், பொன்னுங்காணிவேர், அதிமதுரம், சிறுபூளை

வேர், கடல் நுரை இவை யொரொன்று கழஞ்சு, புனுகு பண விடை, எழுமிச்சம் பழச்சாற்றிலரைத்துக் கலத்தொடு கலஞ் சாரித்துண்டை பண்ணி, முலைப்பாலிடக் கண் வேதனைபோம்.

புல்லுருவி

திருவாதிரைநாள் ஆடாதொடை மேற்புல்லுருவி மடி யில் வைக்கச் சதுரங்கம் வெல்லும். புனர் பூசநாள் ஆலின் மேற் புல்லுருவி குடிக்கப் பிள்ளையுண்டாம். பூசத்து நாள் இலுப்பை மேற் புல்லுருவிப் பாலிலரைத்துப்பூச வெட்ட

End

இந்துப்பு சீனக்கார மிலங்கு பொட்டலை வெங்காரம்
சந்தித்து நாலு நின்ற சமன்சலா சத்துங் கூட்டி
வந்தித்துப்புடமே செய்து வராகன்செந் தேனிற்கொள்ள
சந்தித்த மூலகுன்மம் சகலகிருச்சமமும் போமே.

---

152 (b) **யந்திர, மந்திர அட்டவணை.**

Lines 5—6 in a Page

இதில், பேய், பாம்பு, எலிகடி, முசலகன், ராச்வசியம் வழக்கு வெல்ல, அம்புவிலக, கண்ணோய், தலைநோய் முதலிய வைகளுக்கு எழுதிக்கட்ட யந்திரங்களும், பலவகையான மந் திரங்களும் இருக்கின்றன.

Beginning:

இவ்வியந்திரம் பேய், பாம்பு, புலி, கள்ளர் தீண்டாமல் :



End

கொடு முடி இளம்பிறை கொங்கையார் தாணையார். திரு நீறு அம்மையார் தில்ல விடு விடு லோகதிரு நீற்றை ஓதி நெற்றியிலிட்டுக்கர முருகுக காமனாடே கடுந்திப்படுவாய் அட்டந்திரி ஆகாசந்திரி திரிநாதன் வளர்த்த கருநாய் செந்நாய் போலக் காலிலே வந்து வணங்கிடும்.

---

153. (c) வைத்திய அட்டவணை.

Lines 5 in a Page.

இதில் பலவியாதிகளுக்குச் சுலபமான மருந்து முறைகள் எழுதப்பட்டிருக்கின்றது.

Beginning

குருப்புறப்பட்டுக் கொப்புளித்தால் மருந்து:

நிலக்கடம்பு வேர் ஒரு எலுமிச்சங்காய் மநுமவாரி அரைத்து சிறு நீராவது, நீர்ச்சோற்றுத் தண்ணீராவது ஒரு சேரைத் தண்ணீரில் முறுஞ்சா குடிக்கவும். ஆறிப்போம்.

வயிறுகடுப்புக்கு மருந்து:

மிளகு பொரிச்சு அரைத்துக்காய்ந்த நல்லெண்ணெயிலே மிளகு பொடியைப் போட்டுக் குழப்பி, உள்ளங்கையிலே இட்டுக் கொடுக்கவும். வயிறு கடுப்பு, கிராணி எல்லாம் குணமாம்.

End

கடி விஷத்துக்கு

இந்துப்பு. கல்லுப்பு, சவுக்காரம், வெருகன் கிழங்கு, முள்ளங்கிக்கிழங்கு, சுக்கு, பதினைஞ்சு இந்த மருந்தெல்லாம் .... இடித்துப் புதுப்பானையிலேயிட்டுத்தின்ன, வெண்ணெய் போலே உருகிப் போம்.

---

154. (d) ஜாலங்களும் மந்திரங்களும் ;

Lines 5—7 in a Page.

Beginning:

வெண்குன்றிச்சமூலமும் பிடுங்கிப் பசும்பாலிலரைத்து உருண்டைபண்ணி, அரிதாரமும், புருவெச்சமும் கூட்டி அரைத்துப் பூசினிக்காயில் தடவிவெட்ட இம்மருந்து நாழி அடியில் தடவ நாழி நடக்கும்; உலக்கையில் தடவ உலக்கை நிற்கும்.

சோகிமந்திரம்

ஓம் ஸ்ரீமுக முகல வாகினி சரா ஆனந்த கற்பவல்லி பிரம பிரம ஸகல சன மோகன மாதி தேவி சுவாகா. இந்த மந்திரம் பதினையாயிரம் உருச்செபித்து பால், நெய், அறுகு, பழம் இதுகள் எல்லாம் ஓமம் வளர்த்துத் தனி வீட்டிலேயிருந்து அழைப்பித்துக் கொள்ளவும்.

End

இதுக்கு மந்திரம் :— என்கட்டும் கட்டுப் பிறர்கட்டும் பெட்டைக்கட்டு என்கட்டும் வன்கட்டாய் நிற்கட்டு.

ஆண்கட்டுவிட ஓம் ஓம் உத்தமமானி முத்தமமான மாகாளி யாளுய் போல என் மாகாளி உத்தமமான மாகாளியாக சுவாகா.

---

155. (e) வைத்திய அட்டவணை

Lines 5—6 in a Page.

இதில் நயன ரோகங்களுக்கும், குதிரைகளுக்குண்டாகும் வியாதிக்கும், வேறு சில வியாதிகளுக்கும், மருந்துகள் எழுதப் டுள்ளன.

Beginning :

கண்ணுக்கு மருந்து, வெள்ளெழுத்துக்கு மருந்து:

ஓரிலைத்தாமரை வேர் கழஞ்சு, துத்தம் கழஞ்சு, நெல்லி முள்ளி அரைக்கழஞ்சு, மிளகு கால் கழஞ்சு, எலிமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உருண்டையாக்கி, எலிமிச்சம்பழச்சாற்றி லுரைத்துக் கண்ணிலிடப் படலம், வெள்ளெழுத்து, பூவும் பறியும்.

குதிரைக்குக் குப்பை நோவு பிடித்தால் :—

புல்லு தின்னுது. தண்ணீருங் குடியாது. நாசியில் சல மாக விழும். இதற்கு மருந்து தென்னம் வேர், எலுமிச்சம் பழச்சாறு, நல்லெண்ணெய் இவை கூட்டி நசியம் இடத் தீரும்.

மண்ணைச் சூலை பிடித்தால் :

நாக்கை நட்டு நிற்கும். கண் தெரியாது. மல வீங்கும். தொண்டை வீங்கும். இதற்கு மருந்து:— மணிப்பிரண்டை வேரும், இலையும், கிழங்குமிடித்து வெதுப்பித் தொண்டையில் தடவ விடும்.

End

மூக்கிலே ரத்தம் விழுகிறதற்கு நசியம்:

ஒருசேரை வெற்றிலைக்காம்பு, ஒற்றை வெண்காயமும் நறுக்கி, பூண்டு, மிளகும் நறுக்கி, நாசியில் விட்டபிறகு, உடனே வெள்ளாட்டுப் புழுக்கை ஊசியிலே குத்திச் சுட்டு அந்தப் புகை வாங்கவும். இதில் நில்லாவிட்டால், மூன்று நாள் பொறுத்து ஒரு துளி ஊமத்தைச்சாறு, நாசியில் அற்பத்தில் விடத் தீரும்.

குறிப்பு :

இவைகளையல்லாமல் வாண மருந்துகள் எழுதிய ஏடுகள் இரண்டு கடைசியில் கோர்க்கப்பட்டிருக்கின்றன.

---

156. No. 106 (a) வைத்திய அட்டவணை.

ஏடுகள் *190;* Lines 6—7 in a Page.

இதில் பாண்டு, வயிற்றுக்கடுப்பு, நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, பெரும்பாடு, பிரமியம், மஞ்சட்காமாலை, முதலிய வியாதிகளுக்கு மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. அச்சிடப் படவில்லை. சிதிலமாயிருக்கிறது.

Beginning:

செங்கழுநீர் நெய்க்குவகை:

பொன்னுங்காணிவேர், சிறுகீரைவேர், சீந்தில்தண்டு, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைவளையம், இருவேலி,............ கற்றாழைமடல், இவை ஒரொன்று இருபலம்................. நாலொன்றாகக் காய்ச்சிப் பிசைந்து, பிழிந்து வடித்து .... க்கு மருந்துக்கு வகை அதிமதுரம், கோட்டம், ஏலம்...... ......

நீர்க்கடுப்பிற்கும், கல்லடைப்பிற்கும் :

எருமைத் தயிர் கட்டித்தூக்கின தயிர் ஒரு எலுமிச்சங் காயளவு, அரைக்கீரை ஒரு எலுமிச்சங்காயளவு, நல்லெண் ணெயில் புரட்டி, மூன்றும் ஒக்கக் கலந்து கொள்ளக்கல்லு விழும், நீர்க்கடுப்பு நிற்கும்.

காமாலை

கீழாநெல்லிவேர் இரண்டு பாக்கத்தனை நன்ருக அரைத் துப் பசுவின் பாலில், வெல்லம் போட்டுக் குடிக்கக் கண்மஞ் சணித்தல், நீர் மஞ்சணித்தல் நிற்கும்.

---

157. (b) மாட்டு வைத்தியம்.

Lines 7—9 in a Page.

இதில் மாடுகளுக்கு உண்டாகும் சிலவியாதிகளுக்கு மருந் தும், சூடு போடும் விதமும் கூறப்பட்டுள்ளன. அச்சிடப்பட வில்லை.

Beginning

இளம்பாளை, இலவம்பட்டை, ஓதியம் பட்டை, அத்திப் பட்டை, மாம்பட்டை, மருதம்பட்டை, கருவேலம்பட்டை, நாவல்பட்டை, மயிர்மாணிக்கம், பெருந்துத்தி, நறுந்தாழி, இலை, பூலா இலை, இரண்டு மூன்று பாளை, மூடி எலுமிச்சம் பழம் அஞ்சு இவை எல்லாம் இராவடுப்பிலே துவைச்சுக் குறுணி பழங்கஞ்சி வார்த்து, இராவடுப்பிலே வேகவைத்த மற்றநாள் துவைச்சுக்குறுணிமோர், பழங்கஞ்சி குறுணி

வார்த்துப் பிழிந்து புகட்டவும். விலாப்புரத்தில் இரண்டு சூடு சுடவும்.



End

மாட்டுக்குளம்பு வருத்துத் தண்ணீரி..............கருணைக் கிழங்கு, வெருகங்கிழங்கு, பசுமஞ்சள், மணத்தக்காளி, கோரோசனை..............லாம் காடி வார்த்தரைத்து, மூன்று நாள் புகட்ட கிற்கும்.

---

158. (c) வைத்திய அட்டவணை.

Lines 7—8 in a Page.

இதில் வயிற்றுவலி, கவுசை, வெப்புப்பாவை, குன்மம் வாயுத்திரட்சி, படர்தாமரை, பிரமியம், மகோதரம், குடல் வாதம், பெரும்பாடு, அதிசாரம், பித்தபாண்டு, எலிகடி, ஊது கரப்பான் முதலிய நோய்களும், சூடுகள், தம்பனக்குளிகைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning

வாயு குன்மத்துக்கு:

கள்ளிக்கட்டை முழுநீளம் வெட்டிவந்து சோறு வாங்கிப் போட்டு, கல்லுப்பு நாழி இட்டு, அதில்............ நாரத்தங் காய் வாய் நெகிழ்த்துவைத்து, அதின்மேலே மீள உப்பு வைத்து..............தை வாய்மூடி பிரிசுற்றி, உமியு மெருவு

மிட்டுப் புடமிட்டு எடுத்து, உப்பையும்............யும் வேறே வேறே வைத்துக் காயைத்தின்ன, உப்பைக் கரைத்துக் குடிக்கவும்.

கல்லெரிப்புக்கு

அத்திக்காயுலர்த்திப் பொடிசெய்து பாலிற் குடிக்கவும். செப்பு நெருஞ்சில் சமூலமும் ஒருபிடி, அவுரி இலை ஒருபிடியும் அடைசுட்டுத் தொப்புளில் வைத்துக் கட்டவும். மாடப்புறு வின் எசசமும், கோழிக்காரமும் இரண்டும் சமனெக்கத் தேன் வார்த்தரைத்துக் குழப்பித்தின்ன கல்லுவிழும். கீழ் வயிற்றில் நெய்யும் எண்ணெயும் இட்டுவைக்கவும். ஆல மொட்டு, அரசமொட்டு, நற்சீரகமும், எருமைத் தயிரில் கொடுக்கவும்.

செவ்வட்டைக்கடிக்கு

சேஙகொட்டை 200 கல்லுரலில் போட்டு, இருப்புக் குச்சு கொண்டு, துகைத்து, நன்றாய் துவைத்தற்குப்பிறகு எள்ளு இருநாழி நன்றாக இடித்து ஒக்கப்போட்டு, நன்றாகத் துவைத்துப் பிறகு, புட்டிக் கருப்புக்கட்டி போட்டுத் துவைத்து, ஒரு கலசத்தில் வைத்துக் கழற்கொடிப்பிரமாணம் கொள்ளவும.

End

பாஷாணம் 2 ப, துத்தம் க (1) ப, துருசு ½ ப, இவை களையூமத்தை இலைச்சாறு வார்த்தரைத்து, மிளகுப்பிரமா ணம் உருண்டை பண்ணிப் பாலேட்டிலே இடவும். இரதம் க (1) ப. தேன் ரு (5) ப, அரிதாரம் ரு (5) ப, மஞேசிலை ரு ப, இவை பாகலிலைச்சாறு வார்த்தரைத்துச் செப்புக் கிண்ணியில் பூசிச்சட்டியில் கவிழ்த்துச் சீலைமண் செய்து, சுற்றிவர மணலைச சொரிந்து மேலே செம்பா ஆகுதல், எள்ளு ஆகுதல் வைத்துக் கீழே தென்னிலை பிரமாணம்.

159. No. 107 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *107*; Lines 4—6 in a Page.

இதில் நீரிழிவு, உடம்பெரிவு, நீர்க்கடுப்பு, மூலம், பயித்தியம், சுரம், வெட்டை, கல்லடைப்பு, பிரமியம், சோகை, ஊதுகணை, பெரும்பாடு, மலட்டுவலி, எலிகடி, முதலிய வியாதிகளுக்குப் பலவிதமான மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன, அச்சிடப்படவில்லை.

Beginning :

கெந்தகம் 3 பலம் பொடிசெய்து, ஒரு கொட்டாங்கச்சியில் போட்டுச் செம்பு ஈசலிறகு போலத் தட்டினது 3 பலம், இரதம் 3 பலம், இவையெல்லாம் எலுமிச்சம் பழச்சாறு விட்டு மூன்று நாள் வெயிலில் வைக்கப் பற்பமாம. பின்பு எடுத்துப் பரணியில் அடைத்து ஒரு பணவிடை உள்ளித் தைலத்தில், ஓமச்சாற்றில், சர்க்கரையில், தேனில் கொள்ளலாம்.

கல்லடைப்புக்கு மருந்து :

வெங்காரம் 1 பலம் எலுமிச்சம்பழச்சாறு உழக்கு, எண்ணெய் உழக்குக் கூட்டி குடிக்கக் கல்லுவிழும். வில்வ வேர் பாலில் குடிக்கக் கல்லு விழும், வெங்காரம், ஓட்டடையில் சேர்த்து நெய்யில் விழுங்க விழும்,

நாலுவகைப்பிரமியத்துக்கு, வாயுவினுலெடுத்ததற்கு :

மஞ்சளை அரைத்துச் சீலை வடி கொண்டு, நெல்லிக்காய் துகைத்த சாதமும் வத்தலாகிலும். வத்தலை நாலு குடுக்கைத் தண்ணீரிலவித்து, அந்தத் தண்ணீரும், தேன் ஒரு காசிடையிதுவெல்லாங் கலந்து குடிக்க மாறும்.

எலிகடிக்கு மருந்து :

புண்ணாக்கிலையும், கரும்பூனையின் எச்சமும், கருத்த வெள்ளாட்டுப்பால் வார்த்து மூன்று நாள் கொடுக்கவும். கார்ப்பு,

புளிப்பில்லாமல் தவிரவும். ஆரா உப்புக் கண்டம் கூட்டிக் கொள்ளவும்.

End

சிற்றாமணக் கெண்ணெய் நாழி, ஈரவெங்காயம் நாழி. தட்டி எண்ணெயில் போட்டுக் கிண்டி, அதன் பிறகு இரு வகைப் பொடியும் போட்டுக் கலக்கி, அடுப்பில் வைத்து, அவி யப்புடம் ஆக இறக்கி வைத்துக் கொண்டு, செருப்படி யிலை யும், கையாந்தகரையிலையும், கசக்கி எண்ணெயில் பிழிந்து கிண்டிச் சூரியபுடத்தில் 'வைத்துக் கொண்டு, மூன்று நாள் கொடுக்க வயிறு நாலைந்துதரம் கழியும். அதன் பிறகு, வெந் நீரில் குளித்துப்போட்டுக்கஞ்சிக் கொள்ளவும். உப்பு, புளிப்பா காது. இந்த எண்ணெய் நாலஞ்சு மாதஞ் சென்றால் சூலி களுக்குமாகும். பிள்ளை மேல் வியாதி தீரும்.

குறிப்பு :

மகாராஷ்டிர பாஷையில் எழுதிய மூன்று ஏடுகள் கடைசி யில் கோர்க்கப்பட்டுள்ளன. பத்து வெற்றேடுகளும் இருக் கின்றன.

---

160. No. 108 வைத்திய அட்டவணை

ஏடுகள் 92; Lines 6—7 in a Page.

இதில் நாடி லட்சணம், சுரலட்சணம், அவற்றிற்குக் கஷா யம், கஞ்சி முதலியவைகளும், சரக்கு சுத்தி, கோடா குழிந் குளிகை, மேகநாதக்குளிகை, ஆனந்த வைரவன், ராமபாணக் குளிகை, சூரணம், தைலம், குடிநீர், நெய், லேகியம், கிருதம் ரசாயனம், முதலியவைகள் அனுபோக முறையாக எழுதப் பட்டிருப்பதோடு, பெரும்பாடு, கல்லெரிப்பு, பிரமியம், குடல் வாதம், மூலங்கள், குட்டங்கள், காமாலை முதலியவைகளுக்கு மருந்துகளும் எழுதப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் பத்து ஏடு கள், கிரந்த சுலோகமும் தமிழுரையுமாகக் காணப்படுகின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning

திரிதோஷத்திற்குக் கஷாயம் :

வெட்பாலுக்கு, பேய்ப்புடல், சீந்தில்தண்டு, கடுகுரோகணி, முத்தக்காசு, நெல்லிமுள்ளி, கடுக்காய், தான்றிக்காய், ஆக எட்டும் சமனாகக் கூட்டி, எட்டில் ஒன்றாகக் காய்ச்சித் தேனும், சர்க்கரையும் கூட்டி, ராத்திரி போசனத்துக்குமேல் கொடுக்கவும்.

எலிப் பாஷாண சுத்தம், கெவுரிப் பாஷாண சுத்தம் :

சீரகப்பொடிச் சீலையிலே முடிந்து, வெந்த சுண்ணாம்புக் கல்லைக் கலத்திலே எடுத்து, நடுவே பாஷாணத்தை வைத்து மேலும்மூடித் தண்ணீர் வார்த்து மூடி, அந்தஉஷ்ணாம்மாறின பின்பு, எடுத்து வைத்தால் பாஷாணம் சுத்தமாம்.

வாய்வு சூலைக்கு, இங்குவாதிச் சூரணம் ;

சவ்வியம், சிற்றரத்தை, பேரரத்தை, பெருமரப் பட்டை, மஞ்சிட்டி, பெருங்காயம், எண்ணெயிலே பொரித்து, உள்ளித் தைலமும், சிற்றாமணக்கெண்ணெயும் கூட்டிக்கொள்ள வாத சூலை நிற்கும்.

End

கண்ணாலை (கல்யாண) முருக்கம்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி, சுண்ணாம்பு, ஓட்டடையும் கூட்டி அரைத்து உருட்டிக் கொடுக்கவும். பிரண்டையை வறுத்துப் பொடி பண்ணி, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம், பொன்வறை கொண்டு, கூட்டி மருந்து எல்லாம் பாதி, பிரண்டை பாதியும் மோரிலாதல், வெந்நீரிலாதல் கொடுக்கவும்.

வில்வாதி லேகியம் :

வில்வ வேர் மேல்பட்டை போக்கி முப்பது பலம் செதுக்கிப் போட்டு, தூணி நீர் வார்த்து, எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கஷாய நீரிலே முப்பது பலம் பழ வெல்லம்

---

161. No. 109 (a) நாடி விதி.

ஏடுகள் *112;* Lines 6–7 in a Page.

இதில் நாடிப் பரீட்சிக்கும் விதி சொல்லப்பட்டிருக்கிறது, செய்தவர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

விரும்பியே உடல்களெங்கும் மேவியே கலந்து நிற்கும்
நரம்புறு நாடி தன்னை நல்லசாத்திரங்க ளெல்லாம்
திருந்தவே ஓதி ஓதித் தெளிந்தனர் சொல்லா லுண்மை
அருந்தவ அறிஞர் முன்னே அறுவிலேனுரைக்க லுறறேன்.

சொல்லிய உந்திக்கீழே சுழித்ததோர் எழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்த நாடி எழுபத்தீ ராயிரங்கள்
வல்லதோர் தேவிபாதம் மகிழ்ந்துற ஓடி நிற்கும்
நல்லதோர் வியாதி மூன்று நாடியிற்கண்டு கொள்ளே.

ஊசிபோல் மூக்குநீண்டு உடம்பெல்லாம் நரம்பு தோன்றிப்
பாசிபோல் கண்சிவந்து பரந்த நீர் போதவாங்கில்
கூசிட வேண்டா மிந்தக் குறிகளுண் டானகாலம்
சாவது திண்ணமென்று சடுதியில் விட்டுப் போவாய். 16

நாடிப் பரீட்சை முற்றும்.

---

162. (b) முக நாடி.

Lines 6—7 in a Page.

இது முகத்தையும், மூக்கில் ஓடும் சரத்தையும், பார்த்து வியாதியின் தன்மையை நிதானிப்பது. அச்சில்லை.

வெள்ளிக்கிழமை உச்சிநேரம், இடதுநாசி ஓடும். சனிக்கிழமை வலது நாசியும், கண்ணுந் துடிக்கும். அது சாவு. ஞாயிற்றுக்கிழமை விடி வெறு கைப்பிடித்துப் பார்த்தால் வாத நாடியானுவ் மரணம். திங்கட்கிழமை, இடது நாசியும், கண்ணும் துடித்தால் நன்மை. செவ்வாய்க்கிழமை, மத்தியானத்தில் முகத்தில் ரத்தபசை உண்டானுல் நன்மை. முகங் கோணினுல் சாவு.

வியாழக்கிழமை மாடுகன்று சாயுறநேரம் நாடி லட்சணம் பார்க்க வாதநாடி ஓடினுல் சந்தேகப்படவேண்டாம்.

163. (c) நடக்கை விதி.

Lines 6 in a Page.

இது நோய் அணுகாதிருக்கவேண்டின் இவ்வாறு நடக்க வேண்டுமென விதிப்பது. அச்சிடப்படவில்லை.

Beginning:

கையில் ஏழும் ஒளியின்கணஞ்சு
நாசியில் மூன்றும் நாவில் ரெண்டும்
தேயும் தேசறும் கூடப் பிரித்தல்
உச்சியிலுயிர்ப் பில்லாத தொன்றும்
உழை வளி வனங்காதிலிரண்டும்

ஈந்தெழு கோபத்தாலும் இளம் வெய்யில் காய்வதாலும்
தாங்கிய சுமையினாலும் ச ரு சை பூறலாலும்
ஓங்கிய பசியினாலும் உண்டிமேல் உண்டியாலும்
தேங்கிய மலக்கட்டாலும் தீர நோய் சிமக்குந் தானே.

End:

விடிந்தவுடன் வெய்யில் காய்தல் விரைவுடன் பகற்பால் கூட்டல்
படிந்தெழுந்துற்ற மூத்த பைந்தொடி தன்னைச் சேர்தல்
கடந்துறு மிவைகள் வீழ்த்துக் கட்டுண்ட நீர்குடித்தல்
மடந்தையர் மணமே தோய்தல் வாலிவன் கிழவனவன்,

மாலையில் வெய்யில் காய்தல் வாலிப மடந்தை யாலும்
பாலை யிரவு கூட்டல் பரிமளங்கள் தோய்தல்
சீலமா மணந்தார் நூறும் தெளிந்தநீர் குடித்தலாலும்
மூலமாம் வயது நீங்கி முதுமைபோ யிளமையாமே.

நடக்கை விதி முற்றும்.

---

164. (d) சுர நூல்.

Lines 6—7 in a Page.

இதில் இன்னின்ன நட்சத்திரத்தில் சுரங்கண்டால் இன்னின்னவாறு முடியும் என்றுரைக்கப் பட்டிருக்கிறது. செய்யுளும் வசனமும் கலந்துள்ளன. அச்சிடப்பட்டுள்ளது.*

Beginning :

சுர நூல்:

அசுபதி நாளுற்ற சிரமெட்டா நாளில்
உன்னியே விடுதல் செய்யுஉற்றதோர் பரணிநாளில்

*இந்நூல் நிலைய வெளியீடான ' சரபேந்திர வைத்திய முறைகள்'' ஜ்வர ரோகசிகித்ஸையில் ஒரு அனுபந்தமாக வெளியிடப்பட்டுள்ளது.

அன்னிய சுரமே கொல்லும் அத்தன்றி விடுதலாகும்
பன்னிய கார்த்திகைநாள் பரிந்திடுஞ் சுரத்தைச் சொல்வேன்.

End

உத்திரட்டாதி நாள் பிடித்தசுரம் ஏழுநாள் வேதனை செய்யும். இருபத்தஞ்சாநாள் தீரும். ரேவதிநாள் பிடித்த சுரம் எட்டாம் நாள் கொல்லாவிட்டால் பத்தாநாள் தீரும்.

சுரநூல் முற்றும்.

---

165. (e) சுரங்களுக்கு மருந்து.

Lines 6—7 in a Page.

இதில் சுரங்களுக்குக்குடி நீர், பூபதி உருண்டை, அக்கினி குமாரன் முதலியவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning

தாபசுரத்திற்கு குடிநீர்

சீந்திக்கொடி, பற்பாடகம், கோரைக்கிழங்கு, நிலவேம்பு, செங்தொட்டி, இருவேலி, விளாமிச்சம்வேர், பொன்முசுட்டை வேர், கொத்தமல்லி, சுக்கு, இவை சரிகூட்டி இடித்துக்குடி நீர் வைத்துக் கொடுக்கவும்.

பித்த அதிசார சுரத்துக்குக் குடிநீர்

நெல்லிப்பருப்பு, கோரைக்கிழங்கு, சுக்கு, சரிகூட்டிக்குடி நீர் வைத்துக்கொடுக்கவும்.

End

இரதம், பச்சைநாவி, அரிதாரம், கெந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, மனோசிலை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்,

வெங்காரம், நவச்சாரம், நேர்வாளம் இவை சரிகூட்டிக் கரிப் பான் சாற்றில் ஒரு சாமம் அரைத்துப் பருத்திவிதைப் பிர மாணம் உருண்டை செய்து வைத்துக்கொண்டு, இஞ்சிசாற்றி லிடவும். கு........ந்தீரும். மற்றச்சகல வாதத்துக்கும் அந்தந்த மருந்துகளுடனே கண்டு கூட்டிக் கொள்ளவும். அக்கினி குமாரன் முற்றும்.

---

166. (f) சன்னி பதின்மூன்றுக்கும் வகை.

Lines 6—7 in a Page.

இதில் சன்னிகளின் பெயரும் அவற்றின் லட்சணமும் அவைகளுக்கு மருந்தும் சொல்லப்பட்டுள்ளன. அச்சிடப்பட வில்லை. பிழையதிகமாயிருக்கின்றன.

Beginning

சந்திகையுஞ் சாந்தகமு மனுத்திராகம்
  தாந்திரிகம் சீதாங்கம் கன்ன குப்பியம்
சிந்திடும் சித்தப்பிரமை ரத்த திருட்டி
  சிருமுகம் பிரலாபம் பக்கநேத்திரம்
கந்திடும் கண்டிகையும் அவிகாயமோடு
  கனக்கவுமோர் பதின்மூன்று சன்னிவாதம்
வந்திடுமே சுரமீதிலென்று தானும்
  வையகத் தோர்க்கறிய வசனிப்பீரே.

End

சுக்கு, திப்பிலி, கோட்டம், சந்தனம், தூதுவளை, முருங் கைவேர், நொச்சி, பிரமி, இவை சரி கூட்டிக் கொள்ளத்தீரும், அவிகாய சன்னியே (25) வேறு. சித்தாமுட்டி, பேராமுட்டி, முக்கரவேளை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், கருஞ் சீரகம், வெங்காரம், செவ்வள்ளிக்கொடி இவை சரிகூட்டி

இரு நாழி நீர் விட்டு உழக்காய்க் காய்ச்சிக் குடிக்க இதற்குத் தீரும் ரத்த திஷ்டி சன்னியுமே. 26

சன்னி பதின்மூன்று எழுதி முடிந்தது.

167. (g) காதல்.

Lines 5 in a Page.

இது காக்கை, பல்லி, தும்மல் இவற்றின் பலாபலனை யுரைப்பது. ஒரே செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது.

காக்கை பல்லி சிறுதும்மல் கருமங் கருதியிருந்திடத்தே
ஏற்க வந்து இடஞ் சொன்னால் எல்லாக் கரும நன்றாகும்
ஆக்கங் பேசியிருந்திடத்தே அவரில் ஒன்று வலஞ்சொன்னால்
நோக்கவேண்டாம் அறக்கருமம் நோய்கள் காட்டுங் கண்டீரே

நீயணுமலைவேதநீ

நீத வேடனுமாயநீ

நீயமாகரிகாலநீ

நீலகாளிகணுயநீ



168. (h) வைத்திய அட்டவணை.

Lines 3—7 in a Page.

இதில் பாம்புக்கு வளையம், விஷத்திற்கு மந்திரம், கிரந்தி சுரம், குன்மம், நேத்திர வியாதி, முதலியவற்றிற்கு மருந்து,

இளநீர்க்குழம்பு, செவ்வாக்கிய லேகியம், துளசித் தைலம், மூதண்டத்தைலம், ஏலாதித்தைலம், பூனைகச்சூரணம், சீரகத் தைலம், தூதுவளைக் கிருதம், சிவதை லேகியம், தூதுவளைப் பூத் திரட்டுப்பால், சண்டமாருத லேகியம், முதலிய முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. பிழையதிகமாயிருக்கிறது. அச்சிடப்படவில்லை.

Beginning:

பங்கம் பாளை கரிப்பாலை பாரி லவுரி மாதளையும்
பொங்குங் கன்னி மேல் குண்ணில் பொருந்துங் கழற்சித்
திரளுடனே
தங்கை சிறியா நங்கை எட்டி சாற்றிற் கோடா சாலையுடன்
கங்கைக் கெருடன் கொடியுடனே கனத்த ஆடா தோடை
யிதே.

ஆடாதோடை கரு.......... அமாயும்பீர்க்கு கற்பூரவள்ளி
தாடாவேரு பதினறும் சமனய்க் கட்டிக் குளிசமதாய்
வாடாவளையல் தானக்கி வருந்திக் கையி விடு வீராய்
தேடா நாக மெறி பாம்பு தீண்டா திருக்குந் திடந்தானே.

End

மதிக்கச் சண்ட மாருத லேகியமாகும்; தான்றிக்காய் போல உருண்டை செய்து கொடுக்கவும், பத்தியம்:—கைப்பு புளிப்பு, புகை, நீக்கிப் பத்தியத்துக்குக் கூட்டுகிறது. கறி உப்பு வறுத்துக் கூட்டவும். வாழைக்கசசல், முருங்கைப் பிஞ்சு, அவரைக்காய், வழுதலைக் கத்திரிப்பிஞ்சு, நெய், பால் துவரம் பருப்பு, தூதுவளங்கீரை, முளைத்தண்டு இவையெல்லாம் கூட்டிக் சொள்ளவும், காச நோய் தீரும், நாற்பது நாள் கொள்ளவும்.

169. No. 110 (a) வைத்திய சிந்தாமணி இரண்டாம் விலாசம்.

ஏடுகள் *170;* Lines 5 in a Page.

இது வடமொழியில் சுலோகமாகச் செய்யப்பட்டுள்ள வைத்திய நூல் இதனை இயற்றியவர் வல்லபேந்திரர். இந் நூலின் தொடக்கத்துள்ள சுலோகத்தில் நோய்களாகிய பாம் புக் கூட்டத்துக்கு இது கெருடன் எனக்கூறப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த வைத்திய நூலாகும். இந்தப்பிரதியில் உரையும் இருக்கின்றது. உரையாசிரியர் பெயர் தெரிய வில்லை மிகவும் சிதைந்திருக்கிறது. இதில் சுரம், சன்னிபாதம், பாரிசவாய்வு, குட்டம், மூலம், பிரமேகம், நீர்க்கட்டு முதலிய வியாதிகளுக்கு மருந்துகள் எழுதப்பட்டுள்ளன.

Beginning

சவக்காரம் தேன்கூட்டி எலுமிச்சம்பழச்சாறு கூட்டிக் கொப்பளிக்கவும். ஸைந்தவந் திரிகடு, ஹிங்கு, டங்கணம், நல்பரிதி ஒத்த நவரத்னமும் நலமான பஞ்சலோகமும்

End

நரி எருமை யிருவாடு பரி கழுதை ஆவேனம் நல் கரடி
பலகளிறை
பொர பரவுதராம............ .ஆமையோடு புங்கம் வித்துகலங்
கொம்பு துத்தமும்
சங்குநுரை கபாலமும் சிப்பரவு இவை எல்லாந் தனி
லொக்கக் கூட்டி
................ச் சாத்திக் மூன்று................. தனில் உலர்த்தி
துப்பரவு மார்முலைப்
பால் பனங் கருகி யிதமான சாறு தேன் நெய் இதுகளில்
உரைத்து................நயந்.................தீரும் ரத்னுதியே.

குறிப்பு:

இதன் 15-ம் ஏட்டில் 'இது ஆபஸ்தம்ப குலமாகிய அமுதசாகரத்துக்கு சந்திரனாகிய **வல்லபேந்திரரது வைத்திய சிந்தாமணி** ரசயோகம் இரண்டாம் விலாசம்' என்னும் சுலோகம் காணப்படுவதால் இதனை இயற்றியவர் வல்லபேந்திரர் என்றறியக்கிடத்தல் காண்க.

---

170. (b) திரட்டு வாகடம்.

Lines 5 in a Page.

இதில் சுரங்களின் லட்சணமும், அவற்றிற்கு மருந்தும் சொல்லப்பட்டுள்ளன. 51 செய்யுட்களிருக்கின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பிழையும் சிதைவும் அதிகமாயுள்ளன.

Beginning:

காலுச்சி யாதி யளவாகி நின்று கம்பித்து நிற்கு முடல்தான்
மேலிற் சுவாத முளதாகிய மேனியுங் கருத்து மெலிவாய்க்
கோலிச் சிற நிகள.................கூறுடன் சிலேஷ்ம முளவாய்
மாலிற் சிறந்த மருவாயிலொரு கூறுவாதச் சுரத்தின்
வகையே. (க)

End

முந்திரிகைப்பழம் பேரீஞ் சினீர்ங்கனி முன் சொன்ன
பற்படகமுஞ்
சந்தன மிலாமிச்சை யிருவேலி வேரினொடுதந்த நன்னாறி
சுக்கும்
கொந்து மாடாதோடையிலை பூசினித்தண்டு குலவு பன்னிரு
கழஞ்சி
லந்த வதைக் காய்ச்சி மேற்றிப்பிலி முலைப்பாற் கலந்திடச்
சன்னி கெடுமே. (51)

---

171. (c) வைத்திய அட்டவணை.

Lines 5 in a Page.

இதில் கிரந்தமும், தமிழும்கலந்து எழுதப்பட்டிருக்கிறது.

Beginning:

திப்பிலாதி ரஸாயநம்:

திப்பிலிப் பொடி இரண்டுபடி, இதில் பாதி சர்க்கரை, வாய்விளங்கம், நாககேசரம், சிறு தேக்கு, சீரகம், மிளகு இவை ஓரொன்று நாலு பலம், திப்பிலி மூலம், செவ்வியம், கொடிவேலி இவை மூன்றும் ஒவ்வொன்று இவ்விரண்டு பலம், பஸ்மம், இரண்டு பலம், கரிசலாங்கண்ணிப் பொடி இரண்டு பலம், இவை யெல்லா ம்பொடி பண்ணிக் கொண்டு, இதுக்குள்ளே இரண்டுபடி தேன் விட்டு ஒரு குடுவையில் வைத்துக் கொண்டு, தினம் இரண்டு விராகனிடை கொள்ள க்ஷயம், காஸம், சிலேஷ்மம், இருமல், குல்மம், வாந்தி எல்லாம் குணமாம்.

சகலமான கதிக்கு ஏகமூலிகை மருந்து
நவநீதம் கடுக்காய் வல்லாரை கையாந்தகரைச்

... ...

---

172. (d) வாண முறைகள்.

Lines 5 in a Page.

Beginning:

ஆகாச பாணத்ளக்கு :

உப்பு 19, கந்தகம் 2, கரி 2.

பொட்டலை பாணத்துக்கு :—

உப்பு 8, கெந்தகம் 1, கரி 2.

End

நில விருசுக்கு :

உப்பு 12, கந்தகம் 2, கரி 2.

குறிப்பு :

இவைகளை யல்லாமல் சில வியாதிகளுக்கு மருந்துகளும், ஜால முறைகளும், சுலோகமும், உரையுமாக எழுதப்பட்டிருக்கிற பறப செந்தூரம், லேகியம், தைலம் முதலிய முறைகளும், விஷ மந்திரமும் எழுதப்பட்டிருக்கின்றன.

---

173. (e) கருடோப நிஷத்து.

Lines 5 in a Page.

இது அதர்வண வேதத்திலிருந்து எழுதப்பட்டிருக்கிறது.
(124-ம் பக்கமுதல் 126-ம் பக்கம் முடிய)

---

174. (f) வைத்திய அட்டவணை.

Lines 5 in a Page.

இதில் மணிப்பிரவாள நடையில் குன்மம், பிரமேகம், நீரிழிவு, பிளவை, சுரம், பெரும்பாடு, கல்லெரிப்பு முதலிய பல விதமான வியாதிகளுக்கு மருந்துகளும் பலவகை விஷங்களுக்கு முறிவும், நயன ரோகத்துக்கு மருந்தும், எழுதப்பட்டுள்ளன.

Beginning

இஞ்சிச்சாறு 2, எலுமிச்சம்பழச் சாறு 2, கொம்மட்டிக் காய்ச் சாறு 2, நொச்சிச்சாறு 2, அச்மதாகம், வெள்வெங்காயம், பெருங்காயம், மிளகு, இந்துப்பு, வெந்தயம். நாய்க்கடுகு, மஞ்சள் ஓரொன்று வராகனிடை, கடுகு. பதத்தில் பண்ணிக் கொடுக்கவும். ஸகல வாயு குன்மங் தீரும்.

ஏனத்தின் கொம்பும் இரவறிவான் தன்னெலும்பும்
கூனல் முதுகுங் குருடன்றன் முன்னெலும்பும்
மானத்தின் மீனும் மான் கொம்புங் கூட்டிக்
கானக் குறத்தி முலைப் பாலிலுரை யிடவும்
ஆணிப்பூ அன்றறுமே.

End ;

இரதம் க பலம், எலி மருந்து ௧ பலம், துத்தம் க பலம், இவை பொன்னூமத்தஞ்சாறு வார்த்தரைத்து, குன்றிப் பிரமாணம் உருண்டைபண்ணி, இஞ்சிச்சாற்றிலாதல், சர்க்கரையிலாதல் இடுவது. இதுக்கு சீத சுரம் தீரும்.

கோடா குளி :

இரதம்; கெந்தகம், வெங்காரம், பச்சைநாபம், சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், சாதிலிங்கம், இவை ஓர் ஒன்று கழஞ்சு, நேர்வாளம் பதின்கழஞ்சு இவை சுத்தி,

குறிப்பு;

இதில் மிகவும் சிதைந்து தூளாக முறிந்த அநேக ஏடுகள் இருக்கின்றன.

175. No, 111 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 120; மிகச்சிதிலமாயிருக்கின்றன.

Lines 4—6 in a Page.

இதில் பலவகையான புண், அரையாப்பு, கிரந்தி, நேத்திர வியாதி முதலியவைகளுக்கு மருந்தும், வசியம், ஈடு, சாலம் முதலியவைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப் படவில்லை.

Beginning

..............................க்கும் வேரும், ஆவாரம் கொழுந்து அரைத்து..............நெய்யில் குழைத்து இட, இது சற்றுக் குளிர்ந்திருக்கும். இது நல்லது.

வெட்டுக் குத்துக்கு, இழை யிடாதே ஆற்ற உபாயம் :

ஜாதி ஆன வெள்ளைக் குங்கிலியத்தைப் புண்ணுக்குத் தக்கது எலுமிச்சம்பழச்சாறு வார்த்து, ஒரு நாழிகை அரைத்த பின்பு அதைக் கரண்டிகையாலே வழித்து, அதிலே கால் காசளவு...... ....நல்லெண்ணெயைக் குத்திச் சாரித்து, அதை வேரே ஒருவன் உள்ளங் கைகளிலே தடவி, வெந்நீரைச் சற்றே சற்றே, உள்ளங்கையிலே தெரித்துக் கையோடு கை தேய்க்க, இப்படி ஒரு நாழிகை தேய்க்க, அந்த தெளித்த நீரெல்லாம் கையிலே சுவறும். கடுக்கக் கடுக்கக் கரண்டிகையாலே, கையிலும் வழிக்க வேணும். வெறவெறன்று கையைப் பிடித்துக்கொண்டு விடும். ஆகையாலே கடுகிக் கரண்டி கையால் வழித்து..............

புண் எட்டு நாளையில் சதையுமிட்டு ஆறிவரும்.

End

கண் நோய்க்கு :

பசுவின் பாலைப் பச்சையாய்க் கடைந்து வெண்ணெய் எடுத்து, இந்த வெண்ணெயும் சங்குப் பொடியும் கலப்புறத்தி லப்பிச் செம்புகொண்டு தேய்த்திடவும். கண்ணோய் தீரும் கலைக்கொம்பை தேனிலுரைத்திட, ஆணிப்பூ மறியும்.

* * * *

..............வெண்ணெயிட்டுத் தேய்த்து........... தேன் வார்த்து
நன்ருகத் தேய்த்துச் சிமிழில் அடைத்துக் கண்ணிலிட கண்ணோவு எல்லாந் தீரும்.

---

176. No. 112 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 103 மிகவும் சிதிலமாயிருக்கின்றன.

Lines 5—6 in a Page.

இதில் சுக்கிலத்தம்பன முறைகள், பலவகை ஜாலங்கள், வசியப்போக்குகள், விஷமருந்துகள், ஈடுகள், கற்பங்கள், இரச வாதமுறை, எந்திரங்கள், சிலவியாதிகளுக்கு மருந்துகள் முதலானவை எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning:

நெய்தல் கிழங்கு கொண்டுவந்து, அரைத்து, நெய்யும் பாலுங்கூட்டி அதில் பொடி போட்டுக் காய்ச்சித்தின்னச் சுக்கி லம் வர்த்திக்கும். பொன்னூமத்தம் வேரும், கழஞ்சு, ரசமும் கல்வத்திற் போட்டு அரைத்து, உருண்டை பண்ணித்திரிலோ கிய சிமிழில் அடைத்து, அரையில் இருக்க ஸ்தம்பனம்,

*   *   *   *

செப்பு நெருஞ்சி வேர், வெள்ளைக் கொழிஞ்சி வேர், நில வாகை வேர், இந்த மூன்றும் வேரும் அரைத்து மேலே பூசி வெட்ட வெட்டறுது.

*   *   *   *

பேய்ச்சுரை விதையும், புங்கம்விதையும், பீர்க்கன் விதை, அதினுடைய வேர், கோமூத்திரம் வார்த்தரைத்து உருண்டை பண்ணி அந்த உருண்டை கோமூத்திரத்தில் கொடுக்கச் சகல விஷமுந் தீரும்.

End

பிள்ளையுண்டாம்



177. No. 113 வைத்திய அட்டவணை.

ஏடுகள் 32, சிதலம் Lines 6—9 in a Page.

இதில் சோகை, காமாலை, ஈளை, இருமல், எலிகடி, மந்தார காசம், பிரமியம், நீரிழிவு, எலும்புருக்கி, பெருவயிறு, வயிற்றுக்கடுப்பு, கிராணி, பல்வலி முதலிய வியாதிகளுக்கு மருந்துகள் எழுதப்பட்டிருக்கின்றன. அச்சிடப்படவில்லை.

Beginning :

மண்டூரம், தஞ்சாவூர் கிட்டம் பத்து வரளியில் புடம் போட்டுச சிவந்த உடனே சட்டியிலே குறுணி கோமூத்திரத் திலே எடுத்துப் போடவும். இப்படி நூறு புடம் போட்டு அந்தக் கிட்டத்தை எடுத்து வைத்துக் கொண்டு, இதுக்குக் கடை சரக்கு ;—சுக்கு, மிளகு, திப்பிலி............கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், கடுக்காய் ....கொத்தமல்லி, இவைகள் வகை ஒன்றுக்கு பலம் க இடித்துச் சூரணம் பண்ணி, மூன்று பங்கு கடைச்சரக்குக்கு, ஒரு பங்கு கிட்டம் பொடி பண்ணிக் கலந்து, மூவிரல் கொண்ட பொடி யெடுத்து உழக்கு எருமை மோருடன் கலந்து குடிக்கவும்.

பெரு வயிற்றுக்கு

நாலு கருணைக்கிழங்கு, சிறுக நறுக்கி, அரிசி உப்பு கூட்டி யுடனே வேகவைத்து இறக்கிச் சோற்றை உண்ணத் தீரும். இது கைகண்டது,

End

கெர்ப்ப விப்புருதி வலிக்கு

வீட்டுக்குத் தூரமான நாள்முதல் வயிற்றைத் தூக்கி மேலே நோக்கி வலித்து, பக்கங் கடுப்பெடுத்துச் சந்து வெட்டி விழுந்து போகிறுப் போலிருக்கும்.

இதற்கு மருந்து :— *ஒரு படி பசுவில் பால், இரண்டு பொங்கலான வேளை எரித்து, வெள்ளை வெங்காயம், ஒரு சேரைக் கூடப் போட்டுத் துளாவிக் காய்ச்சினால் களிபதம் ஆகும். அந்த வேளையிலே யிறக்கிப் பனைவெல்லம் கடித்துக் கொண்டு தின்னவும். இதற்குப் பசுவின் பாற்கஞ்சி, உப்பில் லாமல் குடிக்கவும்.*

கைப்பு, புளிப்பு விடவும். கெர்ப்ப விப்புருதி தீரும். கைகண்டது.

குறிப்பு :—

இதில், 25, 26, 27, 29 முதல் 34, 39 ஏடுகள் இல்லை.

---

178. No. 114 (a) ஈஸ்வரி பூஜை.

ஏடுகள் 34; அபூர்த்தி Lines 4—6 in a Page.

அச்சிடப்படவில்லை.

Beginning

பூஜை வெள்ளை வஸ்திரம் உடுத்து, பூத சுத்திபண்ணி, ஈஸ்வரி பூசை, பலகையில் சந்தனத்தால் பூசிச் சக்கரமிட, மூல மந்திரத்தில் பதார்த்த சுத்தி பண்ணிச் சாமானியம்............ ஸ்தாபித்து, யோனி முத்திரை கொடுத்து, ஜலம் புரோக்ஷிக்கக் கரநியாசம் பண்ணி, அங்கநியாசம், அந்தரியாகம் பண்ணி, சிறு விரலந்தமாக நெஸித்துப் பிற்பாடு சிறு விரல் முதல் பெரு விரலந்தமாக

* * * *

* * *

End:

இந்த மந்திரங்களினாலே வயிரவாளையும் சத்தியளையும் கெந்த புட்பங்களினாலே பூசை பண்ணி, பின்பு கிழக்கு முதல் இந்திராய நம, அக்கினியே நம, யமாய நம, நிருதி நம, வருணாய நம, வாயுவே நம, குபேராய நம, ஈசானாய நம, என்றும் ஈசானத்திலே பிரமணே நம, என்றும் நிருதியிலே, விஷ்ணுவே நம, என்றும் பூசை பண்ணுவது. பின்பு கிழக்கு முதல் அட்ட பீடம் பூசை பண்ணும்படி, காமரூபகியே நம, மலைய கிரணாய நம, கோலகாகிரயே நம, குலாந்தககிரயே நம, சவுகாகிரயே நம, ஒட்டியாகிரயே நம.

---

179. (b) வைத்திய அட்டவணை.

Lines 6—8 in a Page.

இதில், விரேசன மருந்துகளும், சுரம், விஷம், இருமல், குட்டம், நீரிழிவு, கண்ணோய்கள், மூலம், கல்லடைப்பு, கற்ருழை நாற்றம், முதலியவற்றிற்கு மருந்துகளும், தம்பன லேபன முறைகளும் எழுதப்பட்டுள்ளன. அச்சிடப்படவில்லை.

Beginning:

மிளகரை கடுக்காய் ஒன்று மிகுத்தவர் மனைக்கிரண்டு
வளமிகு வாளமேழு வருநீலிச் சாற்றில் கூட்டி
குளமகிழ் பழத்தில் தேனிற் கூடவோ ருண்டைகொண்டா
லளவறு சீதமேகும் ஆனதோர் குளிர்நீர் மாற்றே

இளநீர்க் குழம்பு :

துத்தமிந்துப்பு மஞ்சள் துலங்கு கற்பூரஞ்சங்கு
பித்தரோகணி திப்பிலி பெருகுபலகறை மிளகும்
பத்திலஞ்சனக்கல்லாழி நுரையொடு பளிங்குக்கல்லு
ரத்தவாகாசருடன் தனைச்சரியாகக்கூட்டே

நாட்டியமருந்துதன்னை நறுகொச்சிற் சாறுமிக்க
காட்டிலுப்புலிச் சாற்றற கரும்பழம்புளிச்சாறெண்ணை
திட்டுமிந்துப்பு நெய்யுந் தேன் தயிர் கருப்புக்கட்டி
கூட்டியே குழம்பதாக்கிக் கொடுங்கணிவிட்டுப்பாரே.

வேறு. முசுமுசுக்கை, கிராம்பு, ஏலம், பாலில் மூன்று நாள் கொள்ளவும். பெரும்பாடு நிற்கும்.

குறிப்பு :

இதில் உச்சிட்ட கணபதி மந்திரமும், 'கருமஞ்சிதையாது' 'வாக்குண்டாம்' என்னும் விநாயகர் தோத்திரப் பாடல்களும், தாதுவளையின் குணம் உரைக்கும் செய்யுளும், நோயணுகா விதிகூறும் 'பாலுண்போம்' என்னும் பாடலும் இருக்கின்றன.

180. No. 115 வைத்திய அட்டவணை.

ஏடுகள் *66;* சிதிலமாயிருக்கிறது Lines 4—5 in a Page.

இதில் சிற்சில வியாதிகளும், விஷகடிகளுக்கும், மருந்துகளும், காயகற்பமும், இரசவாதமும், ஜாலங்களும், எழுதப்பட்டிருக்கின்றன. ஏடுகளில் இலக்கம் போடப்படவில்லை.

Beginning:

.... பூசிச்செல்ல மாற்றுன் தோற்பான், தொ...ன இந்தப்பொடி நல்ல வெல்லத்தில் கொள்ளப் பஞ்ச குன்மம் நிற்கும். இப்பொடி பாலிற் கொள்ள, வீரியமுண்டாம். இப்பொடி வெந்நீரிற் கொள்ள, இருமற் போக்கும். உப்பு தவிரவும், முந்தின பொடியைத் தேனிற் கொள்ள உடம்பு இளைக்கும். இப்பொடி துளசிச்சாற்றில் கொள்ளச் சூலை போக்கும், இந்தவேர் தேனிலுரைத்திடக் கண்ணோவு நிற்கும்.

வெள்ளைக்சாரணை சமூலமும், வெள்ளைத் தூதுவளை சமூலமும், காட்டுப்பசளை சமூலமும், இது மூன்றும்.......த்தியிடித்துத்தூளாக்கி, மூணும் சமனுக நிறுத்துச் செம்புத்தகடு தட்டி, அந்த மருந்தைப் பானையில்......வைத்து, மருந்து கீழும், தகடுமேலும்............யிப்படி, அடுக்கு, அடுக்காய் வைத்து,...........எல்லாம் அதின் மேலே போட்டுச்சட்டி கவிழ்த்துச் சீலைமண்செய்து, புகைபுறப்படாமல்............... புடமிட வெள்ளியாம்.

181. No. 116 சர்ப்பாருடம்.

ஏடுகள் *35;* Lines 5—8 in a Page.

இதில் பாம்புகளின் புறப்பு, அவற்றின் சாதிபேதம், கடிவாயின்குறி, விஷம் தீரும், தீராதென்பதை வருந்தா

தனைக் கொண்டு அறியும் விதம், விஷங்களுக்கு மருந்துகள். எழுதப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முதலேடில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning

....

...ருநூற்றேடிருபத்தெட்டுநாள் மிழுங்கு மென்ன
பருமிக்க நான்கு....வாம் பதினாறு நல்லமுட்டை
ஒருமிக்க பதினாறுந்தான் ஒத்துடன் பொரித்தே ஏறும் (3)

வாய்ப்புடை மறையோனாகில் மருவிய நாவிநாறும்
காப்புடை மன்னனாகில் கடிமலர்த் தாழைநாறும்
சேப்புடை செட்டியாகில் சிறந்தபா திரியே நாறும்
கோப்புடை உழவனாகில் குலவிய இலுப்பைப்பூவே. (4)

பாதந்தொடிலோ தேளாகும் பரிவுங் கணைக்கால் நீர்ப்பாம்பு
சோதவயிறு மண்டலியாங் துடருமங்கையகள் மப்பரிகுள்
ஏதில்மார்பு கருவழலை எலியேயாகும் வலமார்பு
ஏது மன்றியிருந்த தனுவிடறும் விஷங்களில்லை மின்னே. 21

End.

புடையான் மருந்து.

புடையான் கடித்து வீங்கினபின் பொருந்தப் பருத்தியிலை
துவைத்து
அடையப்பிழிந்து மேல்தடவிவிதுதான் புலர்ந்தால் பின்தடவ
அடையுங்கண்கள் மிகவாடி ஒதுங்கு விடங்கள் கடிவாயில்
சடையதுடையார் திருவாணை சகத்தோரறியச் சொன்னோமே.

182. No. 117 (a) சித்திரரூடம்.

ஏடுகள் 80; Lines 4—8 in a Page.

இது 24-ம் நம்பர் போன்றது. இதில், பாம்புகளின் பிறப்பும், அவற்றின் வகையும், அவைகளின் கடி விஷத்திற்கு மருந்துகளும், சொல்லப்பட்டுள்ளன. 24 ஆம் நம்பர் பாயிரத்தில் 'திருப்பெயரேதெனின் — சர்ப்ப சாஸ்திர மென்றுரை பகர்ந்தனர் — ஒத்த காவிய வியலுணர்ந் தோரே' எனவும் இந்த நம்பர் பாயிரத்தில் 'இந்நூலின் பெயர் யாதெனின் சித்திராரூட மென்றுரை செப்பின — ரொத்த காட்சி யுணர்வுடை யோரே' எனவும் பாடபேதம் காணப்படுகின்றது. இதனால் அக்காலத்தில் இந்நூலுக்கு இவ்விரண்டு பெயரும் வழங்கிற்றுப் போலும் என்று ஊகித்தற்கிடமாதல் அறிக. இதில் 150 செய்யுட்கள் இருக்கின்றன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

183. (h) சர்ப்பாரூடம்.

Lines 8 in a Page.

இதில், பாம்புகளின் ஆதியுற்பத்தி, அவற்றின் பெரும் பிரிவு, ஒவ்வொன்றின் உட்பிரிவு 72 பாம்புகளின் பெயர், நிறம், ஆகாரம், மணம், வசிக்குமிடம், ஆடும்விதம், படத்திற் காணும் குறி, விஷப்பற்களின் பெயர், கடிவாயின் வடிவம், வடிவாயிற் பொசியும் நீரின் வர்ணம், வயது, கடித்தால் விஷம் மீளும் நாட்கள், மீளாத நாட்கள், விஷத்திற்கு மந்திரங்கள் முதலியவைகள், எட்டு அக்தியாயங்களாகப் பகுத்து, வசன நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இது மிகவும் சிறந்த நூலாகக் காணப்படுகிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning

ஆதிபிரமாவின் வேள்வியிலே பிறந்தவர்கள் சர்ப்பராசர்கள் ஒன்பது பேரும், யோகிகளாய்ச் சத்தியவாசகருமாய் பதினெண் பாஷைகளும், வல்லவர்களுமாய்த் தங்களை வழிபட்டு வந்த பேர்க்கு வேண்டின கருமம் முடித்துக்கொடுக்க வல்லவர்களுமாய்ப் ப ....ண்ட உடலுமாய் ஆயிரந் தலையும் படமுமாயிருப்பார்கள். இவர்கள் பெயர் சேடன், அனந்தன், வாசுகி, தக்கன், கார்கோடன்; பத்மன், மகாபத்மன், சங்கபாலன், குளிகன் ஆக இவர்கள் ஒன்பதுபேரும். சேடன் பூமியைத் தாங்கி நின்றான், மற்றுண்டான எட்டுப் பேரும் எட்டுத் திக்குக்குக் கடவுளராய் மாநாகமாக விருப்பார்கள். ஒன்பது பேருக்கும் அவரவர் பேரினாலே ஸ்திரீகளும் உண்டாகி அவரவர்க்குப் பாரியாயிருப்பார்கள்.

End

பரமேசுரி கழுத்திலே பரமேசுரன் திருமங்கிலியம் பூட்டிட்டேனென்று -தியானித்து நிற்கை, -நிற்கை சுவாகா என்று தவணையிடவும். தவணைமந்திரம் கொல்லக் கொட்டிய சுண்ணாம்பே குவரைக் கட்டிய பட்டுநூலே..........................
பட்டுப்போ சுவாமியாணை.

---

184. No, 119 விஷ வைத்தியம்.

ஏடுகள் 38; அபூர்த்தி சிதிலம் Lines 4 in a Page.

இது 117-ம் நம்பர் போன்றது, ஆரம்பத்தில் 6 ஏடுகளில்லை, அச்சிடப்படவில்லை,

Beginning:

.............வசிகன், எலியும், ஓந்தியும், சூத்திரன், தவளையும் இரை எடுக்கும் என்பது. இவர்கள் இருப்பிடம்:—மறை

யோன்-கோயிலிருக்கும், அரசன்-மரத்திலே இருக்கும். வசிகன்-மனையிலே இருக்கும். சூத்திரன்-புற்றிலே இருக்கும் என்பது. இவர்கள் நிறம் :—மறையோன்-சிவப்பு. அரசன்-பொன்னிறம். வசிகன்-பச்சை. சூத்திரன்-கறுப்பு என்பது.

End

சில விஷங்களெல்லாம் நாட்சென்றது கலந்து கண்டிருந்த தெல்லாம், பாம்பு விஷம், மென்னியைக் கட்டி நின்றால், இலுப்பைக்கட்டியைப் பொடிசெய்து நெய்யில்.

அச்சுப் புத்தகங்கள்.

No. 1 திருக்குறள் மணக்குடவருரை.

பக்கங்கள் 140; Lines 15—27 in a Page.

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதிலுள்ள செய்யுட்கள் 68-ம் நம்பர் பிரதியைப் போன்றவை. ஆனால் பாடபேதம் காணப்படுவதோடு செய்யுட்களும் முன் பின்னாக மாறுபட்டுள்ளன. இவ்வுரை இயற்றியவர் **மணக்குடவர்** என்பவர். இவர் இந்நாலுக்கு உரையியற்றிய ஆசிரியர் பதின்மருள் ஒருவராவார். இந்தப்பிரதியில் அறத்துப் பால் முடிய உரையுடனிருக்கிறது. இதனை அச்சிட்டவர் திருநெல்வேலி **வ. வு. சிதம்பரம் பிள்ளையவர்கள்.**

Beginning

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு.

இதன் பொருள் ;—எழுத்தெல்லாம் அகரம் முதல-எழுத்துக்களெல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாக உடையன; (அவ்வண்ணமே) உலகு ஆதிபகவன் முதற்று-உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக உடைத்து.

உலக்காரணன் ஆதி பகவனென்றார் க

* * * *

வேண்டுதல் வேண்டாமை யில்லான் அடிசேர்ந்தார்
யாண்டும் இடும்பை யிலர்.

இ-ள்:—வேண்டுதல் வேண்டாமை இல்லான் அடி—இன்பமும் வெகுளியும் இல்லாதானது திருவடியை, சேர்ந்தார்—சேர்ந்தவர், யாண்டும் இடும்பை இலர்—எவ்விடத்தும் துன்பம் இல்லாதவர்.

காமமும் கோபமும் ஆகா என்றற்கு 'வேண்டுதல் வேண்டாமையில்லான்' என்று பெயரிட்டார் (இன்பமும் வெகுளியும்—காமமும் கோபமும்)

இது; கையறு கெடுமென்றது. 6

End

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லல் படுவ தெவன்.

இ-ள்:—நன்று ஆம் கால் நல்லவாக காண்பவர்—நன்மை வருங் காலத்து நன்றாகக் கண்டவர்கள். அன்று ஆம் கால் அல்லல் படுவது எவன்—தீமை வரும் காலத்து அல்லல் படுவது யாதினுக்கு ?

அறிந்தவர்கள் வருவன வெல்லாம் இயல்பென்று கொள்ள வேண்டுமென்று இது கூறிற்று.

380 அறத்துப்பால் முடிந்தது.

No. 2. இன்னிலை விருத்தியுரை.

பக்கங்கள் 96; Lines 22—27 in a Page.

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. அறம் பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பாலையும் சுருங்க உரைப்பது. நாற்பத்தைந்து வெண்பாக்களை உடையது. இதனை இயற்றியவர் **பொய்கையார்** என்பவர். பொய்கையார் என்னும் பெயருடையவர் பலர் காணப்படுதலின் இவரைக்களவழி நாற்பதும், புற நானூற்றுச் செய்யுட்களும் இயற்றிய பொய்கையார் எனச்சிலரும், நாலாயிரப் பிரபந்தத்திலுள்ள முதற்றிருவந்தாதியை இயற்றியவரெனச்சிலரும் இவ்விருவருமல்லாத வேறொருவர் எனச்சிலரும் கூறுவர். இவ்வுண்மை ஆராயற்பாலது இதற்கு விருத்தியுரை எழுதியச்சிட்டவர் **திருநெல்வேலி, வ. உ. சிதம்பரம் பிள்ளை** யவர்கள்.

Beginning

'இன்னிலை' என்பது இனிமையாகிய நிலை எனப்படும். அஃது அன்மொழித் தொகையாய் அந்நிலையை அளிக்கும் இந்நூலுக்குப் பெயராயிற்று.

கடவுள் வாழ்த்து.

வேலற் றரீஇய விரிசடைப் பெம்மான்
வாலிழை பாகத் தமரிய கொழுவேற்
கூற்றங் கதழ்ந்தெறி கொன்றையன்
கூட்டா வுலகம் கெழீஇய மலிந்தே.

அநுவயம்:—வேலனைத் தரீஇய விரிசடைப் பெம்மான், வால் இழை பாகத்து அமரிய கொழு வேலையுடைய கூற்றத்தைக் கதழ்ந்து எறிந்த கொன்றையன் கூட்டாக உலகம் மலிந்து கெழீஇய.

பதவுரை ;—வேலன்—வேலாயுதத்தையுடைய முருகனை, தரீஇய-தந்த, விரிசடை-விரிந்த சடையுடைய பெம்மான் பெருமானும், வால்இழை-ஒளிபொருந்திய ஆபரணத்தை யுடைய உமாதேவியினது, பாகத்து-வலப்பாகத்தில், அமரிய-அமர்ந்த, கொழு-சிறந்த, வேல்-வேலாயுதத்தையுடைய, கூற்றம்-எமனை, கதழ்ந்து-கோபித்து, எறி-எறிந்த கொன்றையன்-கொன்றைமலரைச சூடியவனுமாகிய சிவபிரான், கூட்டாக-துணையாக, உலகம்-எல்லா வுலகங்களும், மலிந்து-பெருகி, கெழீஇய-விளங்கின.

End ;

விசேடவுரை ;—மெய்ப்பொருளை யுணர்ந்தோர் பின்னப் பிறப்பினையடையாரென்பது, "ஓர்த் துள்ளம் உள்ளதுணரின் ஒரு தலையாப், பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்னும் திருக்குறளால் விளங்கும். ஏகாரம் தேற்றத்தின் கண் வந்தது 'உம்' உந்தாகிப் பெயர்க்குந்து என நின்றது இழிந்த பகுதிகள்—காமம், வெகுளி, மயக்கம், பொன்ற வுணர்வா என்றும், வரனுய்ந்தார் என்றும் பாடம் 6.

துறவியல் முற்றிற்று

வீட்டிலக்கப்பால் முற்றிற்று.

இன்னிலை மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.

No. மெய்யறம் அரும்பத உரையுடன்.

பக்கங்கள் 72; Lines 14 in a Page.

'வள்ளுவர் மறையின் வழிநூல் மெய்யறம்' என்று இந் நூலாசிரியர் கூறுவர், இது ஒவ்வொரு அதிகாரமும் பப்பத்து செந்துறையான் அமைக்கப்பட்டுள்ளது. 125-அதிகாரங்களை

உடையது. மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களால் தற்கால இயல்புக்கேற்றவாறு புருஷார்த்தங்களைக் கூறிச் செல்வது. இயற்றியவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்.

Beginning:

மாணவரியல்.

முதல் அதிகாரம்—மாணவர் கடமை.

மாண்பெற முயல்பவர் மாணவ ராவர். 1
ஆணும் பெண்ணு மதுசெய வுரியர், 2
இளமைப் பருவ மியைந்த ததற்கே. 3
மற்றைய பருவமும் வரைநிலை யிலவே. 4
அவர்கடன் விதியிய லறிந்துநன் ருற்லல். 5
அன்னைதந் தையரை யாதியைத் தொழுதல். 6
தீயினம் விலக்கி நல்லினஞ் சேர்தல், 7
தக்கவா சிரியராற் றன்னிய லறிதல் 8
ஒழுக்கமுங் கல்வியு மொருங்குகைக் கொள்ளல். 9
இறைவ னிலையினை யெய்திட முயறல். 10

End

125-ம் அதி-மெந்நிலை அடைதல்.

உயிரியல் விடமெய் யியலுறு முடனே. 1241
விடலே வீடது மெய்யறஞ் செயினும். 1242
மெய்யற மாந்தர் மிகைவிட வுதவல். 1243
ஒழுக்க வுயிர்மெய் யுணர்ந்திட வுதவல். 1244
உலகி லுயிர்க ணிலவுற வுதவல். 1245

இவ்வற மரசர்க் கியற்றுத லெளிது, 1246
அறிவ ரரச ராகுத லரிதோ ? 1247
அரசரை யாள்வ தமைச்சறி வன்றோ ? 1248
அறிந்தில் வாழ்ந்துல காண்டறஞ் செய்க 1249
அருள் கொடு மெய்யற மாற்றி மெய்யடைக. 1250

மெய்யியல் முற்றிற்று.

மெய்யறம் முற்றுப்பெற்றது.

No. 4 மெய்யறிவு உரையுடன்

பக்கங்கள் *103* ; Lines 23—28 in a Page.

இது, அறம் பொருள் வீடு என்பவற்றைப்பற்றித் தற்காலத்தார் கொண்டுள்ள பொய்யறிவைப் போக்குதலின் மெய்யறிவெனப் பெயர்பெற்ற தென்பர். தன்னையறிதல் முதல் மெய்ந்நிலையடைதல் ஈறாகப் பத்து அதிகாரங்களைக் கொண்டது. நூறு வெண்பாக்களை உடையது. இதனை இயற்றியவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள், உரை செய்தவர் பெயர் முதலியவை தெரியவில்லை,

Beginning

முதல் அதிகாரம்—தன்னை அறிதல்.

தன்னை யறிதல் தலைப்படுத்துங் கல்வியென
முன்னையவர் நன்கு மொழிந்திருந்து—மென்னைகொல்
தன்னை யறியாது சார்ந்துபல கண்டறியப்
பின்னையவ ருன்னல் பிடித்து. 1

அநுவயம்:— தன்னை யறிதலே தலைப்படுத்தும் கல்வியென முன்னையவர் நன்கு மொழிந்திருந்தும் தன்னை யறியாது

சார்ந்த வற்றைப் பிடித்துக் கண்டறியப் பின்னையவர் உன்னல் என்னை?

*   *   *   *

கருத்துரை:— உலகத்துப் பொருள்களின் இலக்கணங் களை யெல்லாம் கற்கத் தொடங்கு முன்னர் தனது இலக்க ணங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

கொல் அசை. பிரிநிலை ஏகாரம் தொக்கது.

End

நன்றறியு மாந்தரெலா நல்வினையைச் செய்துளத்தை
வென்றுநடு நின்றருளான் மெய்யுணர—வென்றுலக
மேம்படுமோ வன்றே நீ மெய்ந்நிலையை யெய்திநனி
மேம்படுவா யஃதேமெய் வீடு.

அ-ம்:—செய்யுள் நடையே அனுவய நடை.

ப-ரை:— நன்று அறியும் - இது நன்மை இது தீமை என்று பகுத்து அறியும், மாந்தர் எலாம் - மனிதர்களெல்லாம், நல்வினையைச் செய்து - அறச் செயல்களைச் செய்து, உளத்தை வென்று - மனத்தை ஜயித்து, நடுநின்று - நடுவு நிலை தவறாது ஒழுகி, அருளால் - கருணையால், மெய் உணர - கடவுளை உண ருமாறு, என்று - எந்நாள், உலகம் மேம்படுமே - உலகமானது மேம்பாடு அடையுமோ, அன்றே நீ - அந்த நாளிலே நீ, மெய் நிலையை - கடவுட்டன்மையை, எய்தி - பூரணமாக அடைந்து, நனிமேம்படுவாய் - மிக மேம்பாடு அடைவாய், அஃதே மெய் வீடு - அம்மேம்பாடே மெய்யான முத்தி,

க-ரை:— பகுத்தறிவுடைய மனித சமூகம் முழுவதும் நல்ல செயல்களையே செய்து, மனத்தை அடக்கி நடுவு நிலை மையில் நின்று கருணையால் கடவுளை யுணருமாறு எந்நாளில் இவ்வுலகம் மேம்படுமோ அந்நாளிலே நீ கடவுட்டன்மை யைப் பூரணமாக அடைந்து மேம்படுவாய். அம்மேம்பாடே மெய்வீடு.

மெய்யறிவு முற்றும்.

No. 5 அகமேபுறம்.

பக்கங்கள் 80; Lines 12—24 in a Page.

இது ஜேம்ஸ் ஆலன் இயற்றிய 'அகத்திலிருந்து புறம்' எனப் பொருள்படும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு ஜேம்ஸ் ஆலன் சரித்திரமும் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது இதனை எழுதியவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்.

Beginning:

அகமும் புறமும்.

அகத்தை யொத்தே புறம் (வாழ்வு) அமைகின்றது. அகம் இடைவிடாது புறமாகிக் கொண்டிருக்கிறது. எதுவும் வெளிப்படாமல் இருப்பதில்லை. எதுமறை பட்டிருக்கிறதோ அது சிறிது காலத்திற்கு மட்டுமே மறைபட்டிருக்கிறது. அது முதிர்ந்து கடைசியாக வெளிப்பட்டே விடுகிறது. வித்து, மரம், மலர், கனி இவை ஒன்றின்பின் ஒன்றாகவும் ஒன்றிருந்து ஒன்றாகவும் எந்தமுறையில் வெளிப்பட்டு நிலவுகின்றதோ அந்த முறையிலேயே பிரபஞ்சமும் நிலவுகின்றது.

End

மெய்ப்பொருளை நேசிக்கிறவர்களே, உங்கள் மனத்தை ஒருங்கு செய்யுங்கள். எச்சரிக்கை யோடும் ஆலோசனையோடும் உறுதியோடும் இருங்கள். உங்கள் முத்தி உங்கள் அருகில் இருக்கிறது ; உங்கள் ஆயத்தமும் முயற்சியும் வேண்டுவன. நீங்கள் பத்துத் தவறினும் அதைரியப் படாதீர்கள்; நீங்கள் நூறுதடவை தவறினாலும் ஊக்கத்துடன் எழுந்து உங்கள் வழியைத் தொடருங்கள்; நீங்கள் ஆயிரம் தடவை தவறினும் தளர்ச்சி அடையாதீர்கள். சரியான மார்க்கத்தில் பிரவேசித்த பின்னர், அந்த மார்க்கத்தில் நின்று சிறிது தவறினும், வெற்றியடைதல் நிச்சயம்.

முதலில் யுத்தம்; முடிவில் வெற்றி, முதலில், வேலை; முடிவில் ஓய்வு, முதலில் எளிமை; முடிவில் தலிமை, தொடக்கத்தில் தாழ்ந்த வாழ்வு. யுத்தத்தின் சந்தடி, யுத்தத்தின் குழப்பம். இறுதியில் உயர்தர வாழ்வு. மௌனம் சாந்தி.

முற்று.

No. 6 வலிமைக்கு மார்க்கம்.

பக்கங்கள் 110; Lines 18—27 in a Page,

இது ஜேம்ஸ் ஆலன் என்பவர் எழுதிய 'எலிமையிலிருந்து வலிமைக்கு' என்னும் ஆங்கில நூலிது முதற் பாகத்தின் மொழிபெயர்ப்பு. இதனை மொழிபெயர்த்துத் தமிழில் எழுதியவர் வ. உ, சிதம்பரம் பிள்ளையவர்கள்.

துன்பத்தின் கற்பனை.

Beginning:

கவலையும், துன்பமும், துக்கமும், வாழ்க்கையின் சாயைகள் உலகம் முழுவதிலும், கவலையால் கலங்காத உயிரே இல்லை; துன்பத்தால் துடியாத மனமே யில்லை. துக்கத்தால் துடியாத கண்ணே இல்லை. உலகத்தில் பிணியும், மரணமுமாகிய எமதூதரால் உயிர்க்குயிராகிய உறவினர் பிரிக்கப்பட்டுத் துக்கமாகிய இருட்போர்வையால் மூடப்படாத குடும்பம் இல்லை. வலியதாகவும் எளிதில் அறுக்க முடியாததாகவும் தோன்றுகிற தீமை வலையில் சகல மனிதரும் முன்னர் சிக்கிப் பின்னர்க் கவலையாலும் துன்பத்தாலும் துக்கத்தாலும் வருந்துகின்றனர்.

End

பாவம் செயல்பின் பரிந்திரங்கல் துன்பநெறி
ஏமநலகும் மெய்ஞ்ஞானம் இன்பநெறி—ஞால
உயிர்க்கெல்லாம் நன்றுற்ற ஓடிவரும் மெய்ஞ்ஞானம்
செயிர்க்கெல்லாம் வேராம் 'யான்' சென்று.

''யான்' உள்ளே யின்றாக இம்மண்நீர் தீக்காற்று
வான் உள்ளே நிற்கின்ற வாலறிவாம்—தேன்உள்ளே
ஊறிப்பெருகியெங்கும் ஓடி நிறைந்துவெளி
ஏறப் பெருகிநிற்கும் இங்கு.

முற்றும்.

No. 7. மனம்போல வாழ்வு.

பக்கங்கள் 80; Lines 17—33 in a Page.

இது, ஜேம்ஸ் ஆலன் இயற்றிய 'மனிதன் நினைப்பது போல வாழ்வு' என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதனை மொழிபெயர்த் தெழுதியவர். வ. உ. சிதம்பரம் பிள்ளை யவர்கள்.

Beginning

நினைப்பும் ஒழுக்கமும்

'மனம்' என்பதும் நினைப்பு என்பதும் ஓரே அர்த்தத்தைக் கொடுக்கும் சொற்கள். 'மனம் போல வாழ்வு' என்பது மனிதனது நினைப்புக்குத் தக்கவாறு அவனுடைய வாழ்வு அமைகின்றது என்பதாம். மனிதன் எவ்வாறு நினைக்கின் றானோ, அவ்வாறே அவனது ஆன்மா ஆகின்றது: மனிதன்

எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே அவனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும் நிலைமையும் அமைகின்றன. மனிதன் எதனை நினைக்கின்றானோ அதன் வடிவை அடைகின்றான்; அவனது நினைப்புக்களின் தொகுதியே அவனுடைய ஒழுக்கம்.

End

யாது இது முதல் எனது தந்தைபாற் செல்வதற்குச் சித்தமாகப் போகின்றேன், என்று கூறித்தமது வேலைகளை விட்டு நீங்கித்தமது மனைவியார் முதலியோர் களிப்படையும்படி பல நல்ல காரியங்களைப்பற்றி அவருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தும் அம்மாதம் 24-ம் தேதி பரமபதம் அடைந்தனர், அவரது சரீரம் மேல் நாட்டு வழக்கப்படிக்கன்றி நமது நாட்டு வழக்கப்படி காஷ்டத்தில் வைத்துக் எரிக்கப்பட்டது. அவரது ஆவி அறிவு வடிவாக இன்றும் எங்கும் நிறைந்து விளங்குகின்றது.

முற்றிற்று,

No. 8 பாடற்றிரட்டு.

பக்கங்கள் *112*; Lines 19—37 in a Page.

இதில், வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் சிறைசசாலைக்குச் செல்வதற்கு முன்னும் சென்ற பிறகும் பாடிய செய்யுட்கள் திரட்டப்பட்டுள்ளன, முதற்பாகம் இரண்டாம் பாகம் என்று இரண்டு பாகங்கள் இருக்கின்றன. அரும்பதவுரையும் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ளது.

Beginning

சிவன்றன் குமரன் றிருமான் மருகன்
தவந்திகழ் நான்முகன் றன்னோ—டுவந்துவிளை
யாடும் பெருமா னறுமுகற்கு முன்வந்தோன்
பாடும் படியருள்க பா.

இல்லார்க் கிரங்கியுட னீவன்தா னீகையல்லா
தல்லார்க் களிப்பதஃ தன்ருத—மல்லாம
னீவதனு னற்புகழு மீயாமை யாலிழிவு
மாவதுன்னி யீவதுமஃ தன்று.

End

சைவசித் தாந்த சபைவாழ்க நம்மருமைச்
சைவசித் தாந்தத்தின் தாய்வாழ்க—வையத்
துயிரெல்லாம் வாழ்க உயர்ந்தசிவம் வாழ்க
பயிரெல்லாம் வாழ்க பணைத்து.

No. 9 வள்ளியம்மை சரித்திரம் அரும்பதவுரையுடன்

பக்கங்கள் *80*, Lines 20—38 in a Page.

இது, வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் முதன் மனைவியார் வள்ளியம்மையின் சரித்திரத்தைக்கூறுவது. இதனை இயற்றியவர் எட்டயபுரம் சமஸ்தானம் கிழமுடிமன் **சி. முத்துசுவாமிபிள்ளை.**

Beginning:

செம்பொன் மகள்நேர் சிதம்பரவேள் முன்மனைவி
அன்புவடி வானவள்ளி யம்மைதான்—இம்பர்
மகராசி யென்பவன்தன் மாண்புரைக்கத் தந்தி
முகநாதன் தாள்பணிவேன் முன்பு

* * *

சந்தஞ் சேறியுஞ் தமிழ்மலையில் தண்முகில்பெய்
துந்துங் திரையோ டுறும்பொருநை—கந்தம்
கமழ்பூந் தடமுங் கழனியுமற் றெங்கும்
அமிழ்தாம் எனப்பரவும் ஆங்கு,

End:

நல்லறமும் வாழ்க நனவயறவே நானிலத்தோர்
இல்லறமும் வாழ்க இனிதாகச்—சொல்லரிய
மேலவரும் வாழ்கஅவர் மெய்ந்நெறியும் வாழ்கஇவண்
சீலமதும் வாழ்க சிறந்து,

இத்துடன் இவ்வம்மையின் மரணத்திற்கிரங்கி பலரும் விடுத்த அனுதாபக் கடிதங்களும் சேர்க்கப்பட்டுள்ளன,

---

No, 10 கன்றுங்கனியுதவும்.

பக்கங்கள் 72; Lines 16—29 in a Page.

இது, வள்ளியோர் மரபிற் பிறந்தவரும் வள்ளற்றன்மை யுடையவராக இருப்பர் என்பதைப் பாரிமகளிரது சரித முகத்தால் உணர்த்தும் சிறந்த வசனநூல். இதில் பண்டைக்கால ஒழுக்க வழக்கங்களும், சிற்சில கிளைக் கதைகளும் நீதிகளும் காணப்படும். இதனை எழுதியவர் தஞ்சைக் கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் தமிழ்த் தலைமைப் பண்டிதர் எல். உலகநாத பிள்ளை என்பவர்

Beginning:

புரிசைப் புரத்தினிற் சேரனுஞ் சோழனும் போர்புரிய
விரியச் சயங்கொண்ட போழ்தினில் யாமினி யீங்கிவனைப்
பரிசுக்கு நல்ல கவிபாடி ஞல்லரும் பாக்ய மென்றே
வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டியன் மண்டலமே.

தமிழ் மணங் கமழும் யாறும், தாமரை மலரும் பொய்கையும், கழுநீர் மணக்கும் ஓடையும், கயல் விளையாடும் ஏரியும் செறிதர, நீர்வள மிக்கு விதைத்த ஒன்று ஆயிரமாக விளைதலால், குடிகள், பசியும், பிணியும் பகையுமின்றிக்,

கல்வியும் செல்வமும் மிக்குடையராய் இன்புற்று வாழுதற் கிடமாய்ச் சிறந்து விளங்கும் பாண்டிவள நாட்டில், உலக முழுதும் வரினும் வழங்கக் குறைபடா வளப்பம் வாய்ந்த பரம்பு நாட்டில், முடியுடை வேந்தர்க்கு மகட் கொடுத்தற்கு உரியராகிய உழுவித்துண்ணும் வேளாளர் மரபில் வேள்பாரி என்றொரு வள்ளல் இருந்தான்.

* * * *

வேளிர் தலைவனுக்கு வேட்கை மீதூர அறிவழிந்திட நினைக்கின்றான்,—கண்ணைப் பறிக்கின்ற இவ்வுரு விண்ணின்றும் இறங்கிய மின் கொடியோ! மின்னலெனின். விண்ணில் இயங்குவ தல்லது, மண்ணிடை இயங்காலே! வானிலும் கண்டபொழுதே மறைவதன்றே; அதற்கு மாறாக இந்நேர மளவும் விளங்கித் தோன்றலின் மின்னென்பது கூடாது பிறிதொன்றாயிருத்தல் வேண்டும்; உற்று நோக்குவம் எனத் தன் கண்ணைத் துடைத்துக்கொண்டு பன்முறையும் நோக்கினான். மின்னலன்று: தாமரையும், ஆம்பலும், நீலமும்; காந்தளும், முல்லையு மென்ற இன்னமலர்கள் காணப்படுகின்றன; இவை காணப்படுதலின், இவற்றான் இயன்றதொரு மாலை என்பனேல், மலர்மாலை மணங்கமழு மல்லன், தண்ணிய அமுதென இன்னிசை பாடுமோ? பாடாதன்றே? பாடுகின்றமையின், என் கண்ணை விட்டகலாக இவ்வுரு விண்ணுறை அணங்கோ? விஞ்சையர் மகளோ! வரைவளர் தெய்வமோ! தெரியவில்லை எனப் பலவாறு நினைத்து மயங்குவோனுக்கு 'நடுக்கடலில் திசை மயங்கிச் செல்பவனுக்குத் திடீரெனத் திசையறி கருவிகையகப்பட்டது' போல, ஒரு ஆராய்ச்சி பிறந்தது:—தெய்வ மகளிர்க்கு ஆடையின்கண் மாசுபடியாது. சூடிய கண்ணிவாடுதலும், பூசியசாந்தம் புலர்தலும் இல்லை; கால் நிலந்தோயா; கண்ணிமைத்தலும், வேர் வரும்பலும், உடல் நிழலிடுதலும் உண்டாகா; ஆடவரைக் கண்டபோது அச்சம் தோன்றாது. இம்மங்கையர்க்கோ என்றால், உடுத்துள்ள ஆடையில் அழுக்கேறியுள்ளது; கண்ணியும் சாந்தும் என்னுள்ளதே யெனவாடிப் புலர்கின்றன; நிலந்

தோய்ந்து நடத்தலிற் பயின்ற அடியும், புடை பெயர்ந்து பிறழும் கண்ணும், என்னைக்கண்டபோது அஞ்சி வியர்த்திட்ட மேனியும் உடையாள்; ஆதலால் தெய்வமல்லள், இந்நிலத்து வாழும் மங்கையரில் ஒருத்தியே ஆகுதல் வேண்டும்.

End

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயவேலா மரனுமமே
சூழ்கவையக முந்துயர் தீர்கவே.

முற்றிற்று.

அரசவாழ்த்து

இமிழ் திரை முழங்கு நெடுநில வரைப்பில்
மண்பதை முழுவதும் இன்புறல் வேண்டி
நீர்நிழலில்லா நெடுஞ்சுர நின்ற
தனிமரம் போலத் தண்ணளி புரிந்து
மாட்சி மேம்படும் ஆட்சி நடத்துவ
தொன்றே யுளத்தி னன்றுற வமைத்துக்
குருமணி யிமைக்கும் ஒருமுடி சூடிப்
பொன்னிகர் மேரித் தன்னிக ரணியொடும்
அரியணை மேவியரசு வீற்றிருக்கும்
நந்தா வென்றி ஐந்தாம் ஜார்ஜுமன்
இன்னல் விளைக்குந் துன்னலர் வெருவிப்
புலந்தோறும் புக்கொளித் தேங்கி யலமா
வென்றியும் புகழுந் துனறி நிலவுற
ஏற்றுரிமுரச காற்றிசை முழங்க
சிங்கக் கொடியே எங்கணு நுடங்க
இரவியு மதியமு மியங்கு நாளளவுந்
தனிக்கோல் யாண்டுந் தடையின்றி நடப்பத்
தாழ்விலா வொருவனதருளால்
வாழி வாழியவர் வாழுக மாதோ.

No. 11 முதலாவது கரிகாலன் என்கிற சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பற்றிய ஆராய்ச்சி.

பக்கங்கள் *60* Lines 4—40 in a Page

இது, இப்பொழுதைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் உழவு, வாணிகம், கைத்தொழில்களை வளம் படுத்திக் கல்வியை மேம்படச்செய்து, கடல் மருங்கிலுள்ள காவிரிப் பூம்பட்டினத்தை இராசதானியாகக் கொண்டு, ஏற்றுமதி இறக்குமதிகளால் செல்வம் பெருக்கி சோழ நாட்டை ஆட்சி புரிந்த சோழன் கரிகாற்பெருவளத்தானாகிய முதலாங் கரிகாலனது வரலாற்றையும், அவனது அரும் பெரும் செயல்களையும் அக்காலத்திய ஒழுக்க வழக்க நாகரீகங்களையும் கூறும் வசன நூல். இவனுக்குத் திருமாளவன் எனவும் பெயருண்டு. இந்நூலை எழுதியவர் தஞ்சைக் கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் தமிழ்த்தலைமைப்பண்டிதர் L உலகநாத பிள்ளை.

Beginning

1—வது அதிகாரம்

சோழர்கள் தமிழர்

சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பற்றித் தெரிய வேண்டுவனவற்றை ஆராயப்புகுமுன், சோழரென்பவர் யார்? எக்காலத்தில் இத்தமிழகத்து ஆட்சியெய்தினர்? என்றின்னவற்றை அறிந்து கோடல் இன்றியமையாததாகலின், அவற்றைச் சிறிது ஆராய்வாம்.

சோழரென்பார், தமிழகத்தின்கண் செங்கோ லோச்சியிருந்த முடியுடைத்தமிழ வேந்தர் மூவரும் சோணாட்டை ஆட்சிபுரிந்தாராவார்.

சோழர் என்றும் பெயர் ஒரு குடிக்கட்பிறந்தாரைக் குறிக்கும் பெயராகும். இதனைச் செய்யுள் வழக்கிலேயன்றி உலக வழக்கினும் நன்கறியலாம். சோழனே யல்லாது சேரன். பாண்டியன் என்பனவும் குடியார் பெற்ற பெயர்களேயாம். இவற்றை பன்னிரு பாட்டியற் சூத்திரம் இனிது விளக்கும்

....

* * * *

தொல்காப்பியம் நெடு நாளைக்கு முற்பட்டதாகவே, தமிழ் மக்களின் ஒழுக்க வழக்கங்களைச் சொல்லப்புக்க அத் தொல்காப்பியத்திற்கும் முற்பட்டவர் தமிழரெனல் சொல் லாமலே யமையு மன்றே? ஆகவே, இங்குக் கூறிய இவ் வனைத்தையும் நன்காராயு மிடத்துச் சோழராகிய தமிழ் மக்கள், இன்ன காலத்துக்கு குடியேறினோரென, நம்மனோ ரால் வரையறுத்தல் செல்லாத அத்துணை நெடுங்காலந் தொட்டு, இத்தமிழகத்து மேம்பட்டு வந்தவர் என்பது தெற்றென விளங்கி நிற்றல் அறிக.

End.

இங்ஙனம், தமிழக முழுவதும் தன்னடிப் படுத்த சோழன் கரிகாற் பெருவளத்தானைப்பற்றி யாம் கண்டவற்றை ஒரு வாறு தொகுத்துக் கூறினோம். இவ் ஆராய்ச்சியிற் குறற நாடாது குணம்நாடித் தமிழ் மக்கள் மகிழுவாராக.

அனுபந்தம்

இனி கரிகால் வளவன் காவிரியாற்றுக்குக் கரை கண்ட தற்கு மேற் கோளாக,

"செல்லார் பணியுஞ் செம்பியர்கோன் செழுங்காவிரியின் சிறந்தகரை, கல்லாலணைகட்டுதற்கேவக் கருமமுடித்த சோழி யர்கள், பல்லார் மேழி நெடுங் கொடியைப் பாயும் புலியி னொடும் பதித்த, வல்லாண்மையினூர் குடிவாழ்வு வளஞ்சேர் சோழமண்டலமே"

* * * *

என்னும் செய்யுளால் அறியக்கிடப்பினும், வேளாளர், சோழ மன்னர்க்கு முடிசூட்டும் வழக்கு, சங்கநூல்களிற் காணப்பெறுமல் புராணங்களிலேயே பெரிதும் பயிலப்பெற்று வருதலின், பிற்பட்ட கரிகாலர் காலங்களில் ஏற்பட்டதொன்றுமென யூகிக்கற்பாலதேயாம்.

No 12. நஷ்டஜாதக தீபிகை.

பக்கங்கள் 97 ; Lines 20—33 in a Page.

இது சோதிட நூல்களில் ஒன்று. சனன காலமுதலியவை தெரியாதவர்க்கு ஜாதகம் கணிக்கும் முறையைக் கூறுவது. ஆரூட அத்தியாயம், வாக்கிய ஸ்புடகணிதம் என்று இரண்டு அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆரூட அத்தியாயம் 50 செய்யுட்களும் உரையுமாக இருக்கின்றது. வாக்கிய ஸ்புடம் வசனரூபமாக எழுதப்பட்டுள்ளது. இதனைச் செய்தவர் தஞ்சை பாலசோதிடர் கலியப்பெருமாள்பிள்ளை.

Beginning :

நூல்

முதலாவது ஆரூட அத்தியாயம்.

(விருத்தம்)

சன்மித்த கால நேர்மை
 தகைபெற வறிகிலார்க்குக்
கன்மத்தால் வந்த கோளின்
 கதிதனைக் கண்டெஞ் ஞான்றுஞ்

பன்முத்தாம் முன்ஞேராகும்
பண்டிதர் மொழியை யாய்ந்து
மன்மத்தே வருடமாதி
வளம் பெருகணிதஞ் சொல்வாம்.

(இ-ள்) ஒருவன்தான் பிறந்த காலத்தினது வருடம், மாதம், கிழமை, திதி, நக்ஷத்திரம், முதலியவைகளை அறியாமல் ஜோதிஷ சாஸ்திரிகளிடத்தில் ஆரூடங் கேட்டுத்தெரிந்து கொள்ள விரும்பினுல், கேட்ட காலத்தின் உதயாரூடங்களைக் கொண்டும், அதில் நின்ற கோட்கள் முதலியவைகளைக்கொண்டும், முன்ஞேர்களாகிய சாஸ்திர பாண்டித்திய முடையவர்களாற் சொல்லியிருக்கிற நஷ்ட ஜாதகக் கணிதத்தின் நுட்பங்களைச் சொல்வோம். (எ—று)

End

இராகு ஸ்புடம்.

இஷ்ட வருடத்திய கலிசுத்த தினத்தை விநாடியிருதியாக வைத்து, இராகு சோத்திய திருவடேபீளில் கழிபடுகிற நாட்களைக்கழித்து, ராசி, பாகை, கலை, விகலை, யாதிகளைக்கண்டு அதற்குரிய நக்ஷத்திர பாதசார அட்டவணையில் இன்ன நக்ஷத்திரம், இன்ன பாகையில் இராகு இருப்பதெனக்கண்டு கொள்ள வேண்டியது.

இவ்விதமாய்க் கண்டு கொண்ட இராகுவில் 6 இராசி கூட்டி முன்போல் நக்ஷத்திரபாத சாரங்கண்டது கேதுவாம்.

பகணம் 1க்கு இராசி 12. இராசி 1க்கு பாகை 30 பாகை 1க்கு கலை 60. கலை 1க்கு விகலை 60.

முற்றிற்று.

No. திருமழுவாடி புராணவசனம்.

பக்கங்கள் *131*; Lines 18—30 in a Page.

இது கொள்ளிட நதியின் வடகரையிலுள்ளதும் மூவரது தேவாரம் பெற்றதுமான திருமழுவாடியின் மான்மியத்தைக் கூறும் வசனநூல். இருபத்து நான்கு அத்தியாயங்களை உடையது. மிகச்சாதாரண நடையில் எழுதப்பட்டுள்ளது. இதை எழுதியவர் தஞ்சைக் கலியபெருமாள் பிள்ளை.

Beginning:

முதல் அத்தியாயம்.

நைமிசாரண்யச்சருக்கம்

நெடிய கடலால் சூழப்பெற்று இப்பூமிதேவிக்கு ஓர் அலங்காரம் போன்றதும், மோக்ஷத்தை விரும்புகின்ற முமுக்ஷுக்களுக்கு சுலபமாயதனை யளிக்கக் கூடியதும், சகல புண்ணிய ஸ்தலங்களுக்குள் மிக்க மேன்மையை யுடைத்தானதும், எல்லாபுராதன ஸ்தலங்களுள் பழமையானதும் மதமாத்ஸர்யங்களை வேரறுத்துத் தவஞ் செய்யும் முனிசிரேஷ்டர்களால் நிறையப்பெற்றதும், சகல புண்ணிய தீர்த்தங்களுக்கெல்லாம் உத்தமமான தீர்த்தத்தையுடைத்தானதும், நினைத்தவரங்களை எளிதிலளிக்கக் கூடியதும், காமிகளால் அதன் மகிமையை யறியப்படாததும், காமக், குரோத லோப, மோஹ, மத, மாத்ஸரியங்களால் காணப்படாததும் சத்தியமே குடிகொண்டதும், சர்வேசுவரரான கடவுளுக்கிருப்பிடமானதுமான நைமிசாரண்யமென்னும் ஓர் வனமுண்டு.

* * * *

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களாலும் பிரார்த்தித்து பரிபூரண சந்தோஷத்துடன் ஸூதமகா முனிவர்

திருமழுவாடி ஸ்தலத்தின் மகிமையைச் சொல்லத் தொடங்கினார்.

End ;

கேளுங்கள் முனிபுங்கவர்களே ! இவ்வத்தியாயத்திற் கூறியுள்ள நந்திகேசர் திருமணச் சிறப்பின் சரிதையைப்படித்தவர்களும், கேட்டவர்களும் பிறர்பாலெடுத்துச்சொன்னவர்களும் இம்மையில் இஷ்டவரங்களைப் பெற்று மறுமையில் சிவசாயுச்சியத்தையடைந்து சுகமாய் வாழ்வார்கள்.

இருபத்தி நான்காம் அத்தியாயம்

திருமழுவாடி புராணம் முற்றிற்று.

No. 14 சிற்றின்ப சிரோன்மணி.

பக்கங்கள் *61;* Lines 24—31 in a Page.

இது ஆடவர் மாதர்களின் ஜாதிலக்ஷணமும், ஆண் பெண்களில் மலட்டுக்குறியும், கருப்பாசயலக்ஷணமும், கருப்பம் தரிக்கும் விதமும் பிறவும் கூறும் வசனநூல். இதனை எழுதியவர் தஞ்சை கலியப்பெருமாள் பிள்ளை.

Beginning

மானஸிகபுரவர்ணனம்:

மாதவத்தாலவதரித்த இப்பூவுலகவாசிகளாகிய மானிடர் பலருக்குஞ் சகலசுக போகங்களுக்கும் ஆதாரமாயுள்ள விலையுயர்ந்த முத்துக்களையும், மாற்றுயர்ந்த பொன்மணற் பொடிகளையும், பலவித சங்கு சிப்பிகளையும் தனது நெடிய அலைகளால் கரையிற் சேர்க்கும் சமுத்திரத்தினை எல்லையா

யுடையதும், மேன்மைதங்கிய சந்தனம், அகில், தேவதாரு, அகர் முதலான வாசனை விருக்ஷங்களையும், தெங்கு, மா, பலா, வாழை, கொய்யா, நாரத்தை, எலுமிச்சை முதலான அநேக பழவகைகளைக் கொடுக்கும் மரங்களையும், நிலப்பூ, நீர்ப்பூ, மரப்பூ, கொடிப்பூ ஆகியநால்வகைத்தான வாசனை புஷ்பஜினுசுகளையும், யக்ஷர், கின்னரர், கந்தருவர், சித்தர், வித்யாதரர் முதலான கந்தருவர்களும், இந்திராதி பலதேவர்களும், ரிஷீசுரர், யதீசுரர் முதலான அநேக தபோதனர்களையும், ...

* * • *

வீணை, வேணு, நாகசுரம், பிடில், மற்றுமுண்டான பலவித இனிய வாத்திய கோஷங்களும் ருக், யஜுர், சாமம், அதர்வண மென்னும் நான்கு மறைகளின் ஒலிகளும், வானளாவிய பல மாட மாளிகைகளும், நிறையப் பெற்றதுமாயுள்ள மானஸீக புரமென்றோர் பட்டணமுண்டு.

End

ஆண் பெண்ணிருவரில் மலடர் இன்னாரென அறியும் தந்திரம்.

மொச்சை விரையை இரண்டு பாத்திரங்களிற் போட்டு புருஷனுடைய சிறுநீரை ஒரு பாத்திரத்திலும், ஸ்திரீயுடைய சிறுநீரை ஒருபாத்திரத்திலும் தனித்தனி விட்டு வந்து 5-தினத்திற்குப் பிறகு யாருடைய நீர்விட்ட கொட்டை முளைக்கவில்லையோ அவர்களே மலடென்று கண்டு தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது. இவ்வாறே சுரைக் கொடிப்பயிரிலும் திருஷ்டாந்தங் காணலாம். ஆனால் ஒரு நீர் விட்டு ஒரு மாதம் கழிந்த பின்னர் தான் மறு நீர் விட்டுப் பார்க்கவேண்டும். வெவ்வேறு கொடிகளானால் ஒரே காலத்தில் பரீக்ஷிக்கலாம்.

முற்றுப் பெற்றது

No. பெரியாழ்வார் பிரபந்தம்.

பக்கங்கள் *18*; Lines 25—37 in a Page.

இது புதுவை நகர் விண்டு சித்தரின் சரிதத்தைக் கூறுவது. 152 விருத்தங்களை உடையது. இதனை இயற்றியவர் வடிவழகிய நம்பிதாஸர்:

Beginning:

1 பொய்கை பூதம் பேயென்னப் புகல வரிய முதலாழ்வார்
செய்யகமலத் திருவடிகடிருந்தவிரைஞ்சித்திருவருளான்
மெய்கொள்புதுவைநகர்வந்தவிட்ணுசித்தன்கதை விரிவை
யையைம்புலனு லலைப்புண்ணு மடியேனறிந்தபடியறை வேன்.

[வேறு]

2 விண்ணுட்டு ளந்தாம வியன் புரிசை வேந்தனுக்கு
மண்ணுட்டு ளான் மாவாந் தவசமருள் வழிநடத்தி
யெண்ணுட்டு மூவர்களு மேகியபின் னிருநிலத்தின்
கண்ணுட்டி நீங்காத களப்புலனுய்க் குறும்புசெயும்.

3 வேடர்களோ ரைவர்களு மேதினியின் மிக்கவிருட்
காடுமலை யன்றிவெளி யேயிடமாய்க் கலித்திலங்கு
நாடுமதில் கிழாய நற்பதியு நசிப்பித்து
மூடவிலங் கவைசாத்திமுடித்தனர்கள் புவிமுழுதும்.

73 ஆதியம் பரமன் மாயா விநோதத்தா லனந்தகோடி
நீதிகொள் சமையமாக்கி நின்றன னதிற்று னென்று
யோதியசமையத்துள்ளோரொன்றையொன்றுவ்வா தென்பர்
வேதமுமவணஞ்சொல்ல விதித்தவம்மெய்மையாளன்.

74 அத்திரு வேதநீதிச் சிரத்தினி லமருமந்த
மெய்த்தவ னிலையைத் தாங்கும் வேதமு மறியமாட்டா
வுத்தம குணத்தினானே யோங்கிய பரம சோதிச்
சித்திரவருள் பெற்றோங்குந்திறத்தினர்தெளியக்
காண்பர்.

75 அதுவலாற்சமயத்தோர்களவனருட்சமயந்தன்னை
யிதுவது வாகுமென்றே யெடுத் தெடுத்தியம்பாநிற்பர்
பொது வென்பர் சிலர் களந்தப் பொய்மையைத்
தெரிக்கமாட்டா
துதுபதர் மணிபோற் றோன்றி யுறையுமம் மணியோ
டொத்தே.

End

152 நன்னெறிச்சீர்த் திருமொழியோர் நானூற்றுநாற்பதையு
மின்னிசையா லெடுத் தோதி யேழுலகு முய்வித்தாங்
கன்ன வயற் புத்தூரி லளவிறந்த பலகால
மின்னுமணி முடிமாயன் றிருவடிக்கீழ் வீற்றிருந்தார்.

No. 16 திருமழிசைப்பிரானாழ்வார் பிரபந்தம்.

பக்கங்கள் *14*; Lines 10—37 in a Page.

இது திருமழிசைப்பிரானாழ்வார் சரிதத்தைக் கூறுவது *199* விருத்தங்களை உடையது. இதனை இயற்றியவர் வடிவழகிய நம்பிதாஸர்.

Beginning

குறைய லூர்ப் பரகாலர் கோதில் பெரும் புகழ் விரிவை
யிறை வெளியிட் டடியேன்பா லிருந்தறைந்த படி யியம்பி
மறையாய்ந்த திருமழிசைப் பிரானார்மாப் புகழுமந்த
முறையாலே பகர்வனல்லோர் முனியாது கொளல்வேண்டும்.

அப்படி சிலநாள்க ளற்றதற்பினுங் கொருநா
ளொப்பரிய பார்க்கவனே முதலாக வுளமுனிவ
ரிப்படி யிற்றிருமகள்கோ னின்பமுறக் கமலையொடு
மெப்பொழுதும் பிரியாம லினிதரு மிடம்பலவும். 2

உண்டெனினு மோரிடத்திலுற் றிருப்ப னத்தலத்தைக்
கண்டறிவ மெனினமக்குக் காண்பரிதாமதுகாட்டும்
புண்டரிகத் தயன் சென்றப் புனிதனைநாம் புகழ்ந்திறைஞ்சித்
தொண்டு செய்து கேட்பதுவே கருமமெனத் துணிவினொடும்.

பாடும் புலவனல்லேனுன் பணமும் பொன்னுமீங் கெனக்கின்
றோடுங் கல்லும் போலாகு முலகையாளு மன்னவரு
நாடு மெனக்கோர் துரும்பாகு நாராயணன் சீர்க் கமலிபதஞ்
சூடும் புலவ னுனக்கிச்சை சொல்லும் புலவனல்லேனே. 51

என்றுகூறி யெழுந்திரிந்தாங் கெதிரே மன்னனெடுத்திட்ட
குன்று போன்ற விருநிதியை நரக மென்னக்கொதித்தகன்று
நன்றி சேர்தம் பதிநோக்க ஞானமாளு மன்னவனு
மென்று கேளுமெனக்கூவிக் கணிகண்ணார்க்கன்றுரைக்
கின்றான் 52

ஈசன் செய்யு முத்தொழிலும் யானே வல்லேனெனையின்று
நீசனுக்கி யெழுந்திருந்தீர் நெடுமால் புலவ ராயிடிலென்
றேசத்திருக்க வொட்டேனு னென்றான் மன்னன் சிலுகற்று
ராசு மிகுந்த வுனனுட்டி லிருப்பார் புலைய ரெனவகன்று. 53

End

அனறதன் றீரமன்னு மமானவ னுரை யேத்திச்
சென்றுவை குண்ட மெய்திச் செங்கணு யகன் முன்னுகி
நின்றவன் சாமவேத கீதங்க ளிகழ்த்தி மாலோ
டொன்றியம் மழிசைக் கோமானெளிக் கொண்ட சோதி
யானுன் 109

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்.

No. 17. (a) தொண்டரடிப்பொடியாழ்வார் பிரபந்தம்.

பக்கங்கள் 24; Lines 30—39 in a Page.

இது தொண்டரடிப்பொடியாழ்வார் சரிதத்தைக் கூறுவது. 68-விருத்தங்களை உடையது. இதனை இயற்றியவர் **வடிவழகிய நம்பிதாஸர்,**

Beginning:

மண்டல மெண்மழி சைப்பதி மன்சீர்
கொண்டபெ ரும்புகழ்கூறியிம் மண்ணோ
டண்டரி றைஞ்சவ ரங்கம மர்ந்த
தொண்ட ரடிப்பொடி யைத்துதி செய்வாம். 1

[*வேறு*]

எண்ணுந்திங்க ளீராறி லீசனுருவா மார்கழியி
னண்ணுங் கேட்டை தனிற் சிறந்த நாற்பாற் குலத்தின்
மேற்பாலாய்
மண்ணும் விண்ணுந் தொழுதேத்த மண்டங் குடியா மாநகரி
லண்ண றொண்ட ரடிப்பொடியார் பிறந்தா ரறந்தான் சிறந்
தோங்க. 2

தூயஞானச் சுடரொளியாய்ச் சுருதிமுடிவில் வீற்றிருக்கு
மாயனருளாற் பரஞ்சோதி வடிவை மறைத்து மண்மிசையிற்
காயம்புனைத லாலந்தோ காமாதியர் சென்றுறத்தீண்டி
யாயு மறிவை யிருட்டறையில டைத்தா ரங்கு
மடைபட்டார். 3

மண்ணில் வஞ்ச வலைப்பட்டு வருந்து முயிர்க ளிடர்நீக்க
விண்ணின் றிழிந்த முதல்வகையும் விரைந்து மாமை
தீண்டுதலா
லெண் ணுங் காலிப் புலிமீதி லியமன் கயிற்று மனை வயிற்று
நண்ணி யுழலு மானிடர்சொன் ஞானந் தனக்கார்
நடுவல்மா. 4

End

திரும்புண்ட கதியாழுந் தேலர் காணத்
திருவுந்தி மடுவினிடைச் சிறந்து தோன்றி
வரும்புண்ட ரீகத்தி லயனுங் காண
வானவர்கள் கோன்காண மண்ணுங் காண
விரும்புண்ட நீர்போல வாங்கத் தம்மா
னிணையடிக்கீ ழடைந்தார்சொல் லிசைநன்மாலை
தருந்தொண்ட ரடிப்பொடிசெய் தலத்தின் வாழ்வைச்
சதுமறைக்கு மெடுத்துரைக்கத் தகுமோ வம்மா. 68

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

(b) குலசேகரப்பெருமாளாழ்வார் பிரபந்தம்.

Lines 11—37 in a Page.

இது குலசேகரப் பெருமாளாழ்வாரது சரிதத்தைக் கூறுவது. 80-விருத்தங்களை உடையது. இதனை இயற்றியவர் **வடிவழகியநம்பிதாசர்.**

Beginning:

ஆசிலாத்தொண்டர் தொண்டரடிப்பொடி யாங்கமன்னு
மீசனைப்பாடி யாட் செய்திணை யடியடைந்த வாற்றைத்
தேசிக னருளா லுயேன் சிறிதறிந் தளவுஞ் செப்பி
மாசிலாக் கொல்லிக் கோமான் செய்கையும் வழுத்த
லுற்றேன். 1

பெருவரும் வஞ்சிவேந்தர் பூண்டமா தவத்தினாலே
திருவளருங் கூடறன்னிற் சிறந்ததோர் மாசித்திங்க
டிருபுனர்பூச நாளிற் சங்கரன் மகிழ்ந்து வாழ்த்த
வருமறை நாலும் வாழ்த்த வமரர்கள் குழாங்கள் வாழ்த்த 2

காருறு முருவச்செய்ய பவளவாய்க் கமலச்செங்க
ணோருறு தவங்க ளேத்தப் பங்கயச்செல்வி காக்கச
பாருறு தவங்க ளேத்தப் பங்கயச்செல்வி காக்கச
சீருறு கொல்விக்கோமான் றிருவவ தாரஞ்செய்தான். 3

End:

வல்லாக்கர் குலமுழுது மறுத்த வாற்றை
வான்மீகி விரித்ததனைத் தொடுத்துஞானச்
சொல்லமைந்த தமிழ்ப்பதத்தி லருளிச்செய்து
சுருதிதொடர்ந் தறிவரிய சோதியாகி
மல்லடர்ந்த மாமால்லை குந்தம்புக்கு
மாமணிமண் டலஞ்செறிந்து கொல்லிக்கோமா
னெல்லையில்பேரின் பவெள்ளச் சுழியின்மூழ்கி
யிருந்த நித்கர் முத்தருட னிருந்து. வாழ்ந்தார். 80

குலசேகரப்பெருமாளாழ்வார் திருவடிகளே சரணம்.

(c) திருபாணுழ்வார்ப் பிரபந்தம்.

Lines 7—33 in a Page.

இது, திருப்பாணுழ்வாரது சரித்திரத்தை கூறுவது. 61 விருத்தங்களை உடையது. இதனை இயற்றியவர் வடிவழகிய நம்பிதாசர்.

Beginning:

காராரும் பொழில்வஞ்சி காவலவன் கதிர்மவுலிக்
கூராரும் சுடர்வேற்கைக் குலசேக ரன்றிறமு

மேராரும் பாகவத ரின்னருளாற் சிறிதியம்பிச்
சீராருந் திருப்பாணாழ் வார்திறமுஞ் செப்புவாம். 1

மாணார்ந்த திறலரங்க மணிவணனைக் கண்டகண்கள்
காணாமற் றென்றினையு மெனக்கரைந்து கட்டுரைத்த
பாணாழ்வா ரனுபவத்தைப் பாடவெனப் பத்தர்கண்மு
ணணதே யொருப்பட்டே னிதின்வேறு நகையுளதோ. 2

மனுமகனுக் கயன்கொடுத்த மரகதமா மணிக்குன்ற
மெனு மரங்கத் தம்மானை யிதயமல ரணைக்கிடத்தி
யனுபவிக்குந் திறமுணரிற் றிருமகளுஞ் சும்மடியேன்
பனுவலுக்கோ வெளியாவர் பாணாழ்வா ரல்லரோ! 3

End:

இன்பவீடடைவார் தூலமா முடல் விட்டெழிறிகற் சூக்கு
மங்கழற்றித்
துன்பவாதனையும் விரசையிற் போக்கிச் செறிவர்கடுகளறு
பாணா
ரென்பு தோலுரோமத் தூலமு மரங்க னிணையடி யெய்தி
யதென்று
லன்பினாலன்றி யொன்றினாலுய்யு முபாய மெவ் வண்டத்தி
லுளதோ 4

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

No. 18. காதம்பரி.

பக்கங்கள் 20; Lines 18—37 in a Page.

இது பாணன் என்னும் மகாகவியால் வடமொழியில் இயற்றப்பட்ட காதம்பரி என்கிற காவியத்தின் மொழி பெயர்ப்பாகும். இதனைத் தமிழில் மொழிபெயர்த்து விருத்தப்பாவினங்களால் இயற்றியவர் ஆதிவராககவி என்பவர். இதில் 162-செய்யுட்களே இருக்கின்றன.

Beginning

(மகா சுவேதை தன் வரலாறு கூறியது)

1 சீருடைநின் றிருவவதாரத்திறுற் றெய்வகனைத்
தியாருடைய திருமரபோ வீடேற விட்டதுதான்
பேரழகு தருமிந்தப் பிராயத்தே மன மொடுங்கிச்
சாரல்வனந் தனிற்றனியே தவஞ்செய்யக் காரியமேன்

2 என்றளவி லவடானு மிருந்தொன்றை நினைந்துளமேற்
சென்றதுயர் மீதூரச் செயலழிந்தொன் றென்றுக
நின்று விழுந் தாளமென நீணெடுங்கண் டுளாசோர
வன்றணி கூர்ந்தற விம்மி வாய்விடா திருந்தழுதாள்.

14 அவ்வாறமைந்த பெரியோருக்கரிய மகவா யவதரித்தே
னிவ்வாறமையாத் துயர்க்கெல்லா மிலக்காம்பாவி
யொருத்தியையே
மெய்வா சகனு மென்றந்தை மிகவே களிகூர்ந்தென்
னுடைய
துய்வா ளோளியா லெனக்குமகச் சுவேதை யேனவே
பேரிட்டான்

43 என்று துணிந்திவ்வளவோ ரிடங்கண்பின்பணுகி
யிவன் பின்போந்த
துன்றுதவ முனிபாதந் தொழுதெழுந்தெம் பெருமானே
தோழனுகிச்
சென்றமுனி குமரனவ னூர்புதல்வன் பேரென்ன செவித்
தாராகி
யொன்றியபூங் கொத்தேதிப் பரிமளங்கண்டாதரித்தே
னுரையாயென்ன

End ;

தரியாதுபலகாலும் பலகாலுங்கபிஞ்சலன் றன்றுளில் வீழ்ந்தும்
பெரியோனே ருவனுயிரைப் பிழைப்பியா யெனவழுதும்
பிறங்குசோகத்

தெரியாதே வெந்தொழிந்தே னென்பளவளவிலந்த
விறந்தகாலத்
தரிதான பெருந்துயரத் தன்மையடைந் தறமோஹித்
தயர்ந்து வீழ்ந்தான்.

No. 19 நூதன இந்தியா—இந்தியாவின் நூதனஸ்திதி.

பக்கங்கள் 76; Lines 29—46 in a Page.

இது இந்திய அரசாட்சி ஸம்பந்தமாயுள்ள சீர்திருத்தங்களைச் சுலபமாய் விளக்குவது. இதில், இந்தியாவிற்கு ஒரு நூதனசகம்' என்பது முதல் 'எலக்டர்களின் கடமை' என்பதிருகப் பதினொரு அத்தியாயங்களிருக்கின்றன. இது, ஸர் நாராயணசந்தவர்கர் நைட்டு என்பவரால் எழுதப்பெற்றுச் சென்னை பப்ளிஸிடி பீரோவினல் பதிப்பிக்கப்பட்டது.

Beginning :

1-ம் அத்தியாயம்.

இந்தியாவிற்கு ஓர் நூதன சகம்.

நமது தேசத்தின் துரைத்தன விஷயமாய் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை அடுத்த 1921-ம் வருஷம் ஆரம்பத்திலேயே அநுஷ்டானத்திற்கு வரும். மாக்ஷிமை தங்கிய நமது ஜியார்ஜு சக்கிரவர்த்தியாரின் மூத்த குமாரனும் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்னும் பெயர் பூண்ட இளவரசர், தன் தகப்பனுருக்குப் பதிலாய் இந்தியாவிற்கு வந்து, அச்சீர்திருத்தங்களை பிரதிஷ்டை செய்து அமுலுக்குக் கொண்டுவரப் போகிறார். அச்சீர்திருத்தங்களைப் பற்றி நமது தேசநேயர்கள் யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி இச்சிறு பிரசுரத்தில் சொல்லப் போகிறேன். கவனித்துப் படியுங்கள்.

End

"யாவனொருவன் ஜனங்களுடைய அவிசுவாசத்தையும் அடையத்தயாராக இல்லையோ அதாவது ஜனங்கள் தூஷணைக்குப் பயப்படாமல் அந்தரங்க சுத்தியாய் தன் காரியத்தைப் பார்க்க சக்தியற்றவனோ, அவனே ராஜ்யத்தை வாஸ்தவமாய்ச் சரியானபடி ஆளத்திறமையற்றவன்" என்பதை நன்றாய் மனதில் கிரகிக்கவேண்டும். ஆகவே நூதனச்சீர் திருத்தங்களால் இந்தியாவுக்கு நன்மை உண்டாக்கவேண்டும் என்று கோறி, சீக்கிரத்தில் இந்தியர்களுக்கு ஸ்வயராஜ்ஜியாதிபத்தியம் பூராவாகக் கிடைத்து, ராஜ்ஜியமும் அபிவிருத்தி அடைந்து ஜனங்களுக்கு சௌகர்யம் மேலிடவேண்டுமென்று நினைக்கும் இந்தியாவிலுள்ள எல்லாஎலக்டர்களும், இப்போது மில் துரையைப்பற்றி சொல்லி முடித்த விருத்தாந்தத்தை நன்றாய் மனதில் உட்கொண்டு இந்தியாவின் நன்மைக்காகத் தகுந்தபடி தங்கள் வோட்டுரிமைகளை பரிபாலித்துவரவேண்டுவது பிரதானமான காரியமாகும்.

No. 20. அருச்சன சன்னியாசி.

பக்கங்கள் *100;* Lines 24—29 in a Page.

இது, அருச்சுனன் சன்னியாசி வடிவத்துடன் சென்று சுபத்திரையை மணஞ் செய்த விஷயத்தை நாடகரூபமாகக் கூறுவது. இதனை இயற்றியவர் வேங்கடசுப்பராம பாரதி.

Beginning

முதல் அங்கம்.

முதற் களம்.

இடம்: - ரேவதிகதிதிரம். காலம் :—சூரியோதயம்.

(அருச்சுனன் அந்தண உருவொடு நாட்டின் வளமையை
வியந்துரைத்தல்).

அருச் :—ஆ! என்ன ஆனந்தம்! இந்நதிதீரம் தேகத்திற்கெத்தனையாரோக்கிய மாக்குகிறது! இத்தேசத்தந்தணரின் தவ ஒழுக்கத்னைதயென்னென் றுரைப்பேன்! இவர்களுடைய வேதகானம் எவ்வளவு இனிமையாய்க் காதில் விழுந்து உடலைப் பூரிக்கச் செய்கிறது!

மணியோசை யனைய தொனியுடனே யந்தணர்
வேத மகிழக்கீதம்
பிணிபலவே போக்குமிந்தப் புண்ணியஞ் செய்
சீவநதி பிறங்க ஓங்கி
அணியணியாய்க் கனிப் பொறையினடி வணங்கு
மாக்கிளைமே லமரும் புட்டிகள்
பணிக்கீத மார்ப்ப பணி மயிலாட ஆனந்தம்
பரவு நாடே!

End

இராகம்-சுருட்டி. தாளம்-சாப்பு.

பல்லவி.

பாரிற் கெழில் நல்கு நம் பாரதிக்கு மங்களம்
பாரேத்தும் பாரத வீரர்க்கு மங்களம் (பா)

அனுபல்லவி,

நேர்மையாம் நம் நீதிமன்னர்க்கு மங்களம்!
சீர்பெற்றிலங்குஞ் செயக் கொடி தனக்கு மங்களம் (பா)

சரணம்

நாவினுக் கருந்துணை நாமகட்கு மங்களம்
பூவின் பத்தினி கட்கும் புனிதற்கு மங்களம்

நாபி கமலத்தில் நான்முகனை நயந்தீன்ற
பாப விமோசனர் பக்தர்க் கென்று மங்களம். (பா)

அனுபந்தம் முற்றிற்று.

சுபம்.

No. 21 (a) ஆத்மயோக மனோவசிய சாஸ்திரம்.

பக்கங்கள் *163*; Lines 19—30 in a Page.

இதில், திடச்சித்தப் பயிற்சி, ஏகாக்ரசித்தநிலை, சாந்த நிலை, ஜீவாந்த சக்தி, மானசதத்துவம், வசிய திருஷ்டி, ஜெயம் பெறுவதற்கான முக்கிய மர்மங்கள் ஆகிய இவைகள் கூறப் பட்டுள்ளன. இதனை இயற்றியவர் டாக்டர் K. T. *ராம சுவாமி* M. A. Ph. D.

Beginning

ஆத்மயோகமாவது யாது ?

பரமாத்மாவை ஜீவாத்மாவின் மனோசக்தியினால் அறிந்து ஐக்கியமாவதே ஆத்மயோகமாகும். இதுதான் ஜீவாத்மாக் களுக்கு முக்தியென்று சொல்லப்படும். இதைப்பற்றி ஸவிஸ் தாரமாக பின்னால் கூறுவோம்.

ஒவ்வொரு பாடத்திலும் நாம் சொல்லும் விஷயங்களை அசட்டை செய்யாமல் அப்பியாசிப்பாயாகில் உடனே அவை களில் சித்தியடைவாய்.

திடசித்தப்பயிற்சி

1-ம் பாடம்.

திடசித்தம்

நாம் கனவிலும் கண்டறியாத சக்திகள் ஒவ்வொரு மனிதனிடத்தும் இயல்பில் அமைந்திருக்கின்றன. தெய்

வத்தன்மை பொருந்தியும் அழியாநிலைபெற்றும், சதைப்பசை, ரத்தப்பசை முற்றிலுமற்றும், மாசில்லாத ஆவியாய் விளங்கும் மாயவஸ்து ஒவ்வொருவரிடத்திலும் அமைந்திருக்கிறது. இதற்கே ஜீவாத்மா வென்று நம் முன்னோர்களாகிய மகரிஷிகள் பெயரளித்திருக்கின்றார்கள்.

ஜீவாத்மா அந்தர்யாமி. இது பலமாய் கோசங்கள் அல்லது உறைகளால் மூடப்பட்டிருந்தபோதிலும் சுயம் பிரகாசமாய் விளக்குகிறது. இம்மாய கோசங்கள் ஆத்மயோக அப்பியாசத்தால் சுழன்று ஜீவாத்மா ஸ்தூலசரீரங்களைப் போக்கி சூக்ஷ்மசரீரத்தில் பூராகுணங்களை யடைந்து உலக வாஞ்சையற்று புருஷார்த்தமென்ற மோக்ஷநிலையடைந்து நித்தியானந்த சுகத்திலிருக்கிறது.

End

மேலேசொன்ன மர்மங்கள் எவைகள் உன்னிடம் இல்லை யென்றறிந்து இன்றுமுதலே அவைகளை நீ அடைய முயல வேண்டும். இம்மர்மங்கள் உன்னிடம் எப்பொழுது காணப் படுகிறதோ அப்பொழுதே எக்காரியத்திலும் ஜெயமடையும் வசியசக்தி என்ற வோர் அபார சித்தியை நீ அடைந்துவிட்டா யென்றறி.

முற்றிற்று.

(b) மெஸ்மெரிஸம், ஹிப்னாடிஸம்.

Lines 28—32 in a Page.

இதில், ஹிப்னாடிஸத்தின் 'மகிமை, தூக்கநிலைக்குவேண்டிய முக்கிய சாதனங்கள், தூங்காமல் தூங்கச்செய்தல், உயிர்ப்

பிராணிகளை வசியம் செய்யும் முறை முதலியவைகள் கூறப் பட்டுள்ளன. இதனை இயற்றியவர் டாக்டர் K. T. ராம சுவாமி, M. A. Ph. D.

Beginning:

1-ம் பாடம்.

ஹிப்னுடிஸம் என்பதுமானிடனிடத்தில் அமைந்திருக்கும் ஸ்தூல, சூக்ஷ்ம, மனோசக்திகளை விளக்கிக் காட்டும் நிலையாகிய ஓர்வித அற்புத யோகநித்திரை. இச்சாஸ்திரத்தின் ரகசியங் கள் வெகு அற்புதமானவை. நம் முன்னோராகிய மகரிஷிகள் தங்கள் தபோமகிமை என்ற இச்சாஸ்திர அப்பியாசத்தின் இந்திரஜாலம், மகேந்திரஜாலம், என்னும் கண்கட்டுவித்தை களைச் செய்தும், பேய் பிசாசுகளை ஓட்டியும், விஷநோய்களை மந்திரயோகத்தால் நீக்கியும், வசியம், ஸ்தம்பனம், ஆர்ஷணம், முதலான ஆத்ம சக்திகளைக்கொண்டு, ஜனங்களை நல்வழியில் நடக்கசெய்தும், துஷ்டமிருகங்களை அடக்கிக் காடுகளைக்கட்டி யும், கடல்களை கட்டியும் இன்னும் பஞ்சபூதங்களையும் தங்கள் வசப்படுத்தி நானுவித ஜனங்களுக்கும் நன்மைபுரிந்தனர்.

End

சர்வவல்லமையுள்ள ஈச்வரன் ஆத்மயோக மனோவசிய சக்திகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார், அவைகளை விருத்திசெய்து, உனக்கும் உன்னைச்சார்ந்த மற்றவர்களுக்கும் உபயோகப்படுத்தி உலகத்திற்கு நன்மை புரிவாய். சத்தியம், தெய்வபக்தி, பரோபகாரம், ஜீவகாருண்யம் ஆகிய இந்நற் குணங்களை அபிவிருத்திசெய்து, இந்த ஞானரகசியங்களை அனுஷ்டித்துவருவாயாகில், இத்தொழிலில் ஜெயம்பெற்று கீர்த்தியுடனும் செல்வத்துடனும் சுகபோகபாக்கியங்களுடன் வாழ்வாய்.

சுபமஸ்து.

(c) மானஸதந்தி

Lines 24—32 in a Page.

இதில், மானஸ தந்தி, தூரதிருஷ்டி, தூரசிரவணம், ஞானதிருஷ்டி முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. இதனை இயற்றியவர் டாக்டர் K. T. ராமசுவாமி. M. A. Ph. D.

Beginning

1-வது பாடம்.

மனதின் சக்தி அபாரம். இதன் நிரூபணம் ஹிப்னடிஸம்: மெஸ்மெரிஸம் முதலான சாஸ்திரங்களை நீ படித்து பழகி வருங்கால் உன் ஸப்ஜக்டின் மன ஆராய்ச்சிசக்தியை அறிந்திருப்பாய்: நீ உன் மந்திரங்களை அவனுக்கு வாயால் வெளிப்பட உச்சரிக்காமலே அவன் அவ்வெண்ணங்களையறிவதைப் பார்த்திருப்பாய்.

மானச தந்தியென்றால் உன் உணர்ச்சியையும், மனோபாவங்களாகிய எண்ணங்களையும் யாதாமொரு மனதிடம் செலுத்தி அவைகளை அவ்விதமே அம்மனத்தால் உணரச செய்வதும் அறியச்செய்வதுமேயாம். இச்சக்தி மனோநிச்சயத்தையும், மனோவேகத்தையும், மந்திர உச்சாரணத்தையும் பொருத்தது.

End

தேவதைகளின் சக்தி அபாரம். தேவர்களைக்கேவலமான இடங்களுக்குப் போகச்சொல்லியோ அல்லது விவரங்களை அறியவோ முயற்சி செய்யாதே. அப்படிச்செய்தால், பின்பு அந்தத் தேவதை உனக்கு இணங்காது. ஊக்கத்துடனும், விவேகத்துடனும் இவ்வப்பியாசத்தைப் பழகி வந்தால் ஜெயம் அடைவாய். உன் சுயநன்மையைக் கருதும்

எண்ணத்துடன் இதைப்பழகினால் இச்சித்தியின் மகிமைகள் ஒழிந்து, உடனே துன்பத்திற்குள்ளாவாய். இதை நன்றாய் அறியவும்.

சுபமஸ்து.

No. 22. ஹிந்துமத ஸ்தாபனம்.

Lines 7—19 in a Page.

இது, ஹிந்துமதஸ்தாபன விஷயமாக விலக்ஷணானந்தர் என்பவரால் செய்யப்பட்ட உபந்யாசம்.

Beginning

பாரத நாட்டுச் சகோதர சகோதரிகளே !
ஆர்யமதாபிமானிகளே ! !

இயற்கை அறிவுபொருந்திய ஹிந்துமதஸ்தர்களே ! ! !

நமது ஹிந்துமதத்தில் யார் எந்தக்காலத்தில் எந்த விஷயத்தை எப்போது எவ்விடத்தில் ஆரம்பித்தாலும் முதலில் சர்வலோக சரண்யராகிய பகவானது மங்களங் கூறுவது அனாதி தொட்டுப் பழக்கமாக வந்திருக்கிறது, ஆதலால் நானும் இந்த நூலின் ஆரம்பத்தில் பரமாத்மாவின் ஸ்தோத்திரங்கள் கூற ஆரம்பிக்கிறேன்.

பரவஸ்துவின் வணக்கம்.

நித்திய சாந்த சாஸ்வத புத்த சைதன்ய சதானந்த நிருமல நிராகார பராபர பரஞ்சோதிவடிவ நிருவிகற்ப அத்வைத அநாமய அகண்டநிலய அந்தரங்கபரமாத்ம வஸ்துவின் சச்சிதானந்த பாதங்களை வேற்றுமையில்லாத அபேத

பக்தியினுல் ஸ்தோத்திரஞ்செய்து ஹிந்துமதத்தின் பொருட்டு இந்த சாஸ்திரத்தை எழுத ஆரம்பிக்கிறேன்.

End

ஹிந்துமத விருத்தியின் பொருட்டு நற்காலம் பிறந்து விட்டதென்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. ஓர்நன்மை உதயமாகுமுன் தீமை யுதிப்பது வழக்கம். ஒளி உதயமாகு முன் இருள் உதயமாவது சகஜம். அதுபோல நமது மதத்தின் பெரிய நன்மை வருமுன் முற்கூறிய தீமை உதயமாகப் போகிறது நன்மையே, சர்வபுவன ரக்ஷக ஈஸ்வரன் நமது முயற்சிகளுக்கு யாதொரு இடையூறுமின்றி அருள்பாலிப் பாஞக

ஓம்—தத் ஸத்.

நூலாசிரியர் அட்டவணை.

L. இலக்கியங்கட்கு இடையில் வந்துள்ள வைத்திய நூல் என்பதற்கு அடையாளம்.

m. வைத்திய நூல்களைச் சார்ந்தவை என்பதற்கு அடையாளம்.

p. அச்சுப்புத்தகம் என விளக்குங் குறி.

அகத்தியர்; புத்தக நம்பர்.

அறுநூறு	.... m	4
கர்மகாண்டம் முந்நூறு	.... m	9
கர்மசூத்திரம் முந்நூறு	... m	8
கரிசல் முந்நூறு	.... m	16
குணவாகடம்	.... m	25(a)
குரு செயநீர் அறுபது	... L	377(b)
குருநாடி	... m	13
சித்திராரூடம்	... m	22
சூத்திரம் அறுநூறு	.... m	3(a)
சூத்திரம் முப்பத்தாறு	... m	15(b)
செந்தூரம் முந்நூறு	.... m	15(a)
தண்டகசூத்திரம் இருபத்தைந்து	... m	17(c)
தண்டக பட்சணி இருநூறு	... L	377(c)
தண்டகம் நூறு	... m	17(d)
தீக்ஷாவிதி இருநூறு	... m	19(b)
நயன விதி	.... m	10, 11
பட்சணி நூற்றுமுப்பத்திரண்டு	.... m	17(e)
பதார்த்தகுண சிந்தாமணி	... m	5, 6, 7
பற்பமுறை	.... m	17(a), 17(b), 18(b)

பூரணகாவியம் ஆயிரத்தைந்நூறு ... L 49 B (b)
பூஜா விதி இருநூறு .... m 19(a)
முப்புச்சூத்திரம் இருநூறு ... m 18(a)
வாதத்திறவுகோல் நாற்பத்தெட்டு ... L 377(a)
வைத்தியம் ஆயிரத்தைந்நூறு .... m 1, 2
வைத்தியம் இரண்டாயிரம் ... m 14
வைத்தியம் பின்னெண்பது .... L 377(d)
வைத்திய ரத்தினச் சுருக்கம் முந்நூறு .... m 20, L 221(d)

அகோர மாதவர் :

கும்பகோணப் புராணம் ... 284

அதிவீரராம பாண்டியன் :

காசி காண்டம் ... 258(c), 262, 263, 264, 437(f); 597(b)
கூர்ம புராணம் ... 265, 266, 267
நைடதம் 177, 178, 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 187, 188, 189, 190, 191, 300, 323

அப்பியாச்சாரி :

ஸ்ரீரங்கமகத்துவ வசனம் 232

அபிராமி பட்டர் :

அபிராமி யந்தாதி 132, 133, 134, 483(b)

அம்பிகாபதி ;

அம்பிகாபதிக் கோவை 409, 410, 414

அமிர்தசாகரர் :

யாப்பருங்கலக்காரிகை 83, 631(e), 636(d), 639(c) 642, 643, 644
யாப்பருங்கலம் 631(d), 636(c), 645(b) 710(b)

அரசூர் சொக்கப்புலவர்:
கும்பகோணப்புராணம் ... 114(b), 283

அருணகிரிநாதர்:
கந்தரந்தாதி ... 438 (c)
கந்தரலங்காரம் 346
கந்தரனுபூதி 389 A, 509(b), 591(d)
திருப்புகழ் **149, 150, 151, 152, 153, 154, 155, 156, 157, 158, 159, 160, 161, 162, 163· 164(a) 165, 166**
திருவகுப்பு ... 696(a)

அருணந்தி சிவாச்சாரியார்:
இருபா விருபஃது ...541(d), 543(d)
சிவஞான சித்தியார் சுபக்ஷம் 529, 541(c), 543(b), 544
சிவஞான சித்தியார் பக்ஷம் ....541(b) 595(b)

அருணசல உபாத்தியாயர்:
சிங்காரபத்யம் 168B

அருணசலக்கவி;
மதனசுந்தர பிரசாத சந்தான விலாசம் ... **600**

ஔவையார்:
நல்வழி ... 718(c)
மூதுரை ... 718(b)
விநாயகரகவல் 597(a), 689(i)m. 104(c)
வேழமுகம் ... 390(a), 391

ஆதிவராக கவி:
காதம்பரி செய்யுள் ... **P. 18**

இம்முடிப்பட்டம் பெற்ற காங்கேயர்:
உரிச்சொல் நிகண்டு ... 480(c)

இரட்டைப்புலவர்:

ஏகாம்பரநாதருலா ... 200, 201
திருவாமாத்தூர்க்கலம்பகம் ... 176

இரேவண சித்தர்:

அகராதி நிகண்டு ... 524 525
சிவஞான தீபம் ... 587

இளங்கோவடிகள்:

சிலப்பதிகாரமூலம் ...306(b), 417(b)

இறையனார்:

இறையனார் பொருள் மூலம் .... 631(b)

உபேந்திராச்சாரியார்:

சினேந்திரமாலை 667

உமாபதி சிவாச்சாரியார்:

அறுபத்துமூவர் மரபு ....256(f), 597(g)
உண்மைநெறி விளக்கம் 541(q), 543(p), 591(e)
கொடிக்கவி .... 543(e)
கோயிற் புராணம் 287(b), 302, 313, 621A, 693(b)
சங்கற்ப நிராகரணம் ....538(a) 541(g)
சிவப்பிரகாசம் 541(e), 543(c) 584(a) 585, 586
சேக்கிழார் புராணம் 255(c), 256(e), 285(c), 291(b)
ஞான பூசை ... 541(i), 543(i)
ஞான தீக்ஷை ....541(j), 543(o)
திருப்பதிகக்கோவை 425(d), 426(d), 436(a), 437(a)
திருப்பதிக்கோவை 425(b), 426(b), 435(b), 437(d)
திருவருட்பயன் .... 541(f) 543(r)
நெஞ்சுவிடுதூது ... 543(q)

பெரியபுராணச் சாரம் ....255(b) 256(d)
போற்றிப்பஃறொடை ... 543(h)
வினா வெண்பா ... 541(h)
வைப்புத் திருப்பதிக்கோவை ...425(c) (426c)

உய்யவந்த தேவநாயனார்:

திருக்களிற்றுப்படியார் 541(o), 543(g) 595(a)
திருவுந்தியார் ....541(n), 543(j)

உலகநாத பிள்ளை L.

கன்றுங் கனியுதவும் ... P. 10
சோழன் கரிகாலன் .... P. 11

ஒட்டக்கூத்தர்:

இராமாயணம் உத்தரகாண்டம் 1(b), 29(b), 30, 38
குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ... 454
விக்கிரமசோழன் உலா 194

கச்சியப்ப சிவாசாரியார்:

கந்தபுராணம் 234(a), 235, 236, 237, 238, 239, 240, 244, 245, 247A, 247B.

கடவுண்மாமுனிவர்:

திருவாதவூரர் புராணம் 274, 275, 276, 277, 278, 382, 583(b)

கண்ணுடைய வள்ளலார்;

தத்துவவிளக்கம் ... 541(l)

கபிலநாயனார்:

மூத்தநாயனார் இரட்டைமணிமாலை ... 682(a)

கம்பர்

இராமாயணம் 1(a), 2, 3, 4, 5, 7, 8, 9, 10, 11 12, 13, 14, 15, 16, 17, 18, 19a 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29a, 31, 32, 33, 34, 35, 36, 37, 40, 44, 45, 48, 51b, 229b, 496b, 705c

கமலை ஞானப்பிரகாசபட்டாரகர்:

சிவபூஜையகவல் 68b, 387b, 704d
சூரியபூஜை .... 389 Bb
திருவாரூர்ப்பள்ளு 607, 608, 609
நியமகவல் ... 389Ba, 704b

கலியபெருமாள் பிள்ளை

சிற்றின்பசிரோமணி ... P. 14
திருமழுவாடிப்புராணவசனம் .... P. 13
நஷ்டஜாதக தீபிகை .... P. 12

கவிக்களஞ்சியம்:

வேதாளக்கதை செய்யுள் 114a, 115, 116, 117, 118, 119, 120, 121

கவீந்திரர்:

சிவாஜீ சரித்திரவசனம் ... 214

காங்கேயன்:

வலைவீசுபுராணம் ... 299

காரியாசன்

கணக்கதிகாரம் 88b, 678, 679, 680

காரைக்காலம்மையார்:

திருவாலங்காட்டுப்பண் 425e 426c

திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் 260b, 425f, 426f.
திருவிரட்டை மணிமாலை ... 381 c

காலிங்கன் :

திருவேண்காட்டுப்புராணம் ... 290b, 321

காளமேகப் புலவர் :

திருவானைக்காவுலா ... 196, 197

கிருஷ்ணன் :

பாரத அம்மானை 59, 60, 61, 62, 63

குகைநமச்சிவாயர் :

அருணகிரியந்தாதி 135, 136, 137, 480d

குணசாகரர் :

யாப்பருங்கலக்காரிகையுரை 83, 642, 643, 644

குணவீரபண்டிதர் :

நேமிநாதம் 631j, 645c, 655, 656
வெண்பாப்பாட்டியல் 631g. 645a, 646, 647 648

குமரகுருபரசுவாமிகள் :

காசிக்கலம்பகம் 167, 168 A, 169
மதுரைக்கலம்பகம் ... 175
முத்துக்குமரசாமிபிள்ளைத்தமிழ் .... 449, 452 A

குருநமச்சிவாயர் :

நமச்சிவாயமாலை 343
பரமராசியமாலை 341

குலசேகர பாண்டியன் :

அம்பிகைமாலை ... 338. 339

கொங்கணவர் :

கடைக்காண்டம் ஐந்நூறு	....	L 49 B a
கற்பவிதி நூறு	...	m 35 b
சரக்குவைப்பு நூறு	...	m 35 a
சூத்திரம் நாற்பது	...	m 35 c
தண்டகபட்சணி நூறு	...	m 35 d
நடுக்காண்டம் ஆயிரம்	....	m 33
பல திரட்டு ஐந்நூறு	...	m 34

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் ;

சரபேந்திரர் சன்னிரோக சிகிட்சை	...	51 m
சரபேந்திரர் பலரோக வைத்தியம்	...	m 50
சரபேந்திரர் வைத்தியமுறை	...	m 56
சரபோஜிராஜின் குறவஞ்சி	....	599

கொற்றைக்கோமான் குணராசசூரியன் :

அசுவவைத்தியம்	....	m 64

கோபால பிள்ளை ;

பக்தவிஜயம்	356, 357, 358, 359, 360, 361

கோனேரி தாஸ்யை !

திருவாய்மொழி வாசகமாலை	....	570

கோனேரியப்ப முதலியார் ;

கந்தபுராணம் உபதேசகாண்டம்	241, 242, 243, 246, 413

சட்டை முனி :

கற்பவிதி	...	m 26a
நிகண்டு ஆயிரத்திருநூறு	...	m 26c
வாதகாவியம் ஆயிரம்	....	m 26b, 27, 28

சமணமுனிவர்

நாலடியார் 78, 79, 80, 82(a) 636(g)

சாந்தலிங்கக்கவிராயர்:

தண்டலையார் சதகம் (பழமொழி விளக்கம்) 718(a)

சாந்தலிங்கசுவாமிகள்:

வைராக்கிய சதகம் .... 538(b)
வைராக்கிய தீபம் .... 538(c)

சித்தர்:

சித்தரந்தாதி 127, 128(a) 129, 298(d) 4 9(e)

சிதம்பரசுவாமிகள்:

மீனாக்ஷியம்மன் கலிவெண்பா ... 393

சிதம்பரநாதன்:

சித்திரபுத்திரரம்மானை 400, 401, 402, 403, 404(a) 408(b)

சிதம்பரம்பிள்ளை வ. உ.

அகமேபுறம் .... P. 5
இன்னிலை விருத்தியுரை .... P. 2
பாடற்றிரட்டு .... P. 8
மனம்போல வாழ்வு ... P. 7
மெய்யறம் அரும்பதவுரையுடன் .... P. 3
மெய்யறிவு உரையுடன் ... P. 4
வலிமைக்கு மார்க்கம் .... P. 6

சிவவாக்கியர்:

சிவவாக்கியம் ... 685(f)

சீர்காழி சிற்றம்பல நாடிகள்;

அறிவானந்த சித்தியார் .... 704(i)
திரிகாலத்திரங்கல் ... 704(j)

துகளறு போதம் 541 (p) 543 (t) 716(a)

சீனிவாசன்

கம்பராமாயண வசனம் 39, 41, 42, 43, 46

சுந்தரமூர்த்தி நாயனார்;

திருத்தொண்டத்தொகை 252(a) 256(b) 257B. (b) 258(b) 259(b) 259(c)

சுந்தரலிங்க முனிவர்;

திருப்பெருந்துறைப்புராணம் .... 327(a)

சுந்தரானந்தர்:

சூத்திரம் நூற்றுப்பத்து m 29(a) 29(b)

சுப்பராயக்கவிராயர்;

சரபேந்திரர் வைத்தியம் m. 63

சுப்பிரதீபக்கவிராயர்:

கூளப்ப நாயக்கன் காதல் ... 95

விறலிவிடு தூது ... 96, 97, 98

செயங்கொண்டான்:

கலிங்கத்துப்பரணி 208, 209, 210, 211, 212, 213, 563

சேக்கிழார்;

பெரியபுராணம் 252(c), 253, 254, 255(a), 256(a), 257(a) 258(a), 259(a), 261, 286, 295, 707. 708, 712(b)

சேரமான் பெருமாள் நாயனார்;

திருவுலா ... 199

சைவ எல்லப்ப நாவலர்:

அருணகிரிப்புராணம் 292(a) 293(a) 294

ஆரூர்க்கோவை ... 385

சௌந்தரியலகரியுரை 461, 462, 465

ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகர்:

விருத்தகிரிப்புராணம் 268, 269, 270, 271(a) 272, 273

ஞானசம்பந்தர்:

முத்திநிச்சயம் ... 543(l)

டாக்டர் K. T. இராமசாமி M. A. PH D.

ஆத்மயோக மனோவசியம் ... P. 21(a)

மானசதந்தி ... P. 21(c)

மெஸ்மெரிஸம் ... P. 21(b)

தண்டியாசிரியர்:

தண்டியலங்காரம் 631(h), 636(f), 639(d), 710(a), 711(a), 712(a), 713(a)

தலைமலைகண்டதேவர்:

மருதூரந்தாதி 141, 142, 143, 698

தன்வந்திரி:

ஜெயநீர் ஐம்பது .... L. 377(e)

வாகடம் ஆயிரத்துநூறு ... m. 41

திருக்கோட்டி நம்பி;

சூடாமணி உள்ளமுடையான் 658(a) 659, 660, 661, 662, 663, 664, 665

நக்ஷத்திரமாலை மரணகெண்டிகை ... 666, 669

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்:

திருவெழுக்கூற்றிருக்கை .... 128(b) 558

திருவாலவாய் திருவிருக்குக்குறள் .... 682(c)

திருத்தக்கதேவர் :

சீவகசிந்தாமணி 82(b); 144, 145, 146, 147, 148, 516, 517, 631(k)

திருநாவுக்கரசுநாயனார்;

திருவையாற்றுத்திருத்தாண்டகம் ... 597(c)
திருவாலவாய்த்திருத்தாண்டகம் .... 682(b)

திருமங்கையாழ்வார்:

சிறிய திருமடல் ... 434(h)
பெரிய திருமொழி 565, 566, 567, 568, 572, 690(c)

திருமழிசை சாந்தலிங்கசுவாமிகள்;

வீராகமம் .... 538(d)

திருமூலநாயனார்:

உபதேசக்கட்டளை ... L. 463(b)
உபதேசத்திருமந்திரம் ... L. 591(b)
எண்ணுயிரத்தில் துருசுகுரு ... m. 40(b)
எண்ணுயிரத்தில் வகாரத்திரயம் ... m. 40(c)
தண்டகம் நூற்றிரண்டு ... m. 38(b)
திருமந்திரத்திரட்டு ... L. 387(a)
திருமந்திரம் 298(h) L. 592(b) L. 703(h) 717
திருமந்திரம் நூறு .... m. 38(a) 39
வகாரவுபதேசம் இருநூறு ... m. 40(a)

திருவதிகை மனவாசகங் கடந்தார்:
உண்மை விளக்கம் ...541(m) 584(b)

திருவரங்கத்தமுதனார்:

இராமானுஜர் நூற்றந்தாதி 131
திருப்பதிக்கோவை ...233(e), 435(a)

திருவள்ளுவநாயனார்:
திருக்குறள் 68(a), 69(a), 70, 71, 72, 74, 75, 77, 331B, P(1)

திருவாதவூரடிகள்:

திருவாசகம் 257A, 296, 297, 380, 381(a) 383, 384, 435(d), 682(e). 686, 687, 689(j)

திருச்சிற்றம்பலக் கோவையார் 411. 415, 416, 417(a) 418, 419, 420, 421, 422

திருவாரூர் வைத்தியநாத தேசிகர்:

திருவாரூர்ப்பன்மணிமாலை ... 330, 331(a)

நல்லூர்ப்புராணம் ... 322

திருவேங்கடத்தாபிள்ளை;

சரபேந்திரர் வைத்தியமுறை ... 52, 53, 54(c)

தில்லைநாயகன்;

காலச்சக்கரம் 671, 672

திவாகரமுனிவர்;

சேந்தன் திவாகரம் 474, 475, 476, 477, 478, 479, 480(a). 481, 482, 483(a) 484(a) 485, 487, 488.

தேரழுந்தூரன்;

விபீஷணன் புத்தி ... 123, 124

தேரையர்:

குணவாகடம் ... m. 97(a)

வைத்தியம் ... m. 3(b)

வைத்தியம் ஆயிரத்தொன்று ... L. 221(a)

தொண்டரடிப்பொடியாழ்வார்;

திருமாலை .... 434(f)

தொல்காப்பியர்:

தொல்காப்பியம் 622, 623, 626(a). 627, 628, 629(a) 629(b) 630, 631(i)

நக்கீரர்:

திருமுருகாற்றுப்படை .... 227, 689(e)

நச்சினார்க்கினியர்;

சீவக சிந்தாமணியுரை 145, 147, 516
திருமுருகாற்றுப்படையுரை 227
தொல்காப்பிய உரை 622, 623, 626(a) 627

நம்பியாண்டார் நம்பி:

திருத்தொண்டர் திருவந்தாதி 252(b) 256(c), 291(c)

நம்பிள்ளை:

நாலுவார்த்தை ... 554(f)

நம்மாழ்வார்:

திருவாய்மொழி 140, 312, 559, 560, 561, 562

நாராயணகவி;

பாண்டியகேளி விலாசம் ... 170B

நாராயணசந்தவர்கர் நைட்:

நூதன இந்தியா ... P. 19

நாராயணதாஸர்;

நாராயண சதகம் 233(b), 471, 472, 473.

நாராயண பாரதியார்:

மணவாள நாராயண சதகம் 470

நாராயண முனீந்திரர்:

நியாயவிம்சதி வியாக்யானம் ... 554(h)

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்:

சிவப்பிரகாச விகாசம் .... 583(a)
தருக்க பாஷை ... 582

வேதாந்த சூடாமணி ... 290(c), 531

நல்லூர் வீரகவிராசன் :

அரிச்சந்திர புராணம் 207(a), 303, 304, 305, 306(a), 307, 308, 309 310

நாற்கவிராச நம்பியார் ;

அகப்பொருள் விளக்கம் 81, 631(c), 636(b) 639(b), 651, 652, 653

நன்னிலம் நாரணன் ;

சுபத்திரா கலியாண நாடகம் 602

நிரம்ப வழகிய தேசிகர்;

சித்தியார் சுபக்ஷ உரை ... 529

சேதுபுராணம் ...280, 281, 282

நெற்குன்றவாண முதலியார் ;

திருப்புகலூரந்தாதி ... 138

பகழிக்கூத்தர்;

திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ் 456

பட்டர்:

அஷ்டசுலோகி வியாக்யானம் ... 554(b)

பட்டினத்துப் பிள்ளையார்:

கோயில் நான்மணிமாலை ... 689(d)

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை .... 689(c)

நெஞ்சொடு மகிழ்தல் ... 704(k)

பட்டினத்தார் பாடல் ... 682(d)

பட்டினத்தார் மெஞ்ஞானப்புலம்பல் ... 701(b)

பட்டினத்தார் வெண்பா .... 701(a)

பத்திரகிரியார்;

மெஞ்ஞானப்புலம்பல் .... 701(c)

பதுமனார்

நாலடியாருரை 80

பரஞ்சோதி முனிவர்;

சிதம்பரப்பாட்டியல் ... 631(f) 636(c)

சிதம்பரபுராணம் 285(a) 287(a) 288, 289, 290(a) 291(a) 534

பரதசூடாமணி:

தாள சமுத்திரம் ... 621 B(a)

பரமானந்த முனிவர் :

உத்தரபோதம் .... 90(b)

பரிமேலழகர்;

திருக்குறளுரை 68(a) 69(a), 77

பவணந்தி முனிவர்;

நன்னூல் 166 A 631(a) 632, 633, 634, 635, 636(a 637, 638, 639(a), 640, 641

பாஞ்சாலநாதர்;

நாலுமந்திரிக்கதை 112

பாரதம்பாடிய பெருந்தேவனார்

பாரதவெண்பா 65

பாலபாரதி;

இராமாயணத்திருப்புகழ் 47(a), 50, 714

பிங்கல முனிவர்;

பிங்கல நிகண்டு 519, 520, 521

பிரமமுனி;

சூத்திரம் முந்நூற்றறுபது .... m. 36(a)

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்:

அழகரந்தாதி ... 233(a)

திருவரங்கக்கலம்பகம் 170A. 171B. 172, 173, 174, 440, 711(b)

திருவரங்கத்தந்தாதி 125, 126. 230

திருவேங்கடத்தந்தாதி ... 233(b)

திருவேங்கடமாலை .... 713(a)

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி ....434(b), 438(a)

பிள்ளை லோகாச்சாரியார்:

அர்ச்சராதி ... 576(a)

பரமரகசியம் .... 571(a)

பிரபன்ன பரித்ராணம் ... 576(b)

ஸ்ரீ வசனபூஷணம் ... 576(d)

புகழேந்திப்புலவர்:

நளவெண்பா ... 192

புத்தமித்திரன்:

வீரசோழியம் ... 657

பெரியநாயகன்;

மாயாராவணன் கதை ... 20

பெரியவாச்சான்பிள்ளை:

அமலனாதிப்பிரான் வியாக்கியானம் .... 433(b)

பெரியாழ்வார் முதலியோர்:

முதலாயிரம் 573, 577, 580

பெரியான்பிள்ளை;

அரிச்சந்திரன் கதை 202, 203. 204, 205, 206,

பெருந்தேவனார்;

வீரசோழிய உரை 657

பேராசிரியர்:

தொல்காப்பியம் சொல்லதிகார உரை 628
தொல்காப்பியம் (பொதுப்பாயிரம்) .... 626(b)

பொய்கையார்:

இன்னிலை .... P. 2

